வரு.76 இல. 27

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

28 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2024 ஜூலை 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

July 14 Sunday, 2024








/ Thinakaran.lk / ThinakaranLK













### பாடசாலை, அலுவலகம், முச்சக்கரவண்டிகள் உட்பட

# அனைத்து பயணிகள் போக்குவரத்து சேவைகளும் ஒழுங்குபடுத்தப்படும்

## செப்டம்பர் மாதம் முதல் கட்டணங்கள் நிர்ணயம்



பாடசாலை வாகனங்கள், முச்சக்கரவண்டிகள், அலுவலகப் போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட அனைத்துப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு கட்டணங்கள் செப்டம்பர் மாதம் முதல் நிர்ணயிக்கப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் சுட்டிக்காட்டிய அவர், அதன் பின்னர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதியின் பின்னர் நடைமுறைப் படுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் திருத்தச் சட்டத்தின் பிரகாரம், எதிர்காலத்தில் படகுச் சேவைகளும் (Ferry Service) ஒழுங்குபடுத்தப்பட்டு கட்டணம் நிர்ணயிக்கப்படுவதற்காக உள்வாங்கப்படுமெனவும் பயணிகளுக்கான வசதிகளை வழங்கும் நோக்கத்துக்காக அமைச்சருக்குத் தேவைப்படும் பட்சத்தில் எந்தவொரு பயணிகள் போக்குவரத்தையும் சட்டத்தின்படி ஒழுங்குமுறைக்கு உட்படுத்த முடியுமென்றும் அவர் கூறினார்.

பெற்றோருக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டுப்பாடின்றி வசூலிக்கப்படும் பாடசாலை வேன் கட்டணங்களும், அதிகப்படியான முச்சக்கரவண்டிக் கட்டணங்களும், அலுவலகப் போக்குவரத்துச் சேவைகள் (அலுவலக பஸ் மற்றும் வேன்கள்) மற்றும் வாடகை வாகனங்களும் (Rent/ Hire Vehicle) இச்சட்டத்தின் கீழ் சிறப்பு ஒழுங்குமுறைக்கு உட்பட்டவை. இதன் கீழ் கட்டணங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு பரிந்துரைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## ஜயஸ்ரீ மஹாபோதி வளாகத்தில் சூரியசக்தி மின்சார கட்டமைப்பு ஜனாதிபதியால் ஆரம்பித்துவைப்பு



அனுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹாபோதி வளாகத்தில் LTL வர்த்தக குழுமத்தினால் அமைக்கப்பட்ட 150 கிலோவோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரியசக்தி கட்டமைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (13) கையளித்தார். ஜயஸ்ரீ மஹாபோதிக்கு வருகை தந்திருந்த பொதுமக்களுடனும் ஜனாதிபதி சுமுகமாக உரையாடினார்.



06
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்
**முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அரசியல் ரீதியாகவே கையாண்டார்**

### வடக்கு உள்ளூராட்சி சபைகளில்

## தற்காலிக, அமைய ஊழியர்கள் 165 பேருக்கு நிரந்தர நியமனம்

### பிரதமர் தினேஷ் வழங்கி வைப்பு



வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 165 பேருக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. 06

### நாடு பொருளாதாரத்தில் மீண்டு வரும் தருணத்தில்

## வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பது நாட்டுக்கு செய்யும் மிகப் பாரிய தீங்கு



நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டு வரும் இவ்வேளையில் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பது நாட்டுக்கு செய்யும் மிகப் பாரிய தீங்கென கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

சில தொழிற்சங்கங்கள் தாம் சார்ந்த அரசியல் கட்சிகளை வெற்றிபெறச் செய்யும் நோக்கில் 60 மற்றும் 70 களில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் ஒரு நெருக்கடிக்கு கொண்டு செல்ல முயற்சிப்பதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இது மிகவும் கவனமாக இருக்க வேண்டிய தருணம் எனவும், வேலை நிறுத்தங்களால் 06

## நாடு படிப்படியாக முன்னேற சக்திவாய்ந்த தலைவர் தேவை

### அவருக்கு கால அவகாசமும் அவசியம் -அனில் சர்தானா




எந்தவொரு நாடும் படிப்படியாக முன்னேற வேண்டுமானால், அதற்கு சக்திவாய்ந்த ஒரு தலைவர் தேவை. அவ்வாறானதொரு தலைவர் ஆரம்பித்த நல்ல பணிகளைத் தொடர கால அவகாசமும் அவருக்கு வேண்டுமென அதானி எனர்ஜி சொலியூஷன் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் அனில் சர்தானா தெரிவித்தார்.

இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை மின் வழங்கல் நிறுவனமான அதானி எனர்ஜி சொலியூஷன் நிறுவனத்தின் நிர்வாக 06

### ஜனாதிபதி தேர்தலுக்கான

## வாக்குச் சீட்டுகளை அச்சிட 600 மில். ரூபா செலவாகும்



ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக 600 மில்லியன் ரூபா செலவாகுமென அரச அச்சகத் திணைக்களம் மதிப்பீடு செய்துள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் எந்தவொரு தேர்தலுக்கும் அரச அச்சகத் திணைக்களம் தயாராக உள்ளதாக அரச அச்சக மாஅதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒரு கோடியே 70 இலட்சம் வாக்குச் சீட்டுக்களை 06

## சகல பொறுப்பிலிருந்தும் சரத் பொன்சேக்கா நீக்கம்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுக் கூட்டம் உட்பட கட்சியின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவை நீக்க கட்சி தீர்மானித்துள்ளது. அவரது அண்மைய நடவடிக்கைகள், அவர் நடந்து கொள்ளும் விதம் குறித்து ஆராய்ந்த பின்னரே இத் தீர்மானம் 06

### ஜனாஸாக்களை தாமதமின்றி கையளிக்க

## மேலதிக முஸ்லிம் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்க வேண்டும்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதிக்கு கடிதம்



முஸ்லிம் சமூகத்தினர் மரணமடையும் வேளையில் அவர்களது ஜனாஸாக்களை தாமதமின்றி கையளிக்கும் வகையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கு மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார 06

## எங்கள் கருத்து...

### சமூக ஊடகங்கள் தீர்வு தருமா?

யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மையில் ஏற்பட்ட குழப்பநிலை, சமூக ஊடகங்களுக்கும் நிறுவனங்களின் நிர்வாகங்களுக்கும் இடையிலான சிக்கலான தொடர்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டியது. பதில் மருத்துவ அத்தியட்சகராக சில வாரங்களுக்கு முன்னர் அங்கு கடமையைப் பொறுப்பேற்ற வைத்தியர் இராமநாதன் அருச்சுனா மருத்துவமனையின் முக்கியமான பிரச்சினைகளை தனது முகநூல் ஊடாக வெளிப்படுத்தி, தமிழ் பரப்பில் இலங்கையில் மாத்திரமல்லாமல் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ளதாகக் கூறப்படும் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை முகநூல் வாயிலாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார் வைத்தியர் அரச்சுனா. அதனைத்தொடர்ந்து அங்கு எழுந்த அமைதியின்மையால் அவர் அங்கிருந்து இடமாற்றப்பட்டார். அவர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுவர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியிருந்தார். இது குறித்து அமைச்சர் அமைச்சரவை கூட்டத்திலும் ஜனாதிபதி முன்பாக பிரஸ்தாபித்திருந்தார். இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்புமாக உள்ளது.

அந்த வைத்தியசாலையில் நீண்டகாலமாக மூடப்பட்ட சிகிச்சைப் பிரிவுகளை மீண்டும் 06




06
மலையக தொழிற்சங்க தியாகிகள் தினம்
**ஜன. 10ஆம் திகதியை பிரகடனப்படுத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும்**



06
**யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் 16ஆம் திகதி இலங்கை வருகை**

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்

## பாராளுமன்ற குழுத் தலைவராக அடைக்கலநாதனை நியமிக்க தயார்



### ரெலோ, புளொட் கட்சிகள் இணக்கம்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு ரெலோ, புளொட் மற்றும் தமிழரசுக் கட்சியிலும் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளதாக புளொட் தலைவர் தர்மலிங்கம் 06




06
ஹம்பாந்தோட்டை, வீரகெட்டியவில்
**இசை நிகழ்ச்சியொன்றில் மோதல்; 31 வயது இளைஞர் குத்திக்கொலை**

## அமரர் அமிர்தலிங்கத்தின் 35 ஆவது நினைவேந்தல்



(படம்: யாழ். மயூரப்பிரியன், நிதர்ஷன்)

முன்னாள் எதிர்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்டது. வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அமரர் அமிர்தலிங்கத்தின் உருவச் சிலையின் முன்னால் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு அன்னாரின் உருவசிலைக்கு 06

# பொருளாதார யுத்தத்தை வென்ற தலைவர் ஜனாதிபதி ரணில்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



**காலியாயிருந்த திறைசேரியை துணிச்சலோடு பொறுப்பேற்ற தலைவர் ரணில். அவரே மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாக வேண்டும் என்கிறார் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க. அவர் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி....**

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும் என்ற சர்ச்சைக்குரிய கருத்தை முதன்முதலில் பகிரங்கமாக முன்வைத்த கட்சி ஒன்றின் பலமான அரசியல்வாதியான நீங்கள் இன்னும் அதே நிலைப்பாட்டிலா இருக்கிறீர்களா?**

ப:ஆமாம். அதுமட்டுமில்லாமல், நாட்டுக்கு வேற வழியில்லை என்றே சொல்ல வேண்டும்.

**கே: ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் கடனை சீரமைத்து பட்டாசு வெடித்ததைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றனவே?**

ப: அல்லாமல், எண்ணெய்க்கான வரிசை, எரிவாயுவுக்கான வரிசை, மருந்துப் பொருட்களுக்கான வரிசை என்பனவற்றை ஒழித்து மின்வெட்டை ஒழித்து, ஒரு டொலர் 400 ரூபாய் என்றிருந்த நிலையை மாற்றியது யார்?

**கே: கடன் வாங்கி, கடனைத் திருப்பிச் செலுத்துவதைத் தள்ளிப்போடுவது, நாடு உலகுக்கு அறிவிக்கும் நல்ல செய்தி என்று சொல்கிறீர்களா?**

ப: கடன் வாங்கி வீடு கட்டிவிட்டு, பணக் கஷ்டத்தால், நோயின் காரணமாக கடனை கட்ட முடியாமல், குடியிருக்கும் வீட்டை வங்கிக்கு விற்று, குடும்பம் நடுத்தெருவுக்கு வரும்போது யாராவது நிவாரணம் வழங்க ஒப்புக்கொண்டதை, வீட்டிற்குச் சென்று குடும்ப உறுப்பினர்களிடம் தெரிவிக்கும்போது, அந்த நேரத்தில் அவர்கள் கேட்பது சிறந்த செய்தி அல்ல என்கிறீர்களா? அதன் பிறகு, நீங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடலாம், மற்ற குடும்ப விஷயங்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கலாம்.

**கே: நமது நாடு ஆபத்தான நிலையை கடந்துள்ளது என்று கூறுகிறீர்களா?**

ப: நம் நாட்டுக்கும் அப்படித்தான் நடந்தது. எங்களால் கடனை அடைக்க முடியவில்லை என்று சொன்னதும், உலகம் முழுவதில் இருந்தும் ஒதுக்கித் தள்ளப்பட்டோம். எமக்கு கடன் தர உலகம் அஞ்சியது. கடனை மறுசீரமைக்க உலக நாடுகள் ஒப்புக்கொண்டதையடுத்து மீண்டும் சர்வதேச அங்கீகாரம் எங்களுக்கு கிடைத்தது. நாம் நிம்மதிப் பெருமூச்சுவிடும் இன்றைய சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கினார் என்பதை மறந்துவிடாதீர்கள்.

எண்ணெய், எரிவாயு மற்றும் உணவு உள்ளிட்ட அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய டொலர்கள் தேவை. எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் கடலில் நங்கூரமிடும் வரை இவை அனைத்தும் நாட்டு மக்களின் அடிப்படை தேவைகள்.

2038ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிற்போடப்பட்டுள்ள இந்த வெளிநாட்டுக் கடன் மீள் செலுத்துகைக்கு நாங்கள் பொறுப்பாவோம். அதன் காரணமாக நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் IMF என்ற பெயரில் டொலர்களை சம்பாதிக்கும் டொலர் இயந்திரம் நம் நாட்டிற்கு தேவைப்படுகிறது. அதற்கு முதிர்ச்சியும் அனுபவமும் மட்டுமன்றி சர்வதேச அங்கீகாரமும் கொண்ட தலைவர் நாட்டிற்குத் தேவை. அதற்கு ரணில் விக்கிரமசிங்க மட்டுமே அதற்கான சிறந்த தெரிவு.

நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டு சர்வதேசத்தை ஏமாற்றுவது இலகுவானதல்ல. இதற்கு முன்னர் 16 தடவைகள் கடன் பெற்று சர்வதேசத்தை ஏமாற்றப் போய் இறுதியாக நாமே ஏமாற்றப்பட்டோம். அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் உலகம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுடன் செயல்படும் தலைவர்களுடன் பயணிக்கவே விரும்புகிறார்கள், பொய்யான பாசாங்குகளை பரப்பும் தற்பெருமைக்காரர்களுடன் அல்ல.

சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்ற ஒரே அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே.

**கே: நீங்கள் இவ்வாறு கூறியுள்ள போதிலும் ரணில் விக்கிரமசிங்க இனி பொது ஜன பெரமுனவுடன் இணையக்கூடாது என்ற கருத்து சிலரிடையே உள்ளதே?**

ப: நாட்டிற்கான தனது கடமையை நிறைவேற்ற அவருக்கு ஒரு பிரதான அரசியல் கட்சியின் பலமும் ஆதரவும் தேவை. அதற்கு வேறு யாரும் அவருக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை.

அப்போதும் அந்த மாபெரும் தியாகத்தை செய்தவர்கள் எங்கள் கட்சியும், எம்.பி.க்கள் குழுவும்தான். அந்த தியாகத்தை நாட்டுக்காக செய்தோம். பேராசை கொள்ளாமல், தாராளமாக எங்கள் நிபந்தனையற்ற ஆதரவை நாட்டுக்கு வழங்கினோம்.

அப்போது மாற்றுக் கருத்து இல்லாததால், நாட்டின் மிகப் பெரிய அரசியல் கட்சி இவ்வளவு ரிஸ்க் எடுத்து அவருக்கு ஆதரவளிக்காவிட்டால், அவர் யாரை அரசியல் ரீதியாக வழிநடத்துவார்? எமது கட்சியின் எம்.பி.க்கள் குழுவின் ஆதரவுடன் எமது கட்சியின் அமைச்சரவைக்கு தலைமைத்துவத்தை வழங்கி இந்த அனைத்து வெற்றிகளையும் நாட்டுக்கு பெற்றுக்கொடுத்தார்.

**கே: ஆனால் அந்த நேரத்தில் வேறு வழியில்லாததால் உங்கள் கட்சி அவரை ஆதரித்தது அப்படித்தானே?**

ப: இங்கு ஒரு கட்சியாக இரண்டு தெரிவுகள் உள்ளன. ஒன்று மௌனம். எங்கள் கட்சியிலிருந்து ஒரு வேட்பாளரையும் முன்வைக்கிறோம்.

**கே: இந்நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் குறித்து நாட்டின் பொது மக்களுக்கு ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு ஒரு தலைவர் நாட்டில் இல்லை என்று கூற முற்படுகிறீர்களா?**

ப: முதல் விஷயம், பணம் நிறைந்த திறைசேரியை வைத்து நாட்டை நடத்துவது போல் அல்ல, டொலர், ரூபாய் இரண்டும் இல்லாத நாட்டை ஆள்வது. எந்த அரசாக இருந்தாலும், அந்த சவாலை ஏற்க அவரைத் தவிர வேறு தலைவர் இல்லை.

இரண்டாவது விஷயம், காலியாக இருந்த திறைசேரியை கையகப்படுத்தி நாட்டை ஆண்டு, திறைசேரியை டொலர்களாலும், ரூபாயாலும் நிரப்பி, பணவீக்கத்தை 70% இலிருந்து ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வந்தார். இது எளிதான காரியம் அல்ல. அதற்கு சரியான அரசியல் தலைமை தேவை.

ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரப் போர் இன்றும் உயிர்ப்புடன் உள்ளது

இரண்டு சந்தர்ப்பங்களிலும் அந்த இரு தலைவர்களுடன் நான் நெருக்கமாகப் பணியாற்றியதால் அது எனக்கு நன்றாகத் தெரியும்.

கடந்த இரண்டு வருடங்களில் மக்கள் பல விரும்பத்தகாத அனுபவங்களை எதிர்கொண்டுள்ளனர். மக்களுக்குப் பிடிக்காத ஜனரஞ்சகமான முடிவுகளை அவர் எடுத்திருந்தால், நாடு இவ்வளவு வேகமாக தலை தூக்கியிருக்காது.

அவர் விமர்சனங்களை செவிமடுத்து சரியான முடிவுகளை எடுத்தார்.இந்த சாதனைகள் அனைத்தும் கூட்டு முயற்சியின் பலன்கள் என்று அவர் எப்போதும் சொல்வார்

**கே: இறுதியாக, இந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற முடியுமா என்று சொல்லுங்கள்?**

ப: நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

யார் என்ன கூறினாலும் மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை வெற்றி கொள்ள தலைமை அளித்திருக்காவிட்டால் இன்றும் யுத்தம் நடந்து கொண்டிருக்கும். இந்த பொருளாதார யுத்தத்தை வெற்றிக்கொள்ள ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தலைமையும் அதேபோன்று முக்கியமானது. காலம் காலமாக எதிர்த்தரப்பு வாதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை நாம் நம்பி ஒரு கட்சியாக அவருக்கு நாட்டின் நன்மைக்காக ஒத்துழைப்பு வழங்கினோம்.

**கே: ஆனால் அவரது ஆட்சி காலத்தில் கடந்த இரண்டு வருடங்களில் மக்கள் கசப்பான அனுபவங்கள் பலவற்றிற்கு முகம் கொடுக்க நேரிட்டதல்லவா?**

ப: பிரபல்யம் அல்லாத முடிவுகள் சிலவற்றை அவருக்கு எடுக்க நேர்ந்தது. அவை அனைத்தையும் மக்களுக்காகவும் நாட்டுக்காகவுமே எடுத்தார். அதனால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக மக்களின் குற்றச்சாட்டுக்கு ஆளானார். நாட்டுக்கும் மக்களுக்காக அன்று அவர் அவ்வாறான முடிவுகளை எடுத்திருக்காவிட்டால் நாடு இவ்வளவு வேகமாக முன்னேறி இருக்காது.

**கே: இந்த தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என உங்களால் கூற முடியுமா ?**

ப: நாம் அனைவரும் இணைந்து அவரை வெற்றி பெற செய்ய வேண்டும் என நான் கூறுகின்றேன்.

மஞ்சுள
தமிழில் வீ.ஆர்.வயலட்



# தேர்தலை ஒருநாளேனும் தள்ளிப்போடக் கூடாது !



## அதுவே ஜனாதிபதியின் நிலைப்பாடு

### என்கிறார் ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவன் விஜேயவர்தன

காலநிலை மாற்றத்தினால் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் 1.5 சதவீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச ரீதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவன் விஜேயவர்தன தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் என்பது வெப்பநிலை மற்றும் வானிலை முறைகளில் ஏற்படும் நீண்ட கால மாற்றங்களாகும். சர்வதேச ரீதியிலான இந்த விடயம் ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பில் தற்போது முக்கிய இடம்பெற்றுள்ளது. இந்த மாற்றம் என்பது வளிமண்டலம், ஹைட்ரோஸ்பியர், உயிர்க்கோளம் மற்றும் புவிக்கோளம் மற்றும் அவற்றின் தொடர்புகளை குறிக்கின்றன.

காலநிலை மாற்ற தாக்கங்களைக் குறைப்பதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கு ஜனாதிபதியின் வழ்காட்டலில் சுற்றுச்சூழல் அமைச்சு, விவசாயம், காணி மற்றும் வனவள அமைச்சு, மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு மற்றும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு போன்ற பல அமைச்சுக்கள் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலநிலை மாற்ற பாதிப்புகள் பல்வேறு வடிவங்களில் உள்ளன. உடனடியான வானிலை நிகழ்வுகளாக கருதப்படும் கடும் மழையைத் தொடர்ந்து வெள்ளம் மற்றும் சில நீண்ட கால வரட்சி அல்லது கடல் மட்ட உயர்வு போன்றவை. காலநிலை மாற்ற அழுத்தங்கள் நாட்டின் பொதுமக்களின் பாதுகாப்பையும் பாதிப்பதாக சுட்டிக்காட்டிய அவர், மனித பாதுகாப்பு, ஆரோக்கியம், பொருளாதாரம், அரசியல், உணவு, சுற்றுச்சூழல், தனிநபர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்

இலங்கையில் வயிற்றுப்போக்கு, லெப்டோஸ்பைரோசிஸ் மற்றும் டெங்கு ஆகியவை பொதுவான நோய்களாகும், அவை காலநிலை மாற்றத்தால் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றன.

இலங்கைக்கு மாத்திரமல்ல, இன்று உலக நாடுகளுக்கும் இது பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளது. வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க படிப்படியாக மேம்படுத்தி வருகின்றார். இந்தநிலையில் இப்பாதிப்புகளுக்கு சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் தீர்வுகாண ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இந்த பாதிப்பு காணப்பட்ட போதிலும், வளர்ந்து வரும் நாடுகளுக்கு இது பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளது. விசேடமாக இலங்கையைப் பொறுத்தவரையில் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தில் இருந்து மீண்டு வரும் நிலையில் இதற்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சில நடவடிக்கைகளை முன்வைத்துள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பாக நடைபெற்ற EXPO– 20 கூட்டத்தில் Climate Justice Forum என்ற அமைப்பை முன்னெடுப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். EXPO மாநாடு சவுதி அரேபியாவில் 2020ஆம் ஆண்டு நடைபெற்றது. வளர்ந்து வரும் நாடுகளுக்கு இந்த விடயத்தில் எவ்வாறு நிதியுதவி அளிப்பது என்பது குறித்து ஜனாதிபதி முன்வைத்த Climate Justice Forum இல் தற்பொழுது சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தியுள்ளன. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை கலந்துரையாடவும் முன்னுரிமை அளிக்கவும் அரசாங்களுக்கிடையேயான நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு ஒரு தளமாக இது முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதபதியின் நோக்கமாகும்.

காலநிலை மாற்றம் பாடசாலைகளில் ஒரு பாடமாக முன்னெடுக்கப்படவுள்ளது. மாணவர்களுக்கு இது விடயத்தில் தெளிவு வேண்டுமென்பதனாலேயே இதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

இந்த விடயம் சார்ந்த ஆய்வாளர்கள் புத்திஜீவிகளுடன் கலந்தாலோசித்து ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகக்கு மத்தியில் இலங்கைக்கு கடன் அளித்துள்ள சில நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பில் சில நிவாரணங்களை வழங்க முன்வந்துள்ளன. அதாவது பெற்றுள்ள கடன் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பயன்களை பெற்றுக்கொள்ள கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். இது அடுத்த வருடங்களில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

படிம எரிபொருள் பாவனையை குறைப்பதில் சகலருக்கும் சமத்துவமான நடைமுறை வேண்டும் என்பதை சர்வதேசத்தின் கவனத்துக்கு ஜனாதிபதி கொண்டு வந்துள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பில் இலங்கையில் பொதுமக்களிடையே போதிய தெளிவில்லை என்று தெரிவித்த அவர், தான் ஜனாதிபதியின் காலநிலை தொடர்பான ஆலோசகராக நியமிக்கப்பட்டதும் சில ஊடகங்களைச் சேர்ந்த சிலர் நாளை மழை பெய்கின்றதா, நேற்று மழை பெய்ததா என்பது போன்ற கேள்விகளுக்கு பதில் சொல்வதற்காக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்களா என்று கேட்டனர்.

அந்தளவிற்கு நாட்டின் காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்கோ, பொதுமக்களுக்கோ முறையான தெளிவில்லை என்பது தெரிகிறது. இதனால்தான் பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் தெளிவை ஏற்படுத்துவது மிக முக்கியமானது. இதற்கான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

காலநிலை தொடர்பான விடயங்கள் சர்வதேச ரீதியில் ஆங்கில மொழியிலேயே வெளிவருகின்றன. ஆங்கில மொழியில் உள்ள ஆக்கங்களை சிங்களம், தமிழ் மொழிகளில் பலரும் இலகுவாக புரிந்துகொள்ளும் வகையில் மொழிபெயர்த்து கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊடகங்களுக்கென இது தொடர்பில் விளக்கம் அளிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தினால் பொருளாதார ரீதியில் நாட்டுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் தற்பொழுது தெற்குப் பகுதியில் மழை பெய்கின்றது. அம்பாறை போன்ற பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுகின்றது.

அது மாத்திரமின்றி கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் தற்பொழுதும் வழமைக்கு மாறாக நாட்டின் உஷ்ண நிலை அதிகரித்திருப்பதினால் பொதுமக்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இதற்கான காரணத்தை பொதுமக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எதிர்க்கட்சியினர் அவ்வளவாக விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் வர்த்தக சமூகம் திருப்தி தெரிவித்துள்ளது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

ஏ.கே.எம். பிள்ளை...



# இலங்கை படுகுழிக்குள் மீண்டும் விழுவதை தடுக்கும் ஒரேயொரு நிவாரணி IMF மட்டுமே

**கடன் மறுசீரமைப்பு மற்றும் தற்போதைய பொருளாதார போக்கு தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோருடன் நடத்தப்பட்ட விசேட நேர்காணல். ஜனாதிபதி ஊடகப் பிரிவு பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க இதனை நெறிப்படுத்தினார்.**



**கேள்வி: நாட்டிற்கு நற்செய்தி கொண்டுவந்தாலும் எதிர்பார்த்த நன்மை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான உங்கள் பதில் என்ன?**

பதில். (மத்திய வங்கி ஆளுநர்)

இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமைக்கு அமைய கடன் மறுசீரமைப்பு அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். அன்றைய சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் சுமை அதிகரித்தமையினால் குறிப்பாக வெளிநாட்டு கையிருப்பு குறைந்ததால் கடனை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. சகல பிரச்சினைகளுக்கும் இது முக்கிய காரணமாக அமைந்தது. அதற்கு கடன் மறுசீரமைப்பு தான் தீர்வாக இருந்தது என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது. எவ்வாறு இதனை மேற்கொள்வது?

இவ்வாறான கடன் மறுசீரமைப்பை, இலங்கை இதற்கு முன்னர் செய்ததில்லை. இந்த விடயத்தில் போதுமான தெளிவோ அனுபவமோ எவருக்கும் கிடையாது. எனவே, முதன் முதலில் நிபுணர் அறிவைப் பெறுவதற்காக, உலகின் இரண்டு சிறந்த நிறுவனங்களான லாசார்ட் நிதி ஆலோசனை நிறுவனம் மற்றும் சட்ட ஆலோசனைக்கான கிளிஃப் சான்ஸ் ஆகிய நிறுவனங்கள் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டன.

இலங்கையானது உள்நாட்டு, வங்கிகள், EPF இலிருந்து கடன் பெற்றுள்ளதோடு ஜப்பான், இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்தும் கடன் பெற்றுள்ளது. வணிகக் கடனும் பெறப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைக்கையில் சுயாதீன நிறுவனம் ஒன்றினால் அதற்கான அளவுகோல்கள் வெளியிடப்பட வேண்டும்.

எமது நாட்டின் கடன் ஸ்திரமற்றது என 2022 இல் அறிவிக்கப்பட்டது. எனவே மறுசீரமைப்பை செய்யாமல் இருக்க முடியாது என்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நாடப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்துடன் 2022 செப்டம்பரில் அதிகாரிகள் மட்ட ஒப்பந்தத்தை எட்டியபோது, மொத்த மொத்தக் கடனை உள்நாட்டு உற்பத்தியில் 95% ஆகக் குறைக்க வேண்டும் என்று அது கூறியது. அந்த அளவுகோல்கள் அடுத்த பத்தாண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டுக் கடன் 128 வீதமாக இருந்து பின்னர் குறைவடைந்தது.

அந்நியச் செலாவணியில் செலுத்தப்பட்ட கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.4% ஆக இருந்தது. அப்போது நாட்டின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% ஆக இருந்தது. கடன் செலுத்துவது 9.4 வீதமாக இருந்தது. இதுதான் ஸ்திரமற்ற நிலை எனக் கூறப்பட்டது. ஸ்திர நிலையை அடைவதற்கு இதனை அடுத்த பத்தாண்டுகளில் 4.5%க்கு கொண்டு வர வேண்டும். அரசாங்கம் கடன் பெறும் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34% ஆக இருந்தது. அதனை ஆண்டுக்கு 13.2% ஆக குறைக்க வேண்டும்.

அடுத்த கட்டம் வெளிநாட்டுக் கடனாகும். அதில் முதன்மையானவை, இருதரப்பு கடன்களாகும். ஜப்பான், பிரான்ஸ், இந்தியா என்பன இணைந்து உத்தியோகபூர்வ கடன் குழு ஒன்றை உருவாக்கின. சீனாவின் எக்ஸிம் வங்கி தனியாக பேச்சுநடத்தியது. இந்த செயற்பாட்டின் ஊடாக நாம் 2022 டிசம்பர் மாதமளவில் இரண்டாவது தவணையைப் பெறுகையில் நிதிஉத்தரவாதம் கிடைத்தது.

**கட்டம் கட்டமாகவே இந்த இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். எனவே, வெடித்துச் சிதறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன. வருமானமே எங்களுக்கு இருக்கும் மிகப் பெரிய குறைபாடு. வருமானத்தையே நாம் அதிகரித்துக் கொள்ள முயற்சிக்கிறோம். 8 வீதத்தில் இருந்து 15 வீதம் வரை வருமானத்தை அதிகரிக்க முயற்சிக்கிறோம்.**

அடுத்த கட்டமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். இது தான் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடாகும். உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குறிப்பாக இந்தியா, ஜப்பான், சீனா மற்றும் பிரான்ஸ் என்பவற்றின் தலைமையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. இவ்வாறு இருதரப்பு கடன் மறுசீரமைப்பு நிறைவு செய்யப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நியதிகளுக்கு அமைய அடுத்த இருபது வருடங்களில் எவ்வாறான கடன் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டியிருந்தது. பின்னர் வணிகக் கடன்களிலும் அதே பொறிமுறையின் கீழ் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாடுகளை எட்டும் அதேநேரம் அவர்கள் கடன் சலுகை வழங்குவதற்கான பல முறைமைகளைக் கொண்டுள்ளனர். இதனால் முழுமையான கடனை 10 வருடங்களில் செலுத்த வேண்டியிருந்தால் அதற்காக 20 வருட கால நீடிப்பு கிடைக்கும். மேம்போக்காக பார்க்கும் போது இதில் கடன் இரத்துச்செய்யப்படவில்லை என்பது விளங்கும். இந்த கால நீடிப்பின் போது பணத்தின் பெறுமதி பெருமளவில் குறைவடையும். நாளைய தினம் 100 ரூபாயை செலுத்துவதற்கும் 10 வருடங்களின் பின்னர் அதே 100 ரூபாவை செலுத்துவதற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. அதுதான் எமக்கு கிடைக்கும் சலுகையாகும். இவ்வாறு இருதரப்பு கடன் செலுத்தும் காலத்தை நீடிப்பது ஒரு வகைச் சலுகையாகும்.

தற்பொழுது 3, 4, 5, 6 வீதம் வட்டி அறிவிடப்படுவதாயின் அது 2 வீதம் வரை குறைக்கப்படும். இவை இரண்டையும் இணைத்தால் நாம் செலுத்த வேண்டிய கடன் தொகை பெருமளவினால் குறையும். உதாரணமாக 2830 வீதத்தினால் குறையும். கடன் ரத்து செய்யப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டாலும் இந்த முறைமைகளில் சில சலுகைகள் கிடைக்கின்றன.

அடுத்த வர்த்தகக் கடன் வழங்குநர்களும் இருதரப்பு கடன் வழங்குநர்களினால் கிடைக்கும் சலுகைக்கு ஏற்றவாறு சலுகை வழங்க வேண்டும். இது தான் ஒப்பீட்டளவிலான கடன் சலுகை, வர்த்தகக் கடன் வழங்குநர்களுடனும் சில உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. இருதரப்பு கடன் வழங்குநர்களினால் கிடைத்த சலுகையை ஒத்த சலுகையைப் பெற உடன்பாடு காணப்பட்டுள்ளது. ஆனால் சலுகை வழங்கும் முறைமை மாற்றமானது.

பெற்ற கடன் 100 ரூபா எனின் 28 வீதத்தை குறைக்க உடன்பாடு ஏற்பட்டுள்ளது. வர்த்தக கடன்களில் மாத்திரம் இந்த முறைமை பின்பற்றப்படுகிறது. இவை இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. இரண்டிலும் 28 வீத குறைப்பு உள்ள போதும் இரண்டும் இரண்டு முறைகளில் வழங்கப்படுகிறது. இருதரப்பு கடன் சலுகை ஒரு விதமாகவும் வர்த்தகக் கடன் சலுகை வேறுவிதமாகவும் கிடைக்கிறது. வர்த்தகக் கடனில் மொத்தத் தொகையில் இருந்து கழிவு கிடைக்கிறது. அது மட்டுமன்றி வட்டியும் குறைக்கப்பட்டு காலஎல்லையும் நீடிக்கப்படுகிறது.

இரு தரப்பும் சமமான சலுகையை வழங்க வேண்டும் என்பதே எமது நியாயமான கோரிக்கையாகும். நாம் பெற்ற கடனுக்காக எமக்கு கடன் வழங்குநர்களிடமிருந்து சலுகை கோருகிறோம். இது எமது உரிமையல்ல.

28 வீத கடன் ரத்து அல்லது சலுகை எனின் 40 வீதத்தை எமக்கு கோர முடியாது. கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்தி கடனை மீளச் செலுத்த 30 வீதம் போதுமானது என சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. எமக்கு கடன் வழங்கும் இயலுமை கிடைக்கிறது. அவர்களுக்கு கடன் மீளப் பெறும் வாய்ப்பும் கிடைக்கிறது. இதற்கு 30 வீத குறைப்பு மாத்திரமே அவசியம். 30 வீதம் அன்றி 40 வீதம் கோர எமக்கு உரிமை கிடையாது. கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்த போதுமான சலுகையை வழங்குமாறு தான் கோருகிறோம். அவர்களும் வழங்கிய தொகையில் இருந்து ஒரு தொகையை குறைக்கின்றனர்.

**கேள்வி : செலுத்த வேண்டிய கடன் தொகை தொடர்பில் மற்றொரு சர்ச்சை எழுந்துள்ளது. நிதி அமைச்சு வெளியிட்ட 2024 கடன் என்ற அறிக்கை. அதற்கமைய 2023 டிசம்பர் இறுதியில் இலங்கையின் மொத்த் கடன் தொகை 96 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2024 மார்ச் இறுதியில் இலங்கையின் மொத்தக் கடன் 100 பில்லியன் டொலர் என்று குறிப்பிடப்படுவதில் இருந்தே இந்தப் விவகாரம் எழுந்தது. 70 பில்லியனில் இருந்து 100 பில்லியனாக அதிகரித்ததாக சிலர் விளக்கம் கொடுத்தனர். இடைப்பட்ட காலத்தில் கடன் பெற்றதாகவும் அது எங்கும் குறிப்பிடப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டது. உங்கள் பதில் என்ன?**

பதில் : திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன

ஆளுநர் சொன்ன விடயங்களுடன் சில விடயங்களை இணைக்க விரும்புகிறேன்.நமக்கு ஏன் கடன் மறுசீரமைப்பு அவசியம்? முன்னாள் ஜனாதிபதி 2022 மார்ச் மாதத்தில் எமது பிரச்சினையில் தலையிடுமாறு ஐ.எம்.எப் இற்கு அழைப்பு விடுத்தார். அந்த கோரிக்கையுடன் செயற்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. அதில் ஒன்று தான் கடன் நிலைத்தன்மை. இதற்கு முன்னர் எமது நாட்டில் கடன் நிலைத்தன்மை கிடையாது என ஐ.எம்.எப் கூறியது. நாட்டில் கடன் நிலைத்தன்மை இல்லாமல் ஐ.எம்.எப் இனால் தலையீடு செய்ய முடியாது. கடன் நிலைத்தன்மை இல்லாதபோது கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ள வேண்டும். இம்முறையும் நாம் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்குச் சென்றோம். இதற்கு முன்னர் ஐ.எம்.எப் இற்குச் சென்றதை விட, இம்முறை சென்ற செயற்திட்டம் வேறுபட்டுள்ளது. இம்முறை கடன் நிலைத்தன்மை இன்றியே சென்றிருந்தோம். கடன் நிலைத்தன்மையற்ற நாடுகளுக்கு ஐ.எம்.எப் இனால் கடன் வழங்க முடியாவிட்டால் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ள வேண்டும். அத்தோடு பொருளாதாரத்தில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் தனியான திட்டமொன்றை மேற்கொள்ள வேண்டும். நாம் மூன்றாவது தவணை தொகையையும் பெற்றோம். நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்தவாறே கடன் மறுசீரமைப்பையும் செற்படுத்தி வருகிறோம். இரு பாதைகளில் இதனை மேற்கொள்ள வேண்டும். இதில் ஒரு அங்கமாகவே கடன் மறுசீரமைப்பை மேற்கொள்கிறோம்.

அடுத்து நீங்கள் முன்வைத்த கேள்வி. 2024 மார்ச் மாதமளவில் கடன் நிலைமையை கடன் அறிக்கையின் ஊடாக வெளியிட்டோம். அதில் உள்ள ஒரு அட்டவணையில் 100 பில்லியன் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் சரியானது தான். முழுக் கடன்தொகையும் அமெரிக்க டொலர்களிலே பெறப்பட்டுள்ளன. ஆனால் உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக் கடன் என்பன பெறப்பட்டுள்ளன. வெளிநாட்டுக் கடன்கள் பொதுவாக டொலர்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். உள்நாட்டுக் கடனை அந்த அட்டவணையில் சேர்க்கையில் அவை டொலர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. டொலர்களுக்கு மாற்றுகையில் முன்பிருந்த அந்நிய செலாவணிப் பெறுமதி 325 ரூபாய். பெறுமதி மாற்றுகையில் ரூபாவின் பெறுமதி 301 ஆகும். அது நல்ல நிலைமையாகும். 325 ரூபாவினால் கணிப்பிட்டதை 301 ரூபா என்ற அடிப்படையில் கணிப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி அதிகரிக்கிறது. வெளிநாட்டுக் கடன் தொகையையும் சேர்த்துக் கொண்டால் நாம் கடன் பெறாத போதும் அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தின் வீழ்ச்சியானது டொலர்களில் அதிகரித்துக் காட்டும்.

**கேள்வி: நாம் இன்னும் கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பிக்கவில்லை. கடனை செலுத்த ஆரம்பித்தவுடன் தான் அதன் சுமை நேரடியாக மக்களுக்கு விளங்க ஆரம்பிக்கும் என்று கூறப்படுகிறது? இதுகுறித்து உங்கள் பதில் என்ன?**

பதில்:(மத்திய வங்கியின் ஆளுநர் )

மக்களின் மனதில் பயம், சந்தேகம் இருக்கலாம். கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்த பின்னர் நிச்சயமாக கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பிப்போம். மீண்டும் அந்தப் பழைய குழிக்குள் விழுவோமா என்ற நியாயமான சந்தேகம் மக்களுக்கு இருக்கலாம்.

அடுத்த 10 – 20 வருடங்களுக்கு மூச்சு விட வழி செய்வதாக கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் அமைந்திருக்கும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதனால் விட்ட தவறுகளை திருத்திக்கொண்டு, மக்களுக்குத் தேவையான பணிகளையும் செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும். எந்த அரசாங்கம் வந்தாலும் அவர்களுக்கு இலகுவான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே இந்த பணிகள் அமைந்துள்ளன.

நீண்ட காலம் நாடு மூச்சு விட முடியும். தனியொரு நாட்டிடம் இந்த தொகையை பெற்றுக்கொண்டு இந்த நிலைமையை மாற்றியமைத்துவிட முடியாதா என்ற கேள்விகளும் உள்ளன.

**கேள்வி:(மத்திய வங்கி ஆளுநர்) கடந்த காலத்தில் அரசாங்கம் புதிய 42 சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. 30இற்கும் மேற்பட்ட சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றாக மத்திய வங்கிச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிதிசார் புதிய சட்டங்கள் மூன்றும் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன. பொருளாதார மாற்றச் சட்டமூலம், அரச நிதி நிர்வாகம் மற்றும் கடன் முகாமைத்துவச் சட்டமூலம் என்பனவும் சமர்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான அவசியம் என்ன, இதனால் எதிர்பார்க்கப்படுவது என்ன?**

பதில்: மத்திய வங்கியின் சட்டம் செயற்படுத்தப்படுகிறது. நாட்டின் நிதிக் கொள்கைகள் அதனால் செயற்படுத்தப்படுகின்றன. மத்திய வங்கியும் சுயாதீனமாகியுள்ளது. அடுத்ததாக அரச நிதி அமைப்புக்கள். நிதி தொடர்பில் மத்திய வங்கியும், அரச நிதி தொடர்பில் அரசாங்கமும் பொறுப்புக்கூற வேண்டும். மத்திய வங்கியை போலவே அரச நிதிச் செயற்பாடுகளுக்கும் வலுவான பொறிமுறையொன்று தேவைப்பட்டது. அரச நிதி நிர்வாகச் சட்டமூலத்தினால் அதனையே செய்ய முயற்சிக்கிறோம். நாட்டில் அரச நிதி ஒழுக்கம் தொடர்பிலான பிரச்சினைகள் உள்ளன. நல்லதொரு அரச நிதி ஒழுக்கம், நல்லதொரு நிதி மேற்பார்வை என்பவற்றுடன் அரச நிதிச் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதனால் நிதிக் கொள்கையை செயற்படுத்தும் இயலுமையும் எமக்கு கிட்டும். வரவு செலவுத் திட்ட தயாரிப்பு, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விடயங்கள் என்ற அனைத்தும் இதன் கீழ் செயற்படுத்தப்படும்.

அடுத்தபடியாக, அரச கடன் முகாமைத்துவத்தை முதல் முறையாக மத்திய வங்கியிடமிருந்து விடுவித்து நிதி அமைச்சின் கீழ் முன்னெடுத்துச் செல்கிறோம். 75 வருடங்களுக்கு பின்னர் இவ்வாறு செய்யப்படுகிறது. வலுவான வகையில் கடன் முகாமைத்துவம் செய்வதே இதன் நோக்கமாகும். அந்த வகையில் மத்திய வங்கிச் சட்டமும், அரச நிதி மற்றும் கடன் முகாமைத்துச் சட்டங்களும் பொருளாதாரத்தை பலப்படுத்தும் வலுவான மூன்று அடிக்கற்களாகும்.

அடுத்ததாக பொருளாதார மாற்றச் சட்டமூலம். இதனால் மேற்கூறிய மூன்று அடிக்கற்களும் ஒன்றாக கட்டமைக்கப்படப் போகிறது. தனியொரு பலமான அடிக்கல் இந்த நாட்டில் நடப்படும். நல்ல வியூகமும், கட்டமைப்பும் கிடைக்கும். வலுவான பின்னணியிலிருந்து பொருளாதாரத்தை நகர்த்த முடியும் என்பதே எனது நிலைப்பாடாகும். பொருளாதார மாற்றச் சட்டமூலம் குறித்து பெருமளவில் பேசப்பட்டது. அது நல்ல விடயமாகும்.

(மத்திய வங்கி ஆளுநர்)

நிச்சயமாக இது கிடைக்கும். முதல்சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்தது உங்களுக்கு நினைவிருக்கும். இதன்போது எமது யோசனைகளுக்கும், அவர்களின் யோசனைகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருந்தது. எனவே தான் இணக்கப்பாடுகள் இன்றி பேச்சுவார்த்தைகள் நிறைவுக்கு வந்தன.

**மத்திய வங்கியின் சட்டம் செயற்படுத்தப்படுகிறது. நாட்டின் நிதிக் கொள்கைகள் அதனால் செயற்படுத்தப்படுகின்றன. மத்திய வங்கியும் சுயாதீனமாகியுள்ளது.**

ஐ.எம்.எவ். அல்லது பாரிஸ் கிளப் ஆகிய தரப்புக்கள் ஏற்றுக்கொள்ளாத யோசனைகளை அவர்கள் முன்வைத்திருந்தனர். ஆனால் இம்முறை பேச்சுவார்தைகளில் ஏற்கனவே இருந்த இடைவெளியை நாம் குறைத்திருக்கிறோம்.

**கேள்வி: கடந்த காலத்திற்கு சென்றுபார்த்தால் இரண்டு வருடங்களுக்கு முன்னர், நாம் அனுபவித்த, நாம் கடந்துவந்த அனுபங்கள் மூலம் நாம் தற்போது குறிப்பிடத்தக்க நல்ல நிலைக்கு வர முடிந்துள்ளது. ஆரம்பத்தில், அடுத்த மாதம் சம்பளத்தை எவ்வாறு வழங்குவது என்ற கேள்விகளுடன் இருந்த காலமும் இருக்கிறது. சில நேரம் கட்டம் கட்டமாக செலுத்துவோம் என்ற யோசனைகள் இருந்தன. தற்போது 10,000 ரூபா சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது. கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அனைத்தும் கிரமமாக முன்னெடுக்கப்படுகின்றன. இன்னும் சம்பளத்தை அதிகரிக்குமாறு வீதியில் இறங்கி கோருகின்றனர். சம்பள முரண்பாடுகளைக் களையுமாறு கோருகின்றனர். இதுகுறித்து உங்கள் கருத்தென்ன?**

பதில்: (நிதியமைச்சின் செயலாளர்) நான் இந்தப் பதவியை ஏற்று திறைசேரிக்குச் செல்லும்போது, எங்களுக்குத் தேவையான டொலர்கள் இருக்கவில்லை. ரூபா இருக்கவில்லை. அவ்வாறான நிலையில் இருந்து பல சிரமங்களுடன் நாம் இந்த நிலைக்கு வந்திருக்கிறோம்.

சிலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். சிலர் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறு கோருகின்றனர். அந்தக் கோரிக்கைகள் நியாயமானவை. தொழிற்சங்கங்களின் அந்தக் கோரிக்கைகளில் எவ்வித பிரச்சினையும் இல்லை. காரணம், அவர்களுக்கும் தொழில் பிரச்சினைகளைப் போலவே வருமானம் குறித்த பிரச்சினைகளும் இருக்கின்றன.

உண்மையில், வருமானம் குறித்த பிரச்சினை நாட்டில் அனைவருக்குமே இருக்கிறது. நீங்கள் கூறியதைப் போல நாம் ஒரு நிலைக்கு வந்திருந்தாலும்கூட, எமக்கிருக்கும் அழுத்தங்கள் இன்னமும் முழுமையாக குறையவில்லை. நாம் இதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப் போகிறோம் என்ற கேள்வி இருக்கிறது.

இந்தக் காலகட்டம் இன்னும் கொஞ்சம் பொறுமை காக்க வேண்டிய காலமாக இருக்கிறது. மிகவும் சிரமத்திற்கு மத்தியில் நாம் இந்த நிலையை எட்டியிருக்கிறோம்.

மிகவும் சிரமத்திற்கு மத்தியிலேயே சம்பளம் வழங்குவது உட்பட ஏனைய பணிகளை முன்னெடுத்து வருகிறோம். முன்னர் இருந்ததைப் போல மத்திய வங்கி பணத்தை அச்சிடும் சந்தர்ப்பமும் தற்போது எமக்கு இல்லை.

இன்னமும் குறிப்பிடத்தக்களவு மட்டுமே வெளிநாட்டுப் பணம் கிடைக்கிறது. கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர் வெளிநாட்டுப் பணம் இன்னும் அதிகமாக கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

கட்டம் கட்டமாகவே இந்த இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். எனவே, வெடித்துச் சிதறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன.

வருமானமே எங்களுக்கு இருக்கும் மிகப் பெரிய குறைபாடு. வருமானத்தையே நாம் அதிகரித்துக் கொள்ள முயற்சிக்கிறோம். 8 வீதத்தில் இருந்து 15 வீதம் வரை வருமானத்தை அதிகரிக்க முயற்சிக்கிறோம். எங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இல்லாமல் போகும் பட்சத்தில் எமக்கிருக்கும் சிக்கல்கள் மேலும் அதிகரிக்கும். இது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளது. இதனை சரியாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். தொழிற்சங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் தவறு இருப்பதாக நான் பார்க்கவில்லை. அதற்கான தீர்வுகளை வழங்குவதில் உள்ள சிக்கல்களையே நான் கூறுகிறேன். அவர்கள் கேட்பதைக் கொடுக்க எமக்கும் விருப்பம் இருக்கிறது. ஆனால் தற்போது மிகவும் நெருக்கடியான நிலையே இருக்கிறது. 2022ஆம் ஆண்டு நெருக்கடியின் போது சம்பளத்தை குறைக்காது வழங்கினோம். எனவே, தற்போதிருக்கும் நிலையில் இருந்து நல்ல நிலைக்கு செல்ல வேண்டுமாயின் இன்னும் கவனமாக செயல்பட வேண்டும். 2025ஆம் ஆண்டளவில் வருமானம் அதிகரிக்கும் வகையில் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று அரசாங்கம் கூறியிருக்கிறது. நாம் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி: தற்பொழுது அரசியல் அரங்கும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இனிவரும் காலம் தேர்தல்கள் வரும் காலம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, நாம் நாட்டை பணயம் வைக்கப் போகிறோமா? அல்லது அரசியல் ரீதியாக ஜனநாயகத்திற்குட்பட்டு அரசியல் தரப்பினருடன் இணைந்து பணிகளை முன்னெடுக்கப் போகிறோமா?அரச அதிகாரிகளுக்கும், பொதுவாக பொதுமக்களுக்கும் மத்திய வங்கி ஆளுநர் என்ற வகையில் சொல்லவிருப்பும் செய்தி என்ன?**

பதில்: (மத்திய வங்கி ஆளுநர்) உண்மையில், நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில படிப்பினைகள் இருக்கின்றன. முதலாவது, கஷ்டத்தில் இருந்து நாம் இந்த இடத்திற்கு வருவதற்கு எமக்கொரு செயல்திட்டம் இருந்தது. இந்த செயல்திட்டத்தின் பிரதான அங்கமாக, நான்கு வருடகால செயல்திட்டத்திற்கமைய உதவிகளைச் செய்ய சர்வதேச நாணய நிதியம் சுயாதீனமாக இணக்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது, அடுத்த நான்கு வருடங்களில் நாம் இந்த செயல்திட்டத்தை முன்னெடுப்போம் என்ற உறுதியை வழங்குவதன் மூலம் ஏற்படும் நம்பிக்கையின் மூலமே எமக்கு கடன் வழங்கிய ஈ.பி.எவ். உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இதனை மையப்படுத்தியே தமது இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளன.

நாம் இந்த செயல்திட்டதை தொடர்ந்து முன்னெடுப்போம், அதற்கமைய எமக்கு கடனை மீளச் செலுத்தும் திறன் அதிகரிக்கும் என்ற அடிப்படையில் கடன் வழங்குனர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். எனவே, இந்த நம்பிக்கையின் அடிப்படையில் கடன் வழங்குனர்கள் சலுகைகளை வழங்கியிருந்தால், நாடென்ற வகையில் எமக்கொரு பொறுப்பு இருக்கிறது. அந்த நம்பிக்கையை பாதுகாத்துக் கொண்டு, இணக்கம் கண்ட அந்த பாதையில் பயணித்து கடன் வழங்குனர்களின் நம்பிக்கையைக் காத்துக் கொண்டு முன்நோக்கிப் பயணிக்க வேண்டும்.

**கேள்வி: நாம் கண்ட நெருக்கடியை மீண்டும் காண யாரும் விரும்ப மாட்டர்கள். மீண்டும் அந்த நிலையும், நெருக்கடியும் ஏற்படுவதை யாரும் விருப்ப மாட்டார்கள். பொது மக்களுக்கும், நிதியைக் கையாளும் அரச அதிகாரிகளுக்கும் நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?**

பதில்:(நிதியமைச்சின் செயலாளர்) நாம் பயணிக்கும் இந்தப் பயணத்தை மிகவும் கவனமாக, நிதானமாக தொடர வேண்டும். 2022ஆம் ஆண்டு ஏன் நாம் ஐ.எம்.எப் சென்றோம் என்ற கேள்வியை நாம் எப்போதும் கேட்பதுண்டு. ஐ.எம்.எவ். செல்லத் தேவையில்லை எமக்கு மாற்று வழி இருப்பதாக சிலர் கூறினார்கள். ஆனால் இறுதியில் எமக்கு ஐ.எம்.எவ். செல்ல நேரிட்டது.

ஐ.எம்.எவ். இங்கு வரவில்லை. உண்மையில் நாம் ஏன் இந்த நிலைக்கு தள்ளப்பட்டோம். நாட்டில் நாம் பொருளாதாரத்தில் செய்ய வேண்டிய மறுசீரமைப்புக்களைச் செய்யாததால் இந்த நிலை ஏற்பட்டது. பொருளாதாரத்தை வலுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புகளை செய்ய வேண்டும். அந்தப் பணிகளை தற்போது முன்னெடுத்து வருகிறோம்.

இந்த மறுசீரமைப்புப் பணிகளின் போது அரசாங்கம் கொள்கை ரீதியாக எடுக்கும் சில தீர்மானங்கள் மிகவும் வேதனையானவை. மக்களுக்கும் மிகப் பெரிய அழுத்தங்கள் ஏற்படுகின்றன.




# ஐ.எம்.எப் ஒப்பந்தத்தில் பாரிய மாற்றங்களை செய்வது சாத்தியமில்லை!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்



**சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் அடிப்படை விடயங்களில் பாரிய மாற்றங்களைச் செய்வது சாத்தியமற்றது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

- வங்குரோத்து நிலையிலிருந்து விரைவாக மீள்வதற்கான பாதையில் இலங்கை உள்ளது. இந்த விடயத்தில் நாம் சாதனை படைத்துள்ளோம்
- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒருதடவை ஆட்சியில் இருந்தால் அது நாட்டுக்கு நன்மை பயக்கும்

**கே: கொவிட் தொற்று காலத்தில் முஸ்லிம்களின் ஜனாஸா அடக்கம் தொடர்பில் கவலை தெரிவித்தும், காசா யுத்தம் தொடர்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியும் முஸ்லிம்களின் நம்பிக்கையை ஜனாதிபதியினாலும், அரசாங்கத்தினாலும் வெல்ல முடியும் என வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் நீங்கள் நம்புகின்றீர்களா?**

பதில்: ஆம், நான் இதனை உறுதியாக நம்புகின்றேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதிலிருந்து உலகில் உள்ள முஸ்லிம் சமூகத்துடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி, முனைப்பான அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகின்றோம். நான் அதிக அளவில் பயணம் செய்து வருகிறேன், அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்களும் அடிக்கடி இலங்கைக்கு வருகை தருகிறார்கள்.

சர்வதேச முஸ்லிம் சமூகத்தில் எமக்கு கணிசமான மதிப்பைப் பெற்றுத் தந்துள்ள ஐ.நாவிலும் மற்றைய இடங்களிலும் காஸா விவகாரத்தில் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை நாங்கள் எடுத்துள்ளோம். சமீபத்தில், பலஸ்தீன வெளியுறவு அமைச்சரை நான் சந்தித்தேன். அவர் நமது நிலையான நிலைப்பாட்டிற்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

அடக்கம் செய்வதைப் பொறுத்தவரை, அந்த நேரத்தில் அவற்றைத் தடைசெய்யும் முடிவு ஒரு பெரிய தவறு. துரதிர்ஷ்டவசமாக, அது நடந்தது, ஆனால் இப்போது நாம் செய்யக்கூடியது முஸ்லிம்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் வருத்தம் தெரிவிப்பதும் மன்னிப்புக் கேட்பதும் மட்டுமே. பாதிக்கப்பட்டது முஸ்லிம்கள் மட்டுமல்ல, தங்கள் அன்புக்குரியவர்களை அடக்கம் செய்ய விரும்பிய சில பௌத்தர்களும் என்பதை மறுக்க முடியாது. எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்களைத் தடுக்க சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கின்றோம்.

ஒட்டுமொத்தமாக சர்வதேச ரீதியில் முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையை நாம் பெற்று வருகின்றோம். இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, அவர்களின் நம்பிக்கையை நாம் வென்றெடுக்கிறோமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். எவ்வாறாயினும், ஜனாதிபதியின் பல்லினங்களை அணைத்துச் செல்லும் அணுகுமுறை சர்வதேச ரீதியில் பாராட்டப்படுகின்றது.

**கே: இந்திய வெளிவிவகார அமைச்சராக ஜெய்சங்கர் மீண்டும் பதவியேற்ற பின்னர் முதன் முதலில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இந்த விஜயத்தின் முக்கியத்துவம் என்ன?**

பதில்: இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் வருகையில் பல சிறப்பம்சங்கள் இருந்தன. இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய ஆதரவு மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவினால் வழங்கப்பட்ட நான்கு பில்லியன் டொலர் கடன்கள் முக்கியமானவை. இந்த ஆதரவு இல்லாவிட்டால், இலங்கையின் பொருளாதாரத்தை இந்தளவுக்கு சரிசெய்திருக்க முடியாது. இந்த விஜயம் இலங்கைக்கான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியது மாத்திரமன்றி, வர்த்தகத்தில் பங்காளித்துவத்தையும் மேம்படுத்தியுள்ளது.

திருகோணமலையில் ஒரு பிரத்தியேக சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சென்னையில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் கல்வி முயற்சிகளில் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல கூட்டுத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாங்கள் மதிப்பாய்வுகளை மேற்கொண்டுள்ளோம். அது மாத்திரமன்றி புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் காணப்படும் வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பயணம் இரண்டு முக்கிய குறிப்புகளை வலியுறுத்தியது. முதலில், நமது நாடுகளுக்கிடையேயான பொருளாதாரப் பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதற்கான நமது விருப்பம். இரண்டாவது, இந்தக் காலகட்டத்தில் டொக்டர் ஜெய்சங்கர் வெளிவிவகார அமைச்சராக தனது முதல் உத்தியோகபூர்வ விஜயத்திற்கு இலங்கையைத் தேர்ந்தெடுத்ததன் முக்கியத்துவம். இது இலங்கையுடனான உறவுக்கு இந்தியா கொடுக்கும் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, இது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

**கே: பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையில் இணைவது மற்றும் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் அதிகமான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் விடயத்தில் காணப்படும் முன்னேற்றங்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

பதில்: வெறும் 22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கைச் சந்தையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு யாரும் முதலீடு செய்யப் போவதில்லை. இது குறிப்பிடத்தக்க முதலீட்டை ஈர்ப்பதற்கான ஒரு பெரிய சந்தை அல்ல. இதனை நிவர்த்தி செய்ய, இலங்கையை ஒரு பிராந்திய மையமாக நிலைநிறுத்தி, ஒரு பெரிய சந்தைக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலம் இதை நாம் அடைய முடியும். அதன் மூலம் நமது சந்தையை விட பத்து அல்லது 100 மடங்கு பெரிய சந்தையை உருவாக்க முடியும். வியட்நாம், பங்களாதேஷ், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு இந்த உத்தி வெற்றிகரமாக உள்ளது. இந்த அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம், தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் நமது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான அந்நிய மூலதனத்தையும் முதலீட்டையும் ஈர்க்க முடியும். பிராந்தியத்தின் விரிவான பொருளாதார கூட்டாண்மையைப் பொறுத்தவரை, நாங்கள் உறுப்பினர்களை இணைப்பதற்காக விண்ணப்பித்துள்ளோம் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம். ஓகஸ்ட் மாதத்தில் மலேசியா மற்றும் இந்தோனேசியாவின் வெளியுறவு அமைச்சர்களின் வருகைகளை நாங்கள் எதிர்பார்க்கிறோம், மேலும் அவர்களுடன் எங்கள் கலந்துரையாடலைத் தொடருவோம். இதில் நாங்கள் மிகவும் ஆர்வமாக உள்ளோம். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம், மேலும் விரிவான ஒப்பந்தங்களுக்கு தற்போது மலேசியா, இந்தோனேசியா, சீனா மற்றும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

**கே: கடன்வழங்குனர்கள் மற்றும் சர்வதேச பிணை முறிகளை வைத்திருப்பவர்களுடனான கடன் மறுசீரமைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகள் இராஜதந்திர மட்டத்தில் எந்தளவில் உள்ளன?**

பதில்: பிரான்சின் பரிஸில் 2024 ஆம் ஆண்டு பரிஸ் கிளப் மற்றும் ஏனைய கடன் வழங்குனர்களுடன் இறுதி உடன்பாட்டை எட்ட முடிந்துள்ளது. இது வெளிநாட்டுக் கடன் வழங்கும் நாடுகளுடன் நமது கடனை மறுசீரமைக்க உதவும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், பணம் செலுத்துவதை இடைநிறுத்துவதற்குப் பதிலாக, நாங்கள் பணம் செலுத்துவதை ஒத்திவைப்போம் மற்றும் வட்டி மற்றும் பிற நிலுவைத் தொகையை மீண்டும் செலுத்துவோம். இது இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். வங்குரோத்து நிலையிலிருந்து விரைவாக மீள்வதற்கான பாதையில் இலங்கை உள்ளது. உதாரணமாக, கிரேக்க நாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு நாடாக இருந்தாலும், அதனால் விரைவில் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சிபெறமுயவில்லை. ஆனால் நாம் இதில் சாதனை படைத்துள்ளோம் என்றே கூற வேண்டும்.

**கே: ஜனாதிபதியின் பதவிக் காலத்தை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அல்லது வேறு ஏதாவது சட்டதிட்டங்களின் மூலம் நீடிக்க முடியுமா? இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

பதில்: தொழில்நுட்ப ரீதியாக, ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பைத் திருத்த வேண்டும், அதைத் தொடர்ந்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இது சாத்தியப்படும் என நான் கருதவில்லை. அப்படி இருந்தாலும், அதைச் செய்யக்கூடாது. பதவியில் இருப்பவருக்கு சீர்திருத்தங்களை மேற்கொள்ள மக்கள் ஒப்புதல் அளித்து அதிகாரம் வழங்க வேண்டும். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்து இன்று வரையிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு, மக்கள் முன் சென்று மற்றொரு தவணைக்கான வலுவான கோரிக்கையை வைக்க ஜனாதிபதி போதுமான அளவு முன்னேற்றங்களைச் செய்துள்ளார் என நான் நம்புகின்றேன்.

மக்கள் பல்வேறு தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்தலாம், ஆனால் ஜனாதிபதியும் அரசாங்கமும் எந்தவொரு தேர்தலையும், குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதில் ஆர்வம் காட்டவில்லை. அரசியலமைப்புக்கு அமைய தேர்தல் நடத்தப்படும்.

**கே: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் யாரை ஆதரிப்பீர்கள்? ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் தெரிவொன்றை மேற்கொள்ள வேண்டிய சூழல் வந்தால் நீங்கள் யாரை ஆதரிப்பீர்கள்?**

பதில்: விடயங்கள் எவ்வாறு முன்னேறிச் செல்கின்றன என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் முன்னேற்றத்திற்காக இன்னொரு பதவிக்கு தகுதியானவர் என்பதை தனிப்பட்ட முறையில் நான் உணர்கிறேன். இந்த பொருளாதார சீர்திருத்தங்கள் சவாலானவை மற்றும் திறம்பட செயற்படுத்த தொலைநோக்கு மற்றும் அறிவு தேவை. அவர் ஆற்றியதைப் போன்று சாதிக்கக் கூடிய வேறு யாரையும் நான் பார்க்கவில்லை.

சர்வதேச அளவில், ஐ.நா, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற பல்வேறு தரப்புக்களினதும் ஆதரவையும பெற்றுள்ள ஒருவராக அவர் உள்ளார். மேலைத்தேய மற்றும் ஐ.எம்.எஃப் போன்ற பலதரப்பு அமைப்புகளில் அவர் பல ஆதரவாளர்களையும் ரசிகர்களையும் பெற்றுள்ளார். கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் அவர் பெற்றுள்ளார். அவர் இன்னும் ஒரு முறை ஆட்சியில் இருந்தால் அது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று நான் நம்புகிறேன்.

**கே: சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வது குறித்து எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவித்துள்ளன. மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியமா அல்லது என்னென்ன திருத்தங்களைச் செய்யலாம் என்பதை விரிவாகக் கூற முடியுமா?**

பதில்: சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை நடத்துவது சாத்தியம் என்றாலும், ஒப்பந்தத்தின் நோக்கத்தை அடிப்படையில் மாற்றுவது சாத்தியமில்லை. வரி விதிக்கப்பட வேண்டிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் மற்றும் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட வீதம் போன்ற அளவுருக்களை எந்தவொரு நிர்வாகமும் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த இலக்குகளை அடைவதற்கான அணுகுமுறை குறித்து பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்றாலும், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையில் பெரிய மாற்றங்கள் சாத்தியமில்லை. எதிர்க்கட்சிகளின் இத்தகைய விவாதங்கள் பெரும்பாலும் நடைமுறைக் கொள்கை மாற்றங்களை விடவும் தேர்தல் சொற்பொழிவுகளைப் பற்றியதாகும்.

# இந்தியா–இலங்கை இடையே அமைந்துள்ள இராமர் பாலம் மனிதனால் அமைக்கப்பட்டதா?

**இந்தியா– இலங்கை இடையே கடல் பகுதியில் உள்ள இராமர் பாலத்தின் முழு வடிவத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் மிகத் துல்லியமாக உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் பல ஆண்டுகளாக விடை தெரியாமல் இருந்த விடயங்களுக்கு ஒரு தெளிவு கிடைத்துள்ளது.**

இராமர் பாலம் என்பது இராமேஸ்வரத்துக்கும், இலங்கையின் மன்னார்தீவுக்கும் இடையே உள்ள மணல் பாலமாகும். சுமார் 48 கி. மீட்டர் நீளம் உள்ள இந்தப் பாலம் இயற்கையாகவே சுண்ணாம்புப் பாறைகளால் உருவான மிக நீளமானதாகும்.

தமிழில் இராமர் சேது பாலம் என அழைக்கப்படும் இந்தப் பாலம் ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் 'ஆதாம் பாலம்' என்று அழைக்கப்பட்டது. அக்கால மத நம்பிக்கையின்படி முதல் மனிதன் ஆதாம் இதன் வழியே இலங்கைக்குப் பயணம் செய்தார் என பலர் நம்புகின்றனர்.

அறிவியல் கருத்துகளின்படி இந்தப் பாலம் 600 ஆண்டுகள் முன்னால் உருவாகி இருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த தி.மு.க சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்தியது.

1997 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டன. 300 மீட்டர் அகலமும், 12 கி.மீட்டர் ஆழமும், 167கி.மீட்டர் நீளமும் கொண்ட இத்திட்டம் வடிவம் பெறுவதற்கு முன்பாகவே இந்து மதத்தின் நம்பிக்கைக்கு எதிராக இந்தப் பாலம் உருவாக்கப்படுவதாக சர்ச்சை வெடித்தது.

இந்தப் பாலத்தால் 30 மணிநேரம் குறையும் என்றும் கணிசமான எரிபொருள் செலவு மீதப்படும் என்றும் அந்நிய செலவாணி சேமிக்கப்படும் எனவும் பலதரப்பட்ட கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றதால் இத்திட்டம் முடங்கியது.

இந்நிலையில் கடலுக்கு அடியில் உள்ள ஊடுருவிச் செல்லும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இராமர் பாலம் பற்றிய விவரங்களைச் சேகரித்துள்ளது. பல காலமாக இந்தப் பாலம் பற்றிய பல்வேறு குழப்பங்கள் இருந்து வந்த நிலையில், அதைப் புரிந்து கொள்வதற்கான முதல் அறிக்கையாக இதுவே அமைந்துள்ளது.

“ஆதாமின் பாலம் மற்றும் அதன் தோற்றம் பற்றிய புரிதலை வலியுறுத்த எங்களின் இந்தக் கண்டுபிடிப்பு உதவுகிறது" என இஸ்ரோவின் தேசிய ரிமோட் சென்சிங் சென்டரின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்தச் செயற்கைக் கோளானது கடலின் ஆழமற்ற பகுதிகளில் உள்ள எந்தவொரு கட்டமைப்பின் உயரத்தையும் தொழில்நுட்பம் வழியே அளவிடும். அதாவது தண்ணீரில் ஊடுருவிச் சொல்லக் கூடிய ஒளித்துகள்கள் மூலம் குறிப்பிட்ட பகுதியில் என்ன உள்ளது என்பதை இது தெளிவாகக் காட்சிப்படுத்திவிடும்.




## புராண ஐதீகங்கள் கூறுவது உண்மையா?

ஆதாம் பாலத்தில் முழு வரைபடத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. 'மேப்பிங் எக்சர்சைஸ்' தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் அசல் வடிவம் கடலுக்கு அடியில் 29 கி.மீட்டர் நீளம் உள்ளதாகவும் கடல் பரப்பிலிருந்து 8 மீற்றர் அடியில் உள்ளதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்கச் செயற்கைக்கோளிலிருந்து பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி, இந்திய விண்வெளி விஞ்ஞானிகள் இப்போது ஆதாம் பாலத்தின் மிக விரிவான வரைபடத்தை வெளியிட்டுள்ளனர். அதாவது இராமர் சேது பாலத்தின் முழு வடிவத்தை வெளியிட்டுள்ளனர்.

"நாசா செயற்கைக்கோள் ICESat2 நீர்

ஆதாம் பாலம் இந்தியாவின் இராமேஸ்வரம் தீவின் தென்கிழக்கு பகுதியான தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் மன்னார் தீவில் உள்ள தலைமன்னாரின் வடமேற்கு முனை வரை நீண்டு காணப்படுகிறது என்பதை இது தெளிவுபடுத்தி உள்ளது. இந்த ஆய்வு நீருக்கடியில் உள்ள மலைமுகடு, சுண்ணாம்புக் கற்களின் சங்கிலி போன்று தொடர்ச்சியாக நீண்டுள்ள பாதையை முழுமையாக வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

இந்திய மிகப் பழைமையான இதிகாசம் எனக் கூறப்படும் இராமாயணத்தில், இலங்கையில் இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதையை மீட்பதற்காக இராமர் இலங்கையை நோக்கிப் புறப்பட்டார். அப்போது கடல்வழியே பயணிப்பதற்காகக் வானரப் படையால் கட்டப்பட்டதுதான் இந்த இராமர் சேது பாலம் என நம்பப்படுகிறது. இராமாயணக் கதையில் இந்தப் பாலம் மையப்பொருளாக இன்றுவரை உள்ளது. இது மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பா என்பதைக் கண்டுபிடிக்கக் கடந்த காலங்களில் பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளன.

ஜோத்பூர் மற்றும் ஹைதராபாத்தைச் சேர்ந்த NRSC ஆராய்ச்சியாளர்கள், ஆதாம் பாலம் பற்றிப் பல நுணுக்கமான விபரங்களை அறிந்துகொள்வதற்காக நாசா செயற்கைக்கோள் எடுத்த படங்களைக் கொண்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் பாலத்தின் 99.98% பகுதிகள் மிகவும் ஆழமற்ற நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவித்தனர். ஆகவே கப்பல் மூலம் இப்பகுதியை ஆய்வு செய்வது சாத்தியமில்லை என்றும் அறிவித்தனர்.

(17ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...



இஸ்ரோ வெளியிட்டுள்ள முழுமையான வரைபடத்தினால் உருவான பரபரப்பு!

# கொழும்பு, அளுத்மாவத்தை ஐயப்ப தேவஸ்தான திருவிழா

## 16 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, அளுத்மாவத்தை அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் 21 ஆம் ஆண்டு மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறும் இம்மஹோற்சவம் 21 ஆம் திகதி தேர்த் திருவிழாவுடன் நிறைவு பெறுகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு கொடியேற்றம் நடைபெறுவதுடன் 5.45 மணிக்கு கணபதி ஹோமம் நடைபெறும்.

17 ஆம் திகதி மஞ்சமாதா பூஜையும் 18 ஆம் திகதி நாகராஜா பூஜையும் 19 ஆம் திகதி கருப்பசாமி பூஜையும் 20 ஆம் திகதி பள்ளிவேட்டைத் திருவிழாவும் 21 ஆம் திகதி தீர்த்தவாரி ( ஆராட்டு) திருவிழாவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவிழா நடைபெறும் தினங்களில் தினமும் மாலை 6.45 மணிக்கு படி பூஜை நடைபெறும். இறுதி நாளான 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும் என அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தான அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

# ரிஷாத் பதியுதீன் எம்.பி. பயணித்த வாகனம் விபத்து

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



*அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்* தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பயணித்த சொகுசு வாகனம் புத்தளம், கருவலகஸ்வெவ பகுதியில் வைத்து நேற்று (13) விபத்துக்குள்ளாகியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் அநுராதபுரத்தில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த போது, பிரதான வீதிக்குள் திடீரென பிரவேசித்த மோட்டார் சைக்கிளுடன் ஏற்படவிருந்த விபத்தை தவிர்க்க முற்பட்ட போது வாகனம் வீதியை விட்டு விலகி இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினருக்கோ அல்லது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபருக்கோ எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த சொகுசு வாகனத்திற்கும், மோட்டார் சைக்கிளுக்கும் சிறிய அளவில் சேதங்கள் மாத்திரமே ஏற்பட்டுள்ளதாகவும் கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மேலதிக முஸ்லிம் மரண...

*தென்னகோன், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். மரணம் சம்பவிக்கும் போது முஸ்லிம்கள் தங்களது ஜனாஸாக்களை சமய வழிமுறைக்கு அமைய 24 மணித்தியாலங்களுக்குள் இறுதிச் சடங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த நியமனங்களை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*அது தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூலம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது : " முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை இறுதி கிரியை சடங்குகள் ஏனைய மத சடங்குகளை போலன்றி 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.*

*எனினும் பல்வேறு காரணங்களினால் இதனை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை அம்மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.*

*இது நல்லாட்சியின் நெறிமுறை பொறுப்புகளுக்கும் முரணானதாகும். எனவே முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் மரபு ரீதியான கடமைகளை எளிதாக்கும் வகையில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முஸ்லிம் சமூகத்திலிருந்து கூடுதலான மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்க பரிந்துரைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

## வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பது...

*நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துவிடாமல் இருப்பது தொழிற்சங்கங்களின் பாரிய பொறுப்பு எனவும், பொருளாதார சீர்திருத்தங்களால் குறுகிய கால நிலை அனைவருக்கும் பொதுவானது எனவும் அவர் வலியுறுத்தினார். கொழும்புப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்பத் துறைத் தலைவராகவும் பொருளாதாரப் பிரிவில் பொருளாதாரப் பேராசிரியராகவும் கலாநிதி பிரியங்க துனுசிங்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## வாக்குச் சீட்டுகளை அச்சிட...

*அச்சிட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.அதற்குத் தேவையான பணியாளர்கள் அரச அச்சகத் திணைக்களத்தில் உள்ளனர்.*

*தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவிப்புக்கமைய, எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

## எங்கள் கருத்து...

### சமூக ஊடகங்கள் தீர்வு தருமா?

திறப்பதற்கும், திறமையின்மைகளை நிவர்த்தி செய்வதற்கும், வைத்தியர் அருச்சுனாவின் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது. அவரது வெளிப்படைத்தன்மை மற்றும் சவால்களை பகிரங்கமாக எதிர்கொள்ளும் முறை ஆகியவை கணிசமான மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளன. இருப்பினும், இத்தகைய வெளிப்பாடுகளுக்கு சமூக ஊடகங்களை அவர் தொடர்ந்தும் பயன்படுத்தி வருவது தவறான முன்னுதாரணமாகப் பார்க்கப்படுகின்றது.

பதில் மருத்துவ அத்தியட்சகராக அங்கு சில வாரங்கள் கடமையாற்றிய வைத்தியர் இராமநாதன் அருச்சுனா சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தான் கண்டறிந்த குறைபாடுகள். ஊழல்கள் போன்றவற்றை அதற்குரிய வழிமுறைகளில் முன்வைத்து அதற்கான தீர்வைப் பெற முயலாமல் சமூக ஊடகங்களில் அவற்றைப் பகிரங்கப்படுத்தியது நிலைமையினை தீவிரப்படுத்தியதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் சமூக ஊடகங்களின் துருவமுனைப்பு மற்றும் பரபரப்பான போக்கு முக்கிய பிரச்சினைகளை மறைக்கக்கூடும், இது பொது மக்களின் கோபத்தைத் தூண்டவும் தவறான தகவல்கள் பரப்பப்படவும் வழிவகுக்கும். வைத்தியசாலையில் உள்ளதாகச் சொல்லப்படும் குறைபாடுகள், பிரச்சினைகளை முறைப்பாடு செய்து அது பலன் தராததால் வைத்தியர் அருச்சுனா தனது வெளிப்பாடுகளுக்கு பேஸ்புக்கைப் பயன்படுத்துவதற்கான முடிவு, நல்ல நோக்கத்திற்கானதாக இருந்தாலும், ஆக்கபூர்வமான உரையாடலை வளர்ப்பதற்குப் பதிலாக பதற்றங்களை அதிகப்படுத்தியது என்றே கூற வேண்டும். மாகாண சுகாதார அதிகாரிகளுடன் நேரடியாக அணுகி பொது விளக்கங்களை உள்ளடக்கிய அணுகுமுறையைக் கடைப்பிடித்து அவர் அமைதியின்மையைத் தவிர்த்திருக்கலாம்.

சமூக ஊடகங்களால் திறம்பட செயற்பட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆதரவைப் பெறவும் முடியும் என்றாலும், சிக்கலான நிறுவனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதன் பங்கைக் கவனமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அரசியல் ரீதியாகவே கையாண்டார்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தவிர்ப்பதற்கான சூழ்நிலை அன்று இருந்த போதிலும் அதனை அரசியல் ரீதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையாண்டதாக முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவன் விஜேவர்த்தன தினகரன் வாரமஞ்சரிக்கு அளித்த விசேட செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்றது. அந்தக் காலப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ருவன் விஜேவர்த்தன கடமையாற்றினார்.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை சிரியா மற்றும் காஷ்மீரில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ISIS அமைப்பின் தலைப்பீடத்தின் உத்தரவுக்கமைய கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்தாகவும் குறிப்பிட்ட அவர், இலங்கையில் செயல்பட்ட இக்குழுவினருக்கினருக்கிடையில் இது தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இத்தாக்குதல் திடீரென மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்று இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதில் வெளிநாட்டவர் அடங்கலாக 269 பேர் உயிரிழந்தனர். 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களும் முரண்பட்ட தகவல்களும் வெளிவரும் இக்காலப்பகுதியில் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அவர் குறிப்பிடுகையில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக தாம் பதவி வகித்த போதிலும், தமக்கென பாதுகாப்பு விடயத்தில் வரையறுக்கப்பட்ட சில விடயங்களையே கையாளுவதற்கான வர்த்தமானி அறிவிப்பு மூலம் பொறுப்புக்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் கல்வி தொடர்பிலும் சிவில் பாதுகாப்புப் பிரிவு, பட்டலந்த உள்ளிட்ட சில குறிப்பிட்ட விடயங்களுக்கு மாத்திரம் தாம் பொறுப்பாக செயற்பட்டதாக கூறினார். இதனால் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதிக்கோ இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் தமக்கோ பொறுப்புக்கள் எதுவும் உரித்தாகவில்லை என்றும் அவர் கூறினார்.

குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூரில் இருந்தார். அன்றைய தினம் அவசரமாக பாதுகாப்பு சபை கூடப்பட்டது. இக்கூட்டம் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது. கொழும்புக்கு அப்பால் சென்றிருந்த அப்போதைய பிரதமர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சம்பவத்தை அறிந்தவுடன் உடனடியாக கொழும்புக்குத் திரும்பினார்.

சம்பவத்தையடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்காக அலரி மாளிகையில் விசேட பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யமாறும் தொலைபேசி மூலம் அவர் வலியுறுத்தினார். பிரதமரினால் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்கு வரமறுத்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக, நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக இந்த அதிகாரிகள் தெரிவித்து, அலரி மாளிகைக்கு வர விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் கொழும்பு வந்தடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாக பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்தார். அவரின் வருகையையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே அப்போது ஊரடங்கு உத்தரவுகள் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இந்தியப் புலனாய்வு குழுவினரால் முன்கூட்டியே இலங்கைக்கு தகவல்கள் வழங்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் இவை உரிய முறையில் பிரிவுகளுக்கு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்ட அவர், மைத்திரிபால சிறிசேன இதனை அரசியல் ரீதியில் கையாண்டதாகவும் குறிப்பிட்டார்.

இதனாலேயே அந்த அனர்த்தத்தை தடுக்க முடியாமல் போனது. தேசிய பாதுகாப்பு விடங்கள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை புறந்தள்ளியே வைத்திருந்தார். இதேபோன்றே தானும் இருக்கவேண்டிய நிலை இருந்ததாகவும் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின்போது தேவாலயங்களில் தமிழ் மொழி மூலமான ஆராதனை ஆரம்பிக்கப்பட்ட சொற்ப நேரத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் போது உயிரிழந்தவர்களின் பெரும்பாலானோர் தமிழர்கள். அதுமட்டுமன்றி வெளிநாட்டிலிருந்து வந்த சில இந்தியர்களும் கொல்லப்பட்டனர். விசாரணைகள் இடம்பெற்ற போதிலும் அப்போதைய ஜனாதிபதி அரசியலை முன்னிலைப்படுத்தியே செயல்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஹம்பாந்தோட்டை, வீரகெட்டியவில்

# இசை நிகழ்ச்சியொன்றில் மோதல் 31 வயது இளைஞர் குத்திக்கொலை

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய, மொராய பிரதேசத்தில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவத்தில் மேலும் 05 பேர் காயமடைந்துள்ளனர். இப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இசை நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது இரவு சுமார் 11 மணியளவில் இரு தரப்பினருக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலையடுத்து 31 வயதான இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் வீரகெட்டிய மொரய பிரதேசத்தை சேர்ந்த 31 வயது இளைஞர் என வீரகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த மோதலில் காயமடைந்த 05 பேரும் தங்காலை மற்றும் எம்பிலிபிட்டிய வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அவர்களது நிலைமை மோசமாக இல்லையென வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## சகல பொறுப்பிலிருந்தும்...

*எடுக்கப்பட்டதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*அடுத்த பொதுத் தேர்தலில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பவற்றில் வேட்பு மனு வழங்குவதில்லையென்றும் இதற்கு முன்னர் கட்சி தீர்மானம் எடுத்திருந்தது.*

## அமரர் அமிர்தலிங்கத்தின்...

*மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவன், யசோதா சரவணபவன், வலி மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான ஜெயந்தன் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.*

## நாடு படிப்படியாக முன்னேற...

*பணிப்பாளர் அனில் சர்தானாவை அஹமதாபாத்தில் தினகரன் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.*

*உலகின் சிறிய பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்து 2030க்குள் மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா முன்னேறுவதற்கு பிரதமர் மோடியின் தலைமைத்துவம் முக்கியமானதென்றும் அவர் மேலும் கூறினார்.*

*ஒரு தலைவரைத் தொடர்ச்சியாக ஆள அனுமதிக்கும்போது, அவரது சிறந்த கொள்கைகள் தடையின்றி தொடருமென்பது உறுதியாவதால் நாடு வேகமாக முன்னேறும் என்றும் அவர் கூறினார்.*

*தலைவர்கள் மக்கள் விரும்பாத முடிவுகளையும் எடுக்க வேண்டும் என்றும், அது இந்தியாவிலும் நடந்ததாகவும் அவர் கூறினார். இந்திய ரூபாயின் பண மதிப்பிறக்கம் அதற்கான ஒரு எடுத்துக்காட்டென கூறிய அவர்,சிலர் அதனை விமர்சித்தாலும் கூட, நீண்ட கால அடிப்படையில் இந்த நடவடிக்கை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.*

*இலங்கையில் அதானியின் முதலீடுகள் குறித்து கருத்து தெரிவித்த அவர், மீள் புதுப்பிக்கப்பட்ட சக்தி (Renewable energy) (காற்றாலை Wind Power Project ) துறையில் முதலீடு செய்வதாகவும், பூநகரி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் 01 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளதாகவும், துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தில் துறைமுக விஸ்தரிப்பிலும் முதலீடு செய்வதாகவும் கூறினார்.*

*மேற்கு கொள்கலன் முனைய முதலீடுகளுக்கான ஆதரவு அதிகளவில் இருந்தபோதும், புதுப்பிக்கத்தக்க சக்தி (Renewable energy) துறையில் அதிகாரிகள் மட்டத்தில் தங்களது முதலீட்டுக்கான ஆதரவு போதியளவில் இல்லையென்றும் அவர் கூறினார்.*

*அதிக செலவு செய்யும் புதைபடிவ எரிபொருட்களில் இலங்கை தனது சக்தி வலுத் தேவைகளுக்காகச் சார்ந்திருக்க வேண்டும் என்று சில அதிகாரிகள் எண்ணுவதே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறுனார்.*

*இந்த எதிர்மறையான, கடினமான, சமரசமற்ற மனப்பான்மையால் கடந்த 40 முதல் 50 ஆண்டுகளாக இலங்கையின் மின் பாவனையாளர் அதிக மின் கட்டணத்தைச் செலுத்தி வருகின்றனர். என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.*

# யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் 16ஆம் திகதி இலங்கை வருகை



ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (United Nations Educational, Scientific and Cultural Organization) (UNESCO) பணிப்பாளர் நாயகம் Audrey Azoulay இலங்கை அரசின் அழைப்பின் பேரில் எதிர்வரும் 16 முதல் 19 வரை இலங்கை வரவுள்ளார். இந்த விஜயத்தின் போது, பணிப்பாளர் நாயகம் Audrey Azoulay ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளதுடன், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் பதில் வெளிவிவகார அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். தாமரைத் தடாக அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யுனெஸ்கோவில் இலங்கை அங்கத்துவம் பெற்றதன் 75ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதுடன் இலங்கையில் யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட உலக பாரம்பரிய தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

# அதிகளவு புகையை வெளியிடும் வாகனங்கள் Black List பட்டியலில்

அதிக புகையை வெளியிடும் வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமென மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன உமிழ்வு பரிசோதனை அறக்கட்டளை நிதியம் தெரிவித்துள்ளது.

வீதியில் பயணிக்கும் இவ்வாறான வாகனங்கள் தொடர்பில் 070 3500 525 என்ற whats app இலக்கத்துக்கு முறைப்பாடுகளை அனுப்பு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் தசுன் கமகே குறிப்பிட்டுள்ளார்.

வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் புகை சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டாமென தசுன் கமகே சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.போலியான தந்திரோபாயங்கள் மூலம் புகை பரிசோதனை சான்றிதழைப் பலர் பெறுகின்ற போதிலும், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மோட்டார் வாகன திணைக்கள அதிகாரிகள் வீதியில் வாகனங்கள் செலுத்தும் போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சோதனைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

அதிக புகை வெளியேறுவதை அவதானிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராக பராமரிப்பு உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும், இல்லையெனில் வாகனத்துக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் விளக்கமளித்துள்ளார்.

## மலையக தொழிற்சங்க தியாகிகள் தினம்

# ஜன. 10ஆம் திகதியை பிரகடனப்படுத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும்

## வேலுகுமார் MP யின் பிரேரணைக்கு அமைச்சர் சுசில் பதில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனவரி 10 ஆம் திகதியை மலையக தொழிற்சங்க தியாகிகள் தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்துமென அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

தமிழ் முற்போக்கு கூட்டணி எம். பி. வேலுகுமார் தனது தனி நபர் பிரேரணையை சபையில் சமர்ப்பித்த பின்னர் அதற்கு பதிலளித்துப் பேசும் போதே அமைச்சர் சுசில் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மலையக தொழிற்சங்க தியாகிகள் தினம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டுமென்ற தனி நபர் பிரேரணையை முன்வைத்து சபையில் உரையாற்றிய வேலுகுமார் எம் பி,

வரலாற்றில் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனர் என்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூர வேண்டுமென்பது இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக காணப்படுகிறது.

1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் “முல்லோயா கோவிந்தன்” என்ற தொழிலாளர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பலதொழிற்சங்கப் போராட்டங்களில் மலையகப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவு கூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென பிரேரிக்கின்றது என்றார். மேற்படி பிரேரணையை வழிமொழிந்து வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி , மனோ கணேசன் எம்.பி. உள்ளிட்டபலர் சபையில் உரையாற்றினர். இப் பிரேரணை தொடர்பில் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும் என்றும் தெரிவித்தார்.

## பாராளுமன்ற குழுத் தலைவராக...

*சித்தார்த்தன் எம்.பி தெரிவித்தார். கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தெரிவு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ் விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில். எங்களைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதன் தான் இருக்க வேண்டுமென விரும்புகிறோம். அதனையே கட்சிகளிடத்திலும் நாங்கள் கூறியும் இருக்கிறோம்.*

*இதனை ஆரம்பத்திலிருந்தே சில தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கூறியிருந்தாலும் இன்று அவர்களுடைய கட்சிக்குள் ஏதோ பிரச்சினை உருவாகியிருக்கிறது போல் தெரிகிறது. ஆகையினால் அவர்கள் அதை தீர்த்துக் கொண்டு சரியான முடிவொன்றுக்கு வருவார்களென நம்புகின்றோம். ஏனெனில் சுமார் 23 வருடங்களாக இரா.சம்பந்தரே பாராளுமன்றக் குழுத் தலைவராக இருந்திருக்கின்றார்.*

*ஆகவே அந்தப் பாராளுமன்றக் குழுத் தலைவராக மற்றக் கட்சிகளில் ஒருவருக்கு கொடுப்பது தான் முறையென நினைக்கிறோம். இதன்படி அவர்கள் அதைச் செய்வார்களென நான் நினைக்கின்றேன்.*

*தற்போதுள்ள மூன்று கட்சிகளில் இரண்டு கட்சிகள் செல்வம் அடைக்கலநாதன் தான் தெரிவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. எனினும் அந்த நிலைப்பாட்டுக்கு மாறாக தமிழரசுக் கட்சி இருக்கிறது. ஆனாலும் செல்வத்துக்கு தான் அவ்வாறு கிடைக்குமென நம்புகிறேன். தமிழரசுக் கட்சியில் அவர்கள் ஆறு பேர் இருக்கின்றனர். எங்களில் நான்கு பேர் இருக்கின்றோம். அந்த ஆறு பேரில் ஒருவர் இருவர் என எங்களுடைய நிலைப்பாட்டுக்கு சிலர் இணங்கி சம்மதித்தாலும் இப்போது தமது கட்சியின் தீர்மானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அடுத்த கூட்டத்தில் என்ன நடக்கின்றதென பொறுத்திருந்து பார்ப்போம் என்றும் சித்தார்த்தன் எம்.பி தெரிவித்தார்.*

## தற்காலிக, அமைய ஊழியர்கள்...

*நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், மிக நீண்டகாலமாக உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய அடிப்படையில் பலர் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொடுக்க பாரிய பிரயத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டன.*

*எங்களது கோரிக்கையை ஏற்று, ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, பிரதமர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இவர்கள் இருவருக்கும் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.*

*165 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்க அனுமதி கிடைத்துள்ளது. நீண்ட கால ஏக்கத்துக்கு ஒரு தீர்வு காணப்பட்டுள்ளதென தெரிவித்தார். தற்காலிக மற்றும் அமைய அடிப்படையிலான ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் செயற்பாட்டுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸே முதன் முதலில் தனது ஆதரவை தெரிவித்ததாக பிரதமர் தினேஷ் தெரிவித்தார். ஆளுநரின் தொடர்ச்சியான முயற்சியின் பலனாகவே இன்று 165 பேருக்கான நிரந்தர நியமனங்கள் கிடைத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொள்ளும் ஊழியர்கள் தங்களின் கடமைகளை உரியவாறு முன்னெடுக்க வேண்டுமெனவும் பிரதமர் கூறினார்.*

# புனித ஜோன் தல் பஸ்தோனி ஆலயத் திருவிழா

## புனிதருக்கு உலகில் உள்ள ஒரே திருத்தலம் தியவன்னா கங்கை கரை தலங்கம ஆலயமே




கத்தோலிக்கத் திருச்சபை இன்றைய தினம் புனித ஜோன் தல் பஸ்தோனியின் திருவிழாவை சிறப்பிக்கின்றது.

இலங்கைத் திருநாட்டின் மேற்கே, எழில் கொஞ்சும் தியவன்னா கங்கைக் கரையில் தலங்கம என்ற கிராமத்தில், ஒரு சிறிய குன்றில் வானளாவ உயர்ந்துநின்று, தம்மை நாடி வருகின்ற பக்தர்களுக்கெல்லாம் இறைவனிடம் இடையறாது பரிந்து பேசிக்கொண்டிருக்கும் புனிதராம், புனித ஜோன் தல் பஸ்தோனி முனிவருக்காக அர்ப்பணிக்கப்பட்டதாக இத் திருத்தலம் அமைந்துள்ளது. உலகெங்கிலும் இப்புனிதருக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரேயொரு திருத்தலம் இது என்பதில் எம் நாடு பெருமை கொள்கின்றது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின், ஹேவாகம்கோரளையின், பள்ளிபத்துவ கோட்டை இராசதானிக்குச் சொந்தமான தலங்கம தெற்கு கிராமத்திலுள்ள கத்தோலிக்க மக்களது ஆன்மிக நலன்களுக்காக அமைக்கப்பட்ட புனித ஜோன் தல் பஸ்தோனி தேவாலயமானது, இன்று உலகம் முழுமைக்கும் தனித்துவமாகத் திகழ்ந்து வருவதோடு, இப்புனிதர் வழியாக இறைமக்கள் பெற்ற வரப்பிரசாதங்களை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

தன்னுடைய சகாக்களால் ஜோன் பஸ்தோன் அதாவது ஊன்றுகோல் ஜோன் என அழைக்கப்பட்ட இப்புனிதரது இயற்பெயர் ஜோன் போட்டேகோனி. இவர் 1200ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி இத்தாலியின் பெப்ரியானோ மாவட்டத்தில் உள்ள பேட்டர்னோ என்ற கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை பேனெல்லோ. தாய் சூப்பர்லா. இவர்களுக்கு ஐந்து குழந்தைகள். அவர்களுள் இளையவரே புனித ஜோன் தல் பஸ்தோன்.

இவர் சிறுவயது முதலே ஆன்மிகத்திலும், அறிவிலும், நல்லொழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். ஜோன் கல்வியில் சிறந்து விளங்கியதால் அவரது பெற்றோர் அவரை மானுடவியல் கற்கும்பொருட்டு போலோக்னாவுக்கு அனுப்பினர். எனினும் அவர், மனிதநேயக் கற்கைகளைவிட தனது ஆன்மிக தேடல்களில் அதிக ஆர்வம் செலுத்தி வந்தார். மறைமாவட்டத்தின் மத ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பதிலும், தேவாலயங்களில் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதிலும் அவர் வழுவாதிருந்தார்.

பிரார்த்தனையில் தன்னை அதிகளவில் ஈடுபடுத்திக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தூய்மைக்கு முரணான பல விடயங்கள் அவருக்குக் கவலையளித்து வந்தன. எனினும், இறைவன் அவரது கால் தொடையின் ஒரு பக்கத்தில் ஏற்பட்ட சீழ்மிக்க ஒரு புண்ணால் அவரைத் துன்புறுத்தி, அவரது ஜெபத்திற்கு பதிலளித்தார். இந்த வலிகளின் ஊடாக, புனித ஜோன் தன் ஆன்மாவிற்கு எது தேவை, எது முக்கியம் என்பதை மிகுந்த முனைப்போடு தேடுவதற்கு இறைவன் தூண்டினார்.

தொடையில் ஏற்பட்ட புண் அவரை மிகவும் பலவீனப்படுத்தியது. ஒரு கழுதையின்மேல் மேல் சவாரிசெய்து வீட்டிற்குத் திரும்பிய அவர் தன் வாழ்நாள் முழுவதும் நொண்டியாக இருக்கும்வகையில் ஒரு பணியாளரது உதவியுடனேயே நடக்கவேண்டியேற்பட்டது. இதனால் அவர் “ஜோன் ஒப் தி ஸ்டாப்” அதாவது ஊன்றுகோல் ஜோன் (தல் பஸ்தோன்) என அழைக்கப்பட்டார்.

புனித சில்வெஸ்டர் குஸ்ஸோலினியின் புனிதத்தன்மையினால் ஈர்க்கப்பட்ட ஜோன், அத்துறவு மடத்தில் சேர அனுமதி கேட்டார். இப்புனித நோக்கத்தில் மகிழ்ச்சியடைந்த புனித சில்வெஸ்டர், அவரை சிறிது நேரம் சோதித்து இறுதியாக அவரை ஏற்றுக்கொண்டார்.

உண்ணாவிரதம், பிரார்த்தனைகள் மற்றும் ஆன்மிக புத்தகங்களைக் கற்றுத் தேர்ந்த ஜோன், துறவற வாழ்க்கை முறையை மிக விரைவில் கடைப்பிடிக்கத் தொடங்கினார். ஜோனின் புனிதத் தன்மையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கண்ட அவரது ஆன்மகுரு, அவரை ஒரு குருவாக உயர்த்தினார். எனினும் உடல் முழுவதும் ஏற்பட்ட நோய்களால் அவர் மிகவும் துன்பப்பட்டார்.

தனது தேவைக்கு அதிகமாக எதையும் தன்னிடம் வைத்துக் கொள்ள விரும்பாத ஜோன் மிகுந்த வறிய நிலையில் வாழத் தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டார். இயல்பிலேயே நற்குணங்களைக் கொண்ட அவர் கடவுளுக்கும் மனிதருக்கும் முன்னிலையில் மிகுந்த கருணைமிக்கவராகவும் திகழ்ந்தார். எனவே அவரது சக துறவிகள், தங்களது சந்தேகங்கள் மற்றும் பிரச்சினைகளின்போது இவரிடம் ஆலோசனை கேட்டு வந்தனர்.

தனது தலைவரின் கட்டளைகள் அனைத்தையும் பின்பற்றி வந்த ஜோன் இறைவார்த்தையைப் போதிக்கத் தொடங்கினார். 1267 நவம்பர் 26 அன்று தனது ஆன்மகுருவாகிய புனித சில்வெஸ்ரரின் மறைவுக்குப் பின்னர், தனது புனித நோக்கத்தில் ஜோன் மிகவும் உறுதியாக இருந்தார். புனித சில்வெஸ்ரரைப் பின்பற்றி, ஜோன் பல புதுமைகளைச் செய்து வந்தார்.

இதற்கிடையில் ஜோனின் காலில் ஏற்பட்ட புண் மிக மோசமான நிலைக்கு வந்ததால் சிகிச்சைக்காக பேப்ரியானோவுக்கு கொண்டு வரப்பட்டார். 1290ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி இயேசுவின் பிறப்புத் திருவிழிப்புத் திருவிழாவின்போது, இறைவன் அவரைத் தம் வான்வீட்டிற்கு அழைத்துக்கொண்டார்.

இவரது உடல் புனித பெனடிக்ட் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இறப்பிற்குப் பின்னர் இவரது சகோதரர்கள் மூவருக்கு இவரது ஆன்மா அற்புதமாகத் தோன்றியுள்ளது. பற்பல அற்புதங்களும் இப்புனிதரால் நிகழ்ந்துள்ளன. இவர் 1772ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி திருஅவையால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

சில்வெஸ்ரோ பெனடிக்டின் சபைத் துறவிகளால், இப்புனிதரது நூற்றாண்டுத் திருவிழாவின்போது, அதாவது 1872ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி, தலங்கம புனித ஜோன் தல் பஸ்தோனி தேவாலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டு, திருத்தல நிர்மாணப் பணிகள் 1881ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டன.

2006ஆம் ஆண்டு தனது 125ஆவது ஜுபிலியைக் கொண்டாடிய இத்திருத்தலத்தை கௌரவிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தால் ஒரு ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்பட்டது. இன்று ஜுலை 14ஆம் திகதி தமது தேவாலயத்தின் 143ஆவது வருடாந்த திருவிழாவை கொண்டாடும் இப்பங்கு மக்கள், புனித ஜோன் தல் பஸ்தோனியின் பரிந்துரையால் தாம் பெற்ற நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறி நிற்கின்றார்கள்.

*கே.இந்திராதேவி*


## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
## பதவி வெற்றிடம்
### பிரதிப் பணிப்பாளர் பதவி
### (Post of Deputy Director)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : கொழும்பு பல்கலைக்கழகம், மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனம் மற்றும் இலங்கை மருத்துவ பேரவையினால் அங்கீகரிக்கப்படும் M.sc (மருத்துவ நிர்வாகம்) பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் கற்றலுக்குப் பின்னர் 08 வருடகாலத்தைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவ அதிகாரி.

**வயது** : 35வயதிற்குக் குறைவானவர்களாகவும் 55 வயதிற்கு மேற்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 102,810.00 - 16x2930 - 149,690.00 மாதாந்தம்.
சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்:** நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2024-07-29ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
2024-07-11.



## 110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ள ICONIC தொடர்மாடி குடியிருப்பில் பொது வசதிகளின் பராமரிப்புக்காக சேவைகளை வழங்குவதற்கு ஆர்வ வெளிப்பாட்டை (EOI) சமர்ப்பிப்பதற்கான அழைப்பு

110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ள ICONIC தொடர்மாடி குடியிருப்பில் பொது வசதிகளின் பராமரிப்புக்காக பின்வரும் எந்த ஒரு சேவையையும் வழங்குவதில் நிபுணத்துவம் பெற்ற தகுதிபெற்ற மற்றும் அனுபவமுடைய புகழ்பெற்ற வழங்குநர்களிடம் இருந்து MCCP இல. 13047 இன் சார்பில் முகாமைத்துவ சபையினால் ஆர்வ வெளிப்பாட்டுக்கு (EOI) அழைப்பு விடுக்கப்படுகிறது.

(01). பாதுகாப்பு சேவைகள்
(02). தினசரி வீட்டு பராமரிப்பு

**பின்வரும் விபரங்களை மற்றும் ஆவணங்களைக் கொண்டதாக ஆர்வ வெளிப்பாடுகள் இருத்தல் வேண்டும்.**

a) வாடிக்கையாளர் பெயர்களுடன் இதனையொத்த துறைகளில் தொடர்புடைய அனுபவம்.
b) அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப திறன்.
c) நிறுவன பதிவு சான்றிதழ் மற்றும் படிவம் 1 இன் பிரதிகள்.
d) நிறுவனத்தின் நிதி வலுத்தன்மை.

தமது விலைமனுக்கள், கூட்டு வலுத்தன்மை, அனுபவம் மற்றும் தாம் நிபுணத்துவம் பெற்ற சேவையை வழங்குவதில் உள்ள திறன் அடிப்படையில் முன்மொழிபவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

ஆர்வ வெளிப்பாட்டை கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் “MCCP இல. 13047 இற்கான சேவை வழங்கலுக்கு ஆர்வ வெளிப்பாடு என்று குறிப்பிட்டு 2024 ஜூலை 31ஆம் திகதி 17.00 மணி அல்லது அதற்கு முன்னர் ICONIC தொடர்மாடி குடியிருப்பு, MCCP இல. 13047, 110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0774470292 / 011-2073700/704 என்ற தொலைபேசி இலக்கங்களில் முகாமைத்துவ அலுவலகத்தை தொடர்புகொள்ளவும்.

**ICONIC தொடர்மாடி குடியிருப்பு,**
**MCCP இல. 13047,**
**110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய.**



**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு**

## இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்காக தற்போதுள்ள ஒருங்கிணைந்த பாதுகாப்பு அமைப்பின் (உடல் பாதுகாப்புக்கான மனிதவளம், CCTV மற்றும் மின்னணு அணுகல் கட்டுப்பாட்டு அமைப்பு) விரிவான பராமரிப்பு**

**IFB/SP/2024-05**

1. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்காக தற்போதுள்ள ஒருங்கிணைந்த பாதுகாப்பு அமைப்பின் (உடல் பாதுகாப்பிற்கான மனிதவளம், CCTV மற்றும் மின்னணு அணுகல் கட்டுப்பாட்டு அமைப்பு) விரிவான பராமரிப்பிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலம் நடத்தப்படும்.
3. 2024.07.15 ஆம் திகதிக்கும் 2024.08.05 ஆம் திகதிக்குமிடையில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வரிகள் நீங்கலாக மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை (1500 ரூபா) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் மேலேயுள்ள முகவரியிலிருந்து கையேற்கப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. தகுதியுள்ள விலைமனுதாரர் இந்த விலைமனு தொடர்பான மேலதிக தகவலை கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, 152/1, இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை, சூழல் ஆய்வு மற்றும் செயற்றிட்டங்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011 2358824) விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலேயுள்ள அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. கேள்வி பிணையானது இலங்கை பணத்தில் ஐம்பதினாயிரம் ரூபா (50,000 ரூபா) என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதாகும். கேள்விப் பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு குறையாத காலத்திற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. 2024 ஜூலை 24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு தலைமையக கட்டிடம், இல. 152/1, ரடார் குன்றிற்கு எதிராக மினுவங்கொட வீதி, கட்டுநாயக்கவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. விலைமனுக்கள் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை, இல. 152/1, மினுவங்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரிக்கு 2024 ஓகஸ்ட் 6 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Comprehensive Maintenance of the Existing Integrated Security System with manpower for Physical Security Duties” என குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் விலைமனுதாரர் வருடாந்த ஒப்பந்தப் பெறுமதியின் 5% பெறுமதிக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பெயரில் நிபந்தனையற்ற செயற்பாட்டு உத்தரவாதமொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கம்பனியானது திருப்திகரமான சேவையொன்றை வழங்குவதற்கு தவறும் பட்சத்தில் கோரும் போது பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டு உத்தரவாத பெறுமதியை கோருவதற்கான உரிமையை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையானது கொண்டுள்ளது.
9. விலைமனுக்களுக்கான சமர்ப்பிக்கும் இறுதித் தினமானது 2024 ஓகஸ்ட் 6 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகுமென்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**



## வெற்றிடங்கள்
## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:**

1. நிர்வாக அதிகாரி
2. IT முறைமை நிர்வாகி
3. சிவில் பொறியியலாளர்
4. மருந்தாளர்
5. உடற்கூறியலாளர்
6. கதிரியக்கவியலாளர்
7. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியல் நிபுணர்
8. சத்திரசிகிச்சையக தொழில்நுட்பவியலாளர்
9. இலக்ட்ரோ மெடிகல் தொழில்நுட்பவியலாளர்
10. கார்டியோகிரபர்
11. கண் மருத்துவ தொழில்நுட்பவியல் நிபுணர்
12. பேர்பியூஷனிஸ்ட்
13. களஞ்சியக் காப்பாளர்
14. கணக்காய்வு உதவியாளர்
15. திட்டமிடல் உதவியாளர்
16. நூலக உதவியாளர்
17. மின்சார மேலாளர்
18. தச்சர்
19. மேசன்
20. பெயின்டர்
21. பிளம்பர்
22. மின்னியலாளர்
23. தலைமை சமையலாளர் (Chef)
24. DIET STEWARDESS
25. தையற்காரர்
26. ஹவுஸ் வார்டன்
27. சலவையக மேற்பார்வையாளர்
28. சமையலாளர் (Cook)

**மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரவேசிக்கவும்:**
https://sjgh.health.gov.lk/careers.php
அல்லது
**பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

**விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி : 2024-07-29**

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**



## SRI LANKA MEDICAL COUNCIL
## PROCUREMENT NOTICE
### Acquiring Office Premises on a Rental Basis for Sri Lanka Medical Council

**SLMC/RB/05/2024**

### INVITATION FOR BIDS (IFB)

The Chairman Procurement Committee on behalf of the Sri Lanka Medical Council invites sealed bids from interested bidders up to 2.30 p.m. on 29.07.2024. Bidding will be conducted through the National Competitive Bidding procedure.

Interested bidders may obtain further information from the Finance and Administration Unit of the Sri Lanka Medical Council, via telephone during working days (Tel) 0716355764 / email: admin@slmc.gov.lk from 9.00 a.m. to 3.30 p.m. from 14.07.2024 to 29.07.2024.

Interested bidders may purchase a complete set of bidding documents in English (PDF Format) on submission of a written application with the original payment receipt to the Finance and Administration Unit, Sri Lanka Medical Council by hand upon payment of a non-refundable fee of Rs. 2,000.00 to the SLMC Savings Account No: 371208, Bank of Ceylon, Maradana Branch from 14.07.2024 to 29.07.2024.

All bids should be accompanied by a Bid Security of Rs. 200,000 in the form of a guarantee valid until 07.10.2024 issued by an acceptable institution in favor of the Sri Lanka Medical Council and shall be irrevocable and unconditionally encashable upon the first request of the Registrar of the SLMC.

Duly filled sealed bids in duplicate marked as **"Acquiring Office Premises on a Rental Basis for Sri Lanka Medical Council - SLMC/RB/05/2024"** at the top left-hand corner of the envelope must be deposited in the Tender Box kept at the Finance and Administration Unit at the Sri Lanka Medical Council or be sent by Registered Post to the Chairman/ Department Procurement Committee, No: 31, Norris Canal Road, Colombo - 10 at or before 2.30 p.m. on 29.07.2024.

Bids will be closed at 2.30 p.m. on 29.07.2024 and opened immediately thereafter at the Council Room, 1st Floor, Sri Lanka Medical Council in the presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening. Late and incomplete bids will be rejected.

**Chairman,**
**Department Procurement Committee,**
**Sri Lanka Medical Council,**
**No.31, Norris Canal Road, Colombo 10.**
14.07.2024




**ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கிவரும் நிலையில் தொழிற்சங்கப் போராட்டங்கள் அடிக்கடி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கையை முன்வைத்து அரசாங்க பணியாளர்களின் பெருமளவு தொழிற்சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன.**

ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், ரயில்வே பணியாளர்கள், கிராமசேவகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் அடிக்கடி ஈடுபட்டு வருவதால், மக்களின் அன்றாட வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அடையாள வேலைநிறுத்தமாக இருந்தாலும் சரி, தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டமாக இருந்தாலும் சரி இதனால் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர். மருத்துவர்கள், தாதியர்கள் போன்ற சுகாதார ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்களால் உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிரமப்படுகின்றனர்.

கல்வித்துறையில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களினால், எதிர்காலத்திற்கான நுழைவாயில்களான, தேசிய தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான கற்றல் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

இறுதியில், தொழிற்சங்க கோரிக்கைகள் சில சமயங்களில் நிறைவேற்றப்படுகின்றன, ஆனால் மாணவர்களின் எதிர்காலம், நோயாளிகளின் உயிர்கள் போன்றவற்றுக்கு உத்தரவாதம் இல்லாமலுள்ளது. தொழிற்சங்க உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காக மற்றவர்களின் உரிமைகள் இதற்காக சமரசம் செய்யப்படக் கூடாது. தொழிலாளர்கள் மற்றும் மக்கள் நலன்களுக்கு இடையே சரியான சமநிலையை ஏற்படுத்த வேண்டும்; இல்லையெனில், அது நாட்டைச் சீர்குலைக்கும்.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் விடயத்திலும் இதே கொள்கை பின்பற்றப்பட வேண்டும். அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பது தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதம் என்ற நிலைமை மாறி அரசியல் உள்நோக்கங்களைக் கொண்ட செயற்பாடாக உருவெடுத்துள்ளன. பெரும்பாலும் அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஏதாவது ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்ததாக மாறியுள்ளமை துரதிர்ஷ்டவசமானது.

உதாரணமாகக் கூறுவதாயின் ஆசிரியர் தொழிற்சங்கமொன்று ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவது தெரியவந்துள்ளது. அந்தச் சூழலில், வேலைநிறுத்த நடவடிக்கைகள் முற்றிலும் தொழிலாளர்களின் நலன்கள் கருதி உந்தப்படுவதில்லை.

பக்கச்சார்பற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் இன்று இலங்கையில் அரிதாகவே காணப்படுகின்றன. உழைக்கும் வர்க்க உணர்வு காணப்படவில்லை. இந்த தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் சாதாரண அரச ஊழியர்கள் தமது அரசியல் எஜமானர்களின் நலன்களுக்கு சேவை செய்யும் தலைவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்றனர்.

ஊழியர்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம் என்ற பெயரில், யதார்த்தத்தை அலட்சியமாகப் புறக்கணித்து அரசியல் பின்னணி கொண்ட நோக்கங்களுக்கான வேலைநிறுத்தங்களைச் செய்கின்றனர்.

அரசாங்கத் துறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கின்ற வேலைநிறுத்தப் போராட்டங்களை நியாயப்படுத்துவதற்கு எந்தவித அடிப்படையும் இல்லை. இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கைச் செலவுகள் நிச்சயமாக அதிகமாகவே இருக்கின்றன. அரசாங்கத் துறை ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் அல்லது சுயதொழில் செய்பவர்கள் என அனைவரும், அன்றாட வாழ்வில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இருப்பினும், உலகம் முழுவதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தடையற்ற சந்தை பொருளாதார மாதிரியில், பொருட்களின் விலைகளைக் குறைப்பது எப்போதும் சாத்தியமில்லை. மாறாக, மக்களின் வருமான ஆதாரங்களை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன, இதனால் கிடைக்கும் விலைகள் கட்டுபடியாகின்றன.

வேலைநிறுத்தப் போராட்டத்தை வலியுறுத்தும் தொழிற்சங்கங்கள் 20,000 ரூபா சம்பள உயர்வைக் கோருகின்றன. இருந்தபோதும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் நிலையில் அரசாங்கமும், திறைசேரியும் உள்ளனவா என்பது பற்றிய சிந்தனை இல்லை.

மக்கள் மற்றும் வணிகங்கள் மீது விதிக்கப்படும் வரிகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் வருமானம் ஈட்டப்படுகின்றது. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம், நலத்திட்டங்கள் மற்றும் பலவற்றுக்கான வருவாய் இதன் மூலமே கிடைக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் ஒரு பிரிவினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கினால் இதனால் நாட்டில் மற்றொரு பிரிவினரைச் சமரசம் செய்ய வேண்டி ஏற்படும்.

தொழிற்சங்கங்கள் 20,000 ரூபா சம்பள உயர்வைக் கோரியே வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுக்கின்றன. இதனை நிறைவேற்றுவதாயின் அரசாங்கத்திற்கு 275 பில்லியன் ரூபா அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு வீதம் இந்தச் சம்பள உயர்வுக்குத் தேவைப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செலவினத்தை ஈடுசெய்ய நிதி ரீதியில் பல மாற்றங்களைச் செயற்படுத்த வேண்டி ஏற்படும். வற் வரியை 4 சதவீதம் அதிகரித்து, அதை ஏறத்தாழ 22 சதவீதமாக உயர்த்துவது அல்லது பெருநிறுவனங்களுக்கு விதிக்கப்படும் வரி வீதத்தை 42 சதவீதமாக உயர்த்துவது ஒரு சாத்தியமான அணுகுமுறையாக இருக்கும்.

இத்தகைய அதிகரிப்பு பொருளாதாரத்தை மேலும் சிரமப்படுத்தலாம், அது மாத்திரமன்றி, இதனால் வரவுசெலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகை அதிகரிக்கப்படும். இதன் ஊடாக கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் பாதிக்கப்படலாம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தடம்புரளச் செய்யப்படலாம். 2022ஆம் ஆண்டில் அனுபவித்த மற்றுமொரு கடுமையான பொருளாதார சிக்கலுக்கு மீண்டும் முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம் என இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# தேர்தலை நோக்காகக் கொண்டு எதிரணிகளால் திட்டமிடப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்கள்!

## மக்களின் வெறுப்பை அரசு மீது திசைதிருப்பி விடுவதற்கான தந்திரம்!



## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## அப்பாவி மக்களின் அவலங்களைப் பொருட்படுத்தாது, அரசுக்கு எதிரான சக்திகள் நடத்தும் நாடகங்கள்!

## அரசியல் சக்திகளின் வலையில் தொழிற்சங்கத் தலைவர்கள்!

தொழிற்சங்கப் போராட்டங்களினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவது மாத்திரமன்றி, நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது. உதாரணமாகக் கூறுவதாயின், ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் இலங்கையர்கள் மாத்திரமன்றி இந்நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளும் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் பாதிக்கப்படும்போது அதனால் இலங்கைக்குக் கிடைக்கும் அந்நியச்செலாவணியும் குறைவடைந்து பொருளாதாரப் பாதிப்பு ஏற்படும்.

கடந்த புதன்கிழமை ரயில்வே தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக ரயிலில் சன நெரிசலில் முண்டியடித்துப் பயணிகள் செல்ல முயற்சிக்கும்போது விபத்துக்களும் ஏற்பட்டன. ரயிலில் பயணம் செய்த பயணி ஒருவர் தவறிவிழுந்து உயிரிழந்தார். இதற்கு முன்னர் ரயில்வே ஊழியர்களின் போராட்டத்தின் போதும் இவ்வாறு பயணி ஒருவர் உயிரிழந்திருந்தார்.

எனவே, தொழிற்சங்கப் போராட்டங்களினால் ஏற்படுகின்ற பாதிப்பு அவ்வாவிப் பொதுமக்களையே தாக்குகின்றது.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டங்களைத் தூண்டிவிடுவதில் பின்னணியில் இருக்கும் அரசியல் கட்சிகளுக்கு அரசியல் ஆதாயம் கிடைக்கும் அதேநேரம், தொழிற்சங்கத் தலைவர்களுக்கு இவற்றினால் ஏற்படும் தாக்கம் புரிவதில்லை. அரசியல் கட்சிகள் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் இருந்து இதுபோன்ற போராட்டங்களுக்காகத் திசைதிருப்புகின்றன.

தொழிற்சங்கத் தலைவர்களைப் பொறுத்தவரையில் இவர்கள் முழுநேர தொழிற்சங்கவாதிகளாகவே இருக்கின்றனர். இவர்கள் பணிக்குச் செல்வதைவிட தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பதையே முழுநேரப் பணியாகக் கொண்டுள்ளனர்.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு படிப்படியாக மீண்டுவரும் சூழ்நிலையில், இவ்வாறான தொழிற்சங்கப் போராட்டங்கள் காரணமாக நாட்டைப் பின்னோக்கித் தள்ளுவதற்கான ஆபத்துகள் பற்றி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுபோன்ற அரசியல் பின்னணி கொண்ட தொழிற்சங்கப் போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டக் கட்டமைப்புக்களைக் கொண்டுவருவது பற்றிய கருத்தாடல்களும் அதிகரித்துள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வேலைநிறுத்த அலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கான பொருத்தமான சட்டங்களை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் பொறுப்பு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுக்கு மையமான சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பது முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே அமைச்சரவையின் கருத்தாக இருந்தது என அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்க புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கான சாத்தியம் குறித்து சட்டமா அதிபர் தமக்கு அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வேலைநிறுத்தங்கள் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்திய நேரத்தில், வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அடிப்படை மனிதத் தேவைகளைப் பாதிக்கும் வேலைநிறுத்தங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கடந்த காலத்தை விட இன்று மிகவும் உணரப்பட்ட தேவையாக உள்ளது.

தேர்தலில் ஆதாயம் பெறுவதை மனதில் கொண்டு மக்களின் உணர்வுகளைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடும் சில அரசியல் அமைப்புகளின் உத்தரவின் பேரில் வேலைநிறுத்தக்காரர்கள் மக்களின் கோபத்தை அரசாங்கத்தின் மீது செலுத்த விரும்புகிறார்கள் என்பது தெளிவாகிறது. இது முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் மற்றும் தீர்க்கமானதாக இருக்க வேண்டும்.

முன்மொழியப்பட்ட சட்டம் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தங்களில் மூழ்கி, சுற்றிலும் இடையூறுகளை ஏற்படுத்துவதற்கு முன்பு ஒருமுறைக்கு இருமுறை சிந்திக்க வைக்கும் என்று நம்பப்படுகிறது.

இதுபோன்ற வேலைநிறுத்தத்தை தூண்டும் அரசியல் கட்சிகளுக்கும் சட்டம் பொருந்தும். இதுவரை, வேலைநிறுத்தங்களைத் தடுக்க அதிகாரிகளால் எப்போதும் முத்திரை குத்தப்பட்ட அத்தியாவசிய சேவைகள் ஆணை, விரும்பிய பலனைத் தரத் தவறிவிட்டது.

ஏனென்றால், அடுத்த முறை வேலைநிறுத்தம் செய்யும் வரை குற்றவாளிகள் தங்கள் வேலைகளில் தொடர்ந்து இருப்பதன் மூலம் அத்தியாவசிய சேவைகள் நடைமுறைக்கு வரவில்லை. இந்தத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகள்தான் இந்த நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

---




# பத்திரிகையுலகின் ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம்



பத்திரிகை உலகின் ஜாம்பவான் என்று கருதப்படும் எஸ்.டி. சிவநாயகம் இலங்கையில் ஆறு பத்திரிகைகளில் பணிபுரிந்த அனுபவம் உடையவர்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ்.டி. சிவநாயகம் தனது மாணவப் பருவத்திலேயே பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையால் கவரப்பட்டு அக்கொள்கைப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்.

பள்ளிப் பருவத்திலேயே 1946ஆம் ஆண்டில் பாடசாலைப் பத்திரிகையான 'ஐக்கியதீபம்' பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றியவர். அதனை அடுத்து 1947ஆம் ஆண்டு தனது சொந்தப் பத்திரிகையான 'உதயம'; பத்திரிகைக்கு ஆசிரியரானார்.

1948ஆம் ஆண்டில் தலைநகருக்கு வந்து தனது பத்திரிகைப் பணியை ஆரம்பித்தார். அதன்பின்னர் தந்தை செல்வநாயகம்; வெளியிட்ட 'சுதந்திரன்' பத்திரிகையில் 1952முதல் 1961வரை பணிபுரிந்தார். அக்காலப்பகுதியில் பல எழுத்தாளர்களை, சிறுகதை ஆசிரியர்களை, நாவல் ஆசிரியர்களை, கவிதை எழுதுவோரை வளர்த்தெடுத்தார்.

அதன்பிறகு 1966முதல் தினபதி தேசிய தினசரி மற்றும் சிந்தாமணி வாரஇதழ் ஆகியவற்றின் பிரதம ஆசிரியராகப் பணியேற்றார்;.

தியாகி, அரசகேசரி, நவரசகேசரி, குயுக்தியார், திரிஞானி போன்ற பல புனைபெயர்களில் அவர் எழுதினார்.

கதை, கட்டுரை, கவிதை, இலக்கியம், நாடகம், சினிமா, தொலைக்காட்சி விமர்சனங்கள், வினாவிடை, பயணக் கட்டுரைகள், சோதிடம், அரசியல் கட்டுரைகள், விமர்சனங்கள், ஆன்மிகம், வைத்திய ஆலோசனைகள் என்று பல்துறைசார்ந்த விடயங்களை எழுதினார்.

சிந்தாமணி வார இதழ், இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையுலக வரலாற்றிலேயே ஒரு இலட்சம் பிரதிகள் விற்கப்பட்டு சாதனை படைத்தது. 'சிந்தாமணி' பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்தமைக்காக அதன் பிரதம ஆசிரியராக விளங்கிய சிவநாயகத்தை, அந்தப் பத்திரிகை நிறுவனம் தனது பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்து கௌரவப்படுத்தியது. இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில், பத்திரிகையாசிரியர் ஒருவருக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய கௌரவம் இதுவாகும்.




தினபதி சிந்தாமணி ஆசிரிய பீடங்களில் பணியாற்றிய காலத்தில் அங்கு ஆசிரிய பீடங்களில் பணியாற்றியவர்களுக்கு இவர் வழிகாட்டியாகவும் நல்லாசானாகவும் விளங்கினார். அங்கும் இவர், பல புதிய தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியதோடு பல தமிழ் ஊடகவியலாளர்களின் ஞானத் தந்தையாக கருதப்பட்டார்;.

அவர் பணியாற்றிய நிறுவனம் மூடப்பட்டபின்னர் 1976ஆம் ஆண்டில் 'மாணிக்கம்' எனும் வார இதழில் நிர்வாக இதழாசிரியராகப் பணியாற்றினார். இவரது துணைவியார் மங்களாவதி சிவநாயகம்; கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிந்தவர். பத்திரிகை ஆசிரியரான கணவருக்குப் பள்ளிக்கூட ஆசிரியையான பாரியாரும் பக்கத்துணையாக உதவிகள் புரிந்தார்.

பத்திரிகைத்துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்த எஸ்.டி சிவநாயகம், சத்யசாயி பாபாவின் ஆன்மிக ஸ்தாபனத்தினூடாக, சமய சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். கொழும்பு சாயிபாபா மத்திய நிலையம் உருவாக்கப்பட்டபோது, அதன் முதலாவது தலைவராக ஏகமனதாகத் தெரிவாகிய சிவநாயகம், தொடர்ந்து 25ஆண்டுகள் அதே சாயி ஸ்தாபனத்தின் தலைவராகவும் இருந்து, சாயிபாபா அறக்கட்டளையையும் உருவாக்கியவர்.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமற்றவராக இருந்து, 50ஆண்டுகள் பணியாற்றிய எஸ்.டி. சிவநாயகம், 2000 ஏப்ரல் 22ஆம் திகதி அமரரானார்.

# மொரட்டுவ பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக அனுமதி — கல்வி ஆண்டு 2023/2024

## மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரல்

(i) கட்டிடக்கலை பட்டம்
(ii) வடிவமைப்பு பட்டம்
(iii) நிலச்சீரமைப்பு கட்டிடக்கலை பட்டம்
(iv) ஆடையலங்கார வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி பட்டம்

மேற்கூறப்பட்ட நான்கு (04) பட்டதாரி கற்கைநெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த கற்கைநெறியின் கீழ் 2023/2024 கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழக பிரவேசக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் http://www.uom.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலையில் (Online) பூர்த்தி செய்தல் வேண்டும்.

இயைபுடைய விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தின் (http://www.uom.lk) இணையதளத்திற்குப் பிரவேசித்து மேற்கூறப்பட்ட தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு பூர்த்தி செய்திருக்க வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இயைபுடைய ஆவணங்கள் சகிதம் 2024 ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு முன் நிகழ்நிலை (Online) ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு admissions@uom.lk எனும் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்.

**பதிவாளர்,**
**மொரட்டுவ பல்கலைக்கழகம்,**
**கட்டுபெத்த, மொரட்டுவ.**
**2024.07.14**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை வங்கி

## இலங்கையின் 1ஆம் தர வங்கியுடன் இணைந்து சட்டத் துறையில் வெற்றிகரமான தொழில்வாய்ப்பொன்றை உருவாக்குங்கள்!

இலங்கை வங்கியின் சட்டப் பிரிவில் தமது எதிர்காலத்தைக் கட்டமைத்துக்கொள்ள விரும்பும் தகைமையும் ஆற்றலும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் கொண்ட நபர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

### உதவிச் சட்ட உத்தியோகத்தர் பயிலுநர்

(விசேடமாக அநுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை ஆகிய பிரதேசங்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன)

**முக்கிய பொறுப்புகள்**

- அசையாச் சொத்துகளின் உரித்துறுதிகளைப் பரீட்சித்தல்.
- ஈட்டுமுறிகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட உறுதிகள், ஆவணங்கள் என்பவற்றை வரைதலும் அத்தாட்சிப்படுத்துதலும்.
- சட்டத் தத்துவங்களின் அடிப்படையில் அறிவுரைகளையும் அபிப்பிராயங்களையும் வழங்குதல்.
- வழக்கு விடயங்களின் பொருட்டு நீதிமன்றங்களில் தோன்றுதல், முறைப்பாடுகள், பிரேரணைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை வரைதல்.

**தகுதிப் பிரமாணங்கள்**

- **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.**
- **தகைமைகள்**
  ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் பணியாற்றும் உரிமம் பெற்ற சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு.
- **அனுபவம்**
  இப்பதவிக்குப் பொருத்தமான துறையில் ஆகக்குறைந்தது 3 ஆண்டுகள் பட்டப்பின் அனுபவம்.
  வங்கிகள் அல்லது ஏனைய நிதி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
- **ஏனைய தகைமைகள்**
  - கணினி அறிவும் சிறந்த தொடர்பாடற் திறன்களும்.
  - சுயமாக வேலைகளைக் கையாளும் ஆற்றல்.
- **வயது**
  விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**விதிகளும் நிபந்தனைகளும்**

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகளாகும். இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்தக் கொடுப்பனவாக முதலாமாண்டில் 90,000 ரூபாயும் இரண்டாமாண்டில் 100,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவி வழமையான வங்கியியற் சேவைகளுக்குப் புறம்பானது (மூடிய சேவை) என்ற போதும் வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- பயிற்சிக் காலத்தின் முடிவில் வங்கியால் நடாத்தப்படும் விசேட பரீட்சையில் தேறுமிடத்தும் பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையுமிடத்தும் உதவிச் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
- தேவைப்படும் போது வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வங்கியின் தேவைப்பாட்டுக்கு ஏற்ப நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- (அநுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை ஆகிய) விசேட பிரதேசங்களுக்கு விண்ணப்பிப்போர் அப்பிரதேசங்களின் ஆட்சி எல்லைகளுக்கான பிரசித்த நொத்தாரிசு உரிமத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு நடைமுறை**

பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு இடம்பெறும்.

**விண்ணப்பிக்கும் முறை**

**www.boc.lk** என்ற எமது இணையதளத்தில் Careers என்ற பகுதியின் கீழ் தரவிறக்கிக்கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி உங்களது சுயவிபரக் கோவையினைத் தயாரித்து அதனை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழில் அனுபவத்தை எண்பிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து **2024 ஜூலை 27ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**"இலங்கை வங்கிச் சதுக்கம்"**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு 01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும்/ இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
- வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நகர அபிவிருத்தி அதிகார சபை

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFPs)




### கண்டி நகர மத்தியில் கலப்பு அபிவிருத்தித் திட்டம்

**ஆவணங்கள் வழங்கப்படுதல் :**

மீளளிக்கப்படாத ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 150,000.00) ரூபா தொகையை வரிகள் சகிதம் பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திய பின், செத்சிறிபாய, கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து 2024 ஜூலை 11ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 9வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் மேற்கூறிய திகதி மற்றும் நேரத்தில் இடம்பெறும்.

கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகள் பத்தரமுல்ல "செத்சிறிபாய - கட்டம் 1", 4ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தொழில்நுட்ப பிரிவில் மேற்கூறிய வகையில் முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் முடிவுறுத்தப்படும் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

| |
|---|
| **காணியின் அளவு** |
| 3ஏ - 2 ரூட் - 31.5 பேர்ச் (1.4959 ஹெக்டயார்) |
| **குத்தகைக் காலம்** |
| 99 வருட குத்தகை அடிப்படையில் |
| **விருப்பத்தேர்வு கொடுப்பனவு முறைகள்** |
| **விருப்பத்தேர்வு 01 -** முதலீட்டாளர் குத்தகை தவணையின் 25% வீதத்தை அபிப்பிராய கடிதம் (LOI) வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள்ளும் மற்றும் மிகுதியை (75%) ஆரம்பக் கொடுப்பனவு நாள் முதல் 03 மாதங்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும். |
| **விருப்பத்தேர்வு 02 -** முதலீட்டாளர் குத்தகை தவணையின் 25% வீதத்தை அபிப்பிராய கடிதம் (LOI) வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள்ளும் மற்றும் வழங்கப்படும் வருடாந்த தவணையை 10 வருடங்களுக்குள் சமமான வருடாந்த தவணை அடிப்படையிலும் செலுத்த வேண்டும். |
| **அடிப்படை விலை:** |
| **விருப்பத்தேர்வு 01 - ரூபா: 2,769,922,965.00**<br>**விருப்பத்தேர்வு 02 - ஆரம்பக் கொடுப்பனவுத் தொகை 25% : ரூபா 684,777,000.00**<br>**- வருடாந்த தவணை தொகை : ரூபா 279,121,059.78** |
| **பிணைமுறி ரூபா:** |
| **20,000,000.00** |
| **விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம்:** |
| **2024-08-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு** |
| **விலைக்கோரல் முடிவுறுத்தல்:** |
| **2024-09-27ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு** |

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:**
**பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி), ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை, 8ஆம் மாடி,**
**செத்சிறிபாய, கட்டம் 1,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2875921, 011-3611950 மற்றும் 011-2875916-20, 076-7661080**
**நீடிப்பு 2960-2967**
**தொலைநகல் இல. 011-2875900**
**மின்னஞ்சல் முகவரி:** directorred@uda.gov.lk
இணையதளம்: www.uda.gov.lk

**தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணைக்கக் குழு (SCANC), நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல.**

Sunday Observer adz
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

127 வாகன உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகள் விற்பனைக்கு

வாகன சேர்விஸ் உபகரண திரீவில் வாகனம். கனரக வாகனம் சகல இயந்திராதிகள் விற்பனைக்கு. ஆரியதாச இன்டஸ்ரிஸ் வெயன்கொட 077 2474226, 076 5745380 குமார 046999

## வர்த்தகம்

201 வியாபார வாய்ப்புகள்

பதுளை நகரத்திற்குள் வெற்றிகரமாக நடத்திச் செல்லப்படும் இரு வியாபாரஸ்தலங்கள் சகல உபகரணங்கள் மற்றும் வர்த்தக நாமத்துடன் விற்பனைக்கு, நான்கு மாடிகளு க்கான அனுமதி வழங்கப்பட்ட முழுமையான மூன்றுமாடி கட்டிடம் 8.5 பேர்ச். தொ.பே. 0723318615 046644

237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதி நவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழிநுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக்கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு 0112 201 700 046923

## வேலைவாய்ப்பு

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

சுத்திகரிப்பு ஆண்/ பெண் ஊழியர் வெ ற்றிடங்கள். 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி கள் மற்றும் உணவு பா னங்கள் இலவசம். சீருடை இலவசம். க வர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்க ளுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046172

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பத்தரமுல்லவில் உள்ள ஓரிருவர் வசிக்கும் வீட்டிற்கு 58 இற்கும் 65 வயதிற்கும் இடையில் தங்கியிருக்கக் கூடிய ஆண் வீட்டுப் பணியாளர், வீட்டுத்தோட்ட வேலை மற்றும் சுத்திகரிப்பு மற்றும் கூட்டிப் பொருக்கும் வேலைகள், ஒரு வீட்டில் முன்னைய அனுபவம் கட்டாயமானது குறைந்தளவு வெளித்தலையீடுகள். சிறந்த சம்பளம், உணவு, தங்குமிடம். அழையுங்கள். 0777 562555 1900 மணிக்கும் 21 மணிக்கும் இடையில். 047210

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கம்பஹா தோட்டத்திற்கு மண்வெட்டி, கத்தி வேலை தெரிந்த தமிழ் தம்பதி / தனிநபர் தேவை. மின்சாரம், நீர் வசதிகள், தங்குமிடம் உ ண்டு. 071 4496942 046565

325 தொழில்துறை பொது

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு 4555 (45ற்கும் 55ற்கும் இடைப்பட்டவர்கள்) வயதிற்கு மேற்பட்ட பாதுகாவலர்கள் (watcher) தேவை. சம்பளம் ஒரு நாளைக்கு 1500/ நேரில் வரவும். குறைந்த விலையில் உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி. தொ. பே. இல. 076 6200300 இல. 18, வெளிஅமுன, ஹேகித்த, வத்தளை. 047213

## காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அத்திடிய 52.7 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 145 மில்லியன். 077 2361243. 047179

மாலபே, கஹன்தொட்ட வீதியி ல் அத்துருகிரிய மற்றும் கொத்தலாவல அதிவேக பிரவேச பாதைகளுக்கு 05 நிமிட தூரத்தில் உள்ள தனி மாடி வீடு மற்றும் மூன்று மாடி அனெக்ஸ் உடன் 35 பேர்ச் காணி விற்பனைக்கு. தொலைபேசி இலக்கம் 0742107170. 046183

கலகெடி ஹேன 218 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 169 மில்லியன். 077 2361243. 047165

கிரிபத்கொட பமுனுவில வீதி 20 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 11 மில்லியன். 077 2361243. 047182

617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கந்தான கொழும்பு நீர்கொழும்பு வீதிக்கு அருகில், கௌரவமான அமைதி யான சூழலில் அமைந்த நான்கு அறை இரு மாடி வீடு விற்பனைக்கு, 35 மில்லியன் 0778700690 046716

618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

பாணந்துறை 19 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீடு மற்றும் காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 26 மில்லியன். 077 2361243. 047178

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி ஹுலுகங்க 157.7 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீடு மற்றும் காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 13.5 மில்லியன். 077 2361243. 047162

628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

கேகாலை 26.69 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடிவீடு விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 0 2 என்ற முகவரி க்கு குறைந்தபட்ச கோரிக்கை 11.35 மில்லியன். 077 2361243. 047171

தரனியகல 434 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 4.7 மில்லியன். 077 2361243. 047175

630 வீடு சொத்து காலி மாவட்டம் விற்பனைக்கு

தெனியாய மொரவக்க 153.35 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 13.3 மில்லியன். 077 2361243. 047183

632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

திஸ்ஸமஹாராம கதிர்காமம் வீதி 171 பேர்ச் நேஷன் டிரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2024.07.28 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 34.2 மில்லியன். 077 2361243. 047187

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு அருகில் 3 படுக்கையறை வீடு பிரத்தியேக வீடு வாடகைக்கு 38, 000/ 4 மாத முற்ப ணம். 072 1234576. 047257

adz.lk
it's what you want
The Trusted Market place for Buying & Selling

# லயனல் வென்டில் சித்திரக் கண்காட்சி





இலங்கையின் புகழ்பெற்ற மூன்று சித்திரக் கலைஞர்களான காமினி அபேகோன், பெசில் குரே, தயான் கொட்டச்சி ஆகியோரின் சித்திரக் கண்காட்சி லயனல் வென்ட் அரங்கில் ஜூலை 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. காலை 9:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை பொது மக்கள் கண்காட்சியை பார்வையிட முடியும்.

பெசில் குரே வோட்டர் கலர் மற்றும் ஒயில் பயன்படுத்தி ஓவியங்களை வரைவதில் சிறந்தவர். உள்ளூரிலும் பல்வேறு சர்வதேச கண்காட்சிகளிலும் தனது படைப்புக்களை காட்சிப்படுத்தியவர்.

தயான் கொட்டச்சி ஒரு பல்துறை கலைஞர் என்பதுடன் கார்ட்டூனிஸ்டாக பணியாற்றியுள்ளதுடன் கோடுகள், வோட்டர் கலர்கள் மற்றும் எண்ணெய் வண்ணப்பூச்சுளை பயன்படுத்தி சித்திரங்களை வரையும் ஆற்றல் கொண்டவர். காமினி அபேகோன், பேனாவை பயன்படுத்தி சித்திரங்கள் வரைவதில் கைதேர்ந்த கலைஞராவார். 40 வருடங்களுக்கு மேற்பட்ட கலை அனுபவத்தையும் கொண்டுள்ளார். இவர்கள் மூவரும் இதற்கு முன்னர் தனித்தும், ஏனையவர்களுடன் இணைந்தும் பல்வேறு சித்திரக் கண்காட்சிகளை நடத்தியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிரிவைப் பார்ப்பவன்

உயிர் பிரிவது போல்
ஊரை பிரிகிறேன்
மலடாகிப் போனது மனம்

கடலாய் தெரியும் ஆறு
கனவில் வருகிறது
புளியம் மரத்தின் பூக்கள்
பன்னீர் சொரிகிறது

அப்பளத்தில் கால் பதித்து
நடப்பது போல்
ஆற்றுச் சருகில் நடக்கிறேன்

கரையாத சீனியாய்
காலில் ஒட்டி கொள்கிறது
ஆற்று மணல்

மணற் கொள்ளையில் தப்ப
புங்கை மர கனியாய்
தொங்கும் வௌவால்கள்

வானில் கோலமிடும்
மரத்தில் அடைந்த
வெள்ளைக் கொக்குகள்

மரத்தில் அமர்ந்தபடி
தரையில் கோலமிடும்
ஆடை அவிழ்ந்த பூவில்
தேன் திருடும் சிட்டு

விட்டு விட்டுக் கத்தி
முட்டையிட இடம் தேடும்
வேப்பம் குச்சியில்
காவிப் பல்லின்
கறை அகற்றும் மாமா

கோமணம் கட்டி
குளிக்கும் உழவர்
பூ மனம் விட்டுச் சிரிப்பர்
தாகம் தீர்க்க வந்த
தவித்த முயலை
தாகத்தோடு பிடிக்க
விரட்டும் சிறுவர்

கல்லில் கால் தேய்க்கும்
வெள்ளைக் கால்கள்
நீரோடு போராடி
நீந்திக் குளிக்கும்
கூந்தல் நதியில்
நீராட வந்த வானம்
நீரை ஆவியாய் திருடும்

*கேகாலை எஸ். கிருஷ்ணன்*

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்

Toyota Landcruiser V8 Petrol 2009/2013 WP CAB fully loaded Petrol, 4500cc V8, Sunroof, Hight control, Dual A/C, 360 cam, Rs. 55 million 0725 758 266 kus-1

Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8,475,000 0777 840 141 kus-2

Nissan Xtrail 2015 hybrid petrol, fully loaded, 4wd, first owner, sunroof, power boot etc Rs. 11,700,000/- 0777 840 141 kus-3

DON'T TXT & DRIVE

Daihatsu Rocky wp FZ ex embassy vehicle, 1994 registered, 2800cc intercooler turbo diesel, manual, 4wd, full option, Android multi media, new tyres, mint condition 0777 840 141 kus-4

Mitsubishi Montero V6 2004 brand new imported, 3000cc V6 Petrol, beige interior with 7 seater, sunroof, line AC, Tiptronic transmission, 4wd, alloy wheels, 6 airbags, Android multi media player etc, immaculate condition, home used 07778 40 141 kus-5

வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்
Amal - 077 7 270 443
Kumara - 077 7 270 683

Chrysler P T Cruiser 2007 Brand New imported through Dimo, 2400cc Petrol, automatic transmission, beige interior, electric seats, 18" alloy wheels, climate control Dual zone AC, premium audio system, 6 airbags, TCS, etc carefully used immaculate condition 32A Mirihana Road Nugegoda 0779 232 207 kus-6

Toyota Hilux 2011 HL2 brand new imported, 2500cc intercooler Turbo diesel, Manual transmission, 4wd, Rs 10,800,000/- first owner, 0777 840 141 kus-7

Mitsubishi (WP PE 0770) white colour Diesel crew cab manufactured in the year 2006 is for sale to the highest offer. colombo 0777 766 928 kum-01

DON'T TXT & DRIVE

Sangyoung Rexton 2014 imported & maintained through Micro Cars, fully loaded version, black leather interior with electric memory seats, Tiptronic transmission, 4wd, Dual AC, 18" alloy wheels, new tires, Lenovo android multi media player with R cam, multi function steering, cruise control, Sunroof, first owner immaculate condition Rs. 11,800,000/-. 32A Mirihana Road Nugegoda. 0779 232 207, 0779 232 207 kus-8

தினகரன் வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## PRIME PROPERTY FOR SALE AT PELAWATTA, THALAWATHUGODA

15 perches of valuable property (rectangular land having 55 years of single ownership and clear title deeds) facing Thalawathugoda Battalamulla main road with more than 75 feet of road front is for sale at popular location.

6.5 MILLION PER PERCH

SLIGHTLY NEGOTIABLE FOR GENUINE BUYER.

Contact: 0776 750 611/ 0774 775 864

## Servisco

THE ULTIMATE SERVICE PROVIDER

Domestic & Industrial Sewage/ Waste Water Disposing



077 385 35 40 | 0114 367 267 395,Kaduwela Rd, Malabe.

## Sun Lanka SANY



Brand New stock available

Highest spec made for quarry & excavation operation

SY220C-9HD 077 766 0366

ஐந்து நட்சத்திர சுற்றுலா ஹோட்டலுக்கு சமையலறை சுத்திகரிப்பாளர்கள் (ஆண்) மற்றும் உணவக ஊழியர்கள் (பெண்) உடனடியாக தேவை. 9 மணி நேர சேவை மற்றும் அக்காலத்திற்குள் உணவு, பானம் வழங்கப்படும். 18 வயது முதல் 60 வயது வரை விண்ணப்பிக்கலாம். கொழும்பிற்கு அருகில் விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு
078 159 8184
என்ற தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள்.

## PRIME PROPERTIES FOR URGENT SALE

93 Perch @ Keppetipola Mawatha - Colombo 7
One of the finest properties almost rectangular, broad Road frontage, suitable for both residential & commercial purposes @ 16 Mil per perch


18 Perch @ Dharmapala Mawatha - Colombo 7
Second block from the main road, with a steady income @ 18 Mil per perch

17 Perch @ Amarasekara Mawatha - Colombo 5
Facing Malalarasekara with a broad road frontage. Ideal for developers @ 15 Mil per perch

For your property needs - Rent or Sale
COLOMBO PROPERTY SOLUTIONS +94 77 755 77 47

## KANDY, GANNORUWA

BOUTIQUE HOTEL FOR SALE



27 perches Land, 3 storey building with 7 rooms, 7 bathrooms, large garden, parking space. Hanthana view. 10 minutes to kandy town, Maligawa, Botanical Gardens. Running hotel.

Call : 0722 270 120 Rs. 90 Mn. Negotiable

## LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD

(WIJERAMA - CAMPUS ROAD)

A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.



2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well

Contact Details
0718 712 795, 0774 745 333

## VIHARA MAWATHA KOTHALAWALA

CLOSE TO SLIIT CAMPUS

## HOUSE FOR RENT


Modern 5 Bedroom Spacious and Contemporary house featuring. 5 bedrooms, 3 Bathrooms, AC, hotwater and garages. Situated on a 15 - perch extent, this home offers comfort and convenience in a prime location. Ideal for families seeking modern amenities and ample space



PLEASE CALL - 0775 973 864

## KANDY, GAMPOLA

FULLY FURNISHED, SUPPER LUXURIOUS NEWLY BUILT HOUSE FOR SALE



33p, 4500 Sq. feet, 7 bedrooms, 6 bathrooms, Fully Air Conditioned, CCTV camera unit, Fully tiled floors, Imported tiles. 70 million

Contact - 0751 322 334

## குத்தகை அடிப்படையில் ஆடைத்தொழில் தொழிற்சாலையொன்று தேவை.

கொழும்பிலிருந்து 125 கிமீ சுற்றுவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலையொன்று 15-25 தையல் இயந்திரங்களுடன் மற்றும் இயந்திர இயக்குனர், குத்தகை அடிப்படையில் தேவை.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

ராஜா - 0775 155 549

## இரத்தினக்கல் பதித்தல்

வேலை வாய்ப்புக்கள்

கொழும்பு 5 இலுள்ள தங்க ஆபரணங்கள் உற்பத்தி செய்யும் கம்பனியில் அனுபவமுள்ள இரத்தினக்கல் பதிப்பவர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு. Micro Setting புலமையுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

0760 454 882 /0779 955 515

## VICTORIAN GUEST

Bandarawela
victorianbungalow.lk



2km Away from Railway Station & Bandarawela town

බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...

Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available

077 3 711 196 | 070 2 536 896

## HOUSE FOR SALE

MALABE, UDAWATTA ROAD
(QUIET NEIGHBOURHOOD)

03 Bedrooms, 03 Attached Toilets 5kwh PV Solar System, Solar power Hot-water, Fitted Pantry Cupboards, 2495 sq.ft. on 8.35P



35 million (Negotiable)

INSPECTION BY PRIOR APPOINTMENT 0718 794 748 No Brokers please

## தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

கனேமுல்ல நகரில் 08 பேர்ச், சுற்றுமதில் கேட், வாகன நிறுத்தும் வசதிகளுடன், 3/4 வீதம் பூர்த்தி செய்யப்பட்ட இருமாடி வீடு, குடியிறுப்பாளர் வெளிநாடு செல்வதால் விற்பனைக்கு. 02 கோடி, வீட்டின் மிகுதி வேலைக்காக விலை குறைக்கப்பட்டு வழங்கப்படும்.

077-4 109 440, 077-4 004 938

## COMMERCIAL PROPERTY FOR SALE IN KELANIYA - FACING WARAGODA ROAD

150 Mts. from Kandy Road (Thorana Junction)
500 Mts. from Katunayaka Highway Entrance and Peliyagoda Fish Market and Vegi Market
Land Extent 37.9 P. with two buildings.

- Single Storey Building (Showroom) 2000 Sq. Ft. Facing main road -
- 3 Storied New Building - 9000 Square Feet -
- Parking Space for 10 Vehicles -
- Half way build apartment on the roof top -

Suitable for any Business - Office Complex or Store or Garment Factory

FOR FURTHER DETAILS - 077 7 677 765

## FLOOR DOCTOR

071 4 780 780

Concrete Floor
Water glass system
- No wax - No cracks
- Easy maintenance
- Dust proof
- Extreme durability
- Environment friendly.



Special Grinding Rates for Concrete Waterproofing or Epoxy floor preparation.

Above 5000 Sq. Ft.

YouTube surfaceshineservices

Terrazzo, Cement, Marble, Granite, Wood Flooring, Titanium cut and polishing of floors and all type of floor cleaning.

0777 676 678 / 071 4 780 780
www.surfaceshineservices.com

## RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES



WANT TO WORK, LIVE & THRIVE IN AUSTRALIA ?

With our guidance, you can start your application process for Permanent Residency & enjoy a prosperous career with a vibrant lifestyle

Send Us your CV to,
colombo@rimigrations.com
for a FREE initial eligibility assessmen

Hot Line : +94 76 767 8281
No. 351/1, R. A. De. Mel Mawatha, Colombo 03
www.rimigrations.com

## Gihan's Beach Resort

We are open From 11.00 a.m. to 11.00 p.m.

Beach View Restaurant
(Thai / Chinese / Indian / Sri Lankan Food)
VVIP Wedding / Function Hall
Beach Parties
Private A/C Party Halls
Rooftop Garden
Outdoor Catering
VVIP Beach Front Rooms



Please call us or WhatsApp us to get the best rates:
0718 712795, 0774 745333, 0112 729967, 0112 729971
Web Site - www.gihansbeach.com | facebook - Gihan's Beach Resort

## சேதன தேங்காய் பால்

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது

ஏற்றுமதிக்கான தரமுடையது 400 மி.லீ. சேதன தேங்காய் பால் இலங்கையின் உற்பத்தி உடனடியான விற்பனைக்கு உள்ளது




மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை ஏற்றுக் கொள்ளப்படும்

மொத்தக் கொள்வனவு மற்றும் ரொக்கப்பணக் கொடுப்பனவிற்கு விஷேட கழிவு

நாடுமுழுவதுமிலிருந்து ஓடர்கள்/ விநியோகித்தல் பெறுப்பேற்கப்படும்

AALAM HOLDINGS (PVT) LTD.
NO.20/1, KOTHALAWELA AVENUE.COLOMBO 4.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
0712 727 920 அல்லது 0117 173 864

## NUWARAELIYA

HOTEL FOR SALE
126 PERCHES, 16 ROOMS, KITCHEN, RESTAURANT STAFF ACCOMMODATION DRIVER'S QUARTERS FOR 20 DRIVERS

RESTAURANT FOR SALE
2,000 SQ. FT. FULLY EQUIPPED READY TO MOVE IN

APARTMENT FOR SALE
3 BEDROOMS, 3 BATHROOMS, 1,150 SQ.FT.

LAND FOR SALE IN NUWARAELIYA CITY
21 PERCHES, 3 PLOTS AVAILABLE AT 88/3 UNIQUE VIEW ROAD (PRIME LOCATION ) NUWARAELYA

## COLOMBO 04

COMMERCIAL UNIT FOR SALE
FLOOR AREA 2,480 SQ.FT GUARANTEED RENTAL INCOME 285,000/- PER MONTH FOR NEXT 5 YEARS

0773 315 400

# இவ்வருடம் தேர்தல் நடத்தப்படுவது உறுதியானதால் அரசியல்களம் பரபரப்பு!

**ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான இரு விடயங்கள் இவ்வாரம் ஊடகங்களில் பேசுபொருளாகியிருந்தன. ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் நீதிமன்றம் தீர்மானிக்கும் வரை தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதை இடைநிறுத்துமாறு கோரி வர்த்தகர் ஒருவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை வழக்குக் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தைத் தீர்மானிப்பது தொடர்பில் ஜனாதிபதி அமைச்சரவைக்குத் தாக்கல் செய்திருந்த யோசனை குறித்த இரண்டு விடயங்களுமே ஊடகங்களின் அதிக கவனத்தை ஈர்த்திருந்தன.**

பாணந்துறையைச் சேர்ந்த சமிந்திர டி. லெனாவா எனும் வர்த்தகர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அரசியலமைப்பின் 30 (2) ஆவது பிரிவு 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 3 ஆவது பிரிவின் மூலம் திருத்தப்பட்டதாகக் கருதப்படவில்லையெனக் கூறியே அவர் இந்த நிவாரணத்தைக் கோரியிருந்தார்.

ஆறு வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாகக் குறைக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தமே இவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மனுத் தாக்கல் செய்யப்பட்டதும், இவ்விடயம் எதிர்பார்த்தது போல எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு 'அவல்பொரி' போன்று மாறிவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடும் நோக்கில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகக் கூறி அரசியல் செய்ய ஆரம்பித்து விட்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட வேண்டும், இது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார விடுத்த கோரிக்கைக்கும் இந்த மனுவுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகப் பெரும்பாலான எதிர்க்கட்சிகள் அரசியல் செய்யத் தொடங்கின.

இருந்தபோதும் இது பற்றி ஜனாதிபதி தரப்பிலிருந்து தெளிவான பதில் வழங்கப்பட்டிருந்தது. 'லெனாவா தன்னிடமோ அல்லது தனது சட்டத்தரணிகளிடமோ இவ்வாறு மனுவொன்றைத் தாக்கல் செய்வது பற்றிக் கலந்துரையாடவில்லை. ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். 2024ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்துவது தொடர்பில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றேன்' என ஜனாதிபதி அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் உயர்நீதிமன்றத்தை நாடிய வர்த்தகர் யார் என்பது பற்றியும் அவருடைய அரசியல் பின்புலம் பற்றியும் தேடத் தொடங்கினர்.

2020 பொதுத்தேர்தலின் போது குறித்த வர்த்தகர் அரசியல் கட்சியொன்றின் தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தார்.

2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலம் ஆறு வருடமா அல்லது ஐந்து வருடமா என்பது தொடர்பில் உச்சநீதிமன்றத்திடம் கருத்துக் கேட்டிருந்தார்.

அப்போது 19 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் சூழல் காணப்பட்டிருந்தது. அவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டாலும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில், ஆறு வருட காலத்திற்கு வாக்காளர்களால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக சிறிசேன வாதிட்டார்.

அப்போது சட்டமா அதிபர் என்ற வகையில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலை வகித்திருந்தார்.








**ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் காலம் குறித்து எதிரணியினரால் போலிப் பிரசாரங்கள்!**

அப்போதைய பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், ஈவா வனசுந்தர, புவனேகு அலுவிஹாரே, சிசிர டி ஆப்ரூ மற்றும் கே.டி.சித்ரசிறி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு வந்ததுடன், அரசியலமைப்பின் விதிகளுக்கு அமைய மைத்திரிபாலவின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் என முடிவு செய்யப்பட்டிருந்தது.

2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர் காலியின் முன்னாள் மேயர் மெத்சிறி சில்வாவும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானியை செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார். அந்த வழக்கிலும் உயர் நீதிமன்றம் ஏகமனதாக குறித்த மனுவைத் தள்ளுபடி செய்திருந்தது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தைப் பூர்த்திசெய்ய முன்னர் பதவி விலகியதால் அவரின் பதவிக்காலத்தில் எஞ்சிய காலத்துக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனவே, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என சட்ட வல்லுனர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் தொடர்பான இந்த வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை பிரதம நீதியரசர் தலைமையிலான நீதியரசர்கள் குழு முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள்தான் என்பதை அரசாங்கத்தின் சார்பில் சட்டமா அதிபரும் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார். இந்த வழக்குத் தொடர்பில் முன்வைக்கப்பட்ட வாதப்பிரதிவாதங்களை செவிமடுத்த நீதிமன்றம் குறித்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

இந்த நீதிமன்றத் தீர்மானத்தைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது. அதேநேரம், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் தொடர்பாக இலங்கை அரசியல்யாப்பில் நிலவும் தெளிவின்மையை நீக்கி, திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி அரசியல் யாப்பில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆறு ஆண்டுகளுக்கு மேல்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் என்ற சொற்றொடரை இணைக்க ஜனாதிபதி யோசனை முன்வைத்திருந்தார். இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவ்வாறான பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலுக்கு அனைத்துக் கட்சிகளும் தயாராகத் தொடங்கியுள்ளன. இதனால் சில அரசியல் கட்சிகள் மத்தியில் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பொதுஜன பெரமுன கட்சிக்குள் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் மாற்றுக்கருத்துக்கள் எழுந்துள்ளன. இதனால் அரசியல் களம் பரபரப்பாகி வருகின்றது.

**பி.ஹர்ஷன்...**

# காஸா யுத்த நிறுத்தத்திற்கான மற்றொரு தீவிர முயற்சி



**ஹமாஸுடன் யுத்தநிறுத்தம் ஏற்பட்டாலும் ஹிஸ்புல்லாஹ் மீது தாக்குதல்கள் தொடரும் –இஸ்ரேல்**

**காஸாவில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக கடும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் மற்றொரு முயற்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து கட்டாரின் தலைநகர் டோஹாவில் கடந்த வியாழக்கிழமையும் இடம்பெற்றுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மே 31ஆம் திகதி காஸா யுத்த நிறுத்தத்திற்காக முன்வைத்த யோனையை அடிப்படையாகக் கொண்டு இம்முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.**

கட்டார் மற்றும் எகிப்தின் மத்தியஸ்தத்துடன் அமெரிக்க பங்களிப்புடன் இடம்பெற்றுவரும் இம்முயற்சியின் ஊடாக காஸாவில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க, கட்டார், எகிப்து பிரதிநிதிகளுடன் அமெரிக்காவின் சி.ஐ.ஏ, இஸ்ரேலின் மொசாட், எகிப்து உளவு பிரிவு உள்ளிட்ட உளவுப்பிரிவுகளின் தலைவர்களும் ஹமாஸ் பிரதிநிதிகளும் பங்குபற்றி வருகின்றனர்.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் முழு அளவிலான யுத்தம் மூளக்கூடிய அபாயமும் பதற்றமும் ஏற்பட்டுள்ள சூழலில் காஸாவில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக இம்முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

காஸா மீதான யுத்தத்தை நிறுத்துமாறு கோரி லெபனானின் ஹிஸ்புல்லாஹ்வும், யெமனின் ஹூதிக்களும், ஈராக்கின் ஆயுதக் குழுக்களும் இஸ்ரேல் மீது தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன. காஸாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டுவிடும் பட்சத்தில் இந்த ஆயுதக்குழுக்கள் இஸ்ரேல் மீது முன்னெடுக்கும் தாக்குதல்களை நிறுத்திவிடக்கூடிய சூழல் காணப்படுவதாக சர்வதேச போரியல் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, எகிப்திய வெளிவிவகார அமைச்சர் பத்ர் அப்தெலாட்டி, இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான மோதல்களைத் தவிர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாக ஊடக மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

'காஸா மீதான யுத்தம் நிறுத்தப்படும் வரை இஸ்ரேல் மீது தாக்குதல்கள் தொடரும் என்று கூறிவருகின்ற ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ், ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்றுவரும் தற்போதைய சூழலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஹமாஸின் யுத்த நிறுத்த முடிவுகளை ஹிஸ்புல்லாஹ் ஏற்றுக் கொள்ளும். யுத்த நிறுத்தத்திற்கும் கட்டுப்படும். காஸாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டால் இஸ்ரேல் மீதான எல்லை தாண்டிய தாக்குதல்களை நிறுத்துவோம். ஹமாஸ் எதை ஏற்றுக்கொண்டாலும், அனைவரும் ஏற்றுக்கொள்வதோடு திருப்தி அடைவார்கள். என்றாலும் காஸாவில் போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னரும் லெபனானுக்கு எதிராக இஸ்ரேல் முன்னெடுக்கக்கூடிய எந்த தாக்குதலையும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று யெமனின் ஹூதிக்களும் ஈராக்கின் போராளிக் குழுக்களும் தெரிவித்துள்ளன.

இவ்வாறான சூழலில் தான் காஸாவில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக உச்சபட்ச முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்போர் நிறுத்த முயற்சிகளுக்கு மத்தியிலும் காஸா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளதோடு சில பிரதேசங்களில் இருந்து வெளியேறுமாறு மக்களை அறிவுறுத்தியுள்ளது. இடம்பெயர்ந்துள்ளவர்கள் தங்கியுள்ள பாடசாலைகள் மீது தாக்குதல்களும் நடாத்தப்பட்டுள்ளன. அதனால் பலர் கொல்லப்பட்டும் மேலும் பலர் காயமடைந்தும் உள்ளனர். மத்திய காஸாவில் இருந்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐ.நா. நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. காஸா மக்களின் இடம்பெயர்தல் தொடர்கதையாகி உள்ளது. அத்தோடு காஸாவில் இற்றை வரையும் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 88 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயப்பட்டும் உள்ளனர்.

இந்நிலையில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட், காஸாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டாலும் ஹிஸ்புல்லாஹ்வுடன் யுத்தம் நிறுத்தப்படமாட்டாது என்றுள்ளார். இந்த அறிவிப்பு ஹிஸ்புல்லாஹ், ஹூதிக்கள் மற்றும் ஈராக் ஆயுதக் குழுக்களின் கோரிக்கைக்கு முரணாக அமையவுள்ளது. காஸாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டும் ஹிஸ்புல்லாஹ்வுடன் இஸ்ரேல் யுத்தத்தை தொடருமாயின் காஸா யுத்த நிறுத்தம் அர்த்தமற்றதாகிவிடும் அச்சமும் நிலவவே செய்கின்றன.

கடந்த வருடம் ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் ஹிஸ்புல்லாஹ்வும் இஸ்ரேலும் மாறிமாறி தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன. இரு தரப்புக்கும் இடையிலான மோதல்கள் தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையில் பதற்றமும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் ஹிஸ்புல்லாஹ்வின் முக்கியஸ்தர்களையும் இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது. அதனால் பல முக்கிய முக்கியஸ்தர்களை இழந்துள்ள ஹிஸ்புல்லாஹ், கடந்த 3 ஆம் திகதி லெபனானின் கரையோர நகரான டயரில் இடம்பெற்ற வான்வழித்தாக்குதலில் அதன் அஸீஸ் படைப் பிரிவு தளபதி முஹம்மது நைம் நாசர் (வயது 59) என்பவரை இழந்தது. இவரது இழப்பினால் ஆத்திரமடைந்த ஹிஸ்புல்லாஹ் அதேதினம் 100 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வடக்கு இஸ்ரேல் மீது ஏவியதோடு மறுநாள் 200க்கும் மேற்பட்ட ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் ஏவித் தாக்குதல் நடாத்தியது.

வடக்கு இஸ்ரேலிலுள்ள பல இராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்ட ஹிஸ்புல்லாஹ், அவற்றில் அய்லெட் பாராக்ஸில் உள்ள 91ஆவது டிவிஷன் தலைமையகம், கட்சவியா படையணியிலுள்ள 7ஆவது கவசப் படை தலைமையகம், 7ஆவது படைப்பிரிவின் கவச பட்டாலியன் தலைமையகம், கம்லா படையணி மற்றும் 210ஆவது டிவிஷன் தலைமையகம், யார்டன் பாராக்ஸில் உள்ள பீரங்கி படைப்பிரிவின் தலைமையகம் என்பனவும் அடங்கும். அத்தோடு இன்னும் பல நிலைகளும் தாக்கப்பட்டது என்றும் கூறியுள்ளது.





**ஹிஸ்புல்லாவின் ஏவுகணைத் தாக்குதல்களால் வடக்கு இஸ்ரேலில் 17,600 ஏக்கர் எரிந்து அழிவு**

இதற்கான பதில் தாக்குதல்களை யுத்த விமானங்கள் மற்றும் பீரங்கிகளைக் கொண்டு தெற்கு லெபனானின் எல்லைப்புற நகர்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக உயிரிழப்புக்கள் மாத்திரமல்லாமல் அழிவுகளும் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த திங்களன்று (8ஆம் திகதி) அதிகாலையில் தெற்கு லெபனானின் ஜெஸ்ஸைன் பகுதியிலுள்ள மவுண்ட் டூராவிலுள்ள கால்நடைப் பண்ணையொன்றின் மீது இஸ்ரேல் நடாத்தியுள்ள மூன்று வான் தாக்குதல்களில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதோடு சுமார் 700 ஆடுகளும் கொல்லப்பட்டுள்ளன என்று லெபனான் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலுக்கு உடனடியாகக் கடும் கண்டனம் தெரிவித்த லெபனான் விவசாய அமைச்சு, 'இத்தாக்குதல்கள் லெபனான் இறையாண்மை மற்றும் சர்வதேச சட்டத்தை அப்பட்டமாக மீறல் செயல்' என்றும் 'இஸ்ரேலின் இத்தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இது நமது நிலம் மற்றும் மக்கள் மீதான அப்பட்டமான மீறல்' என்றுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்த இரண்டு ட்ரோன் வீடியோ காட்சிகளை ஏற்கனவே வெளியிட்ட ஹிஸ்புல்லாஹ், கோலான் குன்று பகுதியிலுள்ள சில முக்கிய இராணுவத் தளங்களின் வீடியோ காட்சிகளை சில தினங்களுக்கு முன் வெளியிட்டது. இதுவும் சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

இவ்வாறான சூழலில் ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாவின் முன்னாள் மெய்பாதுகாவலரும் சிரியாவில் இருந்து ஹிஸ்புல்லாஹ்வுக்கு ஆயுதங்களை கொண்டு வந்து சேர்ப்பவர்களில் ஒருவருமான அபுல் பாதில் கர்னாபாஷ் இஸ்ரேல் தாக்குதலில் கடந்த 09 ஆம் திகதி சிரியாவில் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இஸ்ரேலின் இயற்கை மற்றும் பூங்கா அதிகார சபை, 'கடந்த வருடம் ஒக்டோபர் 08 ஆம் திகதி முதல் தெற்கு லெபனானில் இருந்த வடக்கு இஸ்ரேல் பிரதேசங்கள் மீது மேற்கொள்ளப்படும் ஏவுகணைத் தாக்குதல்களால் 17 ஆயிரத்து 600 ஏக்கர் திறந்த வெளி நிலங்கள், காடுகள் எரிந்து சேதமடைந்துள்ளன. குறிப்பாக கலிலி கோலான் குன்றுகளில் உள்ள நஹல் டிஷோன், கம்லா, நஹல் ஹட்ஸோர், மஜ்ரேஸ் மற்றும் மெஷுஷிம் உள்ளிட்ட இயற்கை ஒதுக்கங்கள் என்பன தீயினால் கடுமையாக சேதமடைந்துள்ளன. அத்தோடு இஸ்ரேலின் பிரியா காடுகளிலும், கோலன் குன்றுகளில் உள்ள தாலியோட் ஆற்றுக்கு அருகிலுள்ள பிரதேசங்களிலும் ஹிஸ்புல்லாஹ்வின் ஏவுகணைத் தாக்குதலால் ஏற்பட்ட தீயினாலும் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது தாக்குதல் நடாத்த ஹிஸ்புல்லாஹ் பயன்படுத்தும் ஏவுகணைகள் தீ அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடியனவாக விளங்குவதாக இஸ்ரேலிய தீயணைப்பு மற்றும் மீட்புக் குழு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதனால் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் அவற்றின் விளைவான இழப்புக்கள் சரியாக இன்னும் மதிப்பீடு செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களால் அழிவுகளும் சேதங்களும் தொடர்கின்ற போதிலும் அவற்றையும் முடிவுக்கு கொண்டு வர காஸா யுத்த நிறுத்தம் பாரிய பங்களிப்பு செய்யும். அதுவே சர்வதேச தரப்புக்களின் அபிப்பிராயமாகும். அதனால் இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான காஸா யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தை விரைவாகவும் வேகமாகவும் வெற்றி பெற வேண்டும் என்பதே அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.



**மர்லின் மரிக்கார்...**

# தோட்டத் தொழிலாளர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்பது...

ஹட்டன், கொட்டகலை உள்ளூராட்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் கடந்த மேதினத்தன்று நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். அப் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் ரூ.1700/= ஆக அதிகரிக்கப்படும் என அறிவித்ததோடு, அதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மறுநாள் பல பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் அச்செய்தி வெளிவந்தது. ஆனால் ஜனாதிபதியின் உரை தொடர்பான செய்திக்கு அருகில் இலங்கை பெருந்தோட்ட கம்பனி முதலாளிமார் அமைப்பின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவரின் அறிக்கையை பல பத்திரிகைகள் வெளியிட்டன. தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700/= சம்பளம் வழங்க முடியாது எனவும் இது தொடர்பில் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றத்திற்கு செல்லவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சம்பள உயர்வை கூறிய அதே நேரம், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் அதற்கு எதிராக ஒவ்வொரு பத்திரிகையிலும் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இது கிட்டத்தட்ட எல்லா செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது. தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில் பெயர் தெரியாத வகையில் இவ்வாறானதொரு அறிக்கை எவ்வாறு இவ்வளவு விரைவாக வெளியிடப்பட்டது என்பது விசாரணைக்குரிய விடயமாகும். ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான உடனேயே தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கூடியிருந்தாலும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில் பெயர் வெளியிடப்படாத ஒருவரேனும் இதே கருத்தை வெளியிட முடியுமா? ஜனாதிபதியின் மே தின அறிக்கையின் முக்கியத்துவத்தை குறைக்கும் சதி இடம்பெற்றதா போன்ற விடயங்களும் ஆராயப்பட வேண்டும்.

மே மாதம் ஜனாதிபதியின் அறிக்கை தோட்டத் தொழிலாளியின் சம்பளம் ரூ1700/= ஆக உயர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், அது அதன் ஆரம்பம் அல்ல. இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக சம்பள சபையினால் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் தோட்ட கம்பனிகள் அதில் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில், சம்பள நிர்ணய சபைக்கு அது தொடர்பாக புகார் தரப்பினருடன் முடிவெடுக்கலாம். இதன்படி, சம்பள சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டு, மே மாதம் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் இந்த நாட்களில் புதிய தோற்றத்தை எடுத்துள்ளது.

சம்பள அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானியை தடை செய்யுமாறு தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தினால் முன்வைக்கப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் வர்த்தமானியை இடைநிறுத்தியுள்ளது. இதேவேளை, 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடியாத நிறுவனங்களுடன் ஏற்கனவே செய்துள்ள தோட்ட உரிமை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. 1972 மற்றும் 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டங்களின்படி, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உரிமையாளர்களுக்கு சொந்தமான அனைத்து தோட்டக் கம்பனிகளும் தேசியமயமாக்கப்பட்டு தோட்டங்கள் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டன. நீண்ட காலமாக அவை ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வசம் இருந்தன. 1992 இல், தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு பெரிய அளவிலான அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டங்கள் நிர்வகிப்பதற்காக வழங்கப்பட்டன . 1995இல் இந்த தோட்டங்கள் குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன . அந்த ஆண்டில் 20 தனியார் நிறுவனங்களுக்கும் 03 அரச நிறுவனங்களுக்கும் தோட்டங்கள் குத்தகைக்கு விடப்பட்டன. பின்னர் மேலும் ஒரு தனியார் நிறுவனமும் சேர்ந்து 21 தனியார் துறை தோட்ட நிறுவனங்களும் தொடங்கப்பட்டன. அரச தோட்ட நிறுவனங்களாக 03 நிறுவனங்களுடன் மொத்தம் 24 நிறுவனங்களுக்கு அரச தோட்டங்கள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன .

பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் தோட்டத் தொழில் வீழ்ச்சியடைந்ததாக பலர் நம்புகின்றனர். எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரம் தொடர்பான சில மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்த தோட்டங்கள் ஏதோவொரு வகையில் உதவியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டலாம். தொழிலாளர் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது, பெருந்தோட்ட உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், நாட்டின் கிராமப்புறங்களில் இருந்து விலகி, கிராமப்புற மக்களை விட்டு தனிமைப்படுத்தப்பட்ட அலகுகளாக இயங்கிய தோட்டங்கள், ஏதோ ஒரு வகையில் நாட்டு மக்களுடன் ஒன்றிணைதல் போன்றவற்றை இந்த மாற்றங்களாக குறிப்பிடலாம்.

இருப்பினும், பின்னர் பெரும்பாலான தோட்டங்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறு ஏற்பட்டுள்ள மாற்றங்களின்படி இலங்கையில் பெருந்தோட்டக் கைத்தொழிலை மூன்று பிரதான காலகட்டங்களாகப் பிரிக்கலாம். அதாவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்முனைவோரின் கட்டுப்பாட்டில் உள்ள காலம், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காலம் மற்றும் கட்டுப்பாடு தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட காலம். ஆட்சியில் இவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கையில் தோட்டத் தொழிலில் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளின் கசப்பான மற்றும் சோகமான அனுபவம் என்னவென்றால், அந்த காலகட்டம் தொடக்கம் இன்று வரை தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதாகும்.

கிறிஸ்டின் வில்சன் எழுதிய, பல சிங்கள மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. 'தித்த கோப்பி' என்ற புத்தகம் இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கையின் ஆரம்ப கட்டங்களில் அனுபவித்த இன்னல்களையும் தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கையையும் விபரிக்கிறது. எனினும், இன்றும் தோட்டத் தொழிலாளர்கள் இதே போன்ற வாழ்க்கையையே வாழ்கின்றனர். அதை ஒரே ஒரு உதாரணத்தின் மூலம் நிரூபிக்க முடியும். இலங்கை மக்களின் பொருளாதார நிலைமைகளை பகுப்பாய்வு செய்வதில், நகர்ப்புறம், கிராமம் மற்றும் தோட்டங்கள் என மூன்று துறைகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இலங்கையின் வறுமை தொடர்பான சமீபத்திய தகவல்களின்படி, நகர்ப்புறத் துறையில் வறுமை நிலை 1.1% ஆகவும், கிராமப்புறத் துறையில் 3.3% ஆகவும் உள்ளது. மேலும், எஸ்டேட் துறையில் 10.4% உள்ளது இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் ஏற்றுமதி மேம்பாட்டிற்கும் சிறப்பான பங்களிப்பை ஆற்றிவரும் தோட்டத் தொழிலாளி எதிர்நோக்கும் சோகமான நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும். கிராமப்புறங்களில் வறுமை 3.3% ஆகவும், தோட்டத் துறையில் 7.1% ஆகவும் உள்ளது. வறுமை அதிகம். தோட்டப் பிரிவில் உள்ளவர்கள் பணிபுரிந்தவர்கள் மற்றும் பணிபுரிபவர்களே. அவர்களின் வாழ்வில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது.

2022 2023 இல் குறைந்த லாபம் ஈட்டிய தோட்ட நிறுவனம் மடுல்சீமை அதன் லாபம் 88.5 மில்லியன். 127.2 மில்லியன் இலாபத்துடன் மதுரட்ட பிளான்டேஷன் நிறுவனம் குறைந்த பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. மற்ற எல்லா நிறுவனங்களும் 700 மில்லியன் ரூபாய்க்கு மேல் லாபம் ஈட்டியுள்ளன. பெரும்பாலான நிறுவனங்கள் 100 மில்லியன் முதல் 3500 மில்லியன் வரை லாபம் ஈட்டியுள்ளன. எவ்வாறாயினும், இந்தத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 700 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டால், இலங்கையில் தோட்டத் தொழில் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளதாக தோட்டக் கம்பனிகள் தெரிவிக்கின்றன.

உலகளவில் பெரும் புகழைப் பெற்ற 'இலங்கை தேயிலை 'உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சொற்ப ஊதியம் அந்த மக்களை அடிமைத் தொழிலில் ஈடுபடச் செய்துள்ளது. அவர்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை. பெருந்தோட்ட நிறுவனங்கள் அவர்களுக்கு லயன் எனப்படும் வீடுகளை வழங்கியுள்ளன. ஆனால் குறைந்த பட்சம் அடிப்படை ஆரோக்கியத்தை பேணும் நிலையில் அவர்களில்லை. இலங்கையின் தோட்டக் கைத்தொழிலில் ஏறத்தாழ இருநூறு வருடங்கள் தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியுள்ளனர். நாட்டின் உணவு மற்றும் ஏனைய தேவைகளுக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவீதத்தை தோட்டத் தொழிலாளர்கள் ஈட்டியுள்ளனர். தற்போது பல தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு மாதத்தில் 30 நாட்கள் வேலை கிடைப்பதில்லை. இத்தகைய சூழ்நிலையில், குறைந்தபட்சம் ரூ.1700/= என்ற தொகையைக் கொண்டு அவர்களின் அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்ய முடியாது. அந்தச் சூழ்நிலைக்கேற்ப 1000 ரூபா அவர்கள் வாழும் வாழ்க்கையைப் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த ஆண்டு அரசு ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. நாடு வங்குரோத்தாகிக் கொண்டிருந்த காலம் அது. பெருந்தோட்டத் துறையில் உயர்மட்ட முகாமையாளர்கள் பெரும் சம்பளம் மற்றும் உயர் வசதிகளை அனுபவிப்பதாகத் தெரிகிறது. தோட்டத் தொழிலாளர்கள் குடியேறுவதற்கு தோட்ட பங்களாக்களை கேட்பதில்லை. தோட்ட முகாமையாளர்கள் அனுபவிக்கும் ஏனைய வசதிகளும் கோரப்படவில்லை. அவர்கள் தங்கள் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை பராமரிக்க 700 ரூபா போன்ற அற்ப தொகையை கோருகின்றனர். எதிர்காலத்தில் பெருந்தோட்டக் கைத்தொழிலைப் பேணிக்காக்க தோட்டத் தொழிலாளியை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்பதை பெருந்தோட்ட நிறுவனங்கள் புரிந்து கொள்ள வேண்டும். 200 வருடகால அடிமைத்தனத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்களை விடுவிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த நடவடிக்கைகள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியவை.



களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைகள் பிரிவின்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
சுனந்த மத்துமபண்டார



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ரஷ்ய – இந்திய நட்புறவும் நேட்டோவின் உத்திகளும்

உலகளாவிய அரசியல் வலுவான போட்டிக் களத்தை திறந்துள்ளது. புரட்சியாளன் லெனின் குறிப்பிட்டது போல் ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் நிலவும் போட்டியே முதலாம் இரண்டாம் உலக போர்களுக்கான அடிப்படை எனக் குறிப்பிட்டார். ஆனால் அதன் பின்னர் உலகம் அடைந்த மாற்றங்களினால் ஏகாதிபத்தியம் தனக்குள் உள்ள முரண்பாடுகளை சமரசம் செய்து கொண்டு தமக்குள் மோதல்களைத் தவிர்த்திருந்தது என்ற வாதம் நிலவியது. இருபதாம் நூற்றாண்டு பிற்பகுதி முழுவதும் அத்தகைய நியதிக்குள்ளேயே உலக ஏகாதிபத்தியம் நகர்ந்ததாக பிரதாப் பட்நாயக் எனும் இந்தியப் பொருளியல் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். அதற்காக ஏகாதிபத்திய சக்திகளிடம் முரண்பாடுகள் இல்லை என்று அர்த்தம் கொள்ள முடியாது எனவும் அவர் விபரிக்கின்றார். ஆனால் மீளவும் ஏகாதிபத்தியங்கள் மோதலுக்கான களங்களை உருவாக்க முயல்வதாகவே உலகப் போக்கு தெரிகிறது. அதனாலேயே மூன்றாம் உலகப் போர் உருவாகும் என்ற விவாதப் பொருள் அனேக ஆய்வாளர்களிடம் ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ரஷ்யப் பயணம் மேற்கு வல்லரசுகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள நிலையை தேடுவதாக உள்ளது.

10.07.2024 அன்று ரஷ்யாவுக்கு அரசமுறைப் பயணமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சென்றிருந்தார். இந்திய - ரஷ்ய உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் இரு தலைவர்களும் முக்கியத்துவம் வாய்ந்த உரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக இரு நாட்டுக்கும் இடையில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் உரையாடப்பட்டதுடன் ஒன்பதுக்கும் மேற்பட்ட உடன்பாடுகளும் எட்டப்பட்டன. இந்தியாவுக்கான ரஷ்யாவின் பெற்றோலிய இறக்குமதி தொடர்பில் அதிக கவனம் கொண்ட இந்தியப் பிரதமர் அத்தகைய வர்த்தக நடவடிக்கைக்கான ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார். இரு நாட்டுக்குமான நீண்ட நட்புறவின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுக் காட்டிய மோடி இரு நாட்டுக்குமான நட்புறவை தொடர்ந்து ஒன்றிணைந்து முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் உலகளாவிய ரீதியில் அமைதிக்கும் உறுதியான தன்மைக்காகவும் செயல்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அதே நேரம் ரஷ்யாவின் உயரிய விருதான செயிண்ட அப்போஸ்ஸல் விருதினை நரேந்திர மோடிக்கு வழங்கி ரஷ்ய ஜனாதிபதி புட்டின் இந்தியப் பிரமரை கௌரவித்தார்.

எல்லாவற்றையும் கடந்து உக்ரைன் ரஷ்ய மோதலை முதன்மைப்படுத்திய இந்தியப் பிரதமர், இந்தப் போரில் அப்பாவிக் குழந்தைகள் கொல்லப்படுவது வேதனை அளிக்கிறது என்று புட்டினிடம் தெரிவித்தார். போர்க்களத்தில் அமைதிக்கான எந்த தீர்வும் கிடையாது. பேச்சுவார்த்தையால் மட்டுமே அது சாத்தியம். அமைதியைக் கொண்டுவர இந்தியா ஒத்துழைக்கும் என்றார் மோடி. இதனை ஏற்றுக் கொண்ட புட்டின் அமைதிப் பேச்சுக்களில் உக்ரைன் நிலைப்பாட்டையும் ரஷ்யா ஏமாற்றப்பட்டதையும் வெளிப்படுத்தினார். ஹங்கேரி முன்னெடுத்த அமைதிப் பேச்சுக்களையும் உக்ரைனே தட்டிக்கழித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்குலகத்தின் ஆயுதங்களை நம்பி உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி போரை முதன்மைப்படுத்துவதாக தெரிகிறது.

இதேநேரம் ரஷ்யாவுடனான இந்திய உறவு உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டு வர உதவும் என வெள்ளைமாளிகை பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ரகசிய விஜயத்தை அதிகம் எதிர்த்த அமெரிக்கா உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா அழுத்தம் கொடுக்கும் என தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் மார்கரெட் மேக்லியோட் குறிப்பிடுகையில், இந்தியாவும் ரஷ்சியாவும் சிறப்பான கூட்டாண்மையைப் பகிர்ந்து கொள்கின்றன.போருக்கு எதிராக ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க இந்தியா இத்தகைய சிறப்புக் கூட்டாண்மையைப் பயன்படுத்த விரும்புகிறது என்றார்.

75 ஆவது நேட்டோ உச்சிமாநாடு வோசிங்டனில் (11.07.2024) நடைபெற்ற போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அடுத்துவரும் மாதங்களில் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு கூடுதல் வான்பாதுகாப்பு அமைப்புக்கள் உள்ளடங்கலாக ஏராளமான ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளது அமெரிக்கா வான்பாதுகாப்பு இடைமறிப்பு ஆயுதங்களை வழங்கும் போது உக்ரைன் முன்னோக்கிச் செல்வது உறுதி செய்யப்படும். இந்தப் போரில் ரஷ்யா தோல்வியடையும் உலகப் பாதுகாப்பின் அரணாக நேட்டோ உள்ளது நேட்டோ உடைந்துவிடும் என்று புட்டின் கருதினார். ஆனால் நேட்டோ வரலாற்றில் இருந்ததைவிட பலமடைந்துள்ளது என்றார்.



இங்கு உரையாடப்பட வேண்டிய விடயங்கள் பலவுள்ளன. அவற்றை விரிவாக நோக்குதல் அவசியமானது.

ஒன்று, நேட்டோவுக்கு தலைமை தாங்கும் அமெரிக்கா உட்பட மேற்குலகம் உக்ரைன் போரை விரும்புகிறதா அல்லது சமாதானத்தை உருவாக்க முனைகிறதா? என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. அடிப்படையில் இந்தியாவை பயன்படுத்தி சமாதானத்தை அடைவதென்று உரைக்கும் அமெரிக்க ஆட்சியாளர்கள் உக்ரைன் ஜனாதிபதியை அழைத்து நேட்டோ அரங்கில் ஆயுதங்களை வழங்குவதும் பொருளாதார உதவிகளுக்கு உத்தரவாதம் கொடுப்பதும் எதற்காக என்பது முக்கியமானது.

இது ஒரே நேரத்தில் போரையும் சமாதானத்தையும் நேட்டோ நகர்த்துகிறதா அல்லது போருக்கான வாய்ப்புக்களை தூண்டுகிறதா என்பது முக்கியமானது. நேட்டோவுக்கு போர் அவசியமானது. ரஷ்ய ஏகாதிபத்தியத்தை நேரடியாக எதிர்கொள்ளாது உக்ரைன் மூலம் நகர்த்துகிறது. அமெரிக்க பெரும் ஏகாதிபத்தியத்திற்குள் ரஷ்யா உள்ளடங்க மறுதலித்ததன் விளைவே உக்ரைன்ரஷ்யப் போர். இந்தப் போரின் பலியிடல் உக்ரைன் என்பதில் சந்தேகமில்லை. அமெரிக்காவின் ஏகாதிபத்தியமும் ரஷ்ய ஏகாதிபத்தியமும் பாதுகாக்கப்படுகிறது.

இரண்டு, மேற்குலகம் போன்று இந்தியாவும் காஸாவில் நிகழ்வதை கவனத்தில் கொள்ளாது ரஷ்யாவின் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகிறது. ஏகாதிபத்தியங்களின் இயல்பும் கட்டளைகளும் அவ்வாறானவையாகவே இருக்கும். உக்ரைனில் கொல்லப்படும் சிறுவர்கள் வேறு காஸாவில் கொல்லப்படும் சிறுவர்கள் வேறானவர்களா என்ற கேள்விதான் மேல்எழுகிறது. மேற்குலகம் போல் இஸ்லாமியர் மீது இந்திய ஆட்சியாளர்களுக்கு வெறுப்பிருக்கலாம். அல்லது இஸ்ரேலுக்கு ஆத்திரம் வரும் என்று மோடி கருதலாம். ஆனால் அடிப்படையில் உலக நியதிகளும் சட்டங்களும் சர்வதேச விதிகளும் அனைவருக்கும் பொதுவானவையே. அதனை அமுல்படுத்தும் ஏகாதிபத்தியங்களும் அதன் ஆட்சியாளர்களுமே பாரபட்சத்தை உருவாக்குகிறார்கள். சர்வதேச விதிகளை பற்றிய விவாதத்தை விட அதனை கையாளும் ஏகாதிபத்தியங்களின் அணுகுமுறையே ஆபத்தானதாக அமைந்துள்ளது. இதனால் உக்ரைனை நியாயப்படுத்த மேற்கொள்ளும் அணுகுமுறைக்கும் காஸாவை நியாயப்படுத்தும் செயலுக்கும் ஒரே தன்மை இல்லாதுள்ளது. இது மேற்குலகத்தின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டதே அன்றி குழந்தைகளதும் சிறுவர்களதும் மனிதர்களதும் இருப்புக்கான வடிவமல்ல. பலக்கோட்பாட்டின் நியமமே உலகளாவிய இருப்பின் நியதியாகிறது.

மூன்று, இந்தியாவும்; ரஷ்யாவும் நீண்ட நட்பு நாடுகள் என்பதற்கு அப்பால் சமகாலத்தில் எழுந்துள்ள புதிய பொருளாதார திசைகாட்டிகளாக விளங்குகின்றன. அதனை சகித்துக் கொள்ள முடியாத மேற்குலகம் இருநாட்டுக்குமான உறவை பலவீனப்படுத்த முயலுவதையே கண்டு கொள்ள முடிகிறது. ரஷ்யா, சீனா, இந்திய கூட்டின் பலம் வலுவடையும் போது பொருளாதாரத்தின் இருப்பு மேற்கைவிட்டு கிழக்கு நோக்கி நகர்ந்துவிடும் என்ற எண்ணம் எழுந்துள்ளது. அதனை உடைப்பதற்கே இந்திய பிரதமரது ரஷ்ய விஜயத்தை எதிர்த்த மேற்குலகம் திடீரென பயன்படுத்துவது பற்றி உரையாட முனைகிறது. இவை அனைத்துமே ஏகாதிபத்தியங்களின் எச்சங்களே. மேற்கு ஏகாதிபத்தியமும் கிழக்கு ஏகாதிபத்தியமும் தமக்குள் போட்டியை மட்டுமல்ல முரண்பாட்டையும் கூர்மைப்படுத்திக் கொண்டு நகர்கின்றன. இவற்றுக்கிடையே போர் மூளாத வரையுமே உலகத்தின் சமாதானம் பற்றிய உரையாடல் நிகழும். அது சமாதானத்திற்கானதல்ல. அது போருக்கான முனைப்புக்களே. ஏகாதிபத்தியங்கள் மோதுவதே அடுத்த உலக போராகும்.

நான்கு, இந்திய ரஷ்ய பொருளாதார உறவு பலமானது மட்டுமல்ல இராணுவ உறவும் வலுவானதாக உள்ளது. அவை எல்லாவற்றையும் கடந்து புவிசார் அரசியல்பொருளாதாத்தின் வலிமை இரு நாடுகளது கூட்டாண்மையை கட்டமைத்துள்ளது.

அதனால் அத்தகைய கூட்டாண்மை காலம் காலமாக வலுவானதாக உள்ளது. அதனை மேற்குலகத்தால் இலகுவில் தகர்க்க முடியாது. அது மட்டுமல்லாது இந்திய அரசியல் தத்துவார்த்த ரீதியில் உலக நாடுகளை கையாளும் கலையைக் கொண்டுள்ளது. அதாவது கௌதம புத்தர் முதல் மகாத்மா காந்தி வரையும் அத்தகைய தத்துவார்த்த அரசியலையே கட்டிவளர்த்துள்ளது. அதற்குள்ளாலேயே இந்திய வெளியுறவும் அதன் உத்திகளும் காணப்படுகிறது. அது ஒரே நேரத்தில் ரஷ்யாவையும் அமெரிக்காவையும் கையாளும் திறன் கொண்டது.

எனவே இந்தியப் பிரதமரது ரஷ்யப் பயணம் அதிக மாற்றங்களை உலகளாவிய அரசியலில் தந்துள்ளது. உலகம் ஒரு பலமான ஏகாதிபத்திய போட்டிக்குள் நகர்கிறது. இது வெறும் வர்த்தகப் போட்டியாக அமைந்தால் அமைதியடையும். அது ஒரு இராணுவ போட்டியாக மாறுமாக இருந்தால் மீளவும் ஒரு போரை உலகம் சந்திக்க வேண்டிய நிலை தவிர்க்கவியலாததாக அமையும்.



# வரலாற்றில் முதன்முறையாக, ஆலோசனை சட்டத்தரணிகளாக ஐந்துபேர் நியமனம்

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2023ம் ஆண்டின் 26ம் இலக்க சட்டத்தின் பிரகாரம், ஐந்து சிரேஷ்ட சட்டத்தரணிகளுக்கு ஆலோசனை சட்டத்தரணி நியமனங்களை வழங்கினார்.

இலங்கை 1796ஆம் ஆண்டு முதல் 1948 வரை பிரித்தானியாவின் காலனியாக இருந்து வந்தது. அந்தக் காலகட்டத்தில், பிரித்தானியாவில் இருந்த சட்ட கட்டமைப்பு மற்றும் சட்டத்தரணி தொழில் இலங்கையர்களான எமக்கும் கிடைத்தது. பிரித்தானியாவின், வழக்கறிஞர் தொழில் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தோடு, அவை சொலிஸிட்டர் (Solicitor) மற்றும் பரிஸ்டர் (Barrister) என்பனவாகும். அந்த உத்வேகத்தின் அடிப்படையில் இலங்கையில் 1801ஆம் ஆண்டு முதல் 1974ஆம் ஆண்டு வரை இத்தொழில் புரொக்டர் (Proctor) மற்றும் அட்வகேட் (Advocate) என்ற இரு பிரிவுகளின் கீழ் இயங்கியது. அதன் பின்னர் 1973ஆம் ஆண்டு, அப்போதைய நீதி அமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினால் அறிமுகப்படுத்தப்பட்ட 1973ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க நியாயத்தை வழங்கும் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அது வரை தனித்தனியாக இருந்த இரு தொழில்களும் ஒன்றிணைக்கப்பட்டன.

அதனடிப்படையில் அதுவரையில் இருந்த புரொக்டர் மற்றும் அட்வகேட் ஆகிய இரண்டு தொழில்களும் சட்டத்தரணி தொழிலாக (Attorneyatlaw) அங்கீகரிக்கப்பட்டது. அதனடிப்படையில் கடந்த 50 வருடங்களினுள் இலங்கை சட்டக் கல்லூரியிலிருந்து வெளியாகிய அனைத்து சட்டத்தரணிகளும் உச்சநீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் போது அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டது இலங்கை அரசின் சட்டத்தரணி (Attorneyatlaw) என்ற பட்டமாகும்.

கடந்த 50 ஆண்டுகளில், சில வழக்கறிஞர்கள் நீதிமன்ற வழக்குகளில் மட்டுமே பேசியதோடு, அவர்கள் ஆலோசகர்கள் (Counsel) என அழைக்கப்பட்டனர். இங்கு, பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிகளின் பணியாக இருந்தது அலுவலகங்களை நடத்திச் சென்று வழக்குகளில் ஆஜராகும் சட்டத்தரணிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி காணி உறுதிகளை எழுதுவதுமாகும்.

அவ்வாறிருந்தும் கடந்த 50 வருட காலத்தினுள் நீதிமன்றத்தில் வழக்குகளை பேசும் சட்டத்தரணிகள் மாத்திரமே மதிக்கப்பட்டனர். அவர்கள் வழக்கறிஞர் தொழிலில் உச்சத்தை அடைந்த பிறகு, அவர்களுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி (President's Counsel) என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டு வந்ததோடு, பட்டியல்படுத்தப்பட்ட சட்டத்தரணிகள் எவருக்கும் கடந்த 50 ஆண்டுகளில் அத்தகைய அங்கீகாரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட 2023ம் ஆண்டின் 26ம் இலக்க சட்டத்திற்கு அமைவாக அவர்களுக்கு இந்த கௌரவத்தை வழங்குவதற்காகத் தகுதியானவர்களின் பெயர்களைத் தெரிவு செய்து அனுப்புமாறு நீதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்து சட்டத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட 21 சிரேஷ்ட சட்டத்தரணிகளின் பெயர்கள் நீதியமைச்சரால் வழங்கப்பட்டிருந்தன. அவர்களில், 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள, சட்டத்துறையில் சிறப்பாக பணியாற்றி, உயர் அந்தஸ்த்தைப் பெற்றிருக்கும், வழக்கறிஞர் தொழிலுக்கு சிறந்த சேவையாற்றிய, ஐந்து மூத்த பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர்களுக்கு பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஆகியோரின் சிபார்சுகளுடன் சிரேஷ்ட ஆலோசனை கௌரவ பல்பரிணாம பட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில், சட்டத்தரணி தொழிலில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட ஆலோசனைச் சட்டத்தரணிகளான கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன், டி.எம். சுவாமிநாதன், எச்.ஆர்.ஏ.டி.பி. குணதிலக, எஸ்.என்.எம். குணவர்தன மற்றும் ஜி.ஜி. அருள்பிரகாசம் ஆகியோருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

இது தொடர்பில் தினகரனுக்கு கருத்து தெரிவித்த கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன் கூறும் போது, "சட்டத் துறையினுள் ஆலோசனைச் சட்டத்தரணிகளுக்கு இருந்த வரவேற்பு ஆரம்பம் முதலே உள்ளது. இவ்வாறானதொரு பதவி கௌரவிப்பை முதலில் பெற்றவர் சேர் பொன்னம்பலம் இராமநாதனாகும். 1873 முதல் 1886 வரை சட்டத்தரணியாகப் பணியாற்றிய அவர் 1892ல் இலங்கையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று சேர் தோமஸ் எட்வர்ட் டி சம்பயோ 1855 முதல் 1927 வரை வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் பணியாற்றி, பின்னர் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியானார்.

கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன், ஜுலியஸ் மற்றும் க்ரீசி சட்ட நிறுவனத்தில் பத்து வருட சிரேஷ்ட பங்குதாரராக உள்ளதோடு, அத்மிரல்ட் மற்றும் கடல்சார் சட்டம், அறிவுசார் சொத்துரிமை சட்டம், வணிகம் மற்றும் நிறுவனச் சட்டம், தொழில் தகராறுகள் சட்டம் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் பரந்த அனுபவம் கொண்டவராவார்.

ஜுலியஸ் மற்றும் க்ரீசியில் அவரது சேவைக் காலத்தினுள், கலாநிதி சுவாமிநாதன் அத்மிரல்ட் மற்றும் கடல்சார் சட்டம், அறிவுசார் சொத்துரிமை சட்டம் மற்றும் போக்குவரத்து துறைகளின் பிரதானியாகவும் இருந்தார்.

சிரேஷ்ட ஆலோசனை சட்டத்தரணி கௌரவ விருதைப் பெற்ற தேவ மனோகரன் சுவாமிநாதன் தினகரனுக்கு கருத்து தெரிவிக்கையில், "தனது சேவைக்காகக் கிடைத்த கௌரவமான அங்கீகாரமாகும் எனக் கூறினார்.

அவர் ஐம்பத்தி இரண்டு (52) ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவத்தைக் கொண்ட முன்னணி மூத்த சிவில் வழக்கறிஞர் ஆவார். அவர் 1971 ஜனவரி 17 அன்று வழக்கறிஞராகப் பதிவு செய்யப்பட்டார். சிவில், வணிக மற்றும் வங்கிச் சட்டங்களில் நிபுணரான சுவாமிநாதன் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

அவர் தனது தொழில் வாழ்க்கை முழுவதும் பல குறிப்பிடத்தக்க நியமனங்களை பெற்றுள்ளார். 1994ம் ஆண்டு, மறைந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவினால் மேல் மாகாண சபையின் ஆளுநராக நியமிக்கப்பட்டதுடன் அவர் அந்த பதவியில் சில காலம் பணியாற்றியுள்ளார். அதற்கு முன்னர், 1977ல், ஆர். பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட இலங்கை உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஷிரந்தி குணவர்தன 1975ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி சட்டத்தரணியாக பதிவு செய்யப்பட்டார்.

மக்கள் வங்கியின் உதவி சட்ட அதிகாரியாக தொழிலை ஆரம்பித்த அவர், 1977ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு வரைக்கும் அங்கு பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் 1986 முதல் 1991ம் ஆண்டு வரை ஷிரந்தி குணவர்தன மேர்கண்டையில் கிரடிட் லிமிடட் மற்றும் மேர்கண்டையில் கூட்டு நிறுவனங்களின் சட்டப் பிரிவின் பிரதி பொதுமுகாமையாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அனோமா குணதிலக்க 1978ம் ஆண்டு செப்டெம்பர் 18ம் திகதி உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். 1978ம் ஆண்டு சட்டத்தரணியாக இணைந்ததிலிருந்து, இலங்கையில் சட்டத் தொழிலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி அனோமா குணதிலக்க தினகரினடம் கூறும் போது "இது பதிவு செய்யப்பட்ட சட்டத்துறைக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும். சட்டத்துறைக்கு இவர்கள் ஆற்றி வரும் சேவைகள் இதுவரை எந்த பாராட்டையும் பெறவில்லை. இதன் விளைவாக, பதிவு செய்யப்பட்ட சட்ட வல்லுநர்கள் இந்த வேலையைச் செய்வது குறைந்துள்ளது. எங்களைப் போன்ற ஒரு சில மூத்த சட்ட வல்லுநர்கள் மட்டுமே இன்னும் பொறுப்புடன் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஜெரார்ட் ஞானவரோதயம் அருள்பிரகாசம் தினகரனுக்கு கருத்து தெரிவித்த போது, புரொக்டர் (Proctor) மற்றும் அட்வகேட் (Advocate) என பெயரளவில் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த இரு பகுதிகளும் 1973ம் ஆண்டு ஒரே தொழிலாக அங்கீகரிக்கப்பட்ட போதும், பின்னாளில் ஜனாதிபதி சட்டத்தரணி என்ற கௌரவிப்புக்கு உள்ளானது ஆலோசனை சட்டத்தரணிகள் மாத்திரமேயாகும். ஆலோசனை வழங்கும் சட்ட வல்லுநர்களே ஜனாதிபதி சட்டத்தரணிகளாக கௌரவிக்கப்பட்டனர். பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர்களுக்கு அந்த அங்கீகாரம் கிடைக்கவில்லை. 50 ஆண்டுகளாக ஒரே தொழிலில் இருந்து வந்த இந்த பிரிவினையை முடிவுக்கு கொண்டு வந்து புதிய சட்டம் மூலம் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையினை மிக முக்கியமான பணியாக நான் பார்க்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

**எம். எஸ். முஸப்பிர்**

# பழிதீர்க்க படுகொலை செய்யப்பட்ட கிளப் வசந்த



அண்மையில் மொத்த இலங்கையையும் அதிர்ச்சிக்குள்ளாகிய அத்துருகிரியவில் பிரபல வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேரா அல்லது கிளப் வசந்த உட்பட ஒருவர் கொலை செய்யப்பட்டதுடன் கிளப் வசந்தவின் மனைவி மற்றும், பாடகி கே.சுஜீவாவும் துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த சம்பவமாகும்.

கிளப் வசந்தவின் கொலையின் பிரதான சூத்திரதாரியாக கஞ்சிப்பானி இம்ரான் இருப்பதாக கூறப்படுகின்றது. அவர் பெருந்தொகை பணத்தை செலவழித்து பல நாட்கள் திட்டமிட்டு கிளப் வசந்தவை பழிதீர்த்திருக்கலாம் என பொலிஸ் தரப்பில் சந்தேகிக்கப்படுகின்றது.

கிளப் வசந்தவை குறிவைத்து சுட்ட தோட்டாக்கள் அனைத்திலும் KPI என பேனாவால் எழுதப்பட்டுள்ளது. T56 துப்பாக்கிகளைப் பயன்படுத்தி இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதன்போது தரையில் கிடந்த 27 வெற்றுத் தோட்டாக்களிலும் கே.பி.ஐ எனக் குறிக்கப்பட்டுள்ளன.

பிரபல பாதாள உலக குற்றவாளியான கஞ்சிபானி இம்ரான் போதைப்பொருள் கடத்துவதற்காக பாகிஸ்தானிலிருந்து பெறும் போதைப்பொருள் பார்சல்களில் கே.பி.ஐ என விளம்பரப் பெயரைப் பயன்படுத்தி வருவதால் இச்சம்பவத்துடன் கஞ்சிப்பானி இம்ரானுக்கு தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அதற்கான காரணங்களும் வெளியாகி வருகின்றன. இக்குற்றவாளி தொடர்பில் பல விசாரணைகளை நடத்திய பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கஞ்சிப்பானியிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி நாட்டை விட்டு வெளியேறி தற்போது பிரான்சில் கஞ்சிப்பானி இம்ரானையே நம்பி வாழ்ந்து வருவதாக தெரியவருகின்றது.

பாதாள உலக குற்றவாளியான மாகந்துர மதுஷ், துபாய் பொலிஸாரிடம் சிக்கிய போது இலங்கையில் வர்த்தகம் மற்றும் சொத்துக்களை வாங்க பணம் முதலீடு செய்ததாக கூறப்படுகின்றது.



மதுஷ் துபாய் பொலிஸாரிடம் சிக்குவதற்கு முன்னர் அளுத்கடை நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள தோட்டமொன்றில் தொழிலதிபர் ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இவரும் மதுஷின் பணத்தில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளார். எனினும் வியாபார நிலையமொன்றை திறந்து சிறிது நாட்களுக்குள் அவர் கொலை செய்யப்பட்டார்.

கஞ்சிப்பானி இம்ரான் மூலமாகவே தொழிலதிபருக்கும் மதுஷுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. இவரைப் போலவே கிளப் வசந்தவும் பாதாள உலக குற்றவாளிகளின் முதலீடுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளார்.

கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் நடவடிக்கைகளிலேயே கிளப் வசந்தவும் தொழிலதிபரும் ஈடுபட்டனர்.

இதில் கஞ்சிப்பானி இம்ரானின் பணமும் இருந்ததாக கூறப்படுகின்றது.

மதுஷின் கொலைக்குப் பிறகு, அந்தத் திட்டங்களின் இலாபத்தில் அவரின் மனைவிக்கோ அல்லது அவரது பிள்ளைகளுக்கோ பங்கு கிடைக்கவில்லை. குறைந்த பட்சம் இணை முதலீட்டாளரான கஞ்சிப்பானி இம்ரானுக்கு கூட இலாபத்தில் எதுவும் கிடைக்கவில்லை.

மாகந்துரே மதுஷ் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அங்கொட லொக்கா மற்றும் சிலர் முக்கிய பாதாள உலக புள்ளிகளை பயன்படுத்தி களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது தாக்குதல் நடத்தி 07 பேரை கொலை செய்ததன் மூலம் பாதாள உலகின் பெரும் பலசாலியாக பிரபல்யமடைந்தார்.

அதுமட்டுமின்றி அதே வருடம் மே மாதம் 9ஆம் திகதி பிலியந்தலையில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரியாகவிருந்த பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கிளப் வசந்தவை கொலை செய்த அதே பாணியில் திட்டமிட்டு ஒப்பந்தக் கொலையாளியான அமி அசிதாவை கொண்டு இக்கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து பாதாள உலகின் எல்லோருடைய அண்ணணாகவும் மாகந்துர மதுஷ் அழைக்கப்பட்டார்.

மாகந்துரே மதுஷின் இடத்தைபிடிக்க கஞ்சிப்பானி இம்ரான் முயற்சி செய்ததுடன் மாகந்துர மதுஷின் சொத்துக்களை கட்டுப்படுத்துபவராகவும் மாறினார்.

பொலிஸ் விசாரணை மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தின் இதுவரையான விசாரணைகளின் அடிப்படையில் லொக்கு பாட்டி, ரொடும்ப அமில மற்றும் உனகுருவே சாந்த என்ற பாதாள உலக உறுப்பினர்கள் இணைந்து துபாயிலிருந்து போன் மூலம் இத்திட்டத்தை நடத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

எனினும் கிளப் வசந்தவின் கொலைத் திட்டத்தில் தொடர்புடைய பலர் விசாரணை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டாலும், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் யார் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களின் செயற்பாடுகள் பாதுகாப்பு கேமராக்களில் தெளிவாகப் பதிவாகியிருந்தமையால் விசாரணை அதிகாரிகள், அந்தக் காட்சிகளை உன்னிப்பாக அவதானித்ததில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் இராணுவப் பயிற்சி பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.



அவர்கள் தற்போது இராணுவ சேவையில் இருப்பவர்கள் அல்லது அதிலிருந்து வெளியேறியவர்களாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கின்றனர். ஒரு பயிற்சி பெற்ற துப்பாக்கி சுடும் வீரரால் தான் இவ்வாறு நடந்துகொள்ள முடியுமெனவும் புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளப் வசந்தவை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் அத்துருகிரியவின் மையப்பகுதியில் கடுவெல வீதியில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டடத்தின் மேல் தளத்தில் இடம்பெற்றது. இதற்கு முன்னர் இப்பகுதியில் சலூன் ஒன்று இருந்துள்ளது. அங்கு வைத்து பாதாள உலகக் குற்றவாளியான அத்துருகிரி பண்டா எனப்படும் தனில் பண்டார என்பவர் 2017ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன்பிறகு சலூன் சிறிது காலம் மூடப்பட்டிருந்தது. பின்னர் பல்வேறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட போதிலும் அவை அனைத்தும் வெற்றி பெறவில்லை. 'யுனிகிவ் டாட்டூ அண்ட் கிளியரிங் ஸ்டூடியோ' என்ற பெயருடன் துலான் சஞ்சுல சில்வா என்ற 28 வயதான இளைஞன் புதிய நிலையமொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டார். டாட்டூ ஆர்ட்டிஸ்ட் மற்றும் மீனவரான இவரின் டாட்டூ தொழிலை பயன்படுத்தி லொக்கு பாட்டி என்பவர் கிளப் வசந்தவை கொலை செய்ய திட்டம் தீட்டினார். அதன்படி ஸ்டூடியோ திறப்பு விழாவுக்கு கிளப் வசந்த மற்றும் அவரது மனைவி ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

டாட்டூ ஆர்ட்டிஸ்ட்டான துலான் சஞ்சுல சில்வாவின் தாய் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுபவர் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அவர் பிரபல பாதாள உலக போதைப்பொருள் கடத்தல்காரர் லொக்கு பாட்டியிடமிருந்து போதைப்பொருளை வாங்கி சில்லறை விலையில் அதை விற்று வருபவர் என தெரியவருகின்றது. அதன் மூலம் அந்த இளைஞனுக்கும் லொக்கு பாட்டியை நன்றாக தெரியும்.

அதனால்தான் டாட்டூ பிசினஸ் நடத்த நண்பனான மகேஷ் தனுஷ்க சில்வா என்ற இராணுவ சேவையிலிருந்து விலகிய நபர் மூலம் தூண்டப்படுகின்றார்.

இவர் லொக்கு பாட்டிக்கு நெருக்கமானவர். லொக்கு பாட்டியின் திட்டப்படி பச்சை குத்தும் தொழிலை ஆரம்பிக்குமாறு துலான் சஞ்சுலவை வற்புறுத்தி, அவ்வப்போது இலட்சங்களில் பணத்தையும் கொடுத்துள்ளார்.

இந்த பணம் முழுவதும் துபாயிலிருந்து லொக்கு பாட்டிக்கு அனுப்பப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்துருகிரியவில் கடை அறையை வாடகைக்கு எடுக்கவும், டாட்டூ கருவிகளை வாங்கவும், கடையை அலங்கரிக்கவும் துலான் சஞ்சுலாவுக்கு அவ்வப்போது இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து வந்துள்ளனர்.

பாடகி சுஜீவாவை அழைத்து தனது வியாபார நிலையத்தை திறந்து வைக்க துலான் சஞ்சுலா திட்டமிடுகின்றார். ஆனால் லொக்கு பாட்டியிடம் அதற்கு இடமில்லை. அவர் கிளப் வசந்தவை அழைத்து வருமாறு துலான் சஞ்சுலாவை வற்புறுத்துகிறார்.

அதன் மூலம் பெரும் புகழைப் பெற முடியும் என்றெல்லாம் கூறி தன் நோக்கத்திற்காக அவரை வழிநடத்தத் தொடங்கினார்.

லொக்கு பாட்டியின் திட்டத்தைப் பற்றி எதுவும் தெரியாத துலான் சஞ்சுலா, தனக்குத் தெரிந்த அனைத்து நுட்பங்களையும் பயன்படுத்தி தனது வியாபார நிலைய திறப்பு விழாவுக்கு கிளப் வசந்தவை வரவழைத்தார்.

இதற்கிடையில், பாடகி கே. சுஜீவாவும் அழைக்கப்பட்டிருந்தார். அவர் தனது கணவனுடன் விழாவுக்கு வருகிறார். இவர்கள் வந்திறங்கியபோது சுப நிகழ்ச்சியாக வியாபார நிலையத்தில் விளக்கேற்றி பாற்சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்த போதே டி 56 துப்பாக்கியுடன் இருவர் காரில் வந்து இறங்கினர்.

அவர்கள் வந்ததும், பாற்சோறை வேகமாக சாப்பிட்டுக் கொண்டிருந்த கிளப் வசந்தவை நேரடியாகக் குறி வைத்தார்கள். துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் ஒருவர் T56 ஆயுதத்தால் வசந்தவின் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியபோது, வசந்த தான் அமர்ந்திருந்த இருக்கையின் ஓரத்தில் விழுந்தார்.

இதற்கிடையில் மற்ற நபர் நெருங்கி வந்து தொடர்ந்து சுட்டார். வசந்தவின் மனைவி மெனிக், பாடகி மற்றும் அவரது கணவர் வசுலா விஜேசூரிய ஆகியோர் அருகில் இருந்தனர். இவர்கள் மீதும் துப்பாக்கி தோட்டாக்கள் பாய்ந்தன.

பாடகி சுஜீவாவின் காலில் காயம் ஏற்பட்டதுடன் அவருடைய கணவர் சம்பவத்தில் உயிரிழந்தார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

**வசந்தா அருள்ரட்ணம்**

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதன் பின்னணி?

கடந்த வாரத்தில் அரசியல் களத்தில் அதிகமாகப் பேசப்பட்டது வேலை நிறுத்தங்கள் தொடர்பிலாகும். இந்த வேலை நிறுத்தப் போராட்டங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கானதா அல்லது தேர்தலை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட சில அரசியல் கட்சிகளின் தேவைக்காக முன்னெடுக்கப்பட்டதாக என்பது தொடர்பில் வாதங்கள் தோன்றியுள்ளன.

**வேலை நிறுத்தத்தின் ஆரம்பமும் கடைசியும்**

புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கடந்த வியாழக்கிழமையாகும் போது பயணிகள் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர். அந்நேரம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சரான கலாநிதி பந்துல குணவர்தன கடும் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டார். அதாவது அன்றைய தினம் 12.00 மணி வரைக்கும் கடமைக்குத் திரும்பாத அனைவரும் பணியிலிருந்து விலகிக் கொண்டவர்களாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதே அந்த தீர்மானமாகும். சூரியன் மறையத் துவங்கியும், பிரச்சினை தீர்ந்ததாக தெரியவில்லை. அமைச்சரின் முடிவில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

இதற்கிடையில், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கான பதவி விலக்கல் கடிதங்களை வழங்குவதைத் தடுக்க முயன்ற போதிலும் அமைச்சரின் முடிவில் மாற்றம் ஏற்படவில்லை.

கடைசியில் வேலைநிறுத்தத்தின் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு அவர்கள் பணியிலிருந்து விலகிக் கொண்டதற்கான கடிதத்தை அனுப்புமாறு அமைச்சர், போக்குவரத்து அமைச்சின் செயலாளரான பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்கவுக்கும், புகையிரத பொது முகாமையாளருக்கும் உத்தரவிட்டார்.

இரவு நேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் பந்துலவைத் தொடர்பு கொண்டு பேசினார்.

அரசியலுடன் தொடர்பில்லாத நியாயமான சமூகத்திற்கான இயக்கத்தின் அழைப்பாளரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவுடன் இணைந்து வேலை நிறுத்தம் தொடராமல் இருப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அமைச்சரிடம் வேண்டிக் கொண்டார்.

ஜனாதிபதியிடமிருந்து கிடைத்த அறிவுறுத்தலின் பேரில் கரு ஜயசூரியவும் இப்பிரச்சினையில் தலையிட்டு பிரச்சினைக்கு தீர்வு காண தயாராக இருந்தார். அதன்போது அமைச்சர் பந்துலவுடன் கரு ஜயசூரிய பேசினார்.



"நாம் இதனை எவ்வாறு செய்வது?"

"அப்படியாயின் கடைசி சந்தர்ப்பம் எனக் கூறிப் பேசுவோம்"

கடைசியில் கரு ஜயசூரியவின் வீட்டிலேயே தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் அன்று இரவு 7.30 மணியளவில் அமைச்சர் பந்துல குணவர்தனவும், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவும் ஹெவ்லொக் டவுன் அமரசேகர மாவத்தையில் அமைந்துள்ள கரு ஜயசூரியவின் வீட்டிற்குச் சென்றனர். புகையிரத தொழிற்சங்க பிரதிநிதிகளும் அங்கு வந்திருந்தனர்.

சுமார் இரண்டு மணிநேரமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையை வெற்றிகரமானதாக முடிப்பதற்கான இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இரு தரப்பினரும் நடவடிக்கை மேற்கொண்டனர். இதற்காக கரு ஜயசூரிய சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில், அன்றைய தினம் இரவு 12.00 மணிக்கு முன்னர் பணிக்குத் திரும்பும் எவருக்கும் அத்தியாவசிய சேவைகளை மீறியதற்கான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில்லை என அங்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி செயற்படாத ஏனையோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். இறுதியில் பொது மக்களுக்குச் சாதகமான தீர்வை எட்டுவதற்கு இரு தரப்பினரும் நடவடிக்கை மேற்கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் மூன்று கட்சிகளின் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் கடந்த சனிக்கிழமை காலை காலி சென்று வஜிர ஏற்பாடு செய்திருந்த ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டதோடு, அன்றைய தினம் மாலை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றிலும் கலந்துகொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் மற்றும் பிரதித் தலைவர் அகில ஆகியோர் காலி கூட்டத்தில் கலந்துகொண்ட அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளர்கள் பலர் ரோஹிதவின் வைபவத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

"நான் இன்று காலை காலி ஐ.தே.க கூட்டத்தில் இருந்தேன். மாலை மொட்டுவின் கூட்டத்தின் இருக்கிறேன். நேற்றிரவு ஐக்கிய மக்கள் சக்தி குழுவுடன் இருந்தேன்" என ஜனாதிபதி ரணில் பேசும் போது, சபையில் இருந்து அமோகமான வரவேற்பு கிடைத்தது.

மகிந்த, பசில், கோட்டாபய, நாமல் ஆகிய அனைவரும் ஜனாதிபதியுடன் சுமுக உரையாடலில் ஈடுபட்ட போதிலும், தேர்தல் தொடர்பில் பேசுவதை அவர்கள் தவிர்த்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை பேஜெட் ஒழுங்கை வீட்டில் பல அரசியல் கூட்டங்கள் இடம்பெற்றதோடு, மாலையில் அவர் ஆர். சம்பந்தனுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகச் சென்றார். திங்கட்கிழமை காலை அமைச்சரவையைச் சந்தித்தார். மாலையில் நிகழ்வென்றில் கலந்து கொள்வதற்காக இரத்தினபுரி சென்றார்.

**(16ஆம் பக்கம் பார்க்க)**

*எம். எஸ். முஸப்பிர்*



தாய்லாந்தில் நடைபெற்ற பிம்ஸ்டெக் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் வெளியுறவு அமைச்சர்களுடன் எரிசக்தி, வர்த்தகம், சுகாதாரம், விவசாயம், அறிவியல், பாதுகாப்பு மற்றும் மக்களிடையே பரிமாற்றம் உள்ளிட்ட பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகள் பற்றி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார்.

## பழிதீர்க்க படுகொலை... (14 ஆம் பக்க தொடர்ச்சி)

வசந்தவின் மனைவி தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடிக் கொண்டிருக்கின்றார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் திட்டமிட்டப்படி காரில் கடுவெல நோக்கி தப்பிச் சென்றனர். பின்னர் காரை கைவிட்டு வானில் ஏறி தப்பிச் சென்றனர். முன்கூட்டி திட்டமிட்டப்படி வான் புலத்சிங்கள பகுதியில் கைவிடப்பட்டது.

இதுவரை துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் பெரும்பாலும் தெற்கைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இக் கொலையின் பிரதான குற்றவாளிகளை இதுவரை பொலிஸார் கைது செய்யாவிட்டாலும், இக்குற்றத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ உதவிய குற்றச்சாட்டின் பேரில் 07 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் படி துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் சென்ற கார் குறித்த தகவல் தெரியவந்தது.

லொக்கு பாட்டியின் ஆலோசனையின் பேரில், அஹுங்கல்லையிலிருந்து அத்துரிகிரிய கல்பொட்ட வீதிக்கு காரை எடுத்துச் சென்று அதிகாலை 3.00 மணியளவில் ஒருவரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்பட்டது. அந்த நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. எனினும் காரை அத்துருகிரியவுக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்ட நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒன்றரை மாதங்களாக வேனை (Van) தனது வீட்டில் வைத்திருந்த நபரும் அடங்குவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. முச்சக்கரவண்டி சாரதியான இவர், கடன் கொடுப்பவர் தொலைக்காட்சி செய்திகளில் கைவிடப்பட்ட வேனை பார்த்த அவரது மனைவி, அது தனது வீட்டிலிருந்த வான் என அடையாளம் கண்டு, பொலிஸாரிடம் தெரிவிக்குமாறு கணவரிடம் கூறியுள்ளார். அதன்படி, வேன் குறித்து பொலிஸாரிடம் கூறப்பட்டது. அதற்கமைய முச்சக்கர வண்டி சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைக் கண்டறிந்து கைது செய்ய பொலிஸார் தங்களின் உச்சபட்ச பலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்லும் வாய்ப்பும் பறிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ டொன் சுரேன் வசந்த பெரேரா அல்லது கிளப் வசந்த' நுவரெலியாவில் வாழ்ந்த ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தாயார் பூட்டானிய வணிக நெட்வொர்க்கின் உரிமையாளரின் கீழ் ஒரு பணியாளராக இருந்தார்.

இவர் நுவரெலியா காமினி வித்தியாலயத்தில் கல்வி கற்றதாக கூறப்படுகிறது. கல்வியில் அதிக ஆர்வம் காட்டாத வசந்த பெரேரா உயர்கல்வி கூட பெற்றிருக்கவில்லை. ஆனால் சிறுவயதிலிருந்தே பணப் பரிவர்த்தனைகளில் சிறந்து விளங்கினார். சாப்பிட, குடிக்க வீட்டில் இருந்து கிடைத்த சொற்ப பணத்தைக்கூட நண்பர்களுக்கு வட்டிக்குக் கடனாகக் கொடுத்தார்.

ஜப்பானில் வேலைக்குச் சென்ற போதே வசந்த பெரேராவின் வாழ்க்கை மாறியது. பல வருடங்கள் ஜப்பானில் வேலை பார்த்துவிட்டு இலங்கை திரும்பிய வசந்த உழைத்து சம்பாதித்த பணத்தை முதலீடு செய்து நுவரெலியாவில் உணவகமொன்றை திறந்தார்.

ஜப்பானில் அவர் பெற்ற அனுபவங்கள் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட இந்த உணவகம் குறுகிய காலத்தில் நுவரெலியாவில் பிரபல்யமான உணவகமாக மாறியது.

வசந்த பெரேரா சிறுவயதிலிருந்தே சினிமா பிரியர். குறிப்பாக நடிகைகளை காதலித்து வந்தார். அதனால், அந்த நேரத்தில் நுவரெலியாவுக்கு படப்பிடிப்புக்காக யாராவது வந்தால் அவரும் கூடவே இருப்பார்.

எனினும் திரைப்பட இயக்கத்தில் ஈடுபட்டிருந்த நடிகருடன் அவருக்கு இருந்த உறவு அவருடைய வாழ்க்கையில் திருப்புமுனையாக மாறும் என்பதை அவர் கனவிலும் நினைக்கவில்லை. ஒருமுறை இந்த நடிகர் நுவரெலியாவிலுள்ள வசந்தவின் உணவகத்துக்கு அரசியல்வாதி ஒருவரை அழைத்து வந்தார். அவர் அமைச்சராகவும், திரைப்பட நடிகரின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார். வசந்த அரசியல்வாதியை மரியாதையுடன் நடத்தினார். அந்த அரசியல்வாதியின் ஊடாகவே கொழும்பு பேர வாவியில் மிதக்கும் உணவகத்தை வசந்த பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்தே நுவரெலியாவிலிருந்து கொழும்புக்கு வந்தார் வசந்த.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் தேவைகள் அனைத்தையும் சரியாக செய்து அவரின் நம்பிக்கையை வசந்த வென்றார். அதனால் அரசியல்வாதி வசந்த பெயரில் தொழில் தொடங்குவதற்கு பெரும் முதலீடு செய்தார்.

அதற்கமைய கொள்ளுப்பிட்டி பகுதியிலும் உணவகமொன்று திறக்கப்பட்டது. பலமான அரசியல் தொடர்புகள் காரணமாக பல உணவகங்களின் உரிமையாளராக வசந்த மாறினார். அதன்காரணமாக வசந்த கிளப் வசந்த என்று அழைக்கப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து ஒரு விஐபியாக, பாதுகாவலர்களுடன் சட்டத்திற்கு புறம்பாக வசந்த நடந்துகொள்ள ஆரம்பித்தார். குறுகிய காலத்தில் அரசியல்வாதியொருவரின் நிறுவனத்தில் சேர்ந்தார். அரசியல்வாதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அரச அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பு மக்களையும் கட்டுப்படுத்த தனது பணத்தைப் பயன்படுத்தினார்.

பல பெண்களுடன் இவருக்கு திருமணம் நடந்தது. வசந்தவின் செயல்களை பொறுத்துக் கொள்ள முடியாமல் முதல் மனைவி அவரை கைவிட்டுச் சென்றுள்ளார்.

பின்னர் பிலிப்பைன்ஸ் நாட்டு பெண்ணை திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி பல பெண்களுடன் சர்ச்சைகளிலும் சிக்கியுள்ளார். பணத்தால் யாரையும் அடிபணிய வைக்கும் குணம் அவரிடம் இருந்தது.

வசந்த சுடப்பட்ட போது அவரது மனைவியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார். தற்போது அவர் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றார்.

மெனிக் ஒரு பல்கலைக்கழகத்தில் படித்த பெண். வசந்த இவருடன் நெருங்கி பழகியதால் அவரது கல்விநடவடிக்கைகளுக்கு தடை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. வசந்தவின் கெட்ட பழக்கங்களிலிருந்து அவரை விடுவித்து சரியான பாதைக்கு இட்டுச் செல்ல அவர் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகின்றது.

வசந்த தனது வியாபாரத்தை மற்றவர்களின் பணத்திலேயே நடத்தி வந்ததாக கூறப்படுகிறது. அதில் அரசியல்வாதிகளும் பாதாள உலகக் குற்றவாளிகளும் அடங்குவர்.

எனினும் சூதாட்டத்திற்கு அடிமையாகி ஒரே இரவில் பல கோடி ரூபாவை இழந்தார். ஒருமுறை 10 கோடி ரூபாவை இழந்ததாக கூறப்படுகிறது.

இதனால் வசந்த தனது வியாபார கட்டடத்துக்காக வங்கியில் பெரிய கடன்தொகையை பெற்றதாக கூறப்படுகின்றது.

வங்கி உயர் அதிகாரியுடன் மிக நெருங்கிய தொடர்பில் இருந்தார். தனக்கு சொந்தமான உணவக கட்டடமொன்றை அடகு வைத்து பணம் பெற்றுள்ளார். எனினும் கடனை செலுத்த முடியாமல் போனமையால் வங்கி கட்டடத்தை ஏலம் விட ஏற்பாடு செய்தது.

இதன்போது அரசியல் அதிகாரம், பாதாள உலக பலம் என அனைத்தும் வசந்தவிடமிருந்து பறிபோயிருந்தன.

அரசியல்வாதிகளாலும் பாதாள உலக குற்றவாளிகளாலும் வசந்தவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. அவர் தனது தொழிலில் முதலீடு செய்வதற்காக அவர்களிடமிருந்து பெற்ற பணத்தை திருப்பித் தர முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் அவர் சமூக வலைதளங்களில் வித்தியாசமாக வலம் வந்தார்.

குறைந்த பட்சம் தனது மெய்ப் பாதுகாவலர்களுக்கான சம்பளத்தைக்கூட வசந்தவால் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் தான் அத்துருகிரியில் இருந்த போது வழக்கம் போல் அவரை சுற்றி பாதுகாவலர்கள் இருக்கவில்லை.

இறுதியில் அவர் தேர்ந்தெடுத்த பாதையே அவருக்கு எமனாக மாறிவிட்டதுதான் துரதிஷ்டமானது.


# இலங்கை வங்கி

தீவளாவிய கிளை வலையமைப்பையும் இலண்டன் மாநகரில் உள்ள வங்கித் துணை நிறுவனம் உட்பட வலுவான வெளிநாட்டுக் கிளை வலையமைப்பையும் கொண்டு நாட்டின் ஆகப்பெரிய வங்கி வலையமைப்பாகத் திகழும் இலங்கை வங்கி உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி என்ற பெருமையையும் நாட்டின் 1ஆம் தர வங்கி என்ற பெருமையையும் கொண்டுள்ளது.

எமது சட்டப்பிரிவின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் அனுபவமும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நீதிமன்ற எழுதுவினைஞர் பயிலுநர் மற்றும் நொத்தாரிசு எழுதுவினைஞர் பயிலுநர்

### தகுதிப் பிரமாணங்கள்

- **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்**
- **தகைமைகளும் அனுபவமும்**
  - க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் தாய்மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தி மற்றும் கணித பாடத்தில் சாதாரண சித்தி

    மற்றும்
  - க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஒரேஅமர்வில் 03 பாடங்களில் சித்தி (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர)

    மற்றும்
  - சட்ட நிறுவனமொன்றில் அல்லது சட்டத்தரணி ஒருவரிடம் நீதிமன்ற எழுதுவினைஞராக/ நொத்தாரிசு எழுதுவினைஞராக இரண்டு (02) ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்.
- **ஏனைய தகைமைகள்**
  - கணினி தட்டச்சின் வேகம் :

    நீதிமன்ற எழுதுவினைஞர் பயிலுநர் - ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகளில் நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற தட்டச்சு வேகம்.

    நொத்தாரிசு எழுதுவினைஞர் பயிலுநர் - ஆங்கில மொழியில் நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற தட்டச்சு வேகம்.
  - கணினி அறிவும் ஆங்கில மொழியில் தேர்ச்சியும் அத்தியாவசியமாகும்.
- **வயது**

  விண்ணப்ப முடிவுத் திகதியில் 35 வயது அல்லது அதற்கு குறைவாக இருக்க வேண்டும்.

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக் காலம் 02 ஆண்டுகளாகும். இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்தப் பயிற்சிக் கொடுப்பனவாக முதலாமாண்டில் 55,000 ரூபாயும் இரண்டாமாண்டில் 70,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதெனினும் சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதாகும். (மூடிய சேவை)
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையுமிடத்து நீதிமன்ற எழுது வினைஞர் - I / நொத்தாரிசு எழுதுவினைஞர் - I என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- தேவைப்படும் போது வார இறுதி/ விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

### தெரிவு நடைமுறை

போட்டிப் பரீட்சையினை (எழுத்துப் பரீட்சை மற்றும் கணினி தட்டச்சு வேகப் பரீட்சை) தொடர்ந்து நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுகள் நடைபெறும்.

போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத்தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும். நேர்முகத்தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளைப் பொருத்து திறமை அடிப்படையில் இறுதித் தெரிவு மேற்கொள்ளப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

**www.boc.lk** என்ற எமது இணைய தளத்தில் Careers என்ற பகுதியின் கீழ் தரவிறக்கிக் கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி உங்களது சுயவிபரக் கோவையினைத் தயாரித்து அதனை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழில் அனுபவத்தை எண்பிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து **2024 யூலை 27ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**"இலங்கை வங்கிச் சதுக்கம்"**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு 01.**

- *தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும்/ இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத் தன்மையையும் பாதுகாக்கிறது.*

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# குறைந்த செலவில் மீண்டும் புத்துயிர் பெறும் இ.போ.சபை






பயணிகளின் போக்குவரத்து வசதிக்காக, காலை வேளையின் முதலாவது பஸ்ஸும், இரவின் கடைசி பஸ்ஸும் இலங்கை போக்குவரத்து சபையினாலேயே இயக்கப்படுகிறது. அன்று முதல் இன்று வரைக்கும் மக்களுக்கு மிகப்பெரும் சேவையினை வழங்கி வரும் இ.போ.சபையினை முறைப்படுத்த வேண்டியிருப்பது பயணிகளின் வசதியில் குறைந்த அவதானத்தைச் செலுத்தும் தனியார் பஸ்கள் இ.போ.சபையைப் போன்று தரத்தில் உயர் சேவையினை வழங்காததனாலாகும். வருமானத்தை மாத்திரம் நோக்காகக் கொண்டே தனியார் பஸ் சேவை செயற்படுவதால் “சேவை” என்பதற்கு தனியார் பஸ்களின் முன்னணி பட்டியலில் இருப்பது மிகக் குறைந்த கவனமேயாகும். அவ்வாறான நிலையில் இ.போ. சபையின் பஸ் சேவையைத் தரத்தில் உயர்த்த வேண்டுமாயின் இ.போ. சபையின் பஸ்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும்.

சில காலங்களுக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்பட்டு வந்த பாடசாலை சேவை தற்போது சிசு செரிய என முன்னேற்றமடைந்து பெரும் சேவையை வழங்கி வருகின்றது. அத்துடன், தொலைதூர பஸ் சேவைகளையும், நகர சேவைகளையும் முறைப்படுத்த வேண்டும் என்பதால், ஆண்டுக்கு ஒருமுறை பயன்பாட்டில் இருந்து நீக்கப்படும் பஸ்களுக்கு பதிலாக புதிய பஸ்களை இணைக்க வேண்டும். இல்லையென்றால் பழுதடைந்த பஸ்களை முழுமையாகச் சரி செய்து மீண்டும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும். எமது இ.போ.சபை பஸ்களில் அதிக எண்ணிக்கையிலான பஸ்கள் 'என்ஜின்கள் மற்றும் கியர் தொகுதி'களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக டிப்போக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சில என்ஜின்களை முழுமையாக பழுது பார்த்து செயற்படுத்துவதற்கு நிறைய பணம் செலவாகும். அவ்வாறு பாரிய தொகையைச் செலவிட்டு என்ஜினைப் பழுதுபார்ப்பதை விட புதிய எஞ்சினை வாங்குவதே மிகச் சிறந்ததாகும்.

குறிப்பாக எமது நாட்டில் பெரும்பான்மையாகப் பயன்படுத்தும் லேலண்ட் பஸ்களுக்கு புதிய என்ஜின் மற்றும் கியர் பெட்டி பொருத்துவதன் மூலம் அந்த பஸ்களை நீண்ட நாட்களுக்கு சேவையில் ஈடுபடுத்த முடியும். இ.போ.சபையினால் ஏலம் விடப்படும் பழைய பஸ்களை வாங்கும் தனியார் பஸ் உரிமையாளர்கள் அவற்றிற்கு புதிய என்ஜின்கள் மற்றும் கியர் பெட்டிகளைப் பெருத்தி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்துகின்றனர். இந்த முறை இ.போ.சபை பஸ்களுக்கும் சிலகாலத்திற்கு முன்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அது இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு அதிக பொருளாதார பலத்தை கொண்டு வரும் செயற்பாடாகும்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மீண்டும் அவ்வாறானதொரு எண்ணக்கருவைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அதனடிப்படையில், இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அசோக் லேலண்ட் பஸ் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு அசோக் லேலண்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், லங்கா அசோக் லேலண்ட் நிறுவனத்திடமிருந்து புதிய பஸ் எஞ்சின்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டன. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட புதிய என்ஜின் தொகுதிகளை இலங்கை போக்குவரத்து சபை டிப்போவிற்கு விநியோகிக்கும் செயற்பாடு பனாகொடவில் அமைந்துள்ள லங்கா அசோக் லேலண்ட் தொழிற்சாலை வளாகத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் இடம்பெற்றது. இ.போ.சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் இ.போ. சபை மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் லங்கா அசோக் லேலண்ட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உமேஷ் கௌதம் உள்ளிட்ட அந்நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவின் பங்குபற்றலுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.



இதன் கீழ் இலங்கை போக்குவரத்து சபையினால் 70 புதிய எஞ்சின் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை 490 மில்லியன் ரூபாய்களாகும். இத் திட்டத்தை ஆரம்பித்து, புதிய என்ஜின் தொகுதிகள் நாடு முழுவதிலும் உள்ள 12 டிப்போக்களுக்கும் வழங்கப்பட்டன.

அதன் கீழ், கிழக்கு பிராந்தியத்திற்குட்பட்ட வாழைச்சேனை, அம்பாறை, மட்டக்களப்பு, கிண்ணியா, திருகோணமலை, மூதூர், களுவாஞ்சிக்குடி ஆகிய டிப்போக்களுக்கும், களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த பாணந்துறை, களுத்துறை, அளுத்கம, மத்துகம, ஹொரண ஆகிய டிப்போக்களுக்கும் இந்த என்ஜின்கள் வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் இந்த புதிய என்ஜின்களைப் பயன்படுத்தி டிப்போக்களில் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பஸ்கள் பழுதுபார்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இவ்வாறு பழுது பார்த்து புதுப்பிக்கப்பட்ட பஸ்கள் நீண்ட தூர சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும்.

12 இலட்சம் கிலோமீற்றர்களுக்கு மேல் பயணத்தில் ஈடுபட்டு சேவையில் இருந்து ஒதுக்கப்பட்ட, அடிச்சட்டம் மற்றும் பொடிகள் நல்ல நிலையில் உள்ள பஸ்களுக்கு புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் அல்விஸ் தினகரனுக்குத் தெரிவித்தார். ஒரு புதிய பஸ்ஸை வாங்க 30 மில்லியன் ரூபாய் (3 கோடி) செலவிட வேண்டியிருக்கும் நிலையில், ஒரு புதிய இயந்திரத்தை வாங்க 7 மில்லியன் மட்டுமே செலவாகின்றது. எனவே, இ.போ. சபையை குறைந்த செலவில் புத்துயிர் பெறச் செய்ய முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அமைச்சர் பந்துல குணவர்தனவின் பணிப்புரையின் பிரகாரம் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதற்கமைவாக இ.போ.சபையை குறைந்த விலையில் புத்துயிர் பெறச் செய்வதன் மூலம் பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகளுக்கு அதிக பஸ்களை வழங்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**தாரக விக்ரமசேகர**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# இன்றும் தேசிய வளங்களை அழிக்கும் ஜே.வி.பி கட்சி

உலகைப் போன்று இலங்கையிலும் தொழிலாளர் போராட்டங்களிடையே வேலைநிறுத்தங்களும் ஹர்த்தால்களும் வரலாற்றில் முத்திரை பதித்துள்ளன. இலங்கையில் தொழிற்சங்கங்களின் தோற்றம் 1800 களில் இருந்து தொடங்குகிறது, மேலும் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் தொழிற்சங்க கலாசாரம் தோன்றியது.




கொழும்பில் உள்ள மிகப்பெரிய அச்சகம் மற்றும் புத்தக வர்த்தக நிறுவனமான பிரித்தானியருக்கு சொந்தமான எச். டப்ளிவ். கேவ் நிறுவனத்தின் ஊழியர்களால் இது மேற்கொள்ளப்பட்டது. தமது சம்பளத்தை வழங்க தாமதிப்பது, மோசமான வேலை நிலைமைகள் மற்றும் வாழ்க்கை முறைகள் தொடர்பில் 1893ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக நகர்ப்புற தொழிலாளர்களின் பங்களிப்புடன் முதலாவது வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது வேலைநிறுத்தமாகும். இப் போராட்டம் 6 நாட்கள் நீடித்தது.

1896ஆம் ஆண்டு கொழும்பு நெசவுத் தொழிலாளர்களால் இரண்டாவது வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நகரின் அனைத்து நெசவுச்சாலைகளையும் நிர்வகிக்க இலகுவான வகையில் நகர சபையில் பதிவு செய்ய வேண்டும் என்ற கொழும்பு மாநகர சபையின் கட்டளைச் சட்டத்திற்கு எதிராகவே, அவர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பை நடத்தினர்.

1953ஆம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தால் இலங்கையில் தொழிலாளர் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட மிகப் பெரிய போராட்டம் என்று கூறலாம். பிலிப் குணவர்தன, ரொபர்ட் குணவர்தன, கலாநிதி என். எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா, விவியன் குணவர்தன, லெஸ்லி குணவர்தன, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன், பெர்னாட் சொய்சா போன்ற இடதுசாரி தலைவர்கள் இணைந்து தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன் இந்த ஹர்த்தாலை முன்னெடுத்தனர்.



1980 ஜூலை வேலைநிறுத்தம் நடந்தபோது, அதைச் சுற்றி அரசியல் தேவைகளும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களும் இருந்தன.

நாற்பதாயிரம் அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் வேலையிழந்து மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களை அநாதைகளாக்கிய 1980ஆம் ஆண்டின் வேலைநிறுத்தம் எந்த வெற்றியும் பெறவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சி 1988, 1989 காலப்பகுதியில் மிகவும் தீவிரமடைந்தது. ஜே.வி.பி.யின் 2ஆவது கிளர்ச்சி 1986இல் ஆரம்பமான போதும், அது 1987 ஜூலை 28ஆம் திகதி கோட்டை அரச மரத்திற்கருகில் ஆரம்பமான போராட்டத்துடன் உக்கிரமடைந்தது. 1987 மே 1ஆம் திகதி, பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் கொல்லப்பட்டதோடு, 1987 ஏப்ரல் 15இல், பல்லேகலயில் உள்ள இராணுவ முகாம் தாக்கப்பட்டு ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. அதேபோன்று, இந்தியா ஜூன் 4ஆம் திகதி பருப்பை விமானத்திலிருந்து இறக்கியது. 1987 ஜூன் 7இல் ஜே.வி.பி கட்டுநாயக்க விமானப் படை முகாம் மற்றும் இரத்மலானை பாதுகாப்புக் கல்லூரிக்குள் புகுந்து அங்கிருந்து ஆயுதங்களை எடுத்துச் சென்றிருந்தது. 1987 ஜூன் 22ல், ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் 88 பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது.



நாட்டில் இப்படியான ஒரு சூழல் நிலவியது. அரசாங்க சொத்துக்களுக்குக் கடுமையாக சேதங்கள் ஏற்படுத்தப்பட்டதோடு, எத்தனை உயிர்கள் பலியாகின என்பது குறித்த அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் எதுவும் இல்லை. என்றாலும் சுமார் அறுபதாயிரம் பேர் இறந்ததாக நம்பப்படுகிறது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தினை நிர்மாணிக்கும் போது புதிய எதிர்ப்புக்கள் எழுந்தன.

“இலங்கையின் மீன் வளத்தை திருட வருகிறார்கள். இது நாட்டிற்கு பெரும் பேரழிவாகும். முழு நாடும் அழிவது மட்டுமல்ல, ஸ்ரீ மஹா போதியும் அழிக்கப்படும்" எனவும் பயமுறுத்தப்பட்டது.

இன்று, தேசிய மின்சார உற்பத்தியின் பெரும்பகுதியை நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையமே வழங்குகின்றது.

மகாவலி திட்டம் செயற்படுத்தப்படும் போது, ஜே.வி.பி உள்ளிட்ட கும்பல்கள், இது போன்ற பெரிய நீர்த்தேக்கங்களால் மண்சரிவுகள் ஏற்படும் என்று கூறினர்.

" மகாவலியினால் விகாரைகள் மூழ்கிவிடும். இது பெரும் பாவச் செயலாகும்" என்றெல்லாம் அப்போது சிலர் குற்றம் சாட்டினர்.

“இதற்கு பிரித்தானியா உதவியளிப்பது சும்மாவல்ல. எம்மை இரண்டாவது தடவையாக வெள்ளையர்களுக்கு அடிமைப்படுத்தும் ஒப்பந்தம் இது. அவ்வாறில்லாமல் பிரித்தானிய ராணி இதற்கு உதவி செய்யப்போவதில்லை” என்று இன்னும் சிலர் கூறினர். இன்று மகாவலியைப் போன்ற பிரமாண்டமான திட்டங்களை நினைத்தும் பார்க்க முடியாது.

பல்நோக்கு மற்றும் நீண்ட கால மகாவலி அபிவிருத்தித் திட்டம் இலங்கையின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமாகும். பிரிட்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சுவீடன் போன்ற நாடுகள் இத் திட்டத்தின் பணிகளுக்கு உதவிகளை வழங்கின. மகாவலி ஆறு, அதன் கிளை நதிகள் மற்றும் மாதுரு ஓயாவுடன் இணைந்து மொத்த நிலப்பரப்பில் சுமார் 39 வீத பகுதியை அபிவிருத்தி செய்வதற்கும், நாட்டிற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், சில பகுதிகளில் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கும், புதிய விவசாய நிலங்களை உருவாக்குவதற்கும், புதிய குடியிருப்புகளை உருவாக்குவதற்கும், இதனால் புதிய வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் மகாவலி பாரிய திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. விவசாயத்தை நவீனமயமாக்குதல், கால்நடை வளர்ப்பு, விவசாயம் சார்ந்த தொழில்களின் அபிவிருத்தி போன்றன ஏனைய எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களாக இருந்ததோடு, அது பெரிய அளவில் வெற்றி பெற்றது.

கடந்த ஆண்டு வேலைநிறுத்தங்களின் காரணமாக இலங்கைக்கு 1,04,327 மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. காய்ச்சல் ஏற்பட்டாலும் வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு இந் நாட்டு சமூகம் உருவாகியுள்ளது.

வேலை நிறுத்தம் என்பது அடிப்படை உரிமையாகும். அது தொடர்பில் வாதத்திற்கு இடமில்லை. எந்த ஒருவராலும் எந்தவொரு நபருக்கும் தனது உரிமைகளை அனுபவிக்க இருக்கும் உரிமையை கேள்வி கேட்கவோ அல்லது பறிக்கவோ உரிமை இல்லை. உலகின் பல நாடுகளைப் போன்று, இலங்கையிலும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக தொழிற்சங்கங்கள் ஆற்றிய மற்றும் ஆற்றிக் கொண்டிருக்கும் பங்கு மகத்தானது.

**அனுராத சேனாரத்ன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதன் பின்னணி?

(15 பக்கத் தொடர்ச்சி)

**சம்பளத்தை அதிகரிக்காமைக்கான காரணம்**

அன்றைய தினம் ஜனாதிபதி அலுவலகத்திற்கு வந்தது அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி மேற்கொள்ளப்படும் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளருடன் பேசுவதற்காகும். இதில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்கவும் கலந்து கொண்டிருந்தார்.

அரச ஊழியர்கள் கோரும் சம்பளத்தை வழங்குவதற்கு வற் வரியை 21 வீதமாக அதிகரிக்க வேண்டும் என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன இதன் போது தெரிவித்தார். தற்போது சட்டத்தின் மூலம் பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டுள்ளதால் அது மேற்கொள்ள முடியாத செயற்பாடு என்றும், 18 வீத வற் வரியை மேலும் அதிகரிப்பது மக்களால் தாங்க முடியாத சுமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில் இந்த சந்தர்ப்பத்தில் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு ஜனாதிபதி வந்தார். செவ்வாய்க்கிழமை காலை பாதுகாப்பு அமைச்சிற்குச் சென்ற ஜனாதிபதி ரணில், அங்கிருந்து பாராளுமன்றத்திற்குச் சென்றார். அங்கு ஆளுங்கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு பின்னர் அமைச்சரவைக் கூட்டத்திற்குச் சென்றார். அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் பாராளுமன்ற அலுவலகத்திற்குச் செல்லும் போது வழியில் பாராளுமன்றத்தைப் பார்வையிட வந்திருந்த பாடசாலை மாணவர்களையும் சந்தித்தார்.

**ஜனாதிபதியிடமிருந்து பாடசாலை மாணவர்களுக்கு பேனா**

மாணவர்களுக்கு அருகில் சென்ற ஜனாதிபதி அவர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டதோடு, “உங்களில் பாராளுமன்றத்திற்கு வருவது?” என அவர்களிடம் கேட்டார். மாணவர் பாராளுமன்றத்தில் இருக்கும் பத்து பதினைந்து மாணவர்கள் கைகளை உயர்த்தினார்கள். “நீங்கள் சிறப்பாக நாட்டை ஆட்சி செய்கிறீர்கள் என தற்போது மாணவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. மாணவர்களுக்கு இது தொடர்பில் நல்ல புரிந்துணர்வு உள்ளது” என அங்கிருந்த அமைச்சர் சியம்பலாபிட்டிய கூறினார்.

**வேலை நிறுத்தம் ஒரு சதியா?**

“ஜே.வி.பி 88/89 காலத்தைப் போன்று அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்து மோசமான நிலையை உருவாக்கவே முயற்சிக்கின்றது. அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கி ஆட்சியை பிடிக்கும் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது” என அமைச்சர்கள் ஒரே தொனியில் கூறினர். எதிர்வரும் நாட்களில் மேலும் பல நிறுவனங்களை வீதிக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்து துறையும் இதில் அங்கம் வகிக்கின்றது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

**வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத ஊழியர்களுக்கு ஜனாதிபதி பாராட்டு**

அனைத்து உரையாடல்களின் பின்னர் ஜனாதிபதி ரணில் தனது பிரேரணையை அமைச்சரவையில் முன்வைத்தார். அதில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது, அவர்களின் சேவையை பாராட்டி சிறப்பு பாராட்டு சான்றிதழ் வழங்குவது உள்ளிட்டவை அடங்கும். அதுமாத்திரமின்றி, 22வது அரசியலமைப்புத் திருத்தமாக ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 வருடங்களாக மாற்றுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தையும் ஜனாதிபதி ரணில் அமைச்சரவையில் சமர்ப்பித்து நிறைவேற்றினார்.

**ரணில் மைத்திரியுடன் “வன் கோல்பேஸ்” இல்.**

அண்மையில் ஜனாதிபதி ரணிலும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் “வன் கோல்பேஸ்” க்கு அங்குள்ள பீ.வீ.ஆர் திரையரங்கில் திரைப்படம் ஒன்றைப் பார்ப்பதற்காக சென்றனர். அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இலங்கை மன்ற கல்லூரியின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி ஆகியோரும் அவர்களுடன் இணைந்து கொண்டது அவரது சகோதரர் தயாரித்த "ஆதர அந்தய" என்ற திரைப்படத்தை பார்வையிடுவதற்காகும்.

அண்மையில் திரையிடப்படவுள்ள அசோக அதாவுடஹெட்டி தயாரித்த இந்த திரைப்படத்தின் விசேட காட்சி இங்கு காட்சி படுத்தப்பட்டதோடு, ஜனாதிபதி ரணில் அங்கு வந்திருந்த ரசிகர் ரசிகைகளுடன் உரையாடியவாறு சுதந்திரமாக நடந்து சென்றது திரைப்படத்தைப் பார்ப்பதற்காகும்.

**ஜனாதிபதியின் ஒரு பொழுதுபோக்கு வெளிப்பட்டது**

உங்களுக்கு இருக்கும் ஆயிரம் வேலைகளுக்கு மத்தியில் திரைப்படம் பார்ப்பதற்கு எவ்வாறு நேரத்தை ஒதுக்கினீர்கள் என அங்கு வந்திருந்த ஒருவர் ஜனாதிபதியிடம் கேட்டார். “சிறு வயதிலிருந்தே திரைப்படம் பார்ப்பது எனது பொழுது போக்காகும். அவ்வாறிருந்த போதிலும் பிரசன்னவின் காடி பார்த்த பின்னர் இதுவரைக்கும் திரையரங்கிற்கு வந்து திரைப்படம் பார்க்க கிடைக்கவில்லை” என ஜனாதிபதி எளிமையான முறையில் அவருக்கு பதிலளித்துவிட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

வர்த்தக சபையினால் தயாரிக்கப்பட்ட நிலையான அபிவிருத்தித் திட்டம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. செவ்வாய்க்கிழமை மற்றொரு முக்கியமான தினமாக இருந்தது ஜனாதிபதி ரணிலின் வீடும் அங்கிருந்த பெறுமதிமிக்க நூலகமும் அழிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடைந்த நாளாக அது இருந்ததனாலாகும். தனது வீடும் தீக்கிரையாக்கப்பட்ட மற்றொரு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க அதனை நினைவு கூரும் வகையில் அன்றைய தினம் அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கு இலவச காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். ஜனாதிபதி ரணிலும் அங்கு உருக்கமான உரையை நிகழ்த்தினார்.

**ரணில், மகிந்த, கோட்டாபய ஆகியோர் ஒரே மேடையில்**

ரோஹித அபேகுணவர்தனவின் 27 வருட அரசியல் வாழ்வை முன்னிட்டு களுத்துறையில் வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் நாமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, தம்மிக்க பெரேரா உள்ளிட்ட பெருமளவானோரும் கலந்துகொண்டனர். ரணில் விக்கிரமசிங்க, பசில் ராஜபக்ச மற்றும் தம்மிக்க பெரேரா ஆகியோர் இங்கு உரை நிகழ்த்தவிருந்தனர். இதன்போது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஆற்றிய பணிகள் குறித்தும் பேச தம்மிக மறக்கவில்லை.

# தேர்தலை ஒருநாளேனும் தள்ளிப்போடக் கூடாது!

(3ஆம் பக்கத் தொடர்...)

இந்த விடயத்தில் நிலையான தீர்வுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாகவும் ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவன் விஜேயவர்தன தெரிவித்தார்.

விசேடமாக வர்த்தக சமூகம் மாத்திரமின்றி புத்திஜீவிகளும் ஜனாதிபதி தலைமையிலான நிர்வாகம் தொடர வேண்டுமென்று தெரிவித்துள்ளமை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தனது சொந்த நலனுக்கோ அல்லது குடும்ப நலனுக்கோ திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

நாட்டை வளம் மிக்கதாக முன்னெடுப்பதே முக்கிய நோக்கமாகும். அதேவேளை ஜனாதிபதி பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்பதிலும் அக்கறையுடன் செயற்படுகிறார் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமாயின் அதற்காக சுமார் 3 ஆயிரம் கோடி ரூபாவை செலவு செய்ய வேண்டும். அதுமாத்திரமின்றி போட்டியிடும் எதிர்த் தரப்பாக இருந்தாலும் ஆளுந் தரப்பாக இருந்தாலும் சரி போட்டியிடுவோர் பெருந்தொகை பணத்தை செலவிடுவர்கள்.

இவை அவர்களது சொந்த பணமாக இருந்தாலும் நாட்டின் பொருளாதாரத்துக்கு உட்பட்டதாகும். இதனால் மீண்டுமொரு எரிபொருளுக்கான வரிசை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றதல்லவா என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

எதிர்க்கட்சியினர் அதிகாரத்தை இலக்காகக் கொண்டே செயற்படுகின்றனர். அவர்களுக்கு நாடு தொடர்பிலோ பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலோ பொருளாதார மேம்பாடு தொடர்பிலோ எந்தவித அக்கறையும் இருப்பதாக தெரியவில்லை. அதிகாரத்தை கைப்பற்றினால் போதும். இதுதான் அவர்களது நிலைப்பாடு.

இந்த நிலையில் தேர்தலை கோருவதால் ஜனாதிபதி அதற்கு மதிப்பளித்துள்ளார். சுயேட்சை வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தேர்தலை ஒத்திப் போடும் நோக்கம் எள்ளளவேனும் ஜனாதிபதிக்கு இல்லை.

தமது அதிகாரத்தை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதாக இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதில் எந்தவித உண்மையுமில்லை என்பதை தெட்டத்தெளிவாக ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் என்ற ரீதியில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனாதிபதியின் நடவடிக்கையினால் தற்பொழுது இலங்கையின் கையிருப்பு 5 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக சேமிக்கப்பட்டுள்ளது. இவற்றால் கொடுப்பனவை மேற்கொள்ளலாம். இருப்பினும் இது ஒரு பொருளாதார சிக்கலுக்கு வழிவகுக்கும் என்பது உண்மை.

**சர்வதேச நாணய நிதியம் சமீபத்தில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் அதன் உயரதிகாரி இலங்கையின் தேர்தல் நடைபெறுவதை தாம் வரவேற்பதாகவும். ஜனநாயகத்துக்கு மதிப்பளிப்பதாகவும் கூறியதுடன், நிதியத்தின் நிதியுதவி தொடர்பிலான கால அட்டவணையில் மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இதன் நோக்கம் என்ன?**

நாணய நிதியமும் உடனடியாக தேர்தல் நடைபெறுவதில் மகிழ்ச்சியடையவில்லை. தேர்தல் இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் சிக்கலாக்கும் என்பதே அவர்களது தொலைநோக்காகக் காணப்படுகின்றது. பதவிக்கு வரும் அரசாங்கம் நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தலாம். இருப்பினும் தற்போது கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரம் பின்னடைவைக் காணும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இதனால் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படுவது சாத்தியமா என்பது பொதுமக்களைச் சார்ந்த விடயமாகும்.

தற்பொழுது தொடர் வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக சம்பள அதிகரிப்பை முன்னிலைப்படுத்தியே இவை மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுதுள்ள பொருளாதார நிலையில் சம்பள அதிகரிப்பு என்பது உடனடியாக செய்யக் கூடிய விடயமல்ல என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்களின் பின்னணியில் ஏதோ அரசியல் பின்னணி இருப்பதாகத் தோன்றுவதாகவும், இது தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளமை இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கம் வரிவிலக்களித்த போதிலும் அதன் நன்மைகள் பொதுமக்களை சென்றடைவதில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு என்ற விடயத்திற்கு பதிலளித்த அவர் இது விடயத்தில் நிதியமைச்சுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி சில விதிமுறைகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. இடைத்தரகர்களினால் இந்த நிலை உண்டு. இதனால் வரிச் சலுகை அளித்தாலும் அதனை இவர்களே பயன்படுத்துகின்றனர் என்பதில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். இதற்குரிய நடவடிக்கைக்கும் அவர் திட்டமிட்டுள்ளார். அதனை விரைவில் நடைமுறைபடுத்துவார் என்றார்.

## இந்தியா-இலங்கை இடையே...

(05ஆம் பக்கத் தொடர்)

மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்திக்கு இடையே 2 அல்லது 3 மீட்டர் ஆழம் கொண்ட 11 குறுகிய கால்வாய்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். புவியியல் சான்று என்ன சொல்கின்றன என்றால் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரண்டும் பழங்கால கண்டமாக இருந்த கோண்ட்வானாவின் ஒரு பகுதியாக இருந்துள்ளன என்பதாகும்.

அது டெதிஸ் கடலில் வடக்கு நோக்கி நகர்ந்து என்றும், 3555 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நகர்ந்தபோது லாராசியா என்ற மற்றொரு கண்டத்தில் மோதியது என்றும் அந்த ஆய்வு கூறுகின்றது. இத்தகைய டெக்டோனிக் செயல்பாடுகளால் அல்லது சிதைவுகளால் கடல் மட்டத்தின் ஏற்ற இறக்கங்கள் காரணமாக இந்தத் தரைப்பாலம் உருவாகி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கி.பி 9ஆம் நூற்றாண்டில், பாரசீக கடற்படையினர் இதை 'சேது பந்தாய்' அல்லது இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் கடல் பாலம் என்று குறிப்பிட்டதாகத் தெரிகிறது. அதாவது 1480 ஆம் ஆண்டு வரை இந்தச் சேது பாலம் தண்ணீருக்கு மேலாகத் தெரியும்படி இருந்ததாகவும், புயலின் போது நீரில் மூழ்கியதாகவும் இராமேஸ்வரத்திலிருந்து கோயில்களில் உள்ள பதிவுகள் கூறுகின்றன.


## களனிப் பல்கலைக்கழகம், இலங்கை

## பல்கலைக்கழக அனுமதி 2023/2024

## உளச்சார்புப் பரீட்சைகள்

**01. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக் கற்கைகளில் கலைமாணி கௌரவ பட்டம்**
**02. விளையாட்டு விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி கௌரவ பட்டம்**

களனிப் பல்கலைக்கழகத்தின் மேற்படி பட்டப்படிப்புகளுக்கு 2023/2024 கல்வியாண்டுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலங்கையில் பல்கலைக்கழக இளமாணிப் பட்டப்படிப்புகளுக்கான அனுமதி பற்றிய கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள தகவலின்படி அனைத்து விண்ணப்பதாரர்களும் மேற்கண்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். இதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மேற்படி உளச்சார்புப் பரீட்சைகளை எதிர்கொள்வதன் மூலம் உயர் நிபுணத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். குறிப்பிடப்பட்ட தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பத்திற்கு மேலதிகமாக மேலே கூறப்பட்ட உளச்சார்புப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். இது கட்டாயமானது ஆகும்.**

**(1) திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக் கற்கைகளில் கலைமாணி கௌரவ பட்டம்**

(அ) 2023 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) உளச்சார்புப் பரீட்சையானது பின்வரும் இரண்டு பகுதிகளில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**1. எழுத்துப் பரீட்சை**

எழுத்துப் பரீட்சையில், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி விடயம், பொது அறிவு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றில் உள்ள திறமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தப் பரீட்சை சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும்.

**2. வாய்மூலப் பரீட்சை**

இது எழுத்துப் பரீட்சையில் அதிக தேர்ச்சியை வெளிப்படுத்திய விண்ணப்பதாரர்களின், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி துறையில் உள்ள இலட்சியம் மற்றும் திறமைகளை கண்டறியும் நோக்கம் கொண்டது. இப்பரீட்சையானது பல்கலைக்கழகத்தில் அல்லது நிகழ்நிலையில் நடத்தப்படும்.

**(2) விளையாட்டு விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி கௌரவ பட்டம்**

(அ) 2023 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது துறையில் ஏதாவது மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) உளச்சார்புப் பரீட்சையானது செயன்முறைத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றை மட்டுமே கொண்டிருக்கும். (எழுத்துப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது)

**(அ) செயன்முறைத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு**

இத்தேர்வின் நோக்கம் செயன்முறைத் தகுதி, விளையாட்டுத்திறன் மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும். செயன்முறைத் தேர்வில் விண்ணப்பதாரர்களின் செயன்முறைத் தகுதியை மதிப்பிடுவதும், மாகாண, தேசிய மற்றும் சர்வதேச அளவில் விண்ணப்பதாரர்களின் விளையாட்டுத்திறனை உறுதிப்படுத்துவதும் மதிப்பீடு செய்வதும் இதன் நோக்கம் ஆகும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் படிமுறை**

**(1) சாதாரண பாவனையாளர்களுக்கு**

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ரூ. 1,600/- இலங்கையிலுள்ள எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையினூடாகவும் மக்கள் வங்கியின் களனி கிளையில் பராமரிக்கப்படும் கணக்கு இலக்கம் 055-1001-40009867 க்கு செலுத்தி பற்றுச்சீட்டின் மென்பிரதி / ஸ்கான் பிரதியினை தம்வசம் வைத்துக்கொண்டு நிகழ்நிலையில் (aptitudetest.kln.ac.lk) விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் போது, செயற்படு நிலையில் உள்ள மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துவது முக்கியம். பற்றுச்சீட்டு எவ்வாறு நிரப்பப்பட வேண்டும் என்பதற்கான மாதிரி கீழே காட்டப்பட்டுள்ளது



**(2) பணவைப்பு இயந்திர (CDM) பாவனையாளர்களுக்கு**

பற்றுச்சீட்டில் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் பட்டப்படிப்புப் பரீட்சை ஆகியவற்றைக் குறிப்பிடவும்.

**(3) நிகழ்நிலைக் (Online) கொடுப்பனவுகள் (கடனட்டை / பற்று அட்டை**

மேலே உள்ள கணக்கிலக்கத்திற்கு மேலுள்ள முறைகள் மூலமாகவும் பணம் செலுத்தலாம்.

வங்கிப் பற்றுச்சீட்டு / சிடிஎம் பற்றுச்சீட்டினை பரீட்சை நிலையத்திற்கு எதிரே உள்ள கவுண்டரில் சமர்ப்பித்தல் வேண்டும். தாங்கள் அவ்வாறு செய்யத் தவறினால், தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். ஆனால் முடிவுகள் வெளியிடப்படாது.

மேற்கூறிய ஆவணங்களில் உங்கள் பெயர் மற்றும் விண்ணப்பத்தில் உள்ள பெயர் வித்தியாசமாக இருந்தால், அந்த ஆவணங்களில் பெயர் வித்தியாசமாக இருக்கும் நபர் அதே நபர் என்று உறுதியளிக்கும் சத்தியப் பிரமாண பத்திரத்தையும் மேற்கூறிய கவுண்டரில் ஒப்படைக்க வேண்டும்.

தபால் மூலம் நீங்கள் அனுமதி அட்டையினைப் பெற மாட்டீர்கள், ஆனால் அந்த இணைப்பு உங்கள் மின்னஞ்சல் முகவரி அல்லது கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் மூலம் அனுப்பப்படும். அதன் அச்சிடப்பட்ட பிரதியினை நீங்கள் பரீட்சை நிலையத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த உளச்சார்புப் பரீட்சைக்கான உங்கள் பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தினத்தில் பரீட்சை தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக பரீட்சை நிலையத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் 22 ஜூலை 2024 அன்று முடிவடையும். மேலதிக விபரங்களுக்கு, இணைய இணைப்பு : aptitudetest.kln.ac.lk இனை பயன்படுத்த கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கான் செய்யவும் அல்லது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக் கற்கைகளில் கலைமாணி கௌரவ பட்டம் சம்மந்தமாக 076-6207773 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் விளையாட்டு விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி கௌரவ பட்டம் சம்மந்தமாக 0762446528 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் தொடர்பு கொள்ளவும்.**

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம், களனி**
10 ஜூலை 2024

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### பதவி வெற்றிடம்

**ஆசோலனை கதிரியக்கவியல் நிபுணர்**
**(Post of Consultant Radiologist)**

**மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**தகைமைகள்** : இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PGIM) கதிரியக்கவியலில் MD சபைச் சான்றிதழ் சகிதம் அரசாங்க அல்லது தனியார்துறை வைத்தியசாலைகளில் மருத்துவ நிபுணராகவிருத்தல் Oncology Imaging இல் சிறப்பு ஆர்வம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 118,800.00 - 12x3645.00 - 162,540.00 மாதாந்தம்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள் :** நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2024-07-29ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2024-07-10.**

பல்கலைக்கழக வைத்தியசாலை
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**Full Time - Permanent Basis**

- Post of Medical Laboratory Technologist
- Post of Radiographer (Diagnostic)
- Post of Pharmacist
- Post of Physiotherapist
- Post of Perfusionist
- Post of Midwife
- Post of Social Worker
- Post of Audiology Technician

**Full Time - Contract Basis**

- Post of Pharmacist
- Post ECG Recordist
- Post of Optometrist
- Post of Technician (Operation Theatre)
- Post of CSSD Operator

**Temporary Basis**

- Multitask Labourer
- Attendant

சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு **"நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர"** என்ற முகவரிக்கு **2024.07.29க்கு** முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **www.kdu.ac.lk** / தொ.பேசி இல. **011-2044555**

**www.kdu.ac.lk**

### பதவி வெற்றிடங்கள்

ஹோமாகம, பிட்டிபனயில் அமைந்துள்ள இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIBTEC) அரசுரிமை நிறுவனமாகும். உயிரியல் புத்தாக்கம், ஆராய்ச்சி, மேம்பாடு, அடைகாத்தல் மற்றும் உற்பத்தியை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுக்கான அதிநவீன சுற்றுச்சூழல் முறைமையை நாம் வழங்குகின்றோம். எமது வசதிகள் அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உலகளாவிய நடைமுறைகளை ஆதரிக்கின்றன என்பதுடன் புத்தாக்கம் மற்றும் நிலைபெறுதகு தன்மையின் துடிப்பான கலாசாரத்தை வளர்க்கின்றன.

**நிலவும் பதவிகள்:**

1. நிதி முகாமையாளர்
2. பிரதான செயற்பாட்டு அதிகாரியின் ஒருங்கிணைப்பு நிறைவேற்றுநர்
3. மனித வள நிறைவேற்றுநர்
4. வியாபார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் நிறைவேற்றுநர்
5. ஆராய்ச்சி விஞ்ஞானிகள் - உணவு விஞ்ஞானம், உயிர் தகவலியல், அக்ரோபயோடெக் மற்றும் மூலக்கூறு உயிரியல்
6. ஆராய்ச்சி உதவியாளர்கள் - உயிர் தகவலியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரணு உயிரியல்
7. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்

ஒவ்வொரு பதவிக்கும் தேவைப்படும் தகைமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து எமது இணையதளத்திற்கு பிரவேசிக்கவும். Sri Lanka Institute of Biotechnology Vacancies

நீங்கள் மேற்கூறிய தேவைப்பாடுகளைக் கொண்டிருந்தால், உங்களது விபரமான சுய விபரங்களுடன் இரண்டு உறவினரல்லாத நடுவர்களின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்களை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 14 வேலை நாட்களுக்குள் தயவு செய்து மின்னஞ்சல் செய்யவும்.

**மின்னஞ்சல்: slibtec@gmail.com**
**வ/ப இலங்கை உயிரியல் தொழில்நுட்பவியல் (தனியார்) நிறுவனம்**
**SLIBTEC 1ஆம் கட்ட கட்டிடம்,**
**மெஹென்வத்த, பிட்டிபன, ஹோமாகம.**
**தொலைபேசி: +94 11 3431844**
**இணையதளம்: Https://slibtec.gov.lk/**

# இலங்கை இராணுவம்

## விலைமனுக்கோரல்

1. தலைவர், இலங்கை இராணுவத் தலைமையகத்தின் பிரதேச கொள்முதல் குழு, பாதுகாப்பு தலைமையகம், யாழ்ப்பாணத்தினால் 2024 ஆம் ஆண்டு 45R மின் கேபிள் நிறுவல் நடவடிக்கைகாக மின் வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

45R மின்வேலைகளுக்கான (கடன்)

| இல. | விலைமனு இலக்கம் | விபரம் | அண்ணளவாக ஏலத்தின் மதிப்பீடு | மீளச் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ). |
|---|---|---|---|---|
| 01 | 5ESR/BMT/MIG/2024/71 | Supply of Cable | Rs. 1,337,600.00 | - |

2. 2024.07.15 ஆம் திகதி முதல் 2024.08.18 ஆம் திகதி வரை வார நாட்களில் 0900 மணி முதல் 1600 மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் 2024.08.18 ஆம் திகதி 1400 மணிக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகம் (யாழ்ப்பாணம்) கடுவான் நுழைவாயிலில் திறக்கப்படும். மனு ஆவணங்களைப் பெறுவதற்கு, நிறுவனத்தின் பதிவு மற்றும் VAT வரிசெலுத்தும் பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரலின் மூன்று பிரதிகள் கீழே உள்ள முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் காலத்திற்குப் பின்னர் உடனடியாக திறக்கப்படும். மேலும் தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு மனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

**தலைவர், திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**இலங்கை இராணுவத் தலைமையகம், (யாழ்ப்பாணம்)**
**இராணுவ முகாம்,**
**பலாலி.**

4. VAT பதிவுச் சான்றிதழ் மற்றும் வணிகப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும் மேலும் மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி எண்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

5. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப் பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவருக்கு உரித்தானது.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

A. 5 பொறியாளர் சேவைகள் படைப்பிரிவு
தொலைபேசி இலக்கம் : 217284052

B. பாதுகாப்புப் படைத் தலைமையகம் (யாழ்ப்பாணம்) கொள்முதல் பிரிவு
தொலைபேசி இலக்கம் :213213103/213215233

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம், (யாழ்ப்பாணம்)**
**இராணுவ முகாம்,**
**பலாலி.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

# இலங்கை போக்குவரத்து சபை (இபோச) (SLTB)

## மாதாந்த வாடகை அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருள் நீங்கலாக மோட்டார் வாகனங்களை வழங்குவதற்கான விலைமனு

### பெறுகை இல.: SLTB/TS/GEN/15/2024

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2024.07.29 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் மாதாந்த வாடகை அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருள் நீங்கலாக மோட்டார் வாகனங்களை வழங்குவதற்காக வாகனங்களை வழங்கும் கம்பனிகள், ஏககூட்டு பங்காண்மைகள் அல்லது பங்காண்மைகள் ஆகியவற்றிடமிருந்து இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இலங்கை போக்குவரத்து சபை உயர்மட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். தேவைப்படும் வாகனங்களின் விபரங்கள் பின்வருமாறு:

| விளக்கம் | விலைமனு பிணை |
|---|---|
| Provision of 15 Nos. Petrol Cars with seating capacity of 04-05 & engine capacity of 800 CC-1600CC manufactured after 01.01.2010 or Diesel Vans/Cars with seating capacity of 09 max. & engine capacity of 1300 CC-2500 CC and registered after 01.01.2005 | Rs.120,000 |

2. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைக் குழு செயலாளருடன் வைக்கப்பட்டிருக்கும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.07.15 ஆம் திகதியிலிருந்து 2024.07.26 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

3. விலைமனுக்கள் 2024.09.29 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

4. இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மாற்ற இயலாததும் நிபந்தனையில்லாமல் இபோச இனால் முதன் முறையிலேயே எழுத்து மூலமாக கோரும் போது பணமாக மாற்றக் கூடியதும் 2024.10.29 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியான தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

5. விலைமனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிடப்பட்டு அவரது முத்திரை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. எந்தவொரு விலைமனுதாரருக்கு அல்லது அவரின் சார்பாக முகவரொருவராக அல்லது உபமுகவரொருவராக, பிரதிநிதியாக அல்லது நியமிக்கப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் வகையில் இலங்கை அரசாங்க ஒப்பந்தங்களுக்கான பதிவாளருடன் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவின் மூலப்பிரதி சான்றிதழ் விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத்தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலைமனுக்கள் அவைகளின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு,''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என உரிய முறையில் அடையாளமிடப்பட்டு இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் ஒன்றில் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட விலைமனுவின் இடது பக்க மேல் மூலையில்**"Bid for Provision of Motor Vehicles without Driver & Fuel on Monthly Rental Basis"**என குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கோரலானது 2024.07.29 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**இல.: 200, கிருள வீதி,**
**கொழும்பு-05.**

**விசாரணைகள்: செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www. observerjobs. lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

## நிகழ்நிலை (online) டிஜிட்டல் லொத்தர் தீர்வொன்றை வடிவமைத்தல், உருவாக்குதல், அமுல்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கான முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்தல்

### விலைக்கோரல் இல. MT/FIN/15/PROC/07

1. **நிகழ்நிலை டிஜிட்டல் லொத்தர் தீர்வொன்றை வடிவமைத்தல், உருவாக்குதல், அமுல்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கான முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக** தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் (MOTCFS) சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

2. தேசிய பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் **சர்வதேச போட்டிரீதியிலான விலைக்கோரல் (ICB - இரண்டு கடிதவுறை முறைமை: ஒற்றைக் கட்டம் - இரு கடிதவுறை** விலைக்கோரல் நடைமுறை) முறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படும்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்காக விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை மூலப்பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அ) **பொதுவான அனுபவம்**: விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஆகக்குறைந்தது கடந்த **பத்து (10) வருடங்களில்** ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரர் பாத்திரத்தில் நிகழ்நிலை லொத்தர் ஒப்பந்தங்களில் பொதுவான அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) **குறிப்பிடத்தக்க அனுபவம்:** விலைமனுதாரர் அரசாங்கம் அல்லது அரசாங்கத்துடனான பங்குதாரர் சார்பாக தற்போது குறைந்தபட்சம் **இரண்டு (02)** நேரடி நிகழ்நிலை லொத்தர் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு திட்டமும் வருடத்திற்கு வழங்கப்பட்ட குறைந்தபட்சம் **180 மில்லியன் லொத்தர் டிக்கட்டுகளைக்** கொண்டதாக இருக்க வேண்டும்.

இ) **சராசரி வருடாந்த புரள்வு:** கடந்த 3 வருடங்களுக்குள் நிறைவு செய்யப்பட்ட அல்லது செயற்பாட்டில் உள்ள ஒப்பந்தங்களுக்காக கிடைக்கப்பெற்ற மொத்த சான்றுபடுத்தப்பட்ட கொடுப்பனவாக கணக்கிடப்பட்டுள்ள குறைந்தபட்ச சராசரி வருடாந்த புரள்வாக **100 மில்லியன் அ.டொலர்களை** விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **வர்த்தக அமைச்சு பிரதான கணக்காளர் திரு. A.P.N.M. பட்டபெந்திகே** அவர்களிடமிருந்து **2024 ஜூலை 14ஆம்** திகதி முதல் வார நாட்களில் மு.ப. 0900 மணித்தியாலம் முதல் 1600 மணித்தியாலம் வரையில் கையடக்கத் தொலைபேசி: +94 714251643, தொலைபேசி: +94 112110577, மின்னஞ்சல் முகவரி: ca@trademin.gov.lk ஊடாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலைமனு ஆவணங்கள் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் இணையதளத்தில் (https://www.trade.gov.lk/) பரீட்சித்தல் நோக்கத்திற்காக மட்டும் உள்ளன.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக **500,000.00 ரூபாவைச்** செலுத்தியதன் பின் மற்றும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் MOTCFS அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

5. விலைமனுக்களை 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி 1500 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னர் பின்வரும் ஆறாம் (06) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். **2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி 1500** மணித்தியாலத்தில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடனடியாகத் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் **நூறு மில்லியன் இலங்கை ரூபாவிற்குக் குறையாத (100 மில்லியன் இல. ரூபா) அல்லது அதற்குச் சமமானதும் இலங்கையில் இலகுவில் மாற்றக்கூடியதுமான நாணயத்தை வங்கி உத்தரவாதமாக** விலைக்கோரல் பிணை முறியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று **2024 ஜூலை 30ஆம் திகதி மு.ப. 1030** மணித்தியாலத்தில் **கொழும்பு 03, இல. 492, ஆர் ஏ டி மெல் மாவத்தை,** வர்த்தக, வணிக மற்றும் உணவுப் **பாதுகாப்பு அமைச்சின் 04ஆம் தளத்தில்** இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492, ஆர் ஏ டி மெல் மாவத்தை,**
**கொழும்பு 03.**

2024 ஜூலை 10ஆம் திகதி.

The Housewives' companion
Classifieds on
Daily News

## விலைமனுக்கோரல்

# இலங்கை விமானப்படை

## இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை இரண்டு வருடங்களுக்கு நீடித்தல்

### விலைமனுக் காலஎல்லை நீடிப்பு

1. மேற்கூறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பாக **2024.06.23** ஆம் திகதி சண்டே ஒப்சர்வர், சிலுமின மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கொள்முதல் அறிவிப்பு தொடர்பானது. **"இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை இரண்டு வருடங்களுக்கு நீடித்தல்** (02 YEARS TBO & LIFE EXTENSION)" மனுக்கோரலின் காலஎல்லை மற்றும் நேரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| தொ இல | கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | மனு பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு மூடப்படும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | AHQ/24/-FR/ANT/1002 | இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்-தினை நீடித்தல் (02 Years TBO & Life Extension) of S/No SCM 860 (35-01) | 2024.12.13 ரூ.1,000,000.00 | 2024.08.15 | 24,000.00 | 2024.08.16 10.30 மணி |
| 02 | AHQ/24/-FR/ANT/1003 | இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்-தினை நீடித்தல் (02 Years TBO & Life Extension) of S/No SCM 863 (35-08) கொள்வனவு செய்தல் | 2024.12.13 ரூ.1,000,000.00 | 2024.08.15 | 24,000.00 | 2024.08.16 10.30 மணி |

2. மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாறாமல் காணப்படும்.

3. ஆர்வமுள்ள தகுதியுடைய மனுதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள தலைமை கொள்முதல் அதிகாரியிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனத்திற்கு** : தலைமை கொள்முதல் அதிகாரி
**முகவரி** : விமானப்படை தளபதி
பாதுகாப்பு தலைமையக வளாகம்,
இல.594,
ஸ்ரீ ஜெயவர்தனபுர,
கோட்டே.

தொலைபேசி : 011 - 2495495/011- 2441553
தொலைநகல் : 011- 2441553
மின்னஞ்சல் : epo@slaf.gov.lk

கொள்முதல் பிரிவு,
இலங்கை விமானப்படை தலைமையகம்,
இல.594,
பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.

**விமானப்படை தலைமையகம்,**
**இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.**

**விமானப்படைத் தளபதி**

# கேள்வி அறிவித்தல் - இலங்கை இராணுவம்

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை

1. இலங்கை இராணுவத்திற்கு **திட்டமிடல் நாட்குறிப்புகள், நிறைவேற்றுநர் நாட்குறிப்பு, சுவர் நாட்காட்டி, மேசை நாட்குறிப்பு மற்றும் மேசை நாட்காட்டிகளை** வடிவமைத்தல், அச்சிடுதல் மற்றும் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| கோவை இலக்கம் | உருப்படி | கேள்வி கோரல் காலப்பகுதி | கேள்விகள் திறக்கப்படுதல் (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|
| AHQ/25/D/C/I | 2025ஆம் வருடத்திற்கான இராணுவ திட்டமிடல் நாட்குறிப்புகள் **(ஏறக்குறைய 3,300 எண்ணிக்கை)** | 2024-07-15ஆம் திகதி 08.30 மணித்தியாலம் முதல் 2024.08.07ஆம் திகதி மு.ப. 11.00 மணித்தியாலம் வரை | 2024-08-07ஆம் திகதி மு.ப. 11.00 மணித்தியாலத்தில் |
| AHQ/25/D/C/II | 2025ஆம் வருடத்திற்கான இராணுவ நிறைவேற்றுநர் நாட்குறிப்புகள் **(ஏறக்குறைய 7,800 எண்ணிக்கை)** | | |
| AHQ/25/D/C/III | 2025ஆம் வருடத்திற்கான இராணுவ மேசை நாட்குறிப்புகள் **(ஏறக்குறைய 27,500 எண்ணிக்கை)** | | |
| AHQ/25/D/C/IV | 2025ஆம் வருடத்திற்கான இராணுவ சுவர் நாட்காட்டிகள் **(ஏறக்குறைய 154,700 எண்ணிக்கை)** | | |
| AHQ/25/D/C/V | 2025ஆம் வருடத்திற்கான இராணுவ மேசை நாட்காட்டிகள் **(ஏறக்குறைய 645 எண்ணிக்கை)** | | |

2. கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், நலன்புரி பணிப்பாளர் சபைக்கு (தொலைபேசி: **076 5309734/0112514971/0112514992**) ஒரு உருப்படிக்கு (மேசை நாட்காட்டிகள் தவிர) **5,000.00** ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் **2024 ஜூலை 15ஆம்** திகதி முதல் வேலை நேரங்களில் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், கேள்விகள் திறக்கும் பிரிவிலிருந்து (0813840776) விபரக்குறிப்புகளுடனான கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். **முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிகளுடனான கேள்விகளை 2024 ஆகஸ்ட் 07ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் மேற்கூறிய முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.**
3. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், நலன்புரி பணிப்பாளர் சபை, (இயக்கம்) பதவிநிலை அதிகாரியைத் தொடர்புகொள்ளவும். (தொலைபேசி: **076 5309734**)

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**

# Invitation for Bids (IFB)

## SRI LANKA MEDICAL COUNCIL

### PROCUREMENT NOTICE

### Provision of Health Insurance Services - 2024/2025

**Contract No. - SLMC/HIS/04/2024**

The Chairman Procurement Committee on behalf of the Sri Lanka Medical Council invites sealed bids from reputed insurance companies and bidder shall be in possession of registration under Insurance Regulatory Commission of Sri Lanka (IRCSL) up to 2.30 p.m. on 29.07.2024. Bidding will be conducted through the National Competitive Bidding procedure.

Interested eligible bidders may obtain further information from the Finance and Administration Unit of the Sri Lanka Medical Council, via telephone during working days (Tel) 0716355764/ email: **admin@slmc.gov.lk** from 9.00 a.m. to 3.30 p.m. from 14.07.2024 to 29.07.2024.

A complete set of bidding documents in English (PDF Format) may be purchased by interested bidders on submission of a written application with the original payment receipt to the Finance and Administration Unit, Sri Lanka Medical Council by hand upon payment of a non-refundable fee of Rs. 2,000.00 to the SLMC Savings Account No. : 371208, Bank of Ceylon, Maradana Branch from 14.07.2024 to 29.07.2024.

All bids should be accompanied by a Bid Security of Rs. 40,000 in the form of a guarantee valid until 30.09.2024 issued by an acceptable institution in favor of the Sri Lanka Medical Council and shall be irrevocable and unconditionally encashable upon the first request of the Registrar of the SLMC.

Duly filled sealed bids in duplicate marked as **"Provision of Health Insurance Services - 2024/2025 Contract No. - SLMC/HIS/04/2024"** at the top left-hand corner of the envelope must be deposited in the Tender Box kept at the Finance and Administration Unit at the Sri Lanka Medical Council or be sent by Registered Post to the Chairman/ Department Procurement Committee, No: 31, Norris Canal Road, Colombo-10 at or before 2.30 p.m. on 29.07.2024.

Bids will be closed at 2.30 p.m. on 29.07.2024 and opened immediately thereafter at the Council Room, 1st Floor, Sri Lanka Medical Council in the presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening. Late and incomplete bids will be rejected.

**Chairman, Department Procurement Committee,**
**Sri Lanka Medical Council,**
**No.31, Norris Canal Road,**
**Colombo 10.**

14.07.2024

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் (ICB)

### 01-11-2024 முதல் 31-10-2025 வரையான காலகட்டத்திற்கான வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதிக்கான மீள்காப்புறுதி காபீட்டின் பெறுகை

**NITF/ADM/PRO/SCAPC/SRCC/2024**

1. தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு, (இனிமேல் SCAPC என அழைக்கப்படுகிறது) தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சார்பாக (இனி NITF என அழைக்கப்படுகிறது) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு 01/11/2024 முதல் 31/10/2025 வரையிலான காலகட்டத்திற்கு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதிக்கான மீள்காப்புறுதி காப்பீட்டுப் பெறுகைக்காக தகுதியான சர்வதேச மீள்காப்புறுதியாளர்கள் / சர்வதேச மீள்காப்புறுதி தரகர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் (IRCSL) பதிவு செய்யப்பட்ட தகுதியான தரகர்களிடமிருந்து விலைமனுக்களை அழைக்கின்றது.
2. NITF 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி சட்டத்தால் நிறுவப்பட்டது. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் கீழ் வரும் செயற்பாடுகள் தேசிய காப்புறுதி நிதியத்தினால் உள்வாங்கப்பட்டுள்ளன. 2008 மார்ச் 25ஆம் திகதிய 1542/11ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பொதுக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத இடர்களுக்கான காப்புறுதியைப் பெறுபவர்களுக்கு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்பீட்டுத் தொகைகளை NITF வழங்குகின்றது. மேலும் NITF 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தரப்பினர், தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவு மூலம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணமான 75,000.00 இலங்கை ரூபா அல்லது 250 USD தொகையை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தியதன் பின் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், 4வது மாடி, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 எனும் முகவரியிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை 09:00 மணித்தியாலம் முதல் 15:00 மணித்தியாலம் வரை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை NITF (www.nitf.lk), நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு (www.treasury.gov.lk), அல்லது வெளிநாட்டு விவகார அமைச்சு (www.mfa.gov.lk) என்பவற்றின் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்திய வங்கி வரைவைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | இல. ரூபா வங்கிக் கணக்கு | USD வங்கிக் கணக்கு |
|---|---|---|
| **வங்கியின் பெயர்** | மக்கள் வங்கி | மக்கள் வங்கி |
| **கிளை** | யூனியன் பிளேஸ் | குயீன்ஸ் கிளை |
| **கணக்கின் பெயர்** | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் |
| **கணக்கிலக்கம்** | 014-100127679733 | 033-4-022-3-2467951 |
| **Swift Code** | PSBKLKLX | PSBKLKLX |

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''01/11/2024 முதல் 31/10/2025 வரையிலான காலகட்டத்திற்கு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதிக்கான மீள்காப்புறுதி காப்பீட்டுப் பெறுகை - **NITF/ADM/PRO/SCAPC/2024**'' எனக் குறிப்பிட்டு 2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி 15:00 மணித்தியாலம் இலங்கையின் நிலையான நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
5. தகுதியான சர்வதேச மீள்காப்பீட்டாளர்கள், சர்வதேச மீள்காப்பீட்டுத் தரகர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தரகர்கள் அல்லது அவர்களின் உத்தியோகபூர்வ அங்கீகாரக் கடிதத்துடனான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் சமுகத்துடன் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 4ஆம் தளத்திலுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். கூட்டத்தில் விலைமனுதாரர்களின் பெயர்கள் மற்றும் விலைகளை NITF அறிவிக்கும்.
6. கடித மொழிமூலம் ஆங்கிலமாகும். எவ்வாறாயினும் மேற்படி ஆவணங்கள் ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஏதேனும் மொழியில் இருந்தால் அத்தகைய ஆவணங்களுடன் சான்றளிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பும் இருத்தல் வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு இறுதியாகக் கருதப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தகவல்களை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.
7. அனைத்து தரகர்களும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வணிக வங்கியிலிருந்தோ அல்லது வேறொரு நாட்டில் உள்ள வங்கியிலிருந்தோ பெறப்பட்ட 147 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் 9,000,000.00 ரூபா அல்லது 3,000 USD பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியை வழங்குதல் வேண்டும். ஆனால் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியால் உறுதி செய்யப்பட்ட உத்தரவாதமாக இருக்க வேண்டும். விலைக்கோரல் பிணை முறியை இலங்கை, கொழும்பு 02, இல. 95, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு முகவரியிடப்பட்டு மேற்குறிப்பிடப்பட்ட NITF வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் நபர்களைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகொள்ள வேண்டிய நபர் : முகாமையாளர் (மீள்காப்புறுதி மற்றும் SRCC & T)**
**நேரடி தொலைபேசி : +94 112026699**
**தொலைநகல் : +94 114700988**
**மின்னஞ்சல் : pro_SRCC@nitf.lk**

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**
**இலங்கை.**

විෂාය නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

Funded by The European Union

# விலைமனுக்களுக்கான அழைப்பு

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**ASM செயற்றிட்டம் - IDA Credit No.: 5873 LK**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

### வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாதுளம் / மிளகாய்ச் செய்கைக்காக மாதுளம் அடுக்குக் கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாதுளம் / மிளகாய்ச் செய்கைக்காக மாதுளம் அடுக்குக் கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாதுளம் / மிளகாய்ச் செய்கைக்காக மாதுளம் அடுக்குக் கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| கிளிநொச்சி மாவட்டத்தில் மாதுளம் / மிளகாய் கொத்தணிக்கு 64500 எண்ணிக்கையான மாதுளம் அடுக்குக் கன்றுகள் (Malee Pink அல்லது Bagavan) | LK-MOA-PMU-364488-GO-RFB | 450,000.00 | 8,500.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். விலைமனுதாரர்கள் குறைந்தபட்சம் 5000 அல்லது அதற்கு மேற்பட்ட கன்றுகளுக்கு விலைக்கோரலாம்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்திலிருந்து 2024-07-15ஆம் திகதியிலிருந்து 2024-08-05 திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் 0714961603 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2024-08-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2024-08-05ஆம் திகதி மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு "வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாதுளம் / மிளகாய்ச் செய்கைக்காக மாதுளம் அடுக்குக் கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 071-4961603**

திகதி: 15.07.2024

www.adz.lk
it's what you want

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# உரிமம்பெற்ற வங்கிகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றின் வைப்பாளர்களுக்கான தனித்துவமான அடையாள இலக்கங்கள்

இலங்கை மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும், 2022 ஒத்தோபர் 1 இலிருந்து வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற அல்லது பராமரிக்கின்ற போது ஒவ்வொரு வைப்பாளருக்குமெனத் தனித்துவ அடையாள இலக்கமொன்றினைப் பதிவுசெய்யுமாறும், ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை இற்றைப்படுத்துமாறும் கட்டாயப்படுத்தியது.

2024 மே மாதத்தில், இலங்கை மத்திய வங்கியானது இது தொடர்பில் விடுக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளை மாற்றீடு செய்து, 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதற்கான செயற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுத்தது. மேலும், ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் இற்றைப்படுத்துவதற்கான இறுதித் திகதியும் 2024 திசெம்பர் மாதம் 31 வரை நீடிக்கப்பட்டது.

அதற்கிணங்க, உரிமம்பெற்ற வங்கிகளுடனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுடனும் வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற அல்லது பராமரிக்கின்ற போது வைப்பாளர்கள் பின்வரும் கட்டாயமான தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பயன்படுத்தவேண்டும்:

| | வைப்பாளர்களின் வகை | அடையாள ஆவணத்தின் வகை/ உருவாக்க வேண்டிய இலக்கம் |
|---|---|---|
| 1. | **தனிநபர்கள்** | |
| 1.1 | இலங்கைப் பிரசைகள் | தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்<br>*மாற்று ஆவணங்கள்*<br>*கணக்குகளை ஆரம்பிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்கியுள்ள வைப்பாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அவர்களது முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை பதிவுசெய்வது கட்டாயமாகும்.* |
| 1.2 | இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியே வதிபவர்/ நிரந்தர வதிவிட உடைமையாளர்/ தற்காலிக வதிவிட உரிமையாளர்), இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கையில் வதிபவர்),<br>இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதிபவர்) | தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்<br>*விதிவிலக்கான சூழ்நிலைகள்*<br>*தேசிய அடையாள அட்டை இல்லாத பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை கடவுச்சீட்டு இலக்கத்தினை பயன்படுத்த முடியும்.*<br>*(அ) தேசிய அடையாள அட்டை வைப்பாளரால் தற்காலிகமாகக் ஒப்படைக்கப்பட்டிருத்தல்*<br>*(ஆ) வெளிநாட்டில் வாழும் ஒரு இலங்கையரொருவர்*<br>*(இ) பராயமடைவதை அடையும் முன் இலங்கையை விட்டு வெளியேறிய சூழ்நிலையால் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்காமை*<br>*இத்தகைய சூழ்நிலைகளில், வைப்பாளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டைகளை விரைவில் பெற்று, உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் முறைமைகளில் அவற்றை புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.* |
| 1.3 | இலங்கையரல்லாப் பிரசைகள் - இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டவர் உட்பட (இலங்கைக்கு வெளியே வதிபவர்) இலங்கைக்குத் தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ள வெளிநாட்டுப் பிரசைகள், வெளிநாட்டு இராசதந்திரிகள் ஆகியோரை உள்ளடக்கும் | வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் |
| 1.4 | பராயமடையா வைப்பாளர்கள் (தேசிய அடையாள அட்டை பெறும் வரை) | பிறப்புச் சான்றிதழ்: *தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளும் வரை அடையாள இலக்கமாக பிறந்த திகதியைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்* |
| 2. | **நிறுவனங்கள்** | |
| 2.1 | கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் | கம்பனிப் பதிவுச் சான்றிதழ் மற்றும் கம்பனிப் பதிவு இலக்கம் |
| 2.2 | அரசசார்பற்ற அமைப்புக்கள் | அரசசார்பற்ற அமைப்புகளுக்கான தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இயைபுடைய பதிவு இலக்கம் |
| 2.3 | தனியுடைமை/ பங்குடைமை/ இணைந்த கூட்டு முயற்சிகள் போன்ற பிரதேச/ உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வியாபாரப் பதிவு இலக்கம் |
| 2.4 | பாராளுமன்றச் சட்டமொன்றால் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம் | பாராளுமன்ற தொடக்கச் சட்டத்தின் பிரதி. *தொடக்கச் சட்ட இலக்கத்தைத் தொடர்ந்து கூட்டிணைக்கப்பட்ட ஆண்டைப் பதிவுசெய்தல் வேண்டும்.* |
| 2.5 | கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்களும் | இயைபுடைய அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இயைபுடைய பதிவிலக்கம்.<br>*பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கான மாற்றீடுகள்*<br>*பண்ணாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறையையின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் பெறப்பட்ட அடையாள இலக்கங்கள் குறிப்பிட்ட நிறுவனத்திற்கான தனித்துவமான அடையாள இலக்கமாகப் பதிவுசெய்ய அனுமதிக்கப்படுகின்றன.* |

இயைபுடைய அதிகாரசபைகளின் கீழ் தமது பதிவினை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளாத கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்றன உள்ளடங்கலாக அனைத்து நிறுவனங்களும் அவ்வாறு செய்வதற்கும் உரிய உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றில் அடையாள இலக்கத்தை இற்றைப்படுத்தவும் வலியுறுத்தப்படுகின்றனர்.

மேற்கூறிய தனித்துவமான அடையாள இலக்கத்தைப் பதிவுசெய்யத் தவறினாலோ, அல்லது மாற்று அடையாள இலக்கங்களைப் பயன்படுத்தினாலோ, வங்கி அல்லது நிதிக் கம்பனி ஒன்றின் உரிமம் இரத்துசெய்யப்படும் போது/ இரத்துசெய்யப்பட்டால், வைப்பாளர்கள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நட்டஈட்டினை உரிமைகோரும் போது தாமதங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ள வழிவகுக்கும்.

ஆகையால், அனைத்து வைப்பாளர்களும் (தனிநபர் மற்றும் ஆள்சாரா என இருவகையினதான வைப்பாளர்களும்) தாங்கள் அவ்வாறு செய்திருக்காவிடின் தங்களது தனித்துவ அடையாள இலக்கங்களை உரிய உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் உடனடியாக அறிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

**பணிப்பாளர்**
**வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112477261
மின்னஞ்சல்: ddir@cbsl.lk



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்கம்

# போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## முன்மொழிவு கோரிக்கைக்கான அழைப்பு (RFP)

## சர்வதேச போட்டிரீதியான விலைமனு

| | |
|---|---|
| **திகதி** | 2024 ஜூலை 14 |
| **தலைப்பு:** | மின்னணு கட்டண வசூல் முறைமையை (**EFCS**) சொந்தமாக உருவாக்கல் மற்றும் செயற்படுத்தலுக்கான பெறுகைக்கு முன்மொழிவுக்கான கோரிக்கை (**RFP**) |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2024.08.28 அன்று 14.00 மணி (இலங்கை நிலையான நேரம்) |

1. மின்னணு கட்டண வசூல் முறைமையை (EFCS) சொந்தமாக உருவாக்கல் மற்றும் செயற்படுத்தலுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் (கொள்வனவாளர்) முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தம் ஆரம்பத்தில் எட்டு (8) ஆண்டுகளாக இருக்கும்.

**திட்ட விபரம்**

இலங்கை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மின்னணு கட்டண வசூல் முறைமை (EFCS) ஒன்றை செயற்படுத்துவதற்கான நிலைமாற்றத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. ரொக்கப்பண அடிப்படையிலான கட்டண வசூல் முறைமையில் இருந்து அதிக செயற்றிறன் கொண்ட, ரொக்கப்பணமற்ற மின்னணு முறைமை ஒன்றுக்கு மாற்றுவதை இலக்காகக் கொண்டு இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகிறது. இந்த EFCS அமைப்பு பொதுப் போக்குவரத்து, பயணிகளுக்கான வசதி மற்றும் போக்குவரத்து நிர்வாகங்களுக்கான செயற்பாட்டு செயற்றிறனை மேம்படுத்தல் ஆகிய பல்வேறு வகையில் ஒருங்கிணைக்கப்பட்டதாக அமையும். நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம், இலங்கையில் கட்டணம் செலுத்தலை ஒழுங்குபடுத்தல், செயற்பாட்டு செலவுகளை குறைத்தல் மற்றும் ஒட்டுமொத்த பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டம் எதிர்பார்க்கிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

1. பல்வேறு மின்னணு கட்டண முறைகள், ரொக்கப்பணத்திற்கான தேவையை இல்லாமல் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்தும் வேகத்தை மேம்படுத்துவதுடன் தடையற்ற, ரொக்கப்பணமற்ற பயண அனுபவத்தை வழங்கி பயணிகளின் வசதியை மேம்படுத்தல்.
2. ரொக்கப்பணத்தை கையாள்வதை குறைத்து, கட்டணம் செலுத்துவதை தட்டிக்கழிப்பதை குறைத்தல் (கட்டண ஏய்ப்பு) மற்றும் நிகழ் நேர பரிமாற்ற நடைமுறையை செயற்படுத்தல், செலவை மிச்சப்படுத்தல் மற்றும் சிறந்த சேவை தரத்தை நோக்கி தன்னியக்க கட்டண வசூல் மூலம் செயற்பாட்டு செயற்றிறனை மேம்படுத்தல்.
3. வலுவான தரக்குறியீடாக்கம், மோசடி கண்காணிப்பு மற்றும் பரிமாற்றத் தரவுகளை பாதுகாப்பதற்கு சர்வதேச பாதுகாப்பு தரங்கள் மற்றும் உள்ளூர் ஒழுங்குமுறைகளை பின்பற்றல் ஆகியவை உள்ளடங்கின்ற தரவு பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு.
4. முறையான கொடுப்பனவு முறை, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் வலைப்பின்னல் இணைப்பை மேம்படுத்துவதுடன் பொதுப் போக்குவரத்தின் பல்வேறுபட்ட வடிவங்களில் தடையற்ற பயணத்தை வழங்கி பல்வடிவ போக்குவரத்து ஒருங்கிணைப்புக்கு உதவுதல்.
5. 24/7 உதவிச் சேவைகள், பன்மொழி உதவி மற்றும் கட்டணம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ரொக்கப்பணமில்லா மின்னணு முறை மற்றும் பயணிகள் திருப்தியை வலுப்படுத்துவது உட்பட விரிவான வாடிக்கையாளர் உதவியை வழங்கல்.

**பணியின் நோக்கம்**

மின்னணு கட்டண வசூல் முறைமையானது (EFCS) பொதுப் போக்குவரத்தில் கட்டண வசூல் நடைமுறையை நெறிப்படுத்துவதற்கு பல்வேறு செயற்பாடுகள் மற்றும் வடிவமைக்கப்பட்ட கூறுகளை கொண்டிருத்தல் வேண்டும். இதன் பிரதான செயற்பாடு தொலைதூர பயணம், சேவை வடிவம், தினத்தின் நேரம், மற்றும் முன் வரையறுக்கப்பட்ட கட்டண கட்டமைப்பு போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்ட தானியக்க முறையில் கட்டணத்தை கணக்கிடுதல் வேண்டும். இந்த முறைமையை மேம்படுத்துவதன் பிரதான இலக்கு, சாதனங்கள் எந்த ஒரு புள்ளியிலும் விற்பனையை (POS) ஒருங்கிணைத்தல், அனைத்து கொடுப்பனவு முறைகளையும் ஆதரித்தல், மற்றும் பல்வேறுபட்ட POS இயந்திர தொழில்நுட்பங்கள் மற்றும் மென்பொருள் பயன்பாடுகள் அனைத்தினதும் திறனை உறுதி செய்தாகும். முன்மொழியப்பட்ட முறைமை பல்வேறுபட்ட விற்பனையாளர்கள், சாதனங்கள் மற்றும் இணைப்பு வகைகளில் பரிமாற்றங்கள் அனைத்தையும் கையாளும் திறன் கொண்டிருத்தல் வேண்டும். தவிர, இந்த முறை எதிர்கால இற்றைப்படுத்தல் மற்றும் தேவைகளுடன் பராமரிக்க முடியுமான, அளவிடக்கூடியதாக, மற்றும் தரவுகளின் பாதுகாப்பு சர்வதேச தரங்கள் மற்றும் பொருந்தும் தன்மையை கொண்டதாக இருத்தல் வேண்டும். அது சர்வதேச தரங்கள் மற்றும் இணக்கப்பாட்டுக்குப் பொருந்தும் தரவு நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும். அவசியமான தரவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கு போக்குவரத்து தரவுகளை அணுகுவது முறையான அங்கீகாரம் மற்றும் சான்று பெற்ற அதிகாரமுடைய தரப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1. முன்மொழியப்பட்ட முறைமையானது தொடர்பற்ற ஸ்மார்ட் அட்டைகள், மொபைல் கொடுப்பனவுகள், QR குறியீடுகள் மற்றும் பாரம்பரிய Magnetic Stripe அட்டைகள் போன்ற பல்வகையான கொடுப்பனவு முறைகளை ஏற்கும் திறன் கொண்டிருத்தல் வேண்டும்.
2. இந்த முறைமை ரீலோட் மீதி மற்றும் பரிவர்த்தனை வரலாற்றின் பதிவுக்கான திறன் உட்பட பயனர் இருப்புகளை நிர்வகிக்கும் நிகழ் நேரத்தை கொண்டதாக அமைதல் வேண்டும்.
3. போக்குவரத்து அட்டை அல்லது மற்ற கொடுப்பனவு டோக்கன்களை வாசித்தல் மற்றும் சரிபார்த்தலுக்கு நுழையும் மற்றும் வெளியேறும் புள்ளிகளில் கருவிகளை நிறுவுவது அவசியமாகும்.
4. அட்டைகளை வாங்குவது மற்றும் ரீலோட் செய்வது, மீதத்தை சோதிப்பது மற்றும் மற்ற வாடிக்கையாளர் தொடர்புகளுக்கான சுய சேவை Kiosks களை தீர்வு வழங்குநர்கள் ஒருங்கிணைக்கலாம்.
5. கணக்குகளை கையாளுதல், இருப்புகளை சோதித்தல், அட்டைகளை ரீலோட் செய்தல், பாதைகளை திட்டமிடல் மற்றும் பரிவர்த்தனை வரலாற்றை பார்ப்பதற்கு அவசியமான செயலிகளை மேம்படுத்தல்.
6. மைய முறைமையானது பரிவர்த்தனைகள், கொடுப்பனவுகள், கண்காணிப்பு, கட்டண அட்டைகளை கையாளுதல் மற்றும் தொடர்புடைய வங்கிகளுடன் இணைப்பை ஏற்படுத்தல், மொபைல் கொடுப்பனவு செயலிகள், POS இயந்திரங்கள் மற்றும் தற்போதுள்ள போக்குவரத்து அட்டை விற்பனை இயந்திரங்களின் வசதிகளை அளிக்கும் பிரதான மையமாக செயற்படுதல் வேண்டும்.

2. ஒற்றை கட்ட இரட்டை கடித உறை விலைமனு நடைமுறைக்கு அமைய சர்வதேச போட்டிரீதியான விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.
3. பின்வரும் முக்கிய தகைமைகளைக் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் மாத்திரம் இந்த விலைக்கேட்பில் பங்கேற்றல் வேண்டும்.
   (i) இந்தப் பெறுகையில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்களின் நிதி மற்றும் தொழில்நுட்ப திறன்கள் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.
   (ii) விலைமனுததரர்கள் விரிவான வேலைத்திட்டம், கால வரையறை மற்றும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழிமுறை உட்பட விரிவான முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
   (iii) விலைமனு ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்து குறிப்பிடப்பட்ட விலைமனு நடைமுறைகள் மற்றும் ஆவணத் தேவைகளை விலைமனுதாரர்கள் கடைப்பிடித்தல் வேண்டும்.
   (iv) விலைமனுதாரர்கள் எந்த ஓர் அரச அல்லது சர்வதேச நிறுவனத்தினாலும் தற்போது அபகீர்த்தியானோர் அல்லது தடை செய்யப்பட்டோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
4. தகுதியுடைய விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பெற முடியும்:

   **சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி)**
   **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
   **7ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் II**
   **பத்தரமுல்லை.**
   **தொலைபேசி: 011 2187229/ 011 2587394 தொலைநகல்: 011 2187230**
   **மின்னஞ்சல்: sas.dev@transport.gov.lk**
   **இணையதளம்: www.moth.gov.lk**
5. விலைமனு ஆவணங்களை (ஆங்கிலம்) பரீட்சிப்பது மற்றும் வாங்குவதற்கு தகுதியுடைய விலைமனுதாரர்கள் பின்வரும் இலக்கங்கள் மூலம் தொடர்புகொள்ளல் வேண்டும்

   **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு**
   **7ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் II,**
   **பத்தரமுல்லை.**
   **தொலைபேசி: 011 2187213 தொலைநகல்: 011 2187213 இணையதளம்: www.moth.gov.lk**

   (i) மீளளிக்கப்படாத கட்டணமாக 200,000.00 இலங்கை ரூபாவை இலங்கை, பத்தரமுல்லை, இலங்கை வங்கியின் 7042656 என்ற கணக்கு இலக்கத்திற்கு "போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளருக்கு" நேரடி வைப்புச் செய்து அல்லது ரொக்கப்பணமாக செலுத்தி RFP இனை வாங்க முடியும்.
   (ii) 2024.07.15 ஆம் திகதி தொடக்கம் 2024.08.27 ஆம் திகதி வரை மேலுள்ள 5ஆவது பந்தியில் உள்ள முகவரியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை சாதாரண வேலை நாட்களில் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
6. முன்மொழிவுகளை விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்ட அசல் விலைமனு பிணையுடன் சேர்த்து 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயரை குறிப்பிடவும்)

   **தலைவர், அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC),**
   **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
   **7ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் II**
   **பத்தரமுல்லை, இலங்கை.**
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் II, 7ஆவது மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, சபை அறையில் 2024 ஜூலை 30 ஆம் திகதி மு.ப. 10.00 (இலங்கை நிலையான நேரம்) இடம்பெறும். எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்றல் வேண்டும்.
8. விலைமனுவை தயாரிப்பது மற்றும் சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் விலைமனுதாரர் ஏற்றல் வேண்டும் என்பதோடு விலைமனு நடைமுறையை நடத்துவது அல்லது அதன் முடிவு எவ்வாறு இருந்தபோதும் அந்த செலவுகளுக்கு தொழில்வழங்குநர் பொறுப்பு அல்லது கடப்பாடு பெற மாட்டார்.

**தலைவர்**
**அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை.**

# குணவர்ஷிகாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்




நாட்டிய கலா மந்திரின் இயக்குநர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவி செல்வி குணவர்ஷிகாவின் பரதநாட்டியம் அரங்கேற்றம் கடந்த நடனப் பள்ளியின் இயக்குநர் 'கலை மாமணி' திருமதி. சிவானந்தி ஹரி தர்ஷன் ஆகியோரும் கலந்துகொண் டனர்.

# ஹாஷிம் உமர் பௌண்டேசனால் மடிக் கணினி அன்பளிப்பு





ஹாஷிம் உமர் பௌண்டேசன், பல்வேறு சமூக சமயப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் வறிய மாணவர்களுக்கு உதவும் வகையில் கல்விக்கு கைகொடுப்போம் என்ற திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது.

அதற்கிணங்க அதன் முதல் கட்ட விநியோகப் பணி கடந்த ஜூன் மாதம் 07ஆம் திகதி ஆரம்பமானது. இரண்டாம் கட்ட விநியோகம் நேற்றுமுன்தினம் ஜூலை 12ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் இடம்பெற்றது. ஹாஷிம் உமர் பௌண்டேஷனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மடிக் கணனி பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களுள் நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேருக்கு புரவலர் ஹாஷிம் உமர் மடிக் கணினிகளை வழங்கினார்.

இதன் போது ஜெ.ஏ.முஹம்மட் வெல்லம்பிட்டி, அ.ஹம்தான்கல்முனைக்குடி, ஜே.சிவகுமார் வெள்ளவத்தை, எம்.ஐ.எம். ராதியா அம்பாறை சென்றல் காம்ப், ஜே.ரி.பிரியதர்ஷினி தெரணியகலை ஆகியோர் மடிக் கணினிகளைப் பெற்றுக் கொண்டனர்.ஹாஷிம் உமர் பௌண்டேசனின் பொதுச் செயலாளர் ஏ.எம்.ஜௌபரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, சமூக ஜோதி ரபீக், தொழிலதிபர் வாஜித், இம்போட் மிரர் பிரதம ஆசிரியர் அமீர், உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத், மாணவர்களின் பெற்றோர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 'தூண்டில்கள் துடிக்கின்றன' கவிதை நூல் வெளியீட்டு விழா



கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு கம்மல்துறை அல் பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'கவிஞர் போருத் தொட்ட ரிஸ்மி அரங்கத்தில்' நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் தலைமை வகிப்பார்.

விழாவின் பிரதம அதிதிகளாக ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். எம். மொஹமட் நளீமியும், விசேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர். தே. செந்தில் வேலவரும் கலந்து கொள்கிறார்கள்.

சிறப்பு அதிதிகளாக, பன்னூலாசிரியர், கவிஞர், ஒலிபரப்பாளர் அஷ்ரப் சிஹாப்தீன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலாபூஷணம், கவிமணி என். நஜ்முல் ஹுசைன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் வெளியீடுகளுக்கான முன்னாள் ஆலோசகருமான 'ஈழத்து நூன்' கலா பூஷணம் எம். ஏ. எம். நிலாம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

கம்மல்துறை அல் பலாஹ் கல்லூரியின் அதிபர் எம். யு. பாயிஸ் நளீமியும், பலகத்துறை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம் முஹம்மத்தும் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்கிறார்கள்.

நூலின் முதற் பிரதியை ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். எம். மெஹமட் நளீமி பெற்றுக் கொள்வார். கம்மல்துறை இக்பால் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் பலகத்துறை இளம் கவிஞர்கள் கலந்து கொள்கின்றனர். கவிஞர்களுக்கு 'தமிழ் ஆசான் ஜெலீல் அதிபர் விருது' வழங்கும் நிகழ்வு கலைஞர் எம். ஜே.எம். சாதிக் தலைமையில் நடைபெறும். அபூசஊத் சைலாஸ் நிகழ்வுகளை ஒருங்கிணைக்க ஏ. எல். எம். சல்மான் மற்றும் சப்ரான் சலாவுதீன் ஆகியோர். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் ஈழமேகம் பக்கீர் தம்பி




முஸ்லிம் சேவையின் பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரின் நேர்காணலில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு இலக்கியப் பங்களிப்பு வழங்கி புகழ்தேடி, நம்மை விட்டுப் பிரிந்தோர் வரிசையில் முது பெரும் கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர் காலஞ்சென்ற ஈழமேகம் பக்கீர் தம்பி நினைவுகூரப்படுகிறார். இவரது நினைவுகளை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறைக்கான சிரேஷ்ட முதன்மை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் பகிர்ந்து கொள்கிறார்.

இந்நிகழ்ச்சி எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய் (16.07.2024) இரவு 8.10 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகிறது.

1960 களில் இலங்கை வானொலியில் அப்போது முஸ்லிம் நிகழ்ச்சிகளாக ஒலிபரப்பான நிகழ்ச்சிகளுக்கு, கவிதைகள் பல பாடியதோடு, இஸ்லாமிய நற்சிந்தனைகள், சன்மார்க்க, பழந் தமிழ் சார்ந்த உரைகளும் நிகழ்த்தியுள்ளார். பின்னாட்களிலும் இவரது பங்களிப்புகள் அதிகமாக முஸ்லிம் சேவைக்குக் கிட்டியுள்ளன.

முஸ்லிம் சேவையில் இவர் பேசிய உரைகளின் தொகுப்புகளை "உரை மலர்" எனும் நூலாகவும், பத்திரிகைக்கும் வானொலிக்கும் எழுதிய கவிதைகளை "மழையும் துளிகள்" எனும் நூலாகவும் வெளியிட்டுள்ளார். "அறவழிக்கீதம்" என்ற தலைப்பிலும் நூலொன்றினை வெளியிட்டுள்ளார். இந்நூல்கள் கவிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் மத்தியில் இவருக்கு பெரும் செல்வாக்கைத் தேடிக்கொடுத்தன. கிழக்கு மாகாணம் தொட்டு தலை நகர் அடங்கலாக நாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்த்திய மீலாத் பேச்சுகள் இன்றும் பேசப்படுகின்றன. இவர் பேசுவதை கேட்பதற்காக பல பகுதிகளிலிருந்தும், மக்கள் பெருந்திரளாக கூடுவதை நம் மூத்தோர் பகிர்ந்து மகிழ்ச்சி காண்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா இவரது நாவன்மைக்காக "ஈழமேகம்" என பட்டம் வழங்கி மேன்மைப்படுத்தினார். அன்றைய நிகழ்ச்சியில் இவரைப் பற்றிய இன்னும் மேலதிக தகவல்கள் எம். எஸ். எம். ஜின்னாவின் நேர்காணலில் வெளிக்கொணரப்பட இருக்கின்றன. இந்நிகழ்ச்சியை முஸ்லிம் சேவை பொறுப்பாளர் எம்.ஜே.பாத்திமா றினூஷியா தயாரித்தளிக்கிறார்.




# சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஆடிவேல் விழா



வரலாற்று சிறப்பும் புராதன தொன்மையும்மிக்க ஆடிவேல் விழா வழமைபோல் இம்முறையும் கொழும்பில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஆடிவேல் இம்மாதம் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு மகேஸ்வர பூஜையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 26 ஆம் திகதி இடும்பன் பூஜையுடன் நிறைவு பெறும். 19.ஆம் திகதி காலை 6.00 மணிக்கு கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான மூவருக்கும், உற்சவ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ முத்துக்குமார சுவாமிக்கும் விசேட பூஜைகள் நடைபெற்று உள்வீதி உலாவுடன் சுவாமி காலை 7.30க்கு சித்திரத் தேரில் எழுந்தருளி முதலாம் குறுக்குதெரு தேவஸ்தானத்திலிருந்து காலை 8.00 மணிக்கு புறப்பட்டு பிரதான வீதி, கோட்டை யோர்க் வீதி, சதாம் வீதியூடாக காலிமுகத்திடலை சென்றடைந்து. பக்தர்களுக்கு திருஅமுது வழங்கப்பட்டு மதியம் 1.30க்கு காலிமுகத்திடலிலிருந்து கொள்ளுப்பிட்டி வழியாக பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயம் வந்தடைந்து அங்கு வீற்றிருந்து அடியார்ளுக்கு அருள்பாலிப்பார். இதற்கான சகல ஏற்பாடுகளையும் தேவஸ்தான நிர்வாக சபையினரான எ.மாணிக்கவாசகர், எஸ்.சுந்தரலிங்கம், பி. தேவராஜா, எஸ்.பி. முருகேசு, டி.வைத்திலிங்கம், கே. சௌந்தர்ராஜன், எஸ் செல்வராஜா, எஸ்.பி. கணேசன், எம். பெரியசாமிபிள்ளை ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.



20.07.2024 காலை 5.00 மணிக்கு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் சுவாமி வீற்றிருந்து 7.00 மணிக்கு வழமையான பூஜையுடன் ஆடிவேல் விழா அர்ச்சனைகள் நடைபெற்று நாதஸ்வர கலைஞர்களின் இசைக் கச்சேரியும் 11.30க்கு வேல்விழா விசேட பூஜையுடன் கதிர்காமக் கந்தனின் திருவருட் பிரசாதம் வழங்கப்பட்டு திருஅமுதும் வழங்கப்படும். வேல் விழா அர்ச்சனைகள் தொடர்ந்து நடைபெறும். மாலை 5.00 மணிக்கு வழமையான பூஜையைத் தொடர்ந்து வேல்விழா அர்ச்சனை நடைபெற்று இந்திய திரைப்படப் புகழ் கலைமாமணி மாலதி லச்சுமன் சுருதி குழுவினரின் இசையில் திரைப்படப்புகழ் பின்னணிப் பாடகர் மதிச்சியம் பாலா மற்றும் விஜய் டி.வி சுப்பர்சிங்கர் புகழ் அருணா சகோதரிகள் ஆகியோர் இணைந்து வழங்கும் பக்தி இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

21.07.2024 காலை 6.30 மணிக்கு வெள்ளவத்தை மாணிக்க சங்கமத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்று ஆலயத்தில் சுவாமி மயில்வாகனத்தில் காட்சியளித்து அர்ச்சனைகள் நடைபெற்று 10.00 மணிக்கு மிருதங்க வித்துவான் பிரம்ம ஸ்ரீ க.சுவாமிநதாதன் சர்மா குழு வழங்கும் சிறப்பு இசை நிகழ்ச்சிகள் இடம் பெறும். 11.30க்கு விசேட பூஜையுடன் கதிர்காமக் கந்தனின் விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டு நண்பகல் திருஅமுது வழங்கி தொடர்ந்து வேல் விழா அர்ச்சனைகள் நடைபெறும்.மாலை 4.00 மணிக்கு பௌர்ணமி தினம் ஸ்ரீ துர்க்கை அம்மனுக்கு நவகலசாபிஷேகம் நடைபெற்று 5.00 மணிக்கு பூஜையைத் தொடர்ந்து வேல்விழா அர்ச்சனைகள் நடைபெறும். 6.00 மணிக்கு தென் இந்திய திரைப்படப்புகழ் இசையமைப்பாளர்கள் கலைமாமணி மாலதி, லக்சுமன் சுருதி குழுவினர், மதிச்சியம் பாலா மற்றும் விஜய் டி.வி சுப்பர் சிங்கர் புகழ் அருணா சகோதரிகள் ஆகியோர் இணைந்து வழங்கும் பக்தி இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.




22.07.2024 காலை 7.00 மணிக்கு பூஜையுடன் ஆடிவேல் விழா 11.30க்கு விசேட பூஜை நடைபெற்று நண்பகல் திருஅமுது வழங்கி மாலை 6.30க்கு வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி, அலங்கரிக்கப்பட்ட சித்திரத்தேரில் எழுந்தருளி பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு பின்னிரவு 12.00 மணியளவில் காலிமுகத்திடலை வந்தடைந்து பக்தர்களுக்கு அருட்பாலிப்பார்.

23.07.2024 அதிகாலை 5.00 மணிக்கு வேல் விழா சித்தரத் தேர் புறக்கோட்டை நகர்பவனி நடைபெறும்.

அலங்கார புருஷராக சித்திரத் தேரில் எழுந்தருளி காலிமுகத்திடலிலிருந்து ஜனாதிபதி மாவத்தை, கோட்டை, செட்டியார் தெரு, ஐந்துலம்புச் சந்தி, பிரதான வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, ஒல்கொட் மாவத்தை, குமார வீதி, மூன்றாம் குறுக்குதெரு, நான்காம் குறுக்குதெரு, கெயிசர் வீதி, முதலாம் குறுக்குத் தெரு பேங்ஷால் வீதி வழியாக வலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலித்து தேவஸ்தானத்தை வந்தடைவார். அடியார் வர்த்தக பெருமக்கள் அனைவரும் இந்த புனித நிகழ்வுகளில் பங்கேற்று ஆரம்பம் முதல் சித்திரத் தேருடன் வருகைத்தந்து சுவாமி தரிசனம் செய்து கதிர்வேலாயுத சுவாமியின் திருவருட்கடாட்சத்தை பெற்றுயுமாறு ஆலய நிர்வாக சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பம்பலபிட்டிய ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் இடும்பம் பூஜையுடன் ஆடிவேல் திருவிழா இனிதே நிறைவுபெறும்.

எச். எச். விக்ரமசிங்க

# ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி" நாவல் வெளியீடு




ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி"நூல் வெளியீட்டு விழா இன்று 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.53க்கு கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஜேம்ஸ் பொன்ட் 007 கதைப் பாணியில் இலங்கை இலக்கிய உலகில் வெளிவரும் முதலாவது நாவல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் தேசமான்ய லயன் தர்மராஜா தவசீலன் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன் IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப்பிள்ளை மூவேந்தன், சமூக சேவகியும் கலை இலக்கிய செயற்பாட்டாளருமான கலாநிதி கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, சமூக சேவகரும் ஆன்மிகவாதியுமான தேசமான்ய பிச்சை கிருஷ்ணா, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான கலாநிதி துரைராசா சுரேஷ், டவர் ஹோல் பவுண்டேஷனின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி எஸ். ஜெயபிரகாஷ் சர்மா, யுனைடட் ஆர்ட் ஸ்டேஜின் தலைவர் கலாபூஷணம் கே. செல்வராஜன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். மணிமாறன், அகில இலங்கை சபரிமலை குருசுவாமிகள் ஒன்றியத்தின் தலைவர், கலைஞர் ஆறுமுகம் ரவீந்திரன், பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் கலாநிதி வைத்தியமாநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா, தமிழ் மிரர் பிரதம ஆசிரியர் அழகன் கனகராஜ், கெப்பிட்டல் எப். எம் வானொலியின் முகாமைத்துவ பணிப்பாளர் எம். எப். சியா உல் ஹசன், ஞாயிறு தினக்குரலின் உதவி ஆசிரியர் லெப்டின்ராஜ், பிரபல கட்டடக் கலைஞர் எம். நந்தகுமாரன், வருணி ஜுவலர்ஸ் அதிபர் கே. யோகரட்ணம், சாய் டெய்லர்ஸ் அதிபர் ரதீஜா சபாபதி, ரஜனி துலானி ட்ரவல்ஸ் என். ரஜனிகாந்த், சினிமா, தொலைக்காட்சி மேடை நாடக நடிகர் கலைஞர் விஜே சுந்தரம் ஆகியோர் ஊடக விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். கலைஞர் தேவர் முனிவர் வரவேற்புரையாற்ற கவிஞர் தாமரைச் செல்வி நூல் அறிமுகவுரையாற்றுவார். தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமை உரையாற்றுவார்.


இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன், IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் விஷேட உரைகளை ஆற்றவுள்ளனர். கவிப்பேரரசு பிரேம்ராஜ் சிறப்புரையாற்றவுள்ளார். நூல் ஆசிரியரைப் பற்றிய கவிதையொன்றை பிரபல பின்னணிப் பாடகி கவிதாயினி அருணா அருந்தவம் பாடவுள்ளார். அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

நூலின் முதற்பிரதியை IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி பெற்றுக் கொள்வார்.

திருமதி நீரஜா யோகரட்ணம் நன்றியுரையாற்றுவார். ஊடகவியலாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமான இளையதம்பி சந்திரனும் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பிரபல அறிவிப்பாளருமான சந்திரிகா நிரோஷன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள். கெப்பிட்டல் வானொலி இலத்திரனியல் ஊடக அனுசரணை வழங்கவுள்ளது.

# படித்ததும் பகர்வதும் 199







சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வறுமையும் சிக்கனமும்!



இலங்கையில் ஒரு குடும்பத்திற்கான மாதாந்த நுகர்வுச் செலவு, 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 டிசம்பர் மாதத்தில், பணவீக்கம் காரணமாக, 16.5% அதிகரித்து 103,283/= ரூபாவாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார விவரண அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில், 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு குடும்பத்தின் மாதாந்த நுகர்வுச் செலவு 88,704 ரூபாவாக பதிவாகியுள்ள அதே வேளை, 2023ஆம் ஆண்டில் ஒரு குடும்பத்தின் மாதாந்த நுகர்வுச் செலவு 16.5% அதிகரித்து 103,283/= ரூபாவாக பதிவாகியுள்ளது.

2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில், இலங்கையில் ஒரு குடும்பம் உணவு அல்லாத பிற பொருட்களுக்காகச் செய்யும் செலவினம் அதிகரித்துள்ளது. 2022ஆம் ஆண்டில், இலங்கையில் ஒரு குடும்பம் செலவிடும் மாதாந்த நுகர்வுச் செலவில் 53.9% உணவு அல்லாத ஏனைய பொருட்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. மாதாந்தம் உணவுக்காக செலவிடப்படும் தொகை, நுகர்வு செலவில் 46.12% ஆகும். 2023ஆம் ஆண்டில், இலங்கையில் ஒரு குடும்பம் தனது மாதாந்த நுகர்வுச் செலவில் 56.2% உணவு அல்லாத பொருட்களுக்காகச் செலவிட்டுள்ள அதேநேரம் 43.8% உணவுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. 2023ஆம் ஆண்டில், இலங்கையில் உணவு அல்லாத பொருட்களின் விலை அதிகரிக்கும் போக்கைக் காட்டியுள்ளது,

இப்போதைய இத்தகைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்க்கை செலவுகளை இயன்ற அளவில் குறைத்து, சிக்கனமாக வாழ்வதற்கான வழிமுறைகளை பின்பற்ற வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது. இதற்காக ஆடம்பர பொருட்களுக்கான செலவுகளை குறைத்துக் கொள்ளுதல், அவசியாமற்ற பயணங்களை முற்றாக தவிர்த்துக் கொள்ளுதல், வீண் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதை தவிர்த்தல், தேவையற்ற வைபவங்களை ஏற்பாடு செய்யாதிருத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை செலவுகளை குறைத்துக் கொள்ள முயல வேண்டும்.

புதிதாக பொருட்களை வாங்கும் போது தமக்கு அவசியமானவற்றை மட்டுமே வாங்குவதற்கும், அவசியமற்றதென தவிர்க்கக் கூடிய பொருட்களை வாங்குவதை விட்டும் தவிர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள பொறுப்பாகும். அத்தியவசியமான செலவுகளின் போதும் அவற்றில் சிக்கனத்தை கடைப்பிடிப்பதும் முக்கியமாகும்.

இப்போதைய காலகட்டத்தில், மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் பொழுது போக்கவென பொது இடங்களுக்கும், பூங்காவனங்களுக்கும், களியாட்ட இடங்களில் ஆடிப்பாடுவதற்கும் என செல்வதை குறைத்துக் கொள்ள வேண்டியது, அல்லது முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டியது கட்டாய நிலைமையாகவே காணப்படுகிறது. செலவுக்கேற்ற வரவு இல்லாத இன்றைய காலத்தில் இத்தகைய சிக்கன நடவடிக்கைகளை புத்திசாலித்தனமாக பின்பற்றுவது மிகவும் முக்கியத்துவம் பெறும் என்பதை எல்லோரும் புரிந்து செயல்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

## பிரிந்தார் பெருமை

### எஸ். முத்துமீரான்



நம் நாட்டின் பிரபல மூத்த எழுத்துலக ஆளுமை எஸ். முத்துமீரான் கடந்த ஜூலை 04ம் திகதி (2024.07.04) தனது 84 ஆவது அகவையில் காலமானார். ஆசிரியர், சட்டத்தரணி, கவிஞர், சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாளர், கிராமிய இலக்கிய ஆய்வாளர், நாடக எழுத்தாளர், அரசியல்வாதி என பன்முகங்களைக் கொண்ட எஸ். முத்துமீரான் எனது நெருங்கிய நண்பர் என்பதோடு நாமிருவரும் இரு துறைகளில் ஒன்றாக தொழில் புரிந்ததனால் மிகவும் நெருங்கிச் செயல்பட்டவர்கள் என்பது, நான் விசேடமாக குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

கிழக்கு மாகாணத்தின் நிந்தவூரைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த இலக்கிய மேதைகளுடனும், பிரபல ஆளுமைகளுடனும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார். இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் பங்குபற்றியதோடு, பலரதும் கவனத்தை ஈர்த்த ஆய்வுக் கட்டுரைகளையும் தொடர்ந்து சமர்ப்பித்து வந்துள்ளார். இவற்றில் பல மாநாடுகளின் இலங்கை இணைப்பாளர்களில் ஒருவராகவும் சிறப்பாக செயல்பட்டுள்ளார்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாய் மொழிக் கதைகள், கிழக்கிலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பூர்வீகமும் – வாழ்வும் வாழ்வாதாரங்களும் ஆகிய ஆறு நாட்டார் இலக்கிய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். இவற்றுடன் மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், மூன்று கவிதைத் தொகுதிகளையும், இரண்டு உருவகக்கதைத் தொகுதிகளையும், ஒரு நாடகத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உருவகக் கதைகள் எழுதுவதில் மிகவும் பிரபலமாக திகழ்ந்தவர் எஸ். முத்துமீரான். 1982இல் இவரது முதலாவது உருவகக் கதைத் தொகுதி தென்னிந்திய கூத்தார் நல்லூர் தென்றல் மன்றத்தினால் கவிஞர் திலகம் சாரணபாஸ்கரனால் வெளியிடப்பட்டுள்ளது.

இவரது உருவகக்கதைகள் உட்பட எழுத்தாக்கங்கள் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'கலைமகள்', மலேசியாவிலிருந்து வரும் 'நம்பிக்கை' போன்ற பத்திரிகைகளோடு இலங்கையில் புகழ்பெற்ற பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, தினக்குரல், சாரதா ஆகியவற்றிலும் மல்லிகை, ஞானம், ஜீவநதி, வானவில் உட்பட மாதாந்த வெளியீடுகளிலும் தொடர்ந்து பிரசுரமாகியுள்ளன.இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் 'தடாகங்கள்' என்ற நிகழ்ச்சியை நடத்தியதோடு பல்வேறு நிகழ்ச்சிகளில் காத்திரமான பங்களிப்புகளை செய்துள்ள எஸ். முத்துமீரான் 200க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளமையும் விசேடமாக குறிப்பிடத்தக்கது.

அரசியலிலும் ஆர்வம் கொண்டிருந்த இவர் பொதுத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டுள்ளமையும் பதியப்பட ஒரு வேண்டிய விடயமாகும். இவ்வாறு பல்துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திய அசகாய ஆளுமை எஸ். முத்துமீரான் என்றென்றும் எம் உள்ளங்களில் வாழ்வார்.

## புது வரவு

### கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப் கல்விப் பணியும் சமூக சேவையும்



தென்னிலங்கையின் புகழ்பெற்ற கல்விமான் ஏ.எம்.எம். ஆரிப்பை வாழும் போதே வாழ்த்தும் வகையில் 'கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப் கல்விப் பணியும் சமூக சேவையும்" என்ற என்ற தொகுப்பு நூலை காலி மாவட்ட ஓய்வு நிலை கல்வியியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ளது. சிங்களம், ஆங்கில மொழியிலான ஆக்கங்களும் இத்தொகுப்பில் இடம் பெற்றிருந்தாலும் தமிழ் நூலாகவே இது வெளியிடப்பட்டிருக்கிறது. இலங்கையின் பிரபல ஆளுமைகளான பலர் ஆரிப் அதிபரைப் பற்றி கூறியுள்ள, எழுதியுள்ள விடயங்கள் அவரது சிறப்பை அனைவருக்கும் எடுத்துக் காட்டுவனவாக உள்ளது.

இந்நூல் வெளியிடப்பட்டதன் நோக்கம், நூலின் உள்ளடக்கம் என்பன பற்றி தொகுப்பாசிரியர் எம். எஸ். எம். ஹிஷாம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"உலகில் எத்தனையோ பேர் ஏதேதோ காரணங்களுக்காக நினைவுபடுத்தப்படுகின்றார்கள். ஆண்டாண்டு காலம் நினைவு கூரப்படுகின்றார்கள். அவர்கள் காலமான பின்பும் பிறந்த தினம் கொண்டாடப்படுகின்றது. ஆனால் அறிவுப் பணியாற்றியவர்களை நாம் மறந்து விடுகின்றோம். அவர்கள் மறைந்து விட்டாலும் அவர்களை நாம் ஞாபகப்படுத்துவதில்லை. நம் நாட்டு முஸ்லிம்களின் வரலாறு ஆயிரம் வருடம் பழைமை வாய்ந்தது என்கின்றோம். அவ்வளவு காலத்திற்குள் வாழ்ந்த அறிஞர்கள் யாவர்? அவர்களின் நாமங்கள் எவை? அவர்கள் ஆற்றிய பணிகள் யாவை? சமூகத்திற்கு விட்டுச் சென்ற அறிவுப் பொக்கிஷங்கள் எங்கே? என்பன போன்ற விபரங்களை அறியாதவர்களாக நாம் இருக்கின்றோம்.

அர்ப்பணிப்புடன், தியாக சிந்தனையுடன் சேவையாற்றியவர்களை அவர்கள் வாழும் போது வாழ்த்திப் பாராட்டி நன்றி செலுத்துவது சாலச் சிறந்ததாகும்.

அந்த வகையில் 'கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப் கல்விப் பணியும் சமூக சேவையும்' என்ற இந்நூல் மூன்று முக்கிய பகுதிகளை உள்ளடக்கி தொகுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப்பின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் இடம்பெற்றுள்ளது. பிறப்பு முதல் இன்று வரை அவர் பெற்ற கல்வி, கல்விப்பணி, குடும்பம், சாதனைகள், வெகுமதிகள், பட்டங்கள், சமூக சேவைகள் எனப் பல்வேறுபட்ட நிகழ்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலாவது பகுதியில் கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப்பைப் பற்றி ஏனையோரின் கருத்துரைகள் இடம்பெற்றுள்ளன. புகழுரைகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள், தகவல் குறிப்புகள் எனப் பல்வேறுபட்ட ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் ஆரிப்பின் எழுத்தாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், நாழிதழ்கள், சிற்றிதழ்கள், கையேடுகள் போன்றவற்றில் அவர் எழுதிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

மேமன்கவியின், 'ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு அகர நதி', கலாபூசணம் திக்வல்லை ஸப்வான் எழுதியுள்ள 'பணிகள் தொடர வாழ்த்துகள்', எம்.எச்.எம். ஜவுஸகானி தந்துள்ள 'பாரில் என்றும் மறக்கலாமோ?' எனும் கவிதைகள் இத்தொகுப்பை மேலும் அலங்கரித்துள்ளன.

## வாசித்ததில் வசீகரித்தது



**நூல்:** கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப் கல்விப் பணியும் சமூக சேவையும், தொகுப்பாசிரியர்: எம்.எஸ்.எம். ஹிஷாம், முதற்பதிப்பு: 2024 மே 23, பக்கங்கள்: 180, விலை: ரூபா 650/=, தொடர்புகளுக்கு: 0771614975

### வறுமையில் பணத்தை செலவழிக்கக் கூடாத விடயங்கள்:

இன்றைய காலத்தில் வறுமை என்பது பலரை வாட்டி வதைக்கிறது. வறுமையில் இருப்பவர்கள் அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கே போராடிவரும் நிலையில், சிலர் தாம் சம்பாதிக்கும் பணத்தை தேவையற்ற பொருட்களை வாங்கி வீணடிக்கின்றனர். இது அவர்களது நிதி நிலைமையை மேலும் மோசமாக்கி கடன் சூழலில் சிக்க வைக்கும். இந்தப் பதிவில் வறுமையில் இருப்பவர்கள் எதுபோன்ற பொருட்கள் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றி பார்க்கலாம்.

**விலை உயர்ந்த மின்னணு சாதனங்கள்:**

புதிய ஸ்மார்ட்போன்கள் டிவிகள் மற்றும் பிற மின்னணு சாதனங்கள் பார்ப்பதற்கு கவர்ச்சிகரமாக இருக்கலாம். ஆனால் அவை பெரும்பாலும் தேவையற்றவைதான். விலை உயர்ந்த மின்னணு சாதனங்கள் வாங்குவதற்கு பதிலாக செகண்ட் ஹாண்ட் பொருட்களை வாங்கி பயன்படுத்தலாம் அல்லது குறைந்த விலையில் கிடைக்கும் சாதனங்களை வாங்கலாம்.

**விலை உயர்ந்த ஆடைகள்:**

ஏழையாக இருப்பவர்கள் தங்களை பணக்காரர்கள் போல காட்டிக் கொள்ள ஆடைகளுக்கு அதிக செலவு செய்வது தவறு. சுற்றி இருப்பவர்கள் தம்மை சிறப்பாக பார்க்க வேண்டும் என்பதற்காக விலை உயர்ந்த ஆடைகள் மற்றும் பேஷன் பொருட்களை வாங்குவது, வறுமையில் இருப்பவர்களுக்கு மேலும் பொருளாதார சுமையை ஏற்படுத்தும்.

**சந்தா சேவைகள்:**

ஸ்மார்ட்போன் வந்த பிறகு பல OTT தளங்கள் வந்துவிட்டன. அவை அனைத்திற்கும் மாதச் சந்தா செலுத்தி பயன்படுத்தலாம். வறுமையில் இருப்பவர்களுக்கு இது முற்றிலும் தேவையற்றது. இதுபோன்ற தளங்கள் நமது நேரத்தை அதிகமாக வீணடிக்கச் செய்யும் என்பதால், இதற்காக பணத்தையும் செலவு செய்து நேரத்தையும் வீணடிப்பது, உண்மையிலேயே நல்லது கிடையாது.

**போதைப் பொருட்கள்:**

மதுபானம் மற்றும் புகைப்பிடித்தல் போன்ற தீய பழக்கங்கள் ஒருவரது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பது மட்டுமின்றி, பணத்தையும் வீணடிக்கும் பழக்கங்களாகும். குறிப்பாக வறுமையில் இருப்பவர்கள், இதுபோன்ற போதை வஸ்துக்கு அடிமையாகும்போது அதிகப்படியான பணத்தை இழக்கின்றனர்.

**சூதாட்டம்:**

ஏழைகளிடம் இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால், விரைவாக பணக்காரன் ஆக வேண்டும் என்று முயற்சிப்பதுதான். அதில் ஒரு வழிதான் சூதாட்டம். இது போன்ற குறுக்கு வழிகளில் ஈடுபடுவது உங்களது வெற்றி வாய்ப்புகளை தட்டிப் பறிக்கும். மேலும் உங்களது பணத்தையும் அதிகமாக இழக்கச் செய்யும்.

**விலையுயர்ந்த உணவு:**

வறுமையில் இருப்பவர்கள் முடிந்தவரை ஒரு நிலையை எட்டும் வரை சிக்கனமாக இருக்க வேண்டும். ஆனால், பலர் வீட்டு உணவுகளை விட, அதிக விலை கொடுத்து ஹோட்டலில் வாங்கி சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் ஆரோக்கியத்தையும் கெடுத்துக்கொண்டு, பணத்தையும் வெகுவாக இழக்கின்றனர். வெளியே சென்று சாப்பிடுவதை விட வீட்டிலேயே சமைத்து சாப்பிடுவது உங்களது பணத்தை வெகுவாக மிச்சப்படுத்தும்.

**விலையுயர்ந்த போக்குவரத்து:**

சில பந்தா பேர்வழிகள், கையில் பணம் இல்லை என்றாலும், பிறர் முன்னிலையில் கெத்து காட்ட வாடகைக்கு கார் எடுத்து பயணிப்பார்கள். அதேபோல லோன் போட்டாவது கார் ஒன்றை வாங்கி வீட்டில் சும்மா நிறுத்தி வைப்பார்கள். இதுபோன்ற நிதித் தவறுகளை வறுமையில் இருப்பவர்கள் செய்யவே கூடாது. முடிந்தவரை பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தி, பணத்தை மிச்சப்படுத்தப் பாருங்கள். வறுமையில் இருப்பவர்கள் தங்கள் பணத்தை புத்திசாலித்தனமாக செலவிடுவது முக்கியம். தேவையற்ற பொருட்களை வாங்குவதை தவிர்ப்பதன் மூலம் அவர்கள் தங்கள் நிதி நிலையை மேம்படுத்தவும், எதிர்காலத்திற்கு பணத்தை சேமிக்கவும் முடியும்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# தப்பிச்செல்ல வழி தேடுகிறாளே துர்கா! தெரிந்தால் சொல்லுங்களேன் ஒருக்கா!

பேபி நோனா கொண்டு வந்து வைத்த உணவு அவ்வளவு சுவையானதாக இருக்கவில்லை.

ஆனாலும்,

வேறு வழி இல்லாமல் அதை விழுங்கி வைத்தாள்!

சாப்பிட்டுக்கு பிறகு,

தோட்டத்திற்குச் சென்று கொஞ்சம் உலாவிவிட்டு வரவேண்டும் என்று சொன்ன போது,

பேபிநோனா அதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டாள்.

"ஐயையே! அதெல்லாம் முடியாது. உன்னை வெளியே எல்லாம் விடக் கூடாது என்று உனது கணவர் எனக்கு உத்தரவு போட்டிருக்கிறார். ஆனாலும் எனது வேலையெல்லாம் முடிந்த பிறகு கொஞ்சநேரம் தோட்டத்தில் உலாவுவதற்காக நான் உன்னை அழைத்துப் போகிறேன்!" என்றாள் பேபி நோனா.

மாலையில் பேபி நோனா தோட்டத்தில் உலாவச் சென்ற துர்காவிற்கு சிறிது நேரத்திலேயே அந்த பயணம் வெறுத்து விட்டது!

அதற்குக் காரணம்,

அவளுடைய சப்பாத்துக்களில் ஒன்று இல்லாததனால் வெறுங்காலுடன் அவளால் நடக்க முடியாமல் இருந்தது. துர்கா பாதியிலேயே திரும்பி வீட்டுக்கு வந்து விட்டாள்,

தனியாக இருந்து யோசித்த போது தான்,

சிறு கடிதத் துண்டொன்றை எழுதி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தால் என்ன என்று ஒரு யோசனை அவளுக்குத் தோன்றியது!

ஆனால்,

அதற்கு எங்கே இருக்கிறது பேப்பர்!

எங்கே இருக்கிறது பேனா!

யாரிடம் கொடுத்து பொலிசுக்கு தகவல் அனுப்புவது!

என்ற கேள்விகளும் அதேநேரம் பிறந்தது!

சில சமயம்,

பேனாவும் பேப்பரும் கிடைத்தாலும்,

தகவலை யாரிடம் கொடுத்து பொலிஸாருக்கு அனுப்புவது?

மதில் சுவருக்கு அருகால் சிறிய பாதை ஒன்று செல்வதை துர்கா அவதானித்தாள்.

பாதை ஒன்று அங்கே இருக்கிறதென்றால்,

கண்டிப்பாக அதன் வழியாக யாராவது போகத்தானே வேண்டும்!

அப்படிப் போகிறவர்களின் கையில் கிடைக்கக் கூடிய விதத்தில்,

கடிதத் துண்டொன்றை எழுதி மதில் சுவரின் வழியாக அந்தப் பாதையில் போட்டு விட்டால்,

அதனால் பயன் ஏதும் ஏற்படலாம் என்று அவளுக்கு தோன்றியது!

முயற்சியை விட வேறு எதுவுமே சிறந்ததில்லை என்பது அவளுக்குத் தெரியும்!

இதனால்,

அந்த முயற்சிக்கு முதுகெலும்பு கொடுக்க அவள் விரும்பினாள்.

அதற்கு,

இப்போது பேனாவும் பேப்பரும் தேவை.

எங்கே போய் அதைத் தேடுவது!

தேடினாள்,

தூசுபடிந்து போயிருந்த அந்த புதுமையான வீட்டில் இருந்து ஒவ்வொரு அறைக்குள்ளும் நுழைந்து நுழைந்து வந்தாள்!

இறுதியில்,

ஒரே ஒரு பேப்பர் துண்டை மட்டுமே அவளால் கண்டு பிடிக்க முடிந்தது.

அந்த நேரத்தில்,

அது அவளுக்கு தங்கக் கட்டி ஒன்று கிடைத்ததைப் போலிருந்தது!

அடுத்து,

சமையல் அறைக்குள் ஓடிச்சென்று,

கரித்துண்டொன்றை எடுத்து,

இப்படி எழுதினாள்,

கௌரவமாக வேண்டும், ஒரு கருணை வேண்டுகோள்!

இந்த பெரிய மதில் சுவரினால் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் பங்களாவிற்குள் ஒரு அப்பாவிப் பெண் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். அவள் மிகவும் ஆபத்தான ஒரு சூழ்நிலையில் இருப்பதால், இந்தத் தகவலை அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தால், உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இப்படிக்கு,

ஓர் அப்பாவி சிறைக்கைதி!

இக்கடிதத்தை எழுதி,

அதை மதில் சுவரின் மேலால் போடுவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும்,

அதற்கான வாய்ப்பு அவளுக்கு கிடைக்கவே இல்லை!

காரணம்,

அந்த ராட்சசி பேபி நோனா எந்த நேரமும் வாசல் கதவையும், ஜன்னல் கதவுகளையும் சாத்தி வைத்திருப்பதுதான்,

பகல் பொழுது மறைந்து,

இரவும் வந்தது!

துர்கா எழுதிய கடிதம் இன்னமும் அவளுடைய ரவிக்கைக்குள்ளேயே இருந்தது!

மிகவும் பலசாலியான அந்தப் பெண் மணியிடமிருந்து எந்தவொரு வாய்ப்பும் கிடைக்காததனால்,

அவள் தூங்கிய பிறகாவது அப்படி ஒரு வாய்ப்பு வரும் என்று,

எதிர்பார்த்திருந்தாள் துர்கா!

அவள் இரவு சாப்பாட்டை தயாரிக்கச் சென்ற பிறகு,

கதவு இல்லாத ஜன்னல் ஏதாவது இருக்குமா என்று பார்ப்பதற்காக,

ஒவ்வொரு அறையாக,

நுழைந்து நுழைந்து வெளியே வந்தாள்!

ஆனாலும்,

அவளது அந்த எதிர்பார்ப்பிலும்

பலன் பூஜ்ஜியமாகத்தான் இருந்தது!

சமையல் அறைக்குப் பக்கத்தில்,

பொருட்களை வைக்கும் ஓர் அறை இருப்பதை அப்போதுதான் அவதானித்தாள் துர்கா!

விரைந்து அதற்குள் நுழைந்தாள்

அந்த அறை,

இருளில் மூழ்கியிருந்தது.

பழைய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்த அறையை இருட்டிலேயே கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தாள்.

மதில் சுவரின் பக்கமாக இருந்த சுவர் கொஞ்சம் உடைந்து போயிருப்பது தெரிந்தது!

ஹா!

அதைப் பார்த்ததும்,

கடிதத்தை

மதில் சுவருக்கு அப்பால் போடுவதற்கு ஒரு வழி பிறந்ததைப் போல் துர்காவிற்குத் தோன்றியது.

அடுத்து,

பூரிப்பால்,

அவள் மனம் புளகாங்கிதம் அடைந்தது!

பாதி உடைந்து போயிருந்த அந்த சுவற்றை,எதையாவது வைத்து இன்னும் கொஞ்சம் உடைத்து விட்டால்,

மதில் சுவரின் அருகில் வந்து விடலாம் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்!

பேபி நோனா தூங்கிய பிறகு அந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று முடிவு செய்து கொண்ட துர்கா,

விரைந்து அங்கிருந்து வெளியேறினாள்!

அப்போது,

சமையல் வேலையை முடித்து விட்டு,

பேபி நோனவும் வெளியே வந்து

கொண்டிருந்தாள்.

இருவரும் ஏதேதோ கதைகளை பேசியபடியே இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு,

தங்கள் அறைகளுக்கு தூங்கச் சென்றார்கள்!

அப்படி போகும் போது,

துர்காவைப் பார்த்து இப்படிச் சொன்னாள் பேபி நோனா.

"இதோபார் மகளே, நான் தூங்கும் போது கதவை தாழ்ப்பாள் போட்டு விட்டுத்தான் தூங்குவேன்.

உன்னைப் போன்ற பைத்தியக்காரிகளால் எனக்கு சில நேரம் ஆபத்து வரலாம். என்பதனால்தான் இந்த ஏற்பாடு. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு நீ தப்பிப் போகலாம் என்று மட்டும் நினைக்காதேஎல்லா கதவுகளையும் மூடி நான் சாவிகளை வைத்திருக்கிறேன்.

உனக்கு ஏதும் தேவையென்றால் என்னை எழுப்பு!" சொல்லிவிட்டு,

அறைக்கதவை சாத்திக் கொண்டாள் பேபி நோனா.

தனது அறைக்குள் சென்று,

சுமார் அரை மணித்தியாலங்கள் அமைதியாக அமர்ந்திருந்த துர்கா,

மெல்ல எழுந்து வெளியே வந்தாள்.

ஆமையைப் போல் ஊர்ந்து,

பேபி நோனாவின் அறையின் அருகில் வந்து நின்றாள்.

கதவில் காதை வைத்து உற்றுக் கேட்டாள் பேபி நோனா,

குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும் ஓசை கேட்டது!

தனது திட்டத்தை செயல்படுத்த இதுதான் சந்தர்ப்பம் என்பதைப் புரிந்து கொண்டு,

விரைந்து செயலில் இறங்கினாள் துர்கா!

தனது அறைக்குள் மங்கிய வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த கைவிளக்கொன்றை எடுத்துக் கொண்டு,

விரைந்து வந்து,

சமையல் அறைக்குப் பக்கத்தில் இருந்த அந்த அறைக்குள் நுழைந்தாள்.

பாதி உடைந்து போயிருந்த அந்த சுவற்றின் அருகில் வந்தாள்.

கையில் இருந்த விளக்கை சுழற்றிய படியே,

சுற்றும் முற்றும் பார்த்தாள்.

பழைய இரும்புக்கம்பி ஒன்று அவள் கண்ணில்பட்டது!

விளக்கை பக்கத்தில் இருந்த மேசைமீது வைத்துவிட்டு,

அதை எடுத்தாள்!

இப்போது,

அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது!

மேனி கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தது!

இரும்புக் கம்பியைக் கையில் எடுத்து,

உடைந்து போயிருந்த சுவற்றின் பகுதியில் குத்தினாள்!

அது, வழுக்கிச் சென்றது!

மீண்டும் ஒரு முறை குத்தினாள்!

குறிதவறி,

அவள் தள்ளாடிப் போனாள்!

இப்போது,

அவளுக்கு மூச்சு வாங்கியது!

மூன்றாவது முறையும் முயற்சி செய்தாள்.

இந்த முறை,

தனது மேனியில் முழு பலத்தையும் கைகளுக்கு கொண்டுவந்து,

அதை இரும்புக் கம்பியின் மீது பாய்ச்சி,

சுவற்றில் விட்டாள் ஓர் இடி!

ம் இப்போது,

சுவற்றின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது!

எவராவது வருகிறார்களா என்று சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்ட துர்கா,

பலமாக மூச்சுவிட்டுக் கொண்டாள்.

அந்த சுவரின் ஒரு பகுதி விழுந்த சத்தம்,

பேபி நோனாவுக்கும் கேட்டிருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்ட துர்கா,

விளக்கையும் அணைத்துவிட்டு,

விரைந்து அறைக்குள் ஓடி வந்து,

கட்டிலில் பாய்ந்து,

போர்த்திப் படுத்துக் கொண்டாள்.

அதே நேரம்

டக் டக் டக்!

கதவில் யாரோ தட்டினார்கள்!

(தொடரும்)

# சிறுவர் உலகம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 122

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | | 11 | 12 | |
| 13 | 14 | | | 15 | 16 |
| 17 | | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | | |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
.............................. ..........................................
மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) பறவையினங்களில் உருவத்தில் பெரியவற்றில் இதுவும் ஒன்று. இப்பறவை பறப்பதில்லை. ஆனால் நீளமான கால்கள் உள்ளதால் மிக வேகமாக ஓடக்கூடிய பறவை. ஆபிரிக்காவின் சில பகுதிகளில் இப்பறவை வாழ்கின்றது.

(8) பெண்கள் தமது காதுகளில் அணிந்து கொள்கின்ற ஆபரணம் இது. இக்காலத்தில் ஆண்கள் பலரும் நாகரிகத்துக்காக இந்த ஆபரணத்தை அணிந்து கொள்கின்றார்கள். (தலைகீழான சொல்)

(11) வானம் என்பதை இவ்வாறும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

(13) இது அக்கால தாக்குதல் ஆயுதம். அம்பு இருந்தால் எய்து கொள்ளலாம். (தலைகீழான சொல்)

(15) அறிவுக்கண் திறக்கும் ஆசிரியர் இவர். (தலைகீழான சொல்)

(18) அழுக்குநீர் வடிந்தோடும் இடம்.

(22) ஆபத்தான பூச்சியினம். மரங்கள், பாறை உச்சிகள் போன்ற இடங்களில் கூடு அமைத்து சமுதாயமாக வாழும். கூடு கலைந்தால் அவ்வளவுதான்! பறந்து பறந்து கண்ணில் அகப்படுபவர்களையெல்லாம் கொட்டி விடும்.

**மேலிருந்து கீழ்**

(1) பிற உயிரினங்களுக்கு இழைக்கின்ற தீங்கான காரியங்களை இவ்வாறுதான் கூறுவர்.

(3) அரசன், மன்னன் போன்று இதுவும் ஒரு ஒத்தகருத்துச் சொல்.

(5) மயிலின் சிறகு இப்பெயர் பெறும். (தலைகீழான சொல்)

(8) மீனை வெயிலில் காயவைத்து அல்லது நெருப்பில் வாட்டி பதப்படுத்திய பின்னர், அது இப்பெயர் பெறும். (தலைகீழான சொல்)

(10) பாவங்கள் செய்தவரை இவ்வாறு கூறலாம்.

(13) இனிமையான குரல் கொண்ட கருமைநிறப் பறவை. (தலைகீழான சொல்)

(16) மழைக்கும் வெயிலுக்கும் பாதுகாப்புத் தருவது.

(18) பூட்டைத் திறப்பதற்குத் தேவையான சாதனம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 121

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கண்டி 04. அலை 07. பனை 10. கால்
12. மகள் 15. பாலை 19. கவி 22. அவன்
25. புளி

**மேலிருந்து கீழ்**

01. கடல் 03. படி 05. அவள் 08. மனை
11. காலை 13. கலை 16. பாகன் 18. அணை
21. களி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 120

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எப். சீனஸ்**
தரம் 05, அல் ஹில்மா முஸ்லிம் வித்தியாலயம், பாடசாலை வீதி, கந்துவேவ, நொச்சியாகம.

**2. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம், இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**3. அம்றத் அயானி**
தரம் 03, அல் ஹிதாயா மகளிர் கல்லூரி, இல. 14, பர்ஹானா மன்ஸில், பாலமுனை 03.

**4. எம்.ஜே.எம். ஜிப்ரான்**
தரம் 04, தி/ கிண்ணியா தேசிய பாடசாலை, மரகாத் நகர், குறிஞ்சாக்கேணி, கிண்ணியா

**5. ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் மு.ம. வித்தியாலயம், இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.


**6. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா மு.ம. கல்லூரி, இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை, கொழும்பு 10.

**7. எம்.எப்.எம். மஹ்தி**
தரம் 04D, அல் முனவ்வரா ஆரம்ப பாடசாலை, மடவளை, இல. 117/4/1, டிங்கிரியாதெனிய, கொஹாகொட, கட்டுகஸ்தொட்டை.

**4. அனீஸ் பாத்திமா அப்லா**
தரம் 08, அல் அமான் மு.ம. வித்தியாலயம், கல்லொழுவ, மினுவாங்கொடை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 122
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புகழ்: நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு**

***தெளிவுரை :***
*நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம் நிற்கவல்ல புகழைச் செய்தால், வானுலகம் (அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமே அல்லாமல்) தேவரைப் போற்றாது..*

## துன்பத்தில் உதவும் நற்பண்பு

அடர்ந்த காட்டில், காகங்கள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அருகே, பெரிதும், சிறிதுமாக தடாகங்கள் இருந்தன. அவற்றில், தாமரை, அல்லி தாவரங்கள் செழித்திருந்தன. அங்கு நதி ஒன்று பாய்ந்து, தடாகங்களை செழிப்புடன் வைத்திருந்தது. கோடையில், ஆற்றில் நீர் வற்றியது.

ஆற்றில் வசித்த மீன்கள் நீந்தி, சிறிய தடாகத்துக்கு பிழைக்க வந்தன. கடும் வெப்பத்தால், அந்த தடாகமும் வற்றும் நிலை ஏற்பட்டது. அதில், தாமரை இலைகளை பறிக்க பணியாளருடன் வந்தார் வியாபாரி. இலைகளை பறித்த பணியாளர்கள், 'மீன்களை எல்லாம் பிடிக்கட்டுமா...' என்றனர். 'முதலில் இலைகளை வேண்டிய அளவு பறியுங்கள்... நேரம் இருப்பின், மீன்களை பிடிக்கலாம்...' கட்டளை போட்டார் வியாபாரி. பொழுது மங்கியது. மீன்களை பிடிக்க நேரமில்லை. வீடு திரும்பினர் பணியாளர்கள். மறுநாள் வறட்சியால், உணவு கிடைக்காமல் தவித்த காக்கை, அந்த தடாகத்திற்கு வந்தது. நீந்தி திரிந்த மீன்களிடம், 'நண்டு, நத்தை கிடைக்குமா...' என விசாரித்தது. 'பிழைக்க வழியின்றி அல்லலில் சிக்கி தவிக்கிறோம். மழை பொழியா விட்டால், சில நாட்களில் தடாகம் வற்றி போகும்! உனக்கு தேவையான, நண்டு, நத்தை கிடைக்கும். அதற்கு முன், எங்களை பிடிக்க சிலர் திட்டமிட்டுள்ளனர்... நட்பு முறையில் உதவி செய்ய முடியுமா...' என்று துன்பத்தை பகிர்ந்தன மீன்கள்.

ஆறுதல் கூறியபடி பறந்து சென்று, தலைமை காகத்திடம் தகவல் தெரிவித்தது. தலைமை காகம் தீவிரமாக யோசனை செய்தது. பின், உடனிருந்த காகங்களை அழைத்தபடி தடாகத்துக்கு வந்தது. அதற்குள், இலை பறிக்க வந்த பணியாளர்கள் மீன்களை பிடித்திருந்தனர். தடாகத்தில் பிடித்தவற்றை நீர் நிறைந்த சிறிய தொட்டியில் போட்டு வைத்திருந்தனர்.

இதைக் கண்ட காக்கைகள் திட்டமிட்டபடி, அலகால் மீன்களை கொத்தி தூக்கி சென்று பக்கத்து தடாகத்தில் விட்டன. நன்றி கூறியபடி மகிழ்ச்சியுடன் நீந்தி, ஆழமான பகுதியில் பதுங்கின மீன்கள்.

## இவ்வார மழலை



மெஹ்ரிஸ் மெனால்

றபீயுடின் - சியானா

### சிறுவர் சித்திரங்கள்



**யூசுப் ரிம்ஸான்**
தரம் 02C, சம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம், பேருவளை



**வி.ரிதுஷினி**
தரம் 07B, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்

## கடலுக்குள் காடுகளும் ஆறுகளும்



கடலுக்கு அடியிலும் காடுகள் உள்ளன. இவை கெல்ப் (*Kelp*) காடுகள் என அழைக்கப்படுகின்றன. மெக்சிகோ வளைகுடாவில் 60 அடி ஆழத்தில் சைப்பிரஸ் மரங்களால் ஆன காடு உள்ளது.

இந்த காடு, 60 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காடாம். கடல்மட்டம் இப்போது இருப்பதை விட 400 அடி குறைவாக இருந்த காலத்தில் நிலத்துக்கு மேலே இருந்த காடு இப்போது கடலுக்கடியில் இருக்கிறது.

கடலுக்கடியில் உள்ள காடுகளின் மொத்த பரப்பளவு 6 மில்லியன் முதல் 7.2 மில்லியன் சதுர கிலோ மீற்றராகும்.

அமேசான் காடுகளை விட பெரிய காடுகள் ஆழ்கடலுக்கு அடியில் தான் இருக்கின்றன. ஆனால் கடலுக்கு அடியில் காடுகள் மட்டுமல்ல ஆறுகளும் இருக்கும். மெக்சிகோ நாட்டின் துலும் கடற்பகுதியில் அனடோலி என்பவரும், அவருடைய நண்பர்கர்ளும் ஸ்கூபா நீர்மூர்ழ்கி உடையணிந்து கடலுக்கு அடியில் சென்ற போது கடல்தரையில், ஆறு ஒன்று ஓடுவதை அவர்கள் கவனித்துள்ளனர்.

நிலத்தில் ஓடும் ஆற்றில் எவ்வாறு வெள்ளம் போகுமோ, அதேபோல் அந்த கடலடி ஆற்றிலும் வெள்ளம் வந்துள்ளது.

அந்த ஆற்றின் கரை ஓரங்களில் இலைகளுடன் மரங்கள் இருந்தன. இந்த கடலடி ஆற்றுக்கு, 'செனோட்டே ஏஞ்சலிட்டா' (குட்டி தேவதை) என்று அவர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

ஆனால், மெக்சிகோ அருகே துலும் பகுதியில் மட்டுமல்ல, கருங்கடல், அவுஸ்திரேலியா, போர்த்துக்கல் நாடுகளுக்கு அருகே உள்ள கடற்பகுதிகளிலும் ஆறுகள் ஓடுவது தெரிய வந்துள்ளது.


## அறிவியல் செய்திகள்



**1. செவ்வாய் கிரகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 180 முதல் 260 விண்கற்கள் விழுவதாக நாசா தெரிவித்துள்ளது. நாசா அனுப்பிய இன்சைட் லாண்டர் விண்கலம் ஏற்கனவே எடுத்த செவ்வாயின் படங்களை ஆய்வுக்கு உட்படுத்திய போது இது தெரியவந்துள்ளது.**




**2. சீனா அனுப்பிய சாங்கே விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி அங்கிருந்த நிலவின் மண் மாதிரிகளை எடுத்துக்கொண்டு பூமிக்குத் திரும்பி உள்ளது. நிலவின் மற்ற பகுதிகளுக்கும் தென் துருவத்திற்கும் உள்ள வேறுபாட்டை மண் மாதிரிகளை ஆய்வு செய்வதன் மூலம் அறியலாம்.**



**3. அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் வியாழனை ஆராய்வதற்காக அனுப்பிய விண்கலம் ஜுனோ. இது தற்போது வியாழனின் துணைக் கோளான ஐஓவின் படங்களை அனுப்பியுள்ளது. இதிலிருந்து அங்கு எரிமலை குழம்புகள் ஆறு போல் ஓடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

## பறவைகளின் வாழ்க்கைத் தந்திரம்



**பறவைகளில் ஆண் பறவைகள் தான் பார்க்க அழகாக இருக்கும். காரணம், பெண் பறவைகளை ஈர்க்க வேண்டும் என்ற ஒரே இயற்கை காரணம் தான். ஆனால், அடர்ந்த காடுகளில் வாழும் பறவைகளில் ஆண், பெண் இரண்டும் வண்ணமயமாக இருக்கின்றன.**

**காரணம் காடுகளில் வேட்டை விலங்குகள் அதிகம். அவற்றிடமிருந்து தப்பிக்க பல நிறங்களில் உள்ள பூக்கள், செடிகள் ஆகியவற்றில் தன்னை மறைத்துக் கொள்ள பறவைகளுக்கு வண்ணங்கள் உதவுகின்றன.**

## விலங்குகளின் உணவு பழக்க வழக்கங்கள்

விலங்குகள் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தைப் பொறுத்து சில சூழலியல் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன. ஊன் உண்ணிகள், தாவர உண்ணிகள், அனைத்துண்ணிகள்.

கழிவுகள், குப்பைகள் போன்ற அழிவுக்குள்ளாகும் பதார்த்தங்களிலிருந்து தமது உணவைப் பெறும் சார்பூட்ட உயிரிகளான கழிவுண்ணிகள், ஒட்டுண்ணி வாழ்வு வாழும் ஒட்டுண்ணிகள் ஆகியன இவற்றுள் அடங்கும்.

**தாவர உண்ணிகள்**

சிலப் பறவைகள் தாவரங்களை மட்டும் உண்கின்றன. அவற்றின் முக்கிய உணவுப் பொருட்களில் செடியின் இலைகள், காய், புல் மற்றும் பழங்கள் அடங்கும்.

**எருமைகள்:** புல் மற்றும் இலைகளை அதிகமாக உண்ணுகின்றன.

**மான்:** மரங்களின் இலைகள்

**குதிரைகள்:** புல் மற்றும் தாவரங்கள்

**ஊன் உண்ணிகள் (carnivore)**

பெரும்பாலும் பிற விலங்குகளின் இறைச்சியை மட்டுமே உணவாக உட்கொள்ளும் விலங்குகள் ஆகும். சிங்கம், புலி முதலிய விலங்குகள் ஊன் உண்ணிகள் ஆகும்.

**சிங்கங்கள்:** காட்டுப்பகுதிகளில் பிற விலங்குகளை வேட்டையாடுகின்றன.

**புலிகள்:** பெரும்பாலும் காட்டுப்பகுதிகளில் காணப்படும் மாமிசத்தை உண்ணுகின்றன.

**கரடிகள்:** வேட்டையாடி மாமிசத்தை உண்ணுகின்றன.

**அனைத்துண்ணிகள்**

தங்களுடைய முதன்மை உணவாக தாவரம், விலங்குகள் ஆகிய இரண்டையும் உட்கொள்ளும் உயிரினங்கள் அனைத்துண்ணிகள் அல்லது யாவும் உண்ணிகள் (*Omnivore*) என்று அழைக்கப்படுகின்றன.

**மனிதர்கள்:** தாவர உணவுகள் மற்றும் மாமிசம்

**குரங்குகள்:** பழங்கள், இலைகள் மற்றும் சிறிய புழுக்கள்

**கரடிகள்:** தாவரங்கள் மற்றும் மாமிசம்

விலங்குகளின் உணவு பழக்க வழக்கங்கள் அவற்றின் வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல் மற்றும் உடல் அமைப்பின் அடிப்படையில் மாறுபடுகின்றன.

அவற்றின் உணவுப் பழக்கவழக்கங்களைப் புரிந்து கொள்வது, அவற்றின் வாழ்வாதாரத்தையும் நடத்தை முறைமைகளையும் புரிந்து கொள்ள உதவுகிறது.

## மாற்றுத்திறனாளியான ஹெலன் கேலர்



ஹெலன் கேலர் தனது வாழ்க்கையில் மாறுபட்ட சவால்களை வென்று, உலகிற்கு முன்னோடியாக, மற்றவர்களுக்கு உத்வேகம் அளிக்கின்றவர். அவரது வாழ்க்கை வழிமுறைகள், நமக்கு பெரும் சவால்களைக் கண்டு எவ்வாறு வெற்றி பெற முடியும் என்பதையும் தெளிவாக காட்டுகின்றன.

இவர் எழுதிய 'தீவிர வாழ்வு' (*The Story of My Life*) எனும் தனது வாழ்க்கை வரலாற்று புத்தகம் உலகளவில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.

ஹெலன் கேலர் 1880 ஜூன் 27ஆம் திகதி அமெரிக்காவில் பிறந்தார். அவர் குழந்தையாக இருந்த போது, 19 மாதங்களுக்கு பிறகு, ஒரு மர்மமான நோய் காரணமாக காது கேளாத மற்றும் கண் பார்வையற்றவராக மாறினார். இதன் காரணமாக, அவர் தனது வளர்ச்சி நாட்களில் மிகுந்த சவால்களை எதிர்கொண்டார். தன்னுடைய நிலைமை காரணமாக, தனது உணர்வுகளை வெளிப்படுத்துவது, மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுவது மிகவும் கடினமாக இருந்தது. ஆனால், அவரது தாய் மற்றும் தந்தையின் ஆதரவுடன், அவர் சிறந்த படிப்புத்திறனைக் கொண்டவராக வளர்ந்தார்.

ஹெலனின் வாழ்க்கையில் மிக முக்கியமான திருப்புமுனையாக, 1887இல் அவரது ஆசிரியர் அன்னி சல்லிவன் ஹெலனின் உணர்வுகளை புரிந்து கொண்டு, அவரை கற்றல் முறைமைகளில் மூழ்கடித்தார். அன்னி சல்லிவன் தொடக்கத்தில், ஹெலனின் கைகளைப் பயன்படுத்தி, 'உணவு' மற்றும் 'நீர்' என்பவற்றின் மூலம், மெல்ல எழுத்துக்களை கற்றுக் கொடுத்தார். இந்த முறையின் மூலம், ஹெலன் தனது முதல் வார்த்தையை கற்றுக் கொண்டார். அதன் பின்னர், அவரது வாழ்வில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஹெலன் தனது உழைப்பாலும், தன்னம்பிக்கையாலும், பல மொழிகளை கற்றுக் கொண்டார், பல்வேறு வகையான புத்தகங்களை படித்தார். இதைத் தாண்டி, ஹெலன் கேலர் 1904இல் ராட்கிளிஃப் கல்லூரியில் இளநிலை பட்டம் பெற்றார்.

இங்கு அவர் கல்லூரி முதுநிலைப் படிப்பில் தேர்ச்சி பெற்ற முதல் மாற்றுத்திறனாளி நபரானார். அவர் தனது வாழ்க்கையின் பல பகுதிகளில் சமூக சேவைக்காகப் பணியாற்றினார். ஹெலன் கேலர் தனது வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளில், தன்னுடைய வெற்றி மற்றும் சாதனைகளால் முன்னோடி மற்றும் உத்வேகமானவராக மாறினார்.

வைஷாலி..

# விளையாட்டு



# அறுவரிடம் தங்கி இருக்கும் இலங்கையின் ஒலிம்பிக் கனவு

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கு இலங்கையில் இருந்து ஆறு பேர் செல்கிறார்கள். கடந்த முறை டோக்கியோவில் நடந்தபோதும் அதற்கு முன்னர் ரியோவில் நடந்தபோதும் இலங்கை சார்பில் தலா 9 பேர் ஒலிம்பிக்கில் பங்கேற்ற நிலையில் இம்முறை ஒப்பிட்டுப் பார்த்தால் பங்கேற்கும் எண்ணிக்கை குறைவுதான்.

ஆனால், கடந்த இரு முறையும் ஒலிம்பிக் சென்றவர்கள் தலா எட்டுப் பேர் நேரடி தகுதி பெறாமல் வைல்ட் கார்ட் முறையில் சென்றவர்கள். அதாவது ஒலிம்பிக்கில் திறமைக்கு அப்பால் விசேட அனுமதி பெற்றுச் சென்றவர்கள். ஆனால் இம்முறை ஒலிம்பிக்கில் பங்கேற்கும் ஆறு பேரில் நால்வர் தமது திறமை அடிப்படையில் ஒலிம்பிக் செல்கிறார்கள். இது கடந்த முறைகளை விடவும் முன்னேற்றமானது.

இலங்கையை போன்ற நாடுகளுக்கு இப்போதைய சூழலில் ஒலிம்பிக் நேரடித் தகுதி பெறுவது என்பதே பெரும் வெற்றி தான். எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி ஆரம்பித்து ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை பிரான்ஸ் தலைநகரில் நடைபெறப்போகும் ஒலிம்பிக் போட்டியில் உலகெங்கும் இருந்து 196 நாடுகளைச் சேர்ந்த 10,672 வீர, வீராங்கனைகள் பங்கேற்கப் போகும் நிலையில் இலங்கையில் இருந்து ஆறு பேர் செல்வது என்பது பெரிய எண்ணிக்கை தான்.

இருபது வயதான பூப்பந்து வீரர் விரேன் நெத்தசிங்க இலங்கை சார்பில் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற முதல் வீரராவார். இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே அவர் தகுதி மட்டத்தை பூர்த்தி செய்திருந்தார். உலகத் தரவரிசையில் தற்போது 74 ஆவது இடத்தில் இருக்கும் நெத்தசிங்க ஆடவர் ஒற்றையர் போட்டியிலேயே பங்கேற்கவுள்ளார்.

இம்முறை ஒலிம்பிக் பூப்பந்து போட்டியில் கலந்து கொள்ளும் இளம் வீரராக பதிவாகி இருக்கும் நெத்தசிங்க, இலங்கையில் இருந்து இந்த விளையாட்டுக்கு தகுதி பெறும் இளம் பூப்பந்து வீரராகவும் வரலாறு படைத்தார். அத்தோடு 2012 ஆம் ஆண்டுடில் நிலுக கருணாரத்னவுக்குப் பின்னர் ஒலிம்பிக்கிற்கு நேரடி தகுதி பெற்ற பூப்பந்து வீரராகவும் அவர் உள்ளார்.

ஒலிம்பிக்கிற்கு முன்னேறி இருக்கும் நெத்தசிங்க பதக்கம் வரை செல்வது பெரும் சவாலாக இருந்த போதும் அவருக்கு நீண்ட பயணம் இருப்பதால் இது இலங்கைக்கு எதிர்காலத்திற்கான மிகப்பெரிய முதலீடாகக் கூட இருக்கலாம்.

இலங்கை சார்பில் நீச்சல் போட்டிகளிலும் இருவர் பங்கேற்கிறார்கள். நேரடித் தகுதியன்றி வைல்ட் கார்ட் முறையிலேயே இவர்கள் பாரிஸ் செல்கிறார்கள். ஆண்களுக்கான 100 மீற்றர் பிரீஸ்டைல் போட்டியில் கைல் அபேசிங்கவும், பெண்களுக்கான 100 மீற்றர் பாக்ஸ்ட்ரோக் போட்டியில் கங்கா செனவிரத்னவும் ஒலிம்பிக் செல்லவுள்ளனர்.

24 வயதான கைல் அபேசிங்க,



2016, 2020 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற மத்தியூ அபேசிங்கவின் தம்பியாவார். தரவரிசைப் படி பார்த்தால் இலங்கையின் முதல்நிலை நீச்சல் வீரராக மத்தியூ தொடர்ந்தும் இருந்து வருகிறார். என்றாலும் வைல்ட் கார்ட் முறையில் ஒரு வீரருக்கு இரு ஒலிம்பிக் போட்டிகளுக்கு மாத்திரமே செல்ல முடியும் என்ற நிலையில் அவரால் இம்முறை பாரிஸ் போக முடியாது.

என்றாலும் நான்கு ஆண்டுகள் உபாதைக்குப் பின்னர் நீச்சல் தடாகத்திற்கு திரும்பிய கைல், ஆடவருக்கான 100 மீற்றர் பிரீஸ்டைல் போட்டியை 50.99 விநாடிகளில் முடித்து 776 உலக நீச்சல் தரநிலைப் புள்ளிகளைப் பெற்று தகுதியை நிரூபித்திருக்கிறார்.

இலங்கை மகளிர் நீச்சல் வீராங்கனைகளில் சிறந்தவராக இருக்கும் கங்கா ஒலிம்பிக்கிற்கு தேர்வு செய்யப்பட்டது ஆச்சரியம் இல்லை. அவர் பெண்களுக்கான 100 மீற்றர் பாக்ஸ்ட்ரொக் போட்டியில் 686 உலக நீச்சல் தரநிலைப் புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்.

1952 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் பங்கேற்று வருகிறது. இதுவரை தோன்றிய இலங்கையின் சிறந்த நீச்சல் வீரர் ஒருவரான ஜூலியன் போலிங் மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கிறார். என்றாலும், ஒலிம்பிக் மட்டத்தில் இலங்கை நீச்சலில் பதக்கம் ஒன்றை வெல்வதென்பது இன்றும் கூட எட்ட முடியாத சவாலாகவே இருக்கிறது. இம்முறையும் பங்கேற்பவர்கள் தகுதிச் சுற்றை தாண்டினாலே பெரும் சாதனை தான்.







அடுத்து இலங்கையின் மூன்று தடகள வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக் செல்ல தகுதி பெற்றிருக்கிறார்கள். அண்மைய மாதங்களில் ஒலிம்பிக் தகுதிக்காக இலங்கை தடகள வீரர்கள் சர்வதேச மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் இடைவிடாமல் பங்கேற்று வந்தனர். கடைசியில் மூவராலேயே ஒலிம்பிக் தகுதி மட்டத்தை பூர்த்தி செய்ய முடிந்திருக்கிறது.

இதில் பங்கேற்கும் இலங்கை வீர, வீராங்கனைகளில் சர்வதேச பட்டத்தில் சிறந்த தரநிலையை பெற்று தில்ஹானி லேகம்கே ஒலிம்பிக் செல்கிறார். இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 37 வயதான ஈட்டி எறிதல் வீராங்கனையான லேகம்கே, தமது திறமையை முழுமையாக நிரூபித்திருக்கிறார். இம்முறை ஒலிம்பிக் போட்டியில் 32 ஈட்டி எறிதல் வீராங்கனைகள் பங்கேற்றிருக்கும் நிலையில் உலக தடகள தரவரிசையில் 25 ஆவது இடத்தைப் பெற்றே ஒலிம்பிக் தகுதியை நிரூபித்தார்.

லேகம்கே கடைசியாக பாங்கொக்கில் நடந்த ஆசிய தடகளசம்பியன்சிப் போட்டியில் 60.93 மீற்றர் தூரம் எறிந்து தேசிய சாதனை படைத்ததோடு அந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றார். அண்மைக் காலத்தில் அவர் சர்வதேச போட்டிகளில் தொடர்ச்சியாக பதக்கங்களை வென்று வருபவராக உள்ளார். எனவே, லேகம்கே தொடர்பில் நம்பிக்கை வைத்திருக்க முடியும்.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு தெரிவாவதற்கான சாதனை அளவுகோலை சர்வதேச தடகள சம்மேளனம் நிர்ணயித்திருந்தது. அதற்கான காலக்கெடு கடந்த 30 ஆம் திகதி முடிவுக்கு வந்தபோது கூட இலங்கையின் ஒரு தடகள வீரரும் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றிருக்கவில்லை. என்றாலும் தரவரிசை அடிப்படையில் இலங்கையின் பெரும் எதிர்பார்ப்பாக இருக்கும் தருஷி கருணாரத்னவால் முன்னேற முடிந்தது.

மத்திய தூர ஓட்ட வீராங்கனையான தருஷி பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியிலேயே ஒலிம்பிக் தகுதி பெற்றிருக்கிறார். இந்தப் போட்டிக்கு 48 வீராங்கனைகள் தகுதி பெற்றிருக்கும் நிலையில் அந்த வரிசையில் தருஷி 44 ஆவது இடத்தைப் பிடித்தார்.

19 வயதே ஆன தருஷி இந்த வயதுக்குள் எட்டிய சாதனைகள் இலங்கை மட்டத்தில் பிரமிக்கும் வகையில் இருக்கிறது. கடந்த ஆண்டு பாங்கொக்கில் நடந்த ஆசிய தடகள சம்பியன்சிப் போட்டியின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அவர் கடந்த ஆண்டு செப்டெம்பரில் சீனாவின் ஹான்சுவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றார். அதாவது சுசந்திகா ஜயசிங்க மற்றும் தமயந்தி தர்ஷாவுக்குப் பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இலங்கையராக சாதனை படைத்தார்.

எனவே, இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பு அதிகம் இருக்கும் வீராங்கனைகளில் தருஷியை முன்னிலைப் படுத்த முடியுமாக இருக்கும்.

இலங்கைக்காக ஒலிம்பிக் செல்ல கடைசி வீரராக அருண தர்ஷன தகுதி பெற்றார். அவர் ஒலிம்பிக் தகுதி பெறுவதற்கான திறமை பட்டத்தை காண்பிக்கத் தவறிய போதும் பங்கேற்கும் வீரர்களின் தரவரிசையில் கடைசி நேரத்தில் உள்வாங்கப்பட்டார்.

அவர் இடம்பெறும் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் 48 வீரர்கள் மாத்திரமே பங்கேற்க முடியும் என்ற நிலையில் அவர் 47 ஆவது வீரராக இடம்பிடித்தார். என்றாலும் கடந்த 20 ஆண்டுகளில் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கும் முதல் இலங்கை வீரராக அவர் இருக்கிறார்.

25 வயதான அருண தர்ஷன இலங்கை சார்பில் கனிஷ்ட தெற்காசிய சம்பியன்சிப் (2018), கனிஷ்ட ஆசிய சம்பியன்சிப் (2018), உலக கனிஷ்ட சம்பியன்சிப் (2018), ஆசிய விளையாட்டுப் போட்டி (2018, 2023), தெற்காசிய விளையாட்டுப் போட்டி (2018), ஆசிய சம்பியன்சிப் (2023) மற்றும் உலக சம்பியன்சிப்பில் (2023) பங்கேற்று பதக்கங்களை வென்றிருக்கிறார்.

இலங்கையில் தோன்றி சிறந்த 400 மீற்றர் ஓட்ட வீரரான சுகத் திலகரத்னவின் இடைவெளியை நிரப்பும் வீரர்களில் ஒருவராக அருணவை குறிப்பிடலாம். அவர் ஒலிம்பிக் வரை முன்னேறி இருப்பது பெரும் சாதனை தான்.

எவ்வாறாயினும் இலங்கையின் பெரும் எதிர்பார்ப்பாக இருந்த யுபுன் அபேகோன் ஒலிம்பிக் செல்ல கடைசி வரை போராடிய போதும் அவரால் தகுதி மட்டத்தை எட்ட முடியவில்லை. இத்தாலியில் வசிக்கும் அவர் கடைசியாக இலங்கை வந்து தேசிய போட்டிகளில் பங்கேற்று தகுதி மட்டத்தை அடைய முயன்றபோதும் உபாதை தான் ஏற்பட்டது. ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக் தகுதிக்கு 10 விநாடிகளுக்குள் ஓடி முடிக்க வேண்டும் என்ற நிலையில் யுபுன் அந்த இலக்கை நெருங்கி வந்தபோதும் எட்ட முடியாமல் போய்விட்டது.

அதேபோன்று ஈட்டி எறிதல் வீரர் ருமேஷ் தரங்க இந்தப் பருவத்தில் உலகில் அதிக தூரம் எறிந்த வீரர்களில் 10 ஆவது இடத்தில் இருந்தபோதும் பாரிஸ் தகுதி மட்டத்தை பூர்த்தி செய்ய முடியாததால் ஒலிம்பிக் செல்ல முடியாமல் போனது துரதிருஷ்டமானது. தவிர, ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டத்திலும் இலங்கை அணி ஒலிம்பிக் எதிர்பார்ப்பை நெருங்கியபோதும் வாய்ப்புப் பெறவில்லை.

ஒலிம்பிக் வரலாற்றில் கடந்த 40 ஆண்டுகளில் இலங்கையின் மிகக் குறைவான பிரதிநிதித்துவம் இதுவாகும். 1956 (மெல்பேர்ன்) மற்றும் 1968இல் (மெக்சிகோ சிட்டி) தலா மூன்று பேர் மாத்திரம் பங்கேற்றது இந்த வரிசையில் மிகக் குறைவாக உள்ளது.

2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கிலேயே இலங்கை சார்பில் அதிகபட்ச வீர, வீராங்கனைகள் பங்கேற்றார்கள். அப்போது 18 பேர் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்ததோடு முதல் முறையாக இலங்கை ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டம் மற்றும் பெண்களுக்கான 400 அஞ்சலோட்ட அணிகளும் பங்கேற்றன. இந்தப் போட்டியிலேயே சுசந்திக்கா ஜயசிங்க பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் வென்று தந்தார். அது 1948 இல் டன்கன் வைட் வெள்ளிப்பதக்கம் வென்றபின் இலங்கை வென்ற முதல் ஒலிம்பிக் பதக்கமாக இருந்ததோடு இதுவரை இலங்கை இந்த இரண்டு பதக்கங்களையுமே ஒலிம்பிக் வரலாற்றில் வென்றிருக்கிறது.

பதக்கம் வெல்வது ஒருபக்கம் இருக்க ஒலிம்பிக்கிற்கு தகுதி பெறுவதே நாளுக்கு நாள் குதிரை கொம்பாக மாறி வருகிறது. ஒலிம்பிக் தகுதிக்கான தகுதி மட்டத்தை நாளுக்கு நாள் இறுக்கி வரும் சர்வதேச ஒலிம்பிக் குழு வைல்ட் கார்ட் முறையையும் குறைத்து வருகிறது.

எனவே, ஒலிம்பிக் தகுதிக்காக வீரர்களை தயார் செய்யும் வேலையை இப்போதை விடவும் தீவிரப்படுத்தினாலேயே எதிர்காலத்தில் ஒலிம்பிக் செல்வது கூட சாத்தியமாக இருக்கும்.

**எஸ்.பிர்தௌஸ்...**





# வனிந்து ஹசரங்கவுக்கு அடுத்து யார்?



வனிந்து ஹசரங்க இலங்கை டி20 அணித் தலைமை பொறுப்பில் இருந்து விலகியது ஒரு திடீர் முடிவாக இருந்தாலும், அதனை தூண்டிய காரணங்கள் பல இருக்கின்றன.

அண்மையில் நடந்த டி20 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி ஆரம்ப சுற்றில் வெளியேறியது எல்லாவற்றுக்கும் முதன்மையானது. அணியின் பயிற்சி ஆலோசகர் மஹேல ஜயவர்தன, தலைமை பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் பதவி விலகியதன் தொடர்ச்சியாகவே ஹசரங்கவின் முடிவு இருக்கிறது.

என்றாலும் ஹசரங்கவின் முடிவு பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று அல்ல. 26 வயதாக இருக்கும் ஹசரங்க தலைமைப் பொறுப்பை ஏற்று ஓர் ஆண்டு கூட இல்லை. அவருக்கு தலைமை பதவியில் தொடர்வதற்கான சாத்தியங்களும் அதிகமாகவே இருந்தன.

என்றாலும் இந்த சொற்ப காலத்தில் அவர் தலைவராக பெரும் விமர்சனங்களை சந்திக்க வேண்டி இருந்ததோடு, நடத்தைப் பிரச்சினைகள் மற்றும் ஊடகங்களை எதிர்கொள்வதிலும் சர்ச்சைகளைச் சந்தித்தார்.

கடந்த 2023 டிசம்பரில் டி20 அணித் தலைமை பொறுப்பை ஏற்ற ஹசரங்க இதுவரை 10 போட்டிகளில் அணித் தலைவராக செயற்பட்டு 6 போட்டிகளில் அணிக்கு வெற்றி தேடித் தந்திருக்கிறார். இடையே நடுவருடன் மோதலில் ஈடுபட்டு இரண்டு போட்டிகளில் தடையையும் எதிர்கொண்டார்.

ஹசரங்க மைதானத்திலும் அதற்கு வெளியிடும் அதிரடியாக முடிவுகளை எடுப்பதில் பிரபலமானவர் என்பதற்கு அவரது இராஜினாமாவே நல்ல உதாரணம்.

இப்போதிருக்கும் பெரிய கேள்வி, இலங்கை டி20 அணித் தலைமை பொறுப்பை யாருக்கு கொடுப்பது என்பதாகும். அதுவும் டி20 உலக சம்பியன் இந்திய அணி இன்னும் ஒரு வாரத்தில் இலங்கை வந்து மூன்று ஒருநாள் போட்டிகளுடன் மூன்று டி20 போட்டிகளிலும் ஆடவிருக்கிறது.

ஏற்கனவே நிரந்தரப் பயிற்சியாளர் ஒருவர் இல்லாமல் சனத் ஜயசூரிய அணியின் இடைக்கால பயிற்சியாளராக இந்தியாவுக்கு எதிரான தொடரில் அணியை வழிநடத்தவிருக்கிறார்.

இந்த நிலையில் டி20 அணித் தலைமைப் பொறுப்புக்கு இப்போதிருக்கும் வெளிப்படையான தேர்வு உப தலைவர் சரித் அசலங்க. வரிசைப்படி பார்த்தால் அவருக்குத் தான் அந்தப் பொறுப்பு சேர வேண்டும். என்றாலும் இத்தனை விரைவாக அவருக்கு பொறுப்பை வழங்குவது பற்றி இரண்டு முறை ஆலோசிக்கப்படலாம்.

வனிந்து இடைநிறுத்தப்பட்டபோது ஹசரங்க தான் இரண்டு போட்டிகளில் இலங்கை அணியின் தலைவராக செயற்பட்டார். இந்த ஆண்டு லங்கா பிரீமியர் லீக் தொடரில் ஜப்னா கிஹ்ஸ் அணியின் தலைவராகவும் அவர் செயற்படுகிறார். எனவே அணித் தலைவராக அவருக்கு அனுபவம் இல்லை என்று குறிப்பிட முடியாது.

இல்லாவிட்டால் இலங்கை ஒருநாள் அணித் தலைவர் குசல் மெண்டிஸிடம் டி20 அணித் தலைமை பொறுப்பையும் வழங்கிவிடலாம். என்றாலும் 29 வயதான குசல் மெண்டிஸின் ஆட்டப் போக்கு ஸ்திரமாக இல்லை என்பதோடு டி20 தலைமைப் பொறுப்பை அவருக்கு வழங்குவதாக இருந்தால் வனிந்துவுக்கு முன்னரே அவரது பெயர் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இவர்களைத் தாண்டி இளம் வீரர் ஒருவராக அணியில் ஸ்திர இடம் பிடித்திருக்கும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்கவும் தலைமைப் போட்டியில் இருப்பவராக எடுத்துக்கொள்ளலாம்.

எப்படி இருந்தபோதும் இந்திய அணி இலங்கை வரப்போகும் நிலையில் கூடிய விரைவில் அடுத்த தலைவரை தேர்வு செய்வது அவசியமாகும்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுலை மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# தி.மு.க. அரசுக்கு நெருக்கடியா?

தமிழ்நாட்டில் ஆளும் தி.மு..க அரசுக்கு நெருக்கடி கொடுக்க அதிர்ச்சி தரும் விதமாக இரண்டு நிகழ்கள் புயலைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. ஒன்று கள்ளக் குறிச்சி விஷசாராயம் குடித்து 61 பேர் இறந்த துயர நிகழ்வு. இன்னொன்று பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங்கின் படுகொலை. இரண்டுமே தமிழ்நாட்டை சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று எதிர்க்கட்சியினரும், சமூக ஆர்வலர்களும் குரல்கொடுத்து வருகின்றனர். சட்டம் ஒழுங்கை கையில் வைத்திருக்கும் தமிழ்நாட்டு முதலைமைச்சர் மு.க.ஸ்டாலின்தான் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினார் கடுமையாக கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

றைவாக இருந்ததாலேயே இந்தப் படுகொலை நடந்திருக்கிறது என்ற காவல் துறையினரின் நியாயத்தையும் புறந்தள்ளிவிட முடியாது, எனினும் ஒரு கட்சியின் தலைவருக்கே இங்கே பாதுகாப்பு இல்லாதபோது சாதாரண மக்களுக்கு எப்படி பாதுகாப்பு கிடைக்கும் என்று பொதுமக்கள் எழுப்பும் கேள்வியும் நியாயமானதாகவே பார்க்கவேண்டியுள்ளது.

தற்போது சென்னை பெருநகர காவல் ஆணையராக, சட்டம் ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பியாக இருந்த ஏ. அருண் நியமிக்கப்பட்



பகுஜன் சமாஜ் கட்சியின்தேசியத்தலைவர் மாயாவதி இரங்கல் தெரிவித்து விட்டு செய்தியாளர்களை சந்தித்த போது தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை அதனால் தான் இது போன்ற கொலைகள் நடைபெறுகின்றன.

ஆம்ஸ்ட்ராங் கொலையில் சிலரை கைது செய்திருப்பதாக காவல்துறை கூறுகிறது. ஆனால், உண்மையான குற்றவாளிகளை இன்னும் பிடிக்கவில்லை, தமிழக அரசு இன்னும் கூடுதலாக செயற்பட்டிருந்தால் உண்மையான குற்றவாளிகளை பிடித்திருக்கலாம் என்று கூறியிருக்கிறார், அப்படியானால் குற்றவாளிகள் இன்னும் பிடிபடவில்லையா? அவர்களுக்கு அரசியல் பின்னணி எதுவும் இருக்குமா? என்ற சந்தேகமும் எழுகிறது. தி.மு.க.வுக்கு இது போன்ற நெருக்கடிகள் கூடிக் கொண்டே போவது 2026 சட்டமன்றத்தேர்தலிலும் எதிரொலிக்கவும் வாய்ப்பு இருக்கலாம் என்ற சூழலும் தற்போது நிலவுகிறது.

இதேபோல கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் குறித்து . தமிழ்நாடு முழுவதும் பேசு பொருளாகியதோடு . ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் இது தொடர்பாக விவாதங்கள் நடந்து வந்தன. குடிப்பழக்கத்தை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது

2026 ஆம் ஆண்டுவர இருக்கும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட சதியாகக்கூட இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ஆனால், இரண்டு நிகழ்வுகளிலும் விரைவாக நடவடிக்கை எடுத்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ள தி.மு.க அரசைப் பாராட்ட வேண்டும். குற்றங்கள் நிகழ்வது எதார்த்தம் என்றாலும், குற்றத்தின் பின்னணியை முழுமையாக அறியாமல் ஆளும் கட்சி மீது குற்றம் சுமத்துவதும் நியாமில்லை.

இரண்டு நிகழ்வுகளிலும் காவல்துறை சரியாக கண்காணிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுத்ததால் முதலைமைச்சர் சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்து காவல் துறையில் முக்கிய பொறுப்பில் இருந்தவர்களை பணியிடை மாற்றம் செய்துள்ளார். ஆனால், என்ன நடிவடிக்கை எடுத்தாலும், தி.மு.க அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவில்லை என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் திரும்பத் திரும்ப முன் வைத்துக் கொண்டே இருக்கின்றன.

பகுஜன்சமாஜ்கட்சியின்தலைவர் ஆம்ஸ்ட்ராங்கின் படுகொலை பழி வாங்கும் நோக்கில் திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது, உளவுத்துறையால் எச்சரிக்கை செய்யப்பட்ட நிலையிலும் அவர்கள் கவனக்கு

டுள்ளார். இவர் செய்தியாளர்கள் சந்திப்பின் போது கூறியதாவது, சென்னை மாநகரத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முன்னுரிமை அளிக்கப்படும், நடந்த குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், குற்றங்கள் நடக்காமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ரவுடிகளை கட்டுப்படுத்துவதே என் முதல் பணியாக இருக்கும். காவல் துறை கடமையை சரியாக செய்தாலே குற்றங்கள் குறையும், ரவுடிகளுக்கு எந்த மொழி புரியுமோ அந்த மொழியில் நடவடிக்கை எடுக்கப்படும், என்னை நம்பி இந்தப் பொறுப்பை ஒப்படைத்த முதல்வரின் நம்பிக்கையை நிச்சயம் காப்பாற்றுவேன், என்று உறுதி கொடுத்திருக்கிறார், இதே நேரத்தில் காவல் துறையில் மாற்றங்கள் செய்வதால் மட்டும் குற்றங்கள் குறைந்துவிடுமா? ஏற்கனவே இருந்த காவல் துறை அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று கேள்வி எழுவதையும் மறுத்து ஒதுக்க முடியாது.

பொதுமக்கள் தலைக்கவசம் போடாமல் இரு சக்கர வாகனத்தில்போகும் போது மறைந்திருந்து பிடிக்கும் காவல் துறையினர் கொலைக் குற்றவாளிகளை பிடிக்க முடியவில்லையே ஏன்? என்று பொதுமக்களும் கேள்வி எழுப்பி வருகின்றனர், ஆம்ஸ்ட்ராங் மறைவுக்கு அஞ்சலி செலுத்த வந்த

என்பது தான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது, ஏனென்றால் இங்கே மதுவால் சீரழிந்த குடும்பங்கள் கொஞ்சமல்ல, மதுவுக்கு அடிமையானவர்களை நல்வழிப் படுத்துவது நன்மை தரும் என்ற அடிப்படையில் செயலாற்ற அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவதில்லை.

அரசியில் கட்சிகள், அரசியலாகவே இருக்கிறது. அது மக்கள் அரசியலாக செயல்படவில்லை, ஒருமித்த கருத்துடன் கட்சிகளைக் கடந்து சிந்தித்து செயல்பட வேண்டும் என்ற கருத்தினை சில தலைவர்கள் முன்வைத்தாலும், ஒன்று படுவதற்கான சூழல் கட்சிகளிடம் இல்லை, மக்கள் நலனைவிட ஆட்சி அதிகாரம் என்பது மட்டுமே கட்சிகளின் நோக்கமாக இருக்கும் போது, மக்கள் எவ்வாறு நலம்பெறுவார்கள்? மக்கள் தங்கள் உரிமையை நிலை நாட்ட தங்களிடம் இருக்கும் ஒரே ஆயுதம் வாக்குகள் மட்டுமே. இதை வைத்து தங்களுக்கான ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கலாம், ஆனால், தங்களுக்கான அதிகாரத்தை கைப்பற்ற முடியாது, அதற்காக ஆட்சியாளர்களும் மக்களை எப்படி வேண்டுமானாலும் சிதைக்கலாம் என்றும் எண்ணக் கூடாது, மக்கள் மனது வைத்தால் மாற்றத்தைக் கொண்டு வரலாம். ஆட்சியில் மட்டுமல்ல தங்கள் வாழ்க்கையிலும்.

மஞ்சரி சிறுகதை

# உன் நினைவுகளோடு நான்...

சமூகவலைத்தளம் ஒன்றில் புதிய நட்புகளைத் தேடி அலைகிறான் நபீஸ். நபீஸ் துபாயில் ஒரு கன்ஸ்ட்ரக்சன் கம்பனியில் ஒபீஸ் போயாகப் பணி செய்கிறான். அவனுக்கு என்று ஒரு கணினியும், தொலைபேசியும் அவனது பணிக்காக கொடுக்கப்பட்டிருந்தன. நிறுவனப் பணியும், சமூகவலைத்தளங்களை மேய்வதுமாக அவனது உத்தியோக நேரங்கள் கழிந்தன.

அப்படித்தான் அன்று ஒரு நாள் சமூகவலைத்தளம் ஒன்றில் புதிய உறவுகளைத் தேடி அலையும்போது 'லரீனா' என்ற பெண்ணுடன் கதையளக்க நேரிட்டது. "உங்களது நாடு எது?" என்று லரீனா வினவினாள். நபீஸ் "இலங்கை" என்றான். அவளும் "நானும் இலங்கைதான்" என்றாள். "இலங்கையில் எங்க?" என்று வினவினாள் லரீனா. நபீஸ் "பேருவளை" என்றான். "அல்ஹுமைஸராவிலா படித்தீங்க" என்று அவள் கேட்டாள். நபீஸ் "ஆம்" என்று பதில் சொன்னான். "அந்த ஸ்கூல்ல படிச்சிக் கொடுத்த நியாஸ் மாஸ்டரின் தாத்தாவின் மகள்தான் நான்" என்றாள் லரீனா. "நியாஸ் மாஸ்டர்!" அவர் பிரய்ன் டியுமர் நோயாளி அவர் மௌதாஹி விட்டார் அப்படித்தானே" என்று அவளை நபீஸ் கேட்டதற்கு "ஆம்" என்றாள் லரீனா.

இருவருக்கும் இன்பொக்ஸ் செட்தான் போய்க் கொண்டிருந்தது. தன்னுடன் செட் செய்வது ஒரு பெண்தான் என்று உறுதி செய்து கொண்டான் நபீஸ். "உங்கட மொபைல் நம்பர தரமுடியுமா?" என்று தயங்கியவாறு கேட்டான் நபீஸ். அவள் சிரிப்பு அடையாளம் ஒன்றைப் பதிலாக அனுப்பினாள். சில நிமிடங்களாக அவளிடமிருந்து பதில் ஏதுமில்லை. என்னை அவள் தவறாக நினைத்து விட்டாளோ? என்ற வெட்கம் அவன் மனதை ஆட்கொண்டது. "ஹாய் ! ஹாய்! சொரி, சொரி" என்று பலதடவைகள் அனுப்பி வைத்தான். பதில் இல்லை. பத்து நிமிடத்தின் பின் அவள் "ஹாய்!" என்றாள். மீண்டும் நான் "சொரி" என்றேன். அதற்கு அவள் "எதற்கு சொரி" என்று கேட்டாள். "நான் உங்களது நம்பர் கேட்டதற்கு" என்றான் நபீஸ். அவள் மீண்டும் சிரிப்பு அடையாளத்தை அனுப்பினாள்.

"நான் கோபிக்கவில்லை" என்றாள் லரீனா. "அப்ப ஏன் பதிலை தாமதப்படுத்தினீர்கள்" என்று வினவினான் நபீஸ். "நான் வொஷ்ரூம் போயிருந்தேன்" என்றாள் அவள். "உங்களது தொழில் என்ன?" என்று நபீஸை அவள் மேலதிகமாக விசாரித்தாள். "நான் துபாயில் பணிசெய்கிறேன்" என்றான் நபீஸ். "அப்படியா நான் அல்அய்ன் யூனிவஸிடியில் படிக்கிறேன்" என்றாள் லரீனா. (யூஏஇ இன் இரு மாநிலங்கள் துபாய், அல்எய்ன்) இருவரும் மிக நெருக்கமாகி விட்டதாக இருவரும் உணர்ந்தார்கள். ஓபீஸ் பணிமுடிந்து எல்லோரும் விடை பெற்ற பின்னும் நபீஸ் ஓபீஸில் இருந்து கொண்டு லரீனாவுடன் செட் பண்ணிக் கொண்டே இருந்தான. அது இஷா வரை தொடர்ந்தது. ரூமுக்குப் போகும் நேரமும் நெருங்கியது. "நேரமாச்சு நான் போறன்" என்றான் நபீஸ். "ஓகே! நாளை சந்திப்போம்"என்று டைப் செய்துவிட்டு அவள் அவளது தொலைபேசி எண்ணையும் அனுப்பி வைத்தாள். நபீஸுக்கு கையும் ஓடல்ல காலும் ஓடல்ல அவ்வளவு சந்தோசம். "தேங்ஸ்" என்று டைப் பண்ணினான் நபீஸ். ஆனால் அவள் ஒன்லைனில் இருந்து மறைந்திருந்தாள். நபீஸ் ஓபீஸை விட்டு ரூமை நோக்கி நடந்தான்.

அவள் யூனிவஸிடியில் படிப்பதால் மாலையிலேதான் அவளை தொடர்பு கொள்ள முடிந்தது. மாலையானால் இருவரும் தொலைபேசியில் உரையாடுவார்கள். இது ஒரு மாதகாலமாகத் தொடர்ந்தது.இருவரும் உள்ளே காதலை வைத்துக் கொண்டு வெளியே நட்பாகத் தான் தமது உறவைத் தொடர்ந்தார்கள். நபீஸ் துபாயில் சிறந்த வருமானம் உள்ள தொழிலையே செய்வதாக அவள் ஊகித்திருந்தாள். இதுவரை நபீஸின் தொழில் பற்றி அவள் விசாரித்ததே இல்லை. நபீஸிடம் தன்னை ஒரு ஒபீஸ் போயாக காட்டிக் கொள்ள விருப்பம் இருக்கவில்லை. தொலைபேசி உரையாடல்கள் இருவருக்கும் சுவாரசியமாக இருந்தது. வரம்பு மீறாமல், வடிந்துவிழாமல் சுயகௌரவம் மீறாமல் ரொமான்ஸ் கலந்த சம்பாசணைகளை இருவரும் பகிர்ந்துகொண்டனர். இருவரும் உச்ச காதலில் இருந்தனர். ஆனால் இருவரும் அவசரப் பட்டுக் கொள்ள வில்லை. " இதுவரை நீங்க என்ன



தொழில் செய்ர எண்டு சொல்லவில்லையே" என்றாள் லரீனா. "நான் ஒபீஸ் போயாக பணி செய்கிறேன்" என்றான் நபீஸ்.

லரீனாவின் எதிர்பார்பில் பாராங் கல் விழுந்ததாக உணர்ந்தாள். ஒரு கணம் மௌனித்தாள். "என்ன பேசல்ல" என்றான் நபீஸ். "சும்மாதான்" என்றாள் லரீனா. இருவரினதும் சம்பாசணைகளும் நலிவடையத் தொடங்கின. லரீனா மனம் உடைந்துவிட்டாள் என்று நபீஸ் புரிந்து கொண்டான். சுவாரசியமான இருவரினதும் உரையாடல்களில் 'இன்டரப்சன்' வந்து போனது.

மறுநாள் அவளுக்கு தொலைபேசி எடுத்தான் நபீஸ். அவள் பேசினாள். அவள் எந்தவித மனக்கசப்பையும் காட்டவில்லை. வழமைபோல் பேசினாள். ஆனால் வழமையான சூடு இருக்கவில்லை. அடுத்த வாரம் யுனிவஸிடியிலிருந்து விலகிப்போவதாக சொன்னாள். காரணம் கேட்டான். மக்காவில் உள்ள உம்முல் குரா யுனிவஸிடிக்கு மாறுவதாகச் சொன்னாள். பெற்றோரும் அல்அய்ன் வந்திருப்பதாகச் சொன்னாள். ஆதலால் பிஸியாக இருப்பதாகவும் ஒரு வாரத்துக்கு தொடர்பு கொள்ள முடியாததாகவும் பணிவாகச் சொன்னாள். சிறிது நேரத்தில் தொடர்பு துண்டித்துக் கொண்டது.

இரண்டு வாரங்கள் காத்து நின்று நபீஸ் அவளுக்கு தொலைபேசி எடுத்தான். ஒரு ரிங்கிலே அவள் பதிலளித்தாள்.

ஆனால் அந்த பதிலில் சுரத்தில்லை. வார்த்தைகள் பரிமாறப்படவில்லை. நபீஸ் மௌனத்தை உடைத்தான். "நீங்க எப்ப உம்முல் குரா போவீங்க" என்றான் நபீஸ். "நாளை பயணிக்கிறேன்" என்றாள் அவள். "அங்கு எனது கஸின் இர்பானும் படிக்கிறார்.

அவர் எனக்கு துணையாக இருப்பார்" என்றாள் லரீனா. "துணையாக இருப்பது என்றால்" என்று நபீஸ் கேட்க, "நம்ம வீட்டார் இருவருக்கும் புரபோஸ் பண்ணிட்டாங்க" என்றாள். நபீஸின் கையில் இருந்த போன் ரிஸீவர் சடார் என கீழேவிழ அவனது இதயம் தொப்பென விழுந்ததாக உணர்ந்தான்.

ஒரு வாரத்தின் பின் அவளின் நம்பருக்கு டயல் பண்ணினான். ஆனால் சுவிச் ஓப் என்று பதில் வந்தது. அவளது ஞாபகம் வரும்போதெல்லாம் அவளுக்கு டயல் பண்ணினான். இது ஒரு வருடமாகத் தொடர்ந்தது. ஆனால் ஒவ்வொரு தடவையும் சுவிச் ஓப் என்றுதான் பதில் வரும். காலப்போக்கில் அவன் அவளை மறந்தே விட்டான்.

இந்த நிகழ்வு நடந்து 10 வருடம் ஓடிவிட்டது. நபீஸுக்கு திருமணம் ஆகி இரண்டு குழந்தைகளும் உண்டு. இப்போது நபீஸ் இலங்கையில் ஐந்து வருடமாக வியாபாரம் செய்கிறான். வருடா வருடம் நுவரெலியாவுக்கு சுற்றுலா செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். இந்த வருடம் நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற வேளை ஹக்கல பூந்தோட்டத்துக்கும் நபீஸும் அவனது குடும்பமும் விஜயம் செய்து இருந்தார்கள். நபீஸும், அவளது மனைவியும் அங்கு புற்தரையில் அமர்ந்து ஓய்வெடுக்க அவர்களின் இரு சின்னஞ் சிறுசுகளும் சற்று உயர்ந்த சாய்வான புற்தரையில் ஏறியும், இறங்கியும் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். திடீரென அந்த இரண்டில் ஒரு சிறுசு அழும் சத்தம் கேட்டு நபீஸ் திரும்பிப் பார்த்தான். சாய்வான புற்தரையில் ஏறியும் இறங்கியும் விளையாடிய நபீஸின் மகன் கால் இடறி விழுந்திருந்தான்.


அவன் விழுந்த இடத்தில் இருந்த ஒரு 35 வயது மதிக்கத் தக்க ஒரு பெண் அவனது பிள்ளைக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு இருந்தாள். நபீஸ் ஓடிச் சென்று பிள்ளையை அரவணைத்து தூக்கிக் கொண்டு "தேங்ஸ்!" என்று இதமாக அவளுக்கு நன்றி சொன்னான். அந்தக் குரலைக் கேட்ட அப்பெண் பிரமித்து நபீஸைப் பார்த்தாள். "நீங்க நபீஸ்தானே" என்றாள் அவள். "ஆம் நபீஸ்தான், நீங்க யாரு" என்றான் நபீஸ். நபீஸின் வாட்டசாட்டமான உடம்பையும், ஸ்மாட்டான தோற்றத்தையும் ஒரு கணம் மௌனமாக நின்றாள். "எனக்கு உங்களைத் தெரியாது, ஆனால் உங்களது குரலைத் தெரியும்" என்றாள் அப்பெண். "அது எப்படி!" என்று நபீஸ் ஆச்சரியத்தோடு வினவினான். துபாய், அல்எய்ன், உம்முல் குரா ஞாபகமா உங்களுக்கு என்றாள் அவள். "ஆ...! லரீனா" என்று வியந்தான் நபீஸ்.

"லரீனா இவர் யாரு?" என்று கேட்டுக் கொண்டே லரீனாவின் கணவன் அங்கே வந்தான். "யாரெண்டு தெரியாது வசீம், இந்தப் புற்தரையில் விளையாடும்போது சறுக்கி விழுந்து காயப்பட்ட இந்தப் பிள்ளையின் தந்தை இவர்" என்று தன் கணவன் வசீமிடம் சொல்லிக் கொண்டு நபீஸிடமிருந்து விடைபெற்றாள் லரீனா. அந்த இடத்துக்கு நபீஸின் மனைவியும் வந்தாள். தனது பிள்ளையை தோளில் சுமந்து கொண்டாள். அவள். "யார் அந்தப் பெண்" என்றாள் அவள். "தெரியாது, விழுந்து அழுத எமது பிள்ளையை ஆறுதல் படுத்திக் கொண்டு இருந்தாள். அதற்காக நன்றி சொன்னேன் அவளுக்கு" என்றான் அவன். இத்தனை வருடமாக எனது குரலை ஞாபகம் வைத்திருக்கிறாள். அப்போ என்னை அவள் தீவிரமாக காதலித்திருக்கிறாள்.

அப்படி இருக்க திடீரென அவள் ஏன் அவளது கஸினை அவளுக்கு பிரபோஸ் பண்ணியதாகச் சொல்லி என்னைவிட்டுத் தூரமானாள். அவளது கஸின் பெயர் 'இர்பான்' தானே. எப்படி வசீமை இவள் திருமணம் செய்தாள். விடை தெரியாமல் பல கேள்விகளுடன் விழித்து நின்றான் நபீஸ்.

**எம். எப். எம் இஹ்ஸான் பேருவளை**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
## இல: 129



திரு/திருமதி.செல்வி ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

.............................. ..............................

திகதி கைியொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 129
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 129

### இடமிருந்து வலம்

1. மகன்
5. ஓர் உறுப்பு
7. இரண்டு
8. போரின் பின் ஏற்படும் அமைதி நிலை
10. முன்பு நடைமுறையிலிருந்த தூரத்தை கணக்கிடும் அளவுமுறை
11. மரக்கோல் அல்லது தடி என்றும் குறிப்பிடலாம்.
12. முகம்
14. இனிப்புச் சுவையுள்ள ஒரு தாவரம்
16. கால்நடைகளின் தொகுதி (திரும்பியுள்ளது)
17. பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதி
19. ஒரு காரியத்தைச் சாதிக்க கையாளும் சாமர்த்தியமான வழிமுறை (குழம்பியுள்ளது)
21. அறிவு, புத்தி
22. பெரும் விருட்சங்களுள் இதுவும் ஒன்று
23. ஒன்றை நிர்வகிக்கும் முதன்மைப் பொறுப்பு (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. பழையமுறையிலிருந்து மாறுபட்டது
2. ஒரு வாத்தியக் கருவி
3. இளவேனில் காலம்
4. சாதுவான காட்டு மிருகம்
5. பாடலிசை
6. கயிறு தயாரிப்புக்குரிய மூலப்பொருள்
9. நீர் அருந்தத் தூண்டும் உணர்வு
12. ஒருவருக்கு இன்னொருவருடமிருந்து வரவேண்டிய பணத் தொகை
13. உலகம் (குழம்பியுள்ளது)
14. கிழிந்த துணி
15. கணவன் – மனைவி குழம்பிவிட்டார்கள்.
16. இரவில் இரை தேடும் இதுவும் ஒரு பறவைதான் (தலைகீழ்)
18. அறியாமை (குழம்பியுள்ளது)
20. மன்மதனின் மனைவி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 128

## விடைகள்

### மேலிருந்து கீழ்

| | |
|---|---|
| 1. நிபந்தனை | 12. பரதன் |
| 2. பங்கம் | 14. தேசம் |
| 3. ராகம் | 16. வலி |
| 4. திருடன் | 19. புகழ் |
| 6. சிகை | 20. தோல் |
| 8. கானகம் | 22. அலி |
| 10. மன்னன் | 24. பகை |

### இடமிருந்து வலம்

| | |
|---|---|
| 1. நிரபராதி | 17. சமம் |
| 5. நிசி | 18. தகவல் |
| 7. கங்காரு | 21. தேன் |
| 9. கன்னடம் | 22. அன்பு |
| 11. தரம் | 23. தொகை |
| 13.கன்னம் | 25. பாழ் |
| 15. பனை | 26. பட்சி |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 128

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **சித்தி அயிஷா**<br>இல 11/26 ஏ ,<br>வித்தியாலய வீதி<br>பதுளை | **ரீ. ஜெயசீலன்**<br>291/3 கல்தேமுல்ல வீதி<br>மொரட்டுவை | **எம்.ஏ. நஜுமுத்தீன்,**<br>155, அம்பாறை வீதி,<br>அக்கறைப்பற்று 04 |

### பாராட்டு பெறுவோர்

**1என்.கே. வேணி**
பலாங்கொடை

**2. வசந்தா பாலேந்திரன்**
கொழும்பு 06

**3. எம்.எச்.எம். பாஸி**
ரஜவெல்ல

**4. ஏ.டபிள்யூ.எம். நியாஸ்**
மாவனல்லை

**5. எம்.எச்.சீ.என். ஹம்தா**
வெலிமட

**6,. சுல்பா முனாசீர்**
அட்டுளுகம

**7. எம்.ஏ. முஹன்னீத்,**
அட்டாளைச்சேனை

**8. எஸ்.ஜனன்யா,**
வவுனியா

**9. எம்.எஸ். அமீர்,**
தெஹிவளை

**10. எப்.ஆர்.ஏ. ஷக்கூர்**
மாவனல்லை

# வாரபலன்



14.07.2024 - 20.07.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பிடிக்கும். வீண் குற்றச் சாட்டுகளில் இருந்து விடுபடுவீர்கள். சுபநிகழ்ச்சிகளில் இருந்த தடைகள் அகலும். புதிய வீடு வாகன சேர்க்கை ஏற்படும். பணத் தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும், அதை சாதுர்யமாக சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத் தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. உறவினர்கள் மூலம் நன்மைகள் கிடைக்கும். குழந்தை செல்வம் இல்லாதவர்களுக்கு நல்ல செய்தி வரும். பெண்கள் வீண் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயல்பட டுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மெத்தன போக்கு காணப்படும். பெற்றோர் ஆசிரியர்கள் ஆதரவாக இருப்பர். கலைத்துறையினருக்கு ஏற்றமான காலமாக இருக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

*வீண் செலவு ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்கும் விதத்தில்* வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல், அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படும். சரியான நேரத் தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த கடன் சுமை நீங்கும். பங்குதாரர்களுக்குள் இருந்த வேற்றுமை அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற பிரச் சினைகள் உருவாகலாம். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்கள் கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதற விடலாம். கலைத்துறையினருக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரிடலாம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலன்கள் கிடைக்கும். எடுத்த முயற் சிகள் அனைத்தும் வெற்றி பெறும். பொருளாதார முன்னேற்றம் பணவரவில் திருப்தி ஆகியவை இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். லாபம் கூடும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக் கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். உறவி னர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பர். பெண்கள் எடுத்த காரி யத்தை திறமையாக செய்து முடிப்பர். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும். பாடங்கள் படிப்பதில் நாட்டம் அதிகரிக் கும். கலைத்துறையினருக்கு வீண்செலவு உடல்நல பாதிப்பு ஏற்ப டலாம் கவனம் தேவை.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்வீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். எதிர்பார்த்த ஆர்டர் சீராகக் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, கூடுதல் பொறுப்புகள் உண் டாகலாம். சக ஊழியர்கள் ஆதரவுடன் எடுத்த வேலையை சரியான நேரத்தில் முடித்து நல்ல பெயர் வாங்குவீர்கள். குடும் பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சினை களும் சரியாகும். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைப்பட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் வெற்றிபெறும். நீண்ட நாட்களாக இருந்து வந்த தேக்க நிலை மாறும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

நல்ல பலன்கள் உண்டாகும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பய ணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதான மான போக்கு காணப்படும். எந்தவொரு விஷயத்திலும் அதீத கவனம் தேவை. முக்கியமான ஒப்பந்தங்களில் கையெழுத்தி டும் போது ஆவணங்களை சரி பார்க்கவும். உத்தியோகத்தில் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. குடும்பத்தில் எதிர் பாராத செலவுகள் உண்டாகும். தந்தையின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். பெண்க ளுக்கு பயணங்களால் அலைச்சல் உண்டாகும். மாணவர்க ளுக்கு தடைகளை தாண்டி கல்வியை கற்கச் செய்யும் முயற் சிகள் வெற்றி பெறும். கலைத்துறையினருக்கு இருந்த மன குழப்பங்கள் நீங்கும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த தடங்கல்கள் அகலும். மனக்கவலைகள் நீங்கும். சொன்ன வார்த்தையை காப்பாற்றி நன்மதிப்பு பெறுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறை எண்ணங்கள் உதிக்கும். தொழில் வியா பாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக் குகளை கையாளும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் பணிகளை சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டா கும். குடும்பத்தினரால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. உறவி னர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. பெண்களுக்கு தேவை யற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன் னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். கலைத் துறையினருக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

மங்கள காரியங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். புதிய புதிய முதலீடுகளை செய்வீர்கள். வேலை பளு காரண மாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியா பாரத்தில் பங்குதாரர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள் மேலதிகாரிக ளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். பதவி உயர்வு, பணி இடமாற்றம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தினரால் திடீர் பிரச்சினைகள், வாக்குவாதம் உண்டாகும். பெண்க ளுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு அதிகரிக்கும். மாண வர்கள் அடுத்தவரை பற்றிய விமர்சனங்கள், கிண்டல், கேலி பேச்சு போன்றவற்றை தவிர்த்து கல்வியில் கவனம் செலுத் துவது நல்லது. கலைத்துறையினருக்கு வேலைப்பளு ஏற்ப டும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல்கள் தீரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி, உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். கடன் பிரச்சினை கட்டுக்குள் இருக் கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சினையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடு வார்கள். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப் படும். பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். பயணங்களின் போது கவனம் தேவை. மாணவர்களுக்கு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. கலைத்துறையினருக்கு நன்மைகள் கிடைக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

தேவையற்ற மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களி டம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சினை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்ப டும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. யாருக்கும் ஜாமீன் கையெழுத்து இடுதல் கூடாது. உத்தியோ கத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடு கள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். நீண்ட காலமாக நிலவி வந்த வெறுமை நிலை மாறும். பெண்கள் கோபத்தை கட்டுப்படுத்துவதும், வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நன்மை தரும். மாணவர்கள் சக மாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் குவியும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட் டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். தேவை யற்ற பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வீண் கனவுகள் தோன்றும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில் முன் னேற்றம் தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத் தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விஷயத்திற்காக கூட அலைய வேண்டி இருக்கும். பணிச்சுமை காரணமாக திடீர் கோபம் உண் டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு சரியாகும். வாக்குவாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமல் செல்வது நன்மை தரும். பெண்கள் கொடுத்த வாக்கை காப் பாற்ற பாடுபடுவர். மாணவர்களுக்கு நிதானத்தை கடைப்பி டிப்பது வெற்றிக்கு உதவும். கலைத்துறையினருக்கு புதிய ஒப் பந்தங்கள் கிடைக்கும். மனதில் இருந்து வந்த குழப்பங்கள் அகலும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். தைரியம் உண்டாகும். சுபச்செ லவுகள் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான செல வுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும், புதிய ஆர்டர்கள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். உத்தியோகத் தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். திடீர் உத்தியோக மாற்றம் ஏற்படலாம். குடும்ப செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வரவேண்டியவை தாமதப்படும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பெண்கள் மற்றவர் கள் நலனை அக்கறையுடன் கவனிப்பர். வீண் அலைச்சல் உண் டாகும்.பொழுது போக்கில் நாட்டம் அதிகரிக்கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதற்கு கூடுதல் நேரம் ஒதுக்குவது நல்லது. புத்தி கூர்மையுடன் செயல்படுவது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவும். கலைத்துறையினருக்கு பயணங்கள் இருக்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். தொழில், வியாபாரம், இலாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக பலன் தரும். பயணம் மூலம் வியாபாரம், தொழில் விரிவாக்கம் பெறும். பழைய பாக்கிகள் வசூலாகும். நிதி நிலைமை உயரும். உத் தியோகத்தில் இருப்பவர்கள் செயல்திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண முயற்சியில் சாதகமான பலன் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்தினர்கள் வருகை இருக் கும். பெண்களுக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி உண்டாகும். விளையாட்டுகளில் ஆர்வம் உண்டா கும். கலைத்துறையினருக்கு காரியங்களில் வேகம் பிடிக்கும். மனதில் தைரியம் பிறக்கும்.

# 11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 43

# மலேசியாவில் நான் சந்திக்க தவறிய மனிதர் மு. வரதராஜ்

இந்தியாவிற்கும் மலேசியாவிற்குமான இடைத் தொடர்பு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே ஆரம் பித்திருக்கிறது. கிறிஸ்துவின் பிறப்பின் தொடக்கத் தில் இருந்தே ஆன்மிக நடவடிக்கைகள், வர்த்தக நடவடிக்கைகள் என்றவாறு இரு நாடுகளுக்குமிடை யிலான தொடர்பு வலுவாகவே அமைந்திருக்கிறது. கி.பி இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் 11ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் மன்னர்களின் ஆட்சியே நிலவியுள்ளதாக வரலாற்று ஆய்வாளர் கள் குறிப்பிடுவார்கள். கடாரம் என்ற பெயருடன் திகழ்ந்த நிலையிலேயே மலாயா எனும் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. “மலேசிய பண்பாட்டில் இந்திய பண்பாடு என்பது மிகத் தொன்மைக்காலம் தொட்டே இரண்டறக் கலந்து வந்துள்ளது. மலாயர் களின் அரச சபை சடங்குகளில் இந்துமத சடங்கு களின் தாக்கத்தை உணரக் கூடியதாக இருந்தது. நவீன மலாய மொழியின் தந்தையெனப் போற் றப்படும் முன்சி அப்துல்லாவின் பழைய பெயர் சின்னசாமி உபாத்தியாயர். காலப்போக்கில் ஏற் பட்ட இஸ்லாமிய பண்பாட்டின் வளர்ச்சியால் அரச சபைகளில் இந்துமத சடங்குகள் முற்றாக தகர்த்தது எனலாம்.” என்ற லெனின் மதிவானத்தின் கூற்று கவனிக்கத்தக்கது. (மலேசிய தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள். சில அவதானிப்புகள், எனும் நூலில் இருந்து)

காலத்தால் முற்பட்ட மலேசியத் தமிழர்கள், மத பண்பாட்டில் மாற்றங்களை தம்முள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றின் தொடக்கத்தில் அவ்வப்போது ஏற்பட்ட இந்தியர்களின் மலேசிய வருகையானது, ஒர் சமூகத்தன்மையை உருவாக் கவில்லை என்ற பார்வையும் கவனிக்கத்தக்கது. பின்னாளில் தொழில் நிமித்தம் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து கணிசமான தமிழர்கள் புலம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களில் சிலர் மலே சியர்களை திருமணம் செய்து கொண்டதன் ஊடாக மலேசிய பிரஜைகளாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அகதிகளாக மலேசிய நாட்டிற்குள் உள்வாங்கப்பட் டவர்கள் ஒரு குழுமமாக தங்களை அடையாளப்ப டுத்திக் கொள்கிறார்கள். வர்த்தக முதலீட்டு நடவடிக் கைகளின் நிமித்தம் மலேசியாவை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒர் சாராரும் அங்கம் வகித்து வருகிறார்கள். இவ் வகைகளிலும் மலேசியாவில் பிற நாட்டு தமிழர்களின் தொடர்பு வியாபிக்கின்றது. பிரித்தானிய காலனித்துவக் காலத்தில் தென்னிந்தி யாவில் இருந்து இலங்கைக்கு தமிழர்கள் அழைத் துவரப்பட்ட சமகாலத்திலேயே மலேசியாவுக்கும் தமிழர்கள் அழைத்து செல்லப்பட்டிருக்கிறார்கள். “

இவ்வாறு புலம்பெயர்ந்து மக்கள் இலங்கையில் பிரித்தானியர்களின் பொருளாதார வளர்ச்சியிலும் பின்னர் சுதந்திர இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலும் துணை நின்றார்கள். அதுபோலவே மலேசியாவின் வளர்ச்சியிலும், இந்திய வம்சாவளி மக்கள் மிக முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் வீதிகள் அமைக் கும் பணி, ரயில்பாதை அமைக்கும் பணி, ஈயம் தோண்டும் பணி ஆகியவற்றோடு இறப்பர் செம்ப னைத் தோட்ட பணிகளிலும் தமிழர்கள்; ஈடுபட்டு வந்துள்ளார்கள். குறிப்பாக தோட்டங்களில் ஈயம் தோண்டும் பணி மிகக் கடினமானதாகவே அமைந் துள்ளது. இத் தோட்டங்களில் வேலை செய்து அம் மக்களின் அவலங்களை உணர்ந்த ஒருவரின் எழுத் துக்கள் மலேசியாவில் வாழும் இந்தியர்களின் விடி வுக்கான அறைகூவலாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. மலேசிய தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள். சில அவதானிப்புகள், எனும் லெனின் மதிவானத்தின் ஆய்வு நூலில் உசாத்துணை குறிப்புகளில் காணப்படும் சான்றாதா ரங்கள் குறிப்பிடத்தக்கதாகும். அவ் எழுத்துக்களின் சொந்தக்காரர் பற்றிய அவதானத்தை செலுத்து கின்ற போது மலேசியா மு.வரதராஜ் பற்றிய புரிதல் ஏற்படுகிறது. பாதிப்புக்குள்ளான சமூகம் பற்றிய அனுபவத்தைப் பெற்ற இவரின் எழுத்துக்கள் பாதிக் கப்பட்டவர்களின் குரலாக வெளிப்படுகின்றது.

மலேசியத் தோட்டத் தொழிற்துறையில் ஈய மண் எடுக்கும் வேலையில் ஈடுபட்ட தொழிலாளியான மு.வரதராஜ் தரம் 05 வரையில் மாத்திரமே கல்வி கற்றவர். மலேசியாவில் ஈய மண் எடுப்பது மிகக் கடினமான வேலையாக அமைகிறது. சீனர்களின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றாக விளங்குகி றது. தண்ணீரை தேக்கி வைத்து ஈயம் எடுக்கப்படு வதுண்டு. அதுபோலவே கப்பலினுள் தண்ணீரை எடுத்து அதிலிருந்து ஈயத்தை எடுக்கும் முறையை ஐரோப்பியர்கள் கடைபிடிப்பதுண்டு. சீனர்கள் கடும் உழைப்பாளிகள். அவர்களைப் போலவே சீனர்க ளுக்கு கீழே வேலை செய்பவர்களும் கடினமாக வேலை செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். இத் தொழிற்துறையில் நீண்ட காலம் வேலை செய்த தன் பின்னர் மருத்துவ நிறுவனமொன்றில் வேலை செய்திருக்கிறார். இக் காலத்தில் தொழிற்சங்கத்தில் அதீத ஈடுபாடு காட்டி வந்துள்ளார். தொழிலாளர் கள் சார்பான செயற்பாடுகளில் அக்கறை காட்டிய நிலையில் அந் நிறுவனத்தில் வேலை செய்யும் வாய்ப்பை இழக்கிறார். இவ்வாறான சூழ்நிலைதான் இவரை எழுதத் தூண்டியுள்ளது. அவ் எழுத்துக்களே உழைக்கும் வர்க்கத்தினரின் நலன் நோக்கிய தன் மைகளை உலகிற்கு எடுத்துரைத்துள்ளது. அநீதிக்கு எதிரான கருத்தியலில் போர்க்குணமிக்க அவரது எழுத்துக்கள் மலேசியாவில் மட்டுமல்ல உலக உழைக்கும் வர்க்கத்தினரிடத்திலும் கவனத்தை ஏற் படுத்தலாயின. தொழிலாளர் வர்க்கம் சார்ந்த கூட் டுணர்வே என்னை எழுத்தாளனாக மாற்றியது என அடிக்கடி கூறுவார்.

தொழிற்சங்க ஈடுபாடு, ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த சிந்தனை போன்ற விடயங்கள் வரதராஜ னில் திராவிட கழகத்தின்பாலும், பெரியாரின் கொள் கைகளிலும் நாட்டத்தை ஏற்படுத்தலாயின. திராவிட இயக்கத்தின் மூலம் சிந்தனை சார்ந்த நூல்களை கற்றுள்ளார். பொதுவுடமை செயற்பாட்டாளர்களு டனான தொடர்பின் மூலம் இச் சிந்தனை அவரில் திடம்பெற்றது. கோர்க்கி, லெனின், மார்க்ஸ், மாவோ ஆகியோரின் நூல்களைக் கற்றுத் தேர்ந்த இவர், தன்னுடைய எழுத்துக்களிலும் தத்துவார்த்த ரீதியி லான போக்கை பிரயோகித்துக் கொண்டார். மலேசி யாவில் தோட்டங்கள் என்றாலே தமிழர்கள் வாழும் பிரதேசமாகவே அடையாளப்படுத்தப்பட்டது. மலேசி



யாவில் பொருளாதார ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் கூட்டாக வாழும் தமிழர்களை சிதைக்கும் கைங்க ரியத்தை வெற்றிகரமாக அரங்கேற்றியது என்ற ஆதங்கம் நிறையவே காணப்படுகிறது எனலாம்.

மலேசியாவில் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட செயற்பாடுகளில் “சங்கமணி” எனும் இதழின் பணி குறிப்பிடத்தக்கதாக விளங்கு கிறது. “சங்கமணி” வாரம் இருமுறை வெளிவந் துள்ளது. மலேசிய தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கொள்கைப் பிரசார ஏடாகவே அமைந்த நிலையில் மலேசிய தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ளது என்பார்கள். தற்போது இவ் இதழ் மாதமொருமுறை வெளிவருகிறது. இலங்கையிலும் இவ்வாறான இதழ்களில் காங்கி ரஸ், மகாவலி ஆகிய தொழிற்சங்க இதழ்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே மலையக இதழ்களின் பங்கேற்பு சமூக அசைவியக்கத்தில் பெரிதும் தாக்கத்தை செலுத்தியுள்ளமையை அறி யலாம். கோ. நடேசய்யரின் “தேசபக்தன்” இதழ் பெரிதும் மலையக மக்களில் தாக்கத்தை செலுத்தி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மலேசிய தமிழர்களின் வரலாறும் துன்பியியல் கூறுகளுடனே தொடங்குகிறது. பிரித்தானியர்க ளின் ஆதிக்கம், கங்காணிமாரின் தொல்லைகள் என்பவற்றில் சிக்கித்தவித்த நிலையில் சமகாலத் தில் உலகமய செயற்பாடுகளிலும் பாதிக்கப்பட்ட சமூகமாக திகழ்வதை அங்குள்ள இலக்கியங்கள் தெளிவுறுத்துவதை அறிய முடிகிறது. மலேசிய தமிழ் நாவல்களைப் பொறுத்தவரையில் தோட்டப்புற மக்க ளின் வாழ்வியலையும் வரலாற்றையும் பதிவு செய்வதி லேயே முனைப்பு காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நாவல்களில் 1958இல் வெளிவந்த “துயரப்பாதை” நாவலே தோட்டப்புற மக்கள் பற்றிய அவதானிப்பில் முன்னோடியாகத் திகழ்வதாக அடை யாளப்படுத்துவார். அதன் தொடர்ச்சியில் “வானத்து வேலிகள்” “இலட்சியப் பயணம்” “மரவள்ளி கிழங்கு” ஆகிய நாவல்கள் மலேசிய தோட்டத் தொழிலாளர்க ளின் துன்பியல் நிலைகளை சித்தரிக்கும் நாவல்க ளாகின்றன. தோட்டங்கள் துண்டாடப்படுதல் செயல்மு றையினால் ஏற்பட்ட பாதிப்பு நிலைகள், தோட்டப்புற மக்களிடையே ஏற்பட்ட பாலியல் ரீதியான தொல்லைகள், இம் மக்களிடையே காணப்படும் சாதிக் கொடுமைகள், குடியி னால் ஏற்படும் தொல்லைகள், சினிமா மோகம் போன்ற விடயங்களை எடுத்து ரைக்கும் சித்தரிப்புகள் இந் நாவல்களில் பேசுபொருள்களாகின்றன.

உலகில் எல்லா சமூகங்களின் இலக்கிய மும் வாய்மொழிப் பாடல்களில் இருந்தே தோற்றம் பெறுகின்றன. அவ்வாறே மலேசிய தோட்டத் தொழிலாளர்களின் இலக்கிய மூலமும் வாய்மொழிப் பாடல் கள் ஊடாகவே தொடங்குகிறது. உழைப்பு சுரண்டல் வேதனைகளை இப் பாடல்கள் ஊடாக எடுத்துரைப்பதை அறிய முடிகிறது. அவ்வாறு அமைந்த பாடல்களில் எடுத்துக் காட்டாக அமைந்த பாடலொன்று,

“பாலு மரம் வெட்டலான்னு
பழைய கப்பல் ஏறி வந்தோம்.
நாப்பத் தஞ்சு காசு போட்டு
நட்டெலும்ப கழட்டுறானே
முப்பத் தஞ்சு காசு போட்டு
முதுகெலும்ப கழட்டுறானே” என தொடரும் வரிகள் உழைப்பாளர்களின் வேதனைகளை தெளிவுறுத் துகின்றன. இலங்கை மலையகத்தில் வீதிப்பாடல்க ளுக்கு ஒப்பான பல பாடல்கள் பாடப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. அவ்வாறு அமைந்த பாடலின் பின்வ ரும் வரிகள் கவனிக்கதாகும்.

“சியாமுக்குப் போன இந்தியர்கள்
ஆறுலட்சம் பேரு
மீந்து மீதி இருப்பவங்க
ரெண்டு லட்சம் பேரு – அய்யா
இரண்டு லட்சம் பேரு” என்றவாறு வரிகள் தொடர் கின்றன. இவ்வாறே குடியின் பாதிப்பு நிலையை எடுத் துரைக்கும் பாடலொன்றின் வரிகளில்,

“கள்ளுக்குள தேளிருந்தா
தள்ளிப்புட்டு குடிக்க சொல்லும்,
சோத்துக்குள்ள கல்லிருந்தா
பொண்டாட்டிய அடிக்கச் சொல்லும், என்ற வரிகள் பெரும் சோக செய்தியை கூறி நிற்கிறது.

சாலையிலே ரெண்டு மரம்
சர்க்காரு வெச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம்
என் தங்க ரத்தினமே
அது எனக்கு தூக்குமரம் என தொழில்மூல தொல் லைகளை எடுத்துக்காட்டி

போய் வாரேன் பால்மரமே
போய் வாரேன் பால்மரமே
பவுனுக்கு பவுனு ரப்பர்
பாலு வித்த காலம் போச்சு
சீட்டுப்பால் ஒரு விளையும்
கோட்டுப்பால் ஒரு விளையும்
மங்குப்பால் ஒரு விளையும்
மண்ணுப்பால் ஒரு விளையும்
சிங்கம்போல விலையை விற்றார்
பங்கம்போல நிலைகுலைந்தார்
போய் வாரேன் பால்மரமே
போய் வாரேன் பால்மரமே என்ற வேதனைப் பெருமூச்சு வரிகளும் அவதானிப்பிற்குரியதாகும். துய ரத்தை வெளிப்படுத்தும் நிலையிலும் தம்மை ஆசுவா சப்படுத்திக் கொள்ளும் வரிகளான

மரமிருக்கு உளியிருக்கு
மனமிருக்கு உழைப்பதற்கு
மற்றத் தொழில் நமக்கெதற்கு
வேலப்பா இதுவே
உற்ற தொழில் இது நமக்குப்
போதுமப்பா, என்ற வரிகளும் கவனிக்கதக்கதா கும். சுதந்திரத்தின் உண்மை நிலையினை எடுத்து ரைக்கும் குறியீடாக அமைந்த பின்வரும் வரிகளில் பொதிந்துள்ள அர்த்தங்கள் ஏராளம்.

சுதந்திரம் என்பதில் முதலெழுத்
தெங்கோ
தொலைந்து போனது: தந்திரம்
பிழைத்தது!
இதம் தரும் என்றே ஏற்ற சுதந்திரம்
எப்படி எங்களை விட்டு பிரிந்தது? என்ற ஏக்கமும் கவனிக்கத்தக்கது. என்ற வரிகளெல்லாம் மு.வரதராஜன் பற்றிய அறிதலின் பின்னர் தூண்டிய சிந்தனைகளாகின்றன. அவரும் மக்கள் இலக்கியம் தொடர்பில் அதீத ஈடுபாட்டைக்கொண்ட உணர்வாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 2018ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த போது மஸ்கெலியா சென் ஜோசப் கல்லூரியில் இடம் பெற்ற பாரதி விழா ஆய் வரங்க நிகழ்வில் சந்தித்தேன். கலந்துரையாடி புகைப் படம் எடுத்துக் கொண்ட போதிலும் அவர் பற்றிய புரிதல் எனக்கு இல்லாமல் இருந்தது. மலேசியாவில் இந்தியத் தமிழர்களின் தேடலின் போதுதான் வரத ராஜ் பற்றி முழுமையாக அறிந்துகொண்டேன். நான் மலேசியாவில் சந்திக்க தவறிய மாமனிதனாக உணர் கிறேன்.

மலேசிய தேசியத்தில் ஒன்றுபட்ட தன்மையினை வலியுறுத்தும் பின்வரும் வரிகளும் என்னை கவர்ந் ததாக உள்ளன.

எங்கள் மலாயா தங்கிடும் இன்பம்
பொங்கிட வேண்டாவா?
இந்திய சீன, மலேசியர் யுரேசியர்
என்றுமிந் நாட்டினிலே – ஒன்றாய்
நன்றுடன் வாழ்ந்திடுவோம். என்ற ஒன்றுபட்ட கோசத்தை ஆதரிக்கும் மனித பண்புகளையும் அடையாளம் காண முடிகிறது.

பயணம் தொடரும்...

# இலங்கை வணிக நிறுவனங்களுக்கு சைபர் தாக்குதல் அச்சுறுத்தல்




2023ஆம் ஆண்டு உலகளாவிய சைபர் பாதுகாப்பு நிறுவனமான Kasperskyஇன் சமீபத்திய தரவுகளின்படி, இலங்கையில் உள்ள நிறுவனங்களை குறிவைக்கும் உள்ளூர் அச்சுறுத்தல்கள் காணப்பட்டன.

Kasperskyஇன் வணிக தீர்வுகள் கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 1,000,000 உள்ளூர் பாதிப்புக்களை தடுத்து நிறுத்தியது. பாவனையாளர் கணினிகளின் local infections பற்றிய புள்ளிவிபரங்கள் ஒட்டுமொத்த cyberthreat நிலப்பரப்பின் முக்கிய குறிகாட்டியாகும்.

கோப்புகள் அல்லது நீக்கக்கூடிய மீடியா மூலம் இலக்கு கணினியில் ஊடுருவிய பொருள்கள், அல்லது தொடக்கத்தில் திறக்கப்படாத வடிவத்தில் (உதாரணமாக, சிக்கலான நிறுவிகளில் உள்ள நிரல்கள், மறைகுறியாக்கப்பட்ட கோப்புகள் போன்றவை).

இயக்கப்பட்ட அல்லது அணுகப்பட்ட சமயத்தில் ஹார்ட் டிரைவில் உள்ள கோப்புகளை Kaspersky பாதுகாப்பு தீர்வுகளை ஸ்கேன் செய்ததன் மூலம், அகற்றக்கூடிய சேமிப்பு சாதனங்களை ஸ்கேன் செய்வதன் முடிவுகள் ஆகிய இந்த புள்ளிவிவரங்கள் உருவாக்கப்படுகின்றன. உள்ளூர் தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்பிற்கு, பாதிக்கப்பட்ட பொருட்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கும் திறன் கொண்ட பாதுகாப்புத் தீர்வு மட்டுமல்ல, Firewall, Antirootkit செயல்பாடு மற்றும் நீக்கக்கூடிய சாதனங்களின் மீதான கட்டுப்பாடு ஆகியவையும் தேவைப்படுகிறது.

# முக்கியத்துவம் பெறும் கொலோனியல் என்ஜினியரிங்



உள்நாட்டில் ஸ்டீல் மற்றும் ஹார்ட்வெயார் தொழிற்துறையில் முன்னணி செயற்பாட்டாளராக திகழும் கொலோனியல் என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடெட், SLTMOBITEL குழுமத்தினால் வெளியிடப்படவுள்ள 2024/25 தேசிய வியாபார தொலைபேசிக் கோவையான ரேன்போ பேஜஸ் இல் பிரதான விளம்பரதாரராக இணைந்துள்ளது.

தேசிய வியாபார தொலைபேசிக் கோவையின் முதல் 20 சிறந்த வாடிக்கையாளர்களில் ஒன்றாகத் திகழும் கொலோனியல் என்ஜினியரிங், இந்த பரிபூரண சந்தைப்படுத்தல் கட்டமைப்பில் காணப்படும் பெறுமதியை நன்கு உணர்ந்துள்ளது.

இந்த வருடத்தின் பிற்பகுதியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தேசிய வியாபார தொலைபேசிக் கோவை 2024/25 இல், இலங்கையின் முன்னணி வியாபார தொழிற்துறைகளின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு, பிந்திய தரவுகளைக் கொண்ட கோவையாக அமைந்திருக்கும். ஒப்பந்தத்தின் பிரகாரம், 2005ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கொலோனியல் என்ஜினியரிங், குழாய்கள், ஸ்டீல், பொறியியல், நிர்மாணம் மற்றும் நீர் குழாய் பொருத்துகைகள் பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி, விநியோகம், விற்பனை மற்றும் மொத்த விற்பனையில் ஈடுபடுவதுடன், தமது தேவைகளுக்கு பொருத்தமான வகையில் ஒன்லைன் மற்றும் ஓஃப்லைன் விளம்பரப்படுத்தல் தெரிவுகளை பெற்றுக் கொள்ளும். அவற்றில் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள், இணையத் தீர்வுகள், eவணிகம், சொப்பிங் கார்ட் மற்றும் பொருளடக்க தயாரிப்பு சேவைகள் போன்றன அடங்கியிருக்கும்.

# NDB வங்கியின் பக்தி கீத போட்டி



NDB விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு கழகம் 2024இன் ஏற்பாட்டில் NDB பக்தி கீதப் போட்டி, ஜூன் 20, 2024 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்வு, பொசன்போயா தின சமயப் பண்டிகைகளைக் கொண்டாடவும், வங்கியின் கிளைகள் மற்றும் பிரிவுகளில் இருந்து கலந்து கொண்ட அனைத்து ஊழியர்களிடையே தோழமை மற்றும் பங்கேற்பை ஊக்குவிக்கவும் வடிவமைக்கப்பட்டது.

மொத்தம் 17 கிளைகள் மற்றும் பிரிவுகளைச்சேர்ந்த ஊழியர்கள் தாம் பாடிய வீடியோ காட்சிகளை சமர்ப்பித்ததன் மூலம் அவர்களின் திறமை மற்றும் பக்தி வெளிப்படுத்தப்பட்டது. இப்போட்டியின் ஆரம்ப சுற்றுக்கான நடுவர் மன்றத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தின் காட்சி மற்றும் நிகழ்த்து கலை பட்டதாரி நிரோஷன் டி சில்வா நடத்தினார். இந்தப் பதிவுகளில் இருந்து, 10 கிளைகள் மற்றும் பிரிவுகள் இறுதிப் போட்டியாளர்களாக NDB தலைமை அலுவலக வளாகத்தில் நேரடியாக நிகழ்ச்சிகளை நடத்த தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஜூன் மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில், அட்டைநிலையம், இணக்கம், குத்தகை மீளப்பெறல், மனிதவளம், குத்தகை, வர்த்தக நிதி, வர்த்தக வங்கியியல் , சந்தைப்படுத்தல், தொடர்பு நிலையம் மற்றும் நிட்டம்புவ ஆகியவற்றினால் மனதைக்கவரும் வகையிலான நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

# Togo இல் Star ஆடைத் தொழிற்சாலை



Star Garments குரூப், Togo இல் பாரியளவிலான ஆடை ஏற்றுமதி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவி, அதனூடாக மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான ஆடை மற்றும் ஆடை உற்பத்தி ஆற்றலை மேம்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இதற்காக உலக வங்கி குரூப்பின் அங்கத்துவ அமைப்பான சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்திடமிருந்து (IFC) 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறித்துள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக, இலங்கைக்கு அப்பால் நிறுவப்படும் Star இன் முதலாவது உற்பத்தி தொழிற்சாலையாக இது அமைந்திருக்கும். Togo இல் ஆயிரக்கணக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்தத் திட்டம் எதிர்பார்ப்பதுடன், அதனூடாக பல்தேசிய விநியோகத்தராக உலக வரைபடத்தில் Star முக்கிய இடம் ஏற்படுத்தப்படும். Togo இல் காணப்படும் முதலாவது பாரியளவிலான ஆடை உற்பத்தி வசதியாக Star இன் இந்தத் தொழிற்சாலை அமைந்திருக்கும்.

Togo இன் Lom நகரை அண்மித்து காணப்படும் Plateforme Industrielle d'Ad tikop தொழிற்பேட்டை பகுதியில் பசுமைவெளி ஆடைத் தொழிற்சாலையை Star நிறுவும். அதனூடாக 4,520 நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

குறிப்பாக பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். அதனூடாக 2030 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி சார் பெறுமதி சேர்ப்பில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை பெற்றுக் கொடுக்கும்.

# நிர்மாண வலு, மின் கண்காட்சிக்கு E.B. Creasy Solar அனுசரணை




ஒன்பதாவது நிர்மாண வலு மற்றும் மின் கண்காட்சி 2024, E. B. Creasy Solar இன் பிளாட்டினம் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டது. ஜூலை 5 முதல் 7 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நிலைபேறாண்மை அபிவிருத்திக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்புக்காக அறியப்படும் E. B. Creasy Solar, E.B. Creasy & Co. PLC இன் புதுப்பிக்கத்தக்க வலு பிரிவின் அங்கமாக அமைந்துள்ளது. தூய, நிலைபேறான வலுத் தீர்வுகளை இல்லங்கள் மற்றும் தொழிற்துறைகளுக்கு வழங்கும் வகையில் நவீன Solar Grid Tied, Solar Irrigation மற்றும் Solar Hybrid தீர்வுகள் போன்றவற்றை இந்நிகழ்வில் காட்சிப்படுத்தியிருந்தது.

பிளாட்டினம் அனுசரணையாளர் எனும் வகையில், புத்தாக்கம் மற்றும் நிலைபேறாண்மையை இலங்கையின் வலுத்துறையில் கட்டியெழுப்புவதற்கான தனது அர்ப்பணிப்பை E. B. Creasy Solar மீள உறுதி செய்திருந்தது.

# டேவிட் பீரிஸ் ரினியூவபிள் எனர்ஜி தலைமையகம் திறந்து வைப்பு



இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறை மற்றும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் முக்கிய அடைவைக் குறிக்கும் வகையில் டேவிட் பீரிஸ் ரினியூவபிள் எனர்ஜி (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தின் தலைமையகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இல. 734பீ, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள புதிய அலுவலகம் டேவிட் பீரிஸ் குழுமத்தின் குழுமத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான திரு. ரோஹன திஸாநாயக்க மற்றும் டேவிட் பீரிஸ் ரினியூவபிள் எனர்ஜி நிறுவனத்தின் பணிப்பாளர், சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் திறந்துவைக்கப்பட்டது.

மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற நிகழ்வில் நிலைபேறான வலுசக்தி அதிகாரசபையின் பிரதிநிதிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் இந்நிகழ்வை வெற்றியடையச் செய்ய உறுதுணையாக இருந்த அனைத்துப் பங்குதாரர்களும் கலந்துகொண்டனர்.

டேவிட் பீரிஸ் சோலார் எனர்ஜி என்ற வர்த்தக நாமத்தின் கீழ் இந்நாட்டில் சூரியப்படலத் துறையில் 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் காலடியெடுத்துவைத்த டேவிட் பீரிஸ் குழுமம், வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப சூரிய சக்தித் தீர்வுகளை வழங்குவதில் பிரபல்யம் அடைந்துள்ளது.

செயற்படத் தொடங்கி ஒரு வருட காலத்திற்கும் 1.5 மெகாவட்ஸ் சூரிய சக்தித் தீர்வுகளை வழங்க டேவிட் பீரிஸ் சோலர் எனர்ஜி வர்த்தக நாமத்தினால் முடிந்திருப்பதுடன், சூரிய சக்தித் துறையில் நிலையான அடித்தளத்திற்கான ஆரம்பத்தை வழங்கும் வகையில் ரன்ன பிரதேசத்தில் சுமார் 620 கிலோவட்ஸ் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# MMCA இலங்கையினால் நடாத்தப்பட்ட கண்காட்சி

'88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுழுவ வீட்டுத் திட்டம்' எனக் கலைஞரின் வாழ்நாளில் அல்லது அதன் பின்னர் நடாத்தப்படும் இந்த முதலாவது தனிக் கண்காட்சியானது சமகால, நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) ஜுலை 7ஆம் திகதி நிறைவுற்றது.

இக் கண்காட்சியானது, மினெட் டி சில்வாவினால் வடிவமைக்கப்பட்டு, 1958ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட வடபுழுவ வீட்டுத் திட்டத்தை குறிப்பாக நோக்குகின்றது. இத் திட்டமானது இலங்கையில் ஒரு புதிய அமைப்பிலான சமூக வீட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத் திட்டமானது வதிவாளர்களின் பங்களிப்பையும் கொண்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். மலைப்பகுதியில் கட்டப்பட்ட இப்பரந்த அபிவிருத்தி திட்டமானது, எவ்வாறு வெவ்வேறு இன மத மக்களைக் கொண்ட இலங்கை அரச ஊழியர்களுக்காக, தொலைநோக்கு பார்வையுடன் குறைந்த விலையில் வடிவமைக்கப்பட்டது என்பதனை '88 ஏக்கர்கள்' கண்காட்சி ஆராய்கின்றது. இருஷி தென்னகோன் (பி. 1989), சுமேத கலேகம (பி. 1988), மற்றும் சுமுது அதுகோரல (பி. 1980) ஆகிய கலைஞர் இதற்கென தயாரித்த திரைப்படத்துடன் சேர்ந்து, '88 ஏக்கர்கள்' கண்காட்சியானது, இவ்வீட்டுத்திட்டத்தை 65 ஆண்டுகளுக்கு பின் மீள நோக்குவதன் மூலம், டி சில்வாவின் தாக்கத்தையும், அவரது வடிவமைப்பு அணுகுமுறையிற்கான சவால்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

# ஹமீடியாவுடன் இணையும் SLICGL



ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) நிறுவனம் ஆடவர் ஆடைகள் உற்பத்தித் துறையில் தரம் மற்றும் நவநாகரிகத்தில் முன்னணியில் திகழும் வர்த்தக நாமமான ஹமீடியா நிறுவனத்துடன் மூலோபாய பங்காளித்துவத்தை அறிவித்துள்ளது. இலங்கையின் காப்புறுதி சந்தையில் முதன்முதலாக எடுக்கப்பட்டிருக்கும் இந்த தனித்துவ முயற்சி, SLICGLஇன் மோட்டார் ப்ளஸ் பூரண காப்புறுதி உரிமையாளர்களுக்கு பிரத்தியேகமான தள்ளுபடிகள் மற்றும் நன்மைகளை வழங்குகிறது. இந்த இணைவு Envoy Mansionஇல் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்த (MoU) பரிமாற்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இரு தரப்பினதும் முக்கிய பிரதிநிதிகளின் முன்னிலையில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஹமீடியாவின் பிரதிநிதிகளாக அதன் பணிப்பாளர்களான மிகைல் ஹமீட், அம்ஜத் ஹமீட் மற்றும் ஹசன் உஸ்ரி ஆகியோருடன் அதன் CIO/ஆலோசகரான கலும் ஜயசேகர, மனிதவள மற்றும் செயற்பாடுகளின் தலைவர் A.T.M. ஃபர்ஸான் மற்றும் பிரதேச முகாமையாளர் தனுஷ்க வெலகெதர ஆகியோர் பங்கேற்றனர். SLICGLஐப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதம செயற்பாட்டு அதிகாரியான பிரியந்த பெரேரா, பெருநிறுவன வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் உதவிப் பொது முகாமையாளர் மகேஷ் கமகே மற்றும் பெருநிறுவன வர்த்தகப் பிரிவின் பொதுத் துறையின் சிரேஷ்ட முகாமையாளர் ரவி மெடிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# அமைதி

இருள் இரவும்
அருள் போல வந்து விட
ஓய்வுகளை தேடிடும்
மனநிலையும்
மாறுபடும் மனித நிலைகளிலே

காற்றின் அசைவில்
இசைந்தாடும்
மரக்கிளைகளின்
இலைகள் சப்தங்கள்
மனதின் நினைவுகளை
மீட்டிட முனையும்...
செவியின் அருகில்
சப்தங்கள் வரும்...
விழிகளில் மங்கிய
காட்சிகள் தெரியும் ...
மெல்ல மெல்ல
காட்சிகள் வெளுக்கும் ..
சந்தோஷ சாரலாய்
தாயவளும் மலர்ந்து



சிரிப்பாள்
தந்தையும் சிரித்து
வைப்பார் ..

அவர்கள் காலம்
முடிந்ததென்று கண்களை
மூடி விட ..
நினைவுகளோ மூட
மறுக்கின்றனவே
சலசலப்பு சப்தம்
நெஞ்சுக்கூட்டினில் கேட்க
நினைவுகள்
விழித்தே கிடக்கும் ...

நிலாமகள் முகிலை
நீக்கி வருவதும்
முகில்கள் கூடி மறைப்பது
மாய்
வானில் கண்ணா
மூச்சொன்று அரங்கேற
கண்கொட்டாது முகம் பிரகா
சிக்க
அவர்கள் கதைகளோடு
கண்டதெல்லாமே
தெள்ள
தெளிவாகிறது நினைவிலே ...

அமைதியான இரவோ
அமைதியை நீக்கி
விட்டு நினைவைத் திறந்ததே ..
நீங்கா இடமொன்றில்
அவர்களென்றுமே ..

**சஹ்னாஸ் பேகம்**
முதலைப்பாளி

# என் இதய அறைகளில்..!

**உன் நினைவுகள்
என் இதய அறைகளில்
என்றும் நீங்கா
இடம் பிடித்து விட்டது
நான் காணும்
திசைகள் எங்கும்
உன் உருவங்களே..!
இணைபிரியா ஜோடியாக
நாம் இருவரும்
உலாப் போக வேண்டும்...
சொர்க்க வாசல்கள்
எமக்காக எந்நேரமும்
காத்துக் கிடக்கின்றன
புதிய புதிய உலகங்கள்
புதுமையான உலகங்கள்
சந்தோஷத்திற்கு குறைவில்லை
சங்கடத்திற்கு இடமில்லை
என்றும் இன்பமே....
எப்போதும் உன் நினைவுகளே...
என் இதயத்தில்....!**

**சி.மௌநேஷ்**
மட்டக்களப்பு



# திருத்தங்களற்ற பொழுதுகள்...

ஊர் சுற்றும் சிறுபட்டிகளாய்
வயிறு வளர்க்கும்
ஒட்டாண்டிகளாய்
இறையுணர்வற்ற
மாக்களாய்
வீணே அலைகின்றன
இன்றைய இளங்குருத்துகள்

சேமமாய் வாழ
சேமமான வழி
இருக்க
கோணலான
குணக்குரங்குகளாய்
உழன்று திரிகின்றன.

மரண அழைப்பு
எப்போது வரும்
என்ற இறைசிந்தை
விலகி இறைநிந்தனை
இசைந்து தேடுகின்றன.
காலப்பொன்னதன்
முக்கியம் அறியாத

இவ்வுள்ளங்களில்
காலவீணடிப்புகள்
நிறைகின்றன.
பொழுதுபோக்கு
வாழ்வென்றானதால்...

அறிவு வளர்ச்சியும்
ஆளுமைத்திறனும்
கட்டைவாழை போல்
வளராதிருக்கின்றன.
இவர்கள் வாழ்க்கை
திருத்தங்களற்ற
பொழுதுகளாய்
நல்வினைகளற்ற
வெற்று பயணமாகின்றது

சிந்தையில்
தூபமிடுபவைகளோ
வீணான மாசுமருள்களே...

ஆக இனியாவது
இதன் கண்

உணரவேண்டியவை எவை
இதயமுள்ளவர் பால்
அவைகளை விட்டு
விடுகிறேன்...



**முஹம்மத் ஷஃப்ரி**
பூவெலிகட



# மறைமுகங்கள்...

**பூக்கடையில் குவிந்திருக்கும்
பூஜைக்கும் உதவாத பூக்கள்!
குள்ளநரி கூட்டங்களும் இங்கு
குவிந்திருக்கும் இன்முகத்தில்!**

**நல்லவர்களுக்கு ஒரு முகம்
நயவஞ்சகனுக்கு பல முகம்!
நாட்டில் அவரவர்க்கு தனிமுகம்
நடிகனுக்கு நடிப்பிலே நவரசமு
கம்!l**

**மனதிற்கு முக்காடு போட்டு
மனதினைக் குழப்புகிறது
ஒருகூட்டம்!
மறைமுகம் தரித்துக்கொண்டு
மனதால் நடிக்கிறது ஒருகூட்டம்!**

**அரசை ஆளுவார் சிலபேர்
அரசியல்வாதிக்கு இல்லை அசல்மு
கம்!
அவனும் வாக்கு வாங்க பேசுவான்
ஆயிரம் தியாகிகளின் முகம்!**

**பதவிக்கு வந்தபின் இருப்பார்
பலர் பொய் முகங்களே!
பாவம் வாக்களித்த மக்களோ
பழகிப்போனதுவே
ஏமாளி முகமே!**

**பணம் இருந்தால் தேடிவருவார்
பந்தங்களும் காட்டும் பாசமுகம்!
பணத்தை இழந்தே கண்டிடுவீர்
பந்தங்களின் பச்சோந்தி முகம்!**

**முஸம்மில் கமர்தீன்**
கொழும்பு

# 'இனி ஏது தோல்வி'

ஒட்டுமொத்த மனிதமும்
ஓயாது வேண்டுவது
ஒன்றை மட்டுமே
அது தான் சகவாழ்வு...

இன, மத, பேதம் தாண்டி
யாவரும் மனிதர்களே
யாவருக்கும் ஓடுவது
ஒரே குருதி அன்றி வேறில்லை
இதை உணர்ந்திடின்
துன்பங்கள் நிரந்தரமில்லை..

சகவாழ்வு இன்மையால்
எத்தனை துன்பங்கள்
எத்தனை வேதனைகள்
எத்தனை கதறல்கள்
எத்தனை மன்றாட்டங்கள்...

உணர்வுகள் நசுக்கப்பட்டு
உரிமைகள் மறுக்கப்பட்டு
ஏக்கங்கள் வானளாவ நீண்டு
துக்கங்கள் உயிராழம்
வரை தொடர்ந்து
நிம்மதி குலைந்து
இன்பங்கள் கலைந்து
மொத்தமாய் உடைந்து விழுந்து
தொலைத்த உயிரைத் தேடும்
துர்பாக்கியம்
இனியும் வேண்டாம்...

சகவாழ்வு மட்டும் போதும்
இந்த மனிதம் ஜெயித்திட
இதைப் புரிந்தால்
இனியேது தோல்வி
இதை இனியாவது சிந்தி...

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை

# கருணை மனு

பேரண்
டத்
தேசங்கள்
இருந்தும் என்ன?
பீறிட்டோடும்
குருதியில்
முக ஒப்பனை செய்யும்...
பெருங்குமுறல் கொண்டழும்
மனதை என்ன செய்ய?
பிரார்த்தனைகளின்றி வேறு
என்ன முடியும்?

பொறுமை கொண்டு மன்றாடி
இறையிடம்
பேரவலம் துடைக்கக்
கிடந்து கெஞ்சினோம்
ரஃபாவிலே இம்சிக்கப்படும்
இளம்பிஞ்சுகள் நிலையெண்ணி
இறுகிப்போயின இதயங்கள்
மருகி மண்டியிடும் முஸ்லிம்கள்

இரத்த ஆறு வழிகிறது
இறந்த சகோதரர்கள்
எண்ணிக்கை பெருகுகிறது
கண்ணில்லையா ?
காதில்லையா ?
கேட்கும் அழுகுரல்
நெஞ்சத்தை அழுத்தவில்லையா?

துண்டங்களாக்கி
தீயிட்டுக் கொளுத்தி
துவம்சம் புரியும்
துஷ்டர்களே
மனப்பிறழ்வின்
மூடர்களே
மனிதாபிமானம்
மறைந்ததா

மதியில் நேயம் அறுந்ததா
உறவுகளின் உயிரிழப்பில்
உருகி ஓடும் உள்ளம்
சகோதர சொந்தங்கள் எரிய

கருகிடும் கருணை மனம்
தாளவில்லை
தாங்க
வில்லை
ஈமான் கொண்டது பாவமா
வேறுக்க
நினைப்பது கூடுமா

சதி செய்யும் சேனைகளே
சதிகாரர்களுக்கெல்லாம்
சதிகாரன் அல்லாஹ்
சதிராடும் நாள் ஒன்றுண்டு
சாத்வீக நியாயம்
கிடைக்கும் தருணம் உமக்குண்டு

கண்கள்
பனிக்க
இதழ்கள்
இறைஞ்ச
எம் கரங்கள்
விண்ணெழும்
எம் வாழ்வில் உமக்கு நாம்
இதை மாத்திரமே செய்தோம்

கைவிடான் எம்மிறைவன்
காத்திடுவான் கோவிறைவன்
காத்திருக்கும் எம் செவிகள்
கனிவான சேதி கேட்க
கலங்காதிருக்கும் நாள் வரும்
கண்மணிகாள் காயமாறும்

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்





# விழிகள்

**விழிகளே !
விழித்திருங்கள்
கண்ணிமைக்கும் நேரத்தில்
அவள்
விழிகளை களவாடி விடுவாள்
விழிகளே !
இன்றாவது
அவளது விழிகளை
சிறைபிடிக்க வேண்டும்
விழிகளே!
விழித்திருங்கள்!**

**என்.பாரத்**
மானிப்பாய்



# வலிமை தரும் மனம்

**மனித மனம் என்பது
ஒவ்வொரு மனிதனதும்
எண்ணங்களின் தொகுதி
என்பது ஒரு கருத்தன்றோ**

**மனம் வைத்தால் எதையும்
செய்து விடுவேன் என்று
எல்லோரும் கூறுவதை
அனைவரும் கேட்போம்**

**நாங்களும் கூறுவோம்
எமது மனம் நினைத்து
அதிக ஈடுபாட்டுடன் நமது
செயல்களை செய்யும் போது**

**வெற்றியடைகிறோம் இலகுவாக
செயலின் வெற்றிக்கு நமது
மனதின் உறுதியே காரணம்
என்பது சொல்லவும் வேண்டுமா**

**மனதில் நல்ல எண்ணங்களை
நாம் எண்ண வேண்டும்
மன உறுதி தரும் செய்திகளை
பதிய வைக்க வேண்டும்**

**அதனால் வலிமை தரும் மனம்
நேர்மறை எண்ணங்களால்
மனவலிமை மெருகூட்டப்படும்
அப்போது வெற்றிகள் நம்பக்கம்**

**குப்பிளான் குமரன்**

# தொலைபேசி அழைப்புகளும் கற்றுத்தரும் பாடங்களும்

சிலரது மௌனங்கள்
சிலருக்கு
கேள்விகளாகின்றன,
சிலரது
கேள்விகளுக்கு
சிலரது
மௌனங்களே
விடைகளாகின்றன.....!!
புரியாத புதிராய்
பலரது
வாழ்க்கை.......!!!

பல வேளைகளில்
உயிருள்ள
உறவுகளில்
யார் முக்கியம்
என்பதை.....
உயிரற்ற
பணமே
முடிவுசெய்து
விடுகிறது........

ஹொரொவ்பொத்தான
**அகமட் இம்தியாஸ்**

# வதந்திகள்!



உண்மையில்லா தகவல்கள்
உறுதிபோல் வெளியாகும்
நன்மையில்லா நிகழ்வுகள்
நாசத்தை விளைவிக்கும்

அதிர்ச்சியும் ஆச்சரியமும்
அகத்திலே அணி சேரும்
மலர்ச்சியும் மகிழ்ச்சியும்
மனதுக்குள் கேள்வியாகும்

பரப்பிடும் செய்திகளால்
பரந்திடும் பதற்றம்
நிரப்பிடும் தகவல்களால்
நிந்தனைகள் வாட்டும்

பாதகம் தெரிந்தும்
பாரினில் வாழும்
சாதகம் முறிந்தும்
சர்ச்சைகள் நீளும்

விந்தையும் வினோதமும்
வியப்பை வழங்கும்
சிந்தையும் சீரும்
சிறப்பை இழக்கும்

அபாயமும் ஆபத்தும்
அதிகமாய் இருக்கும்
உபாயமும் உத்தியும்
உக்கிரமாய் தர்க்கிக்கும்

விளையாட்டும் வேடிக்கையும்
விசனத்தைத் தோற்றுவிக்கும்
களைகட்டும் மகிழ்ச்சியும்
கவலைகளை ஆட்டுவிக்கும்

விபரீதமும் வேதனையும்
விரைவாகவே ஒட்டிவிடும்
அபராதமும் அபகீர்த்தியும்
அகத்தையே தட்டிவிடும்

புதிர்களும் எதிர்வுகளும்
பூரிப்பைப் பறிக்கும்
சதிகளும் சமர்களும்
சந்தோஷத்தை நெரிக்கும்
ஈற்றில்....

எல்லாமே மாயையென்ற
எடுப்பான கதை உலாவும்
பொல்லாத பீதிகள் யாவும்
பொசுங்கித்தான் போகும்

வதந்திகளை நம்பினால்
அவதிதான் நமக்கு
தீர விசாரித்தால்
திருப்பம்தான் எமக்கு.

**உசனார் எம்.பஷீர்,**
ஏறாவூர்.


Senthooram
செந்தூரம்
2024 ஜூலை 14 ஞாயிற்றுக்கிழமை
விழிகள் பேசும் மொழியிலே
கனியும் காதல் விரசம்

# அமெரிக்கா எப்போது வெளியேறும்?

கியூபாவின் தென்கிழக்கு முனையில் இருக்கும் குவான்தனாமோ பேயை அமெரிக்கா கியூபாவிடம் இருந்து குத்தகைக்குப் பெற்று ஒரு நூற்றாண்டு கடந்து விட்டது. வருடத்திற்கு 4,085 டொலருக்கே அமெரிக்காவுக்கு கியூபா இதனை குத்தகைக்கு விட்டது. ஆனால் அங்கு டேரா போட்ட அமெரிக்கா திரும்பிப் போகவே இல்லை. 1959 கியூப புரட்சிக்குப் பின்னர் அமெரிக்காவை அங்கிருந்து போகும்படி கியூப கொம்யூனிஸ அரசு இன்று வரை கூறி வருகிறது. அமெரிக்கா தரும் குத்தகைப் பணத்தை தெரியாமல் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தியதாக கியூப புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோ குறிப்பிட்டிருந்தார். அது தொடக்கம் அமெரிக்கா தரும் கசோலை பயன்படுத்தப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தளம் அசிங்கமான வேலைகள் செய்வதற்கே பயன்படுத்தப்படுகிறது என்று காஸ்ட்ரோ குற்றம்சாட்டி இருந்தார். செப்டெம்பர் 11 தாக்குதல் தொடக்கம் இந்தக் கடற்படை தளம் தலிபான், அல்கொய்தா சந்தேக நபர்களை தடுத்து வைக்கும் தளமாக பயன்படுத்தப்பட்டது.



அன்டோரா என்பது ஐரோப்பாவில் இருக்கும் ஒரு குட்டி நாடு. வடக்கே பிரான்ஸும் தெற்கே ஸ்பெயினும் இருக்கும் நிலத்தால் சூழப்பட்ட இந்த நாட்டின் மக்கள் தொகை ஒரு இலட்சத்தைக் கூட எட்டவில்லை. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் இந்த நாடு முதலாம் உலகப் போரில் ஜெர்மனிக்கு எதிராக போர் பிரகடனத்தை வெளியிட்டது. இத்தனைக்கும் இந்த நாட்டிலே இராணுவம் ஒன்று கூட இருக்கவில்லை. எப்படி இருந்தாலும் ஜெர்மனிக்கு எதிரான அன்டோராவின் போர் இரண்டாம் உலகப் போர் முடிந்தும் முடியவில்லை. அதனை அன்டோராவும் மறந்துவிட்டது. ஜெர்மனி பொருட்படுத்தவில்லை. கடைசியில் சண்டை பிடிக்காத இந்தப் போரை முடித்து வைப்பதற்கு அன்டோரா 1958 இல் ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டி இருந்தது.

# சண்டை பிடிக்காத போர்




# உலக பொலிஸ்காரராகும் அமெரிக்கா



அமெரிக்காவை உலகப் பொலிஸ்காரர் என்பது சும்மாவல்ல. அதனால் போர் புரியாமல் சும்மா இருக்கவும் முடியாது. உலகில் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் 195. அதில் 150 நாடுகளில் அமெரிக்க இராணுவம் ஏதோ ஒரு வகையில் நிலைகொண்டிருக்கிறது. அதாவது உலகில் எங்கே போர் வெடித்தாலும் அங்கே அமெரிக்க இராணுவம் இருப்பதற்கான சாத்தியம் அதிகம். இதிலே சில நாடுகளில் போர் வெடித்தால் அமெரிக்கா பங்கேற்பது கட்டாயம். ஏனென்றால் உலகில் 67 நாடுகளுடன் அந்த நாடுகளை பாதுகாப்பதற்கு அமெரிக்கா ஒப்பந்தம் செய்திருக்கிறது. எனவே, அந்த நாடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டால் அமெரிக்கா ஆஜராவது அதன் பொறுப்பு.

இதிலே நேட்டோ அங்கத்துவ நாடுகள், அமெரிக்கான் நாடுகளின் அமைப்பு, அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மற்றும் அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகியவற்றில் உள்ளடங்கும் நாடுகள், தவிர இஸ்ரேல், ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளுடனான இரு தரப்பு உடன்படிக்கைகள் மூலம் அந்த நாடுகளை பாதுகாக்க அமெரிக்கா ஒப்பந்தம் செய்திருக்கிறது. எனவே, ஒரு பட்டாசு வெடித்தாலும் அது மற்றொரு உலகப் போராக மாறுவதற்கான சாத்தியம் மிக அதிகம்.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# உரிமை மாறும் தீவு

ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் நாட்டு எல்லையில் இருக்கும் பிடாசோவா ஆற்றின் நடுவே ஒரு தீவு இருக்கிறது. அதன் பெயர் பைசான்ஸ் தீவு. ஒரு கிலோமீற்றர் கூட இல்லாத இந்தத் தீவில் மனிதர்கள் வாழ்வதில்லை.

ஆனால் இந்தத் தீவு வருடத்தில் ஆறு மாதங்கள் பிரான்ஸுக்கு சொந்தமாக இருக்கும் அடுத்த ஆறு மாதமும் ஸ்பெயினுக்கு சொந்தமாக இருக்கும். இந்த தீவினால் பெரிதாக யாருக்கும் பயணில்லை. குறைந்தது அது ஒரு சுற்றுலா தலம் கூட இல்லை.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் அந்தத் தீவு சரியாக இரு நாட்டு எல்லையில் சரிசமமாக பிரிகிறது.

ஒரு போர் வெடிப்பதற்கு இந்தக் காரணமே போதுமானது. ஆனால் 1659 ஆம் ஆண்டு இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தீவின் உரிமையை மாற்றி பகிர்ந்து கொள்வது என்று முடிவானது. அந்த ஒப்பந்தம் இன்று வரை கடைப்பிடிக்கப்படுகிறது.



# துருக்கி தொப்பி

துருக்கி தொப்பிக்கு நீண்ட வரலாறு உண்டு. பொதுவாக சிவப்பு நிறத்திலான நீண்ட தொப்பியுடன் கறுப்பி நிறத்தில் குஞ்சம் வைத்திருக்கும். இதன் பூர்வீகம் பற்றி பெரிதாகத் தெரியாதபோதும் ஒரு காலத்தில் இந்தத் தொப்பியை அணிவது நவீனத்துவத்தின் அடையாளமாக இருந்தது. 1800களில் உஸ்மானி சுல்தான் இரண்டாவது மஹ்மூத் தலைப்பாகைக்கு பதிலாக இதனை பயன்படுத்த உத்தரவிட்டார். பிற்காலத்தில் அது உஸ்மானிய பேரரசின் அடையாளமாக மாறியது. ஆனால் நவீனத்துவத்தின் அடையாளமாக இருந்த இந்த துருக்கித் தொப்பி ஒரு நூற்றாண்டின் பின்னர் அதே துருக்கியில் தடை விதிக்கப்பட்டது. நவீன துருக்கியை உருவாக்க வந்த கமால் அதாதுர் 1925 இல் துருக்கி தொப்பியையே சட்டவிரோதமாக்கினார். என்றாலும் பல்வேறு அடையாளங்களுடன் இந்தத் தொப்பி இன்றும் பயன்படுத்தப்படுகிறது.



# செந்தூரம் கடி ஜோக்ஸ்



மனைவி: நா எல்லாம் காலேஜ் படிக்கும் போது மாறுவேட போட்டிக்காக அரக்கி வேஷம் போட்டதுக்கு 2nd பிரைஸ் கொடுத்தாங்க தெரியுமா..?
கணவர்: அட ஏண்டி சும்மா போயிருந்தாலே 1st பிரைஸ் கொடுத்து இருப்பாங்க..!



சூடா டீ போட்டுத் தரவா? வேணாம் அம்மா ஏன் நீங்க அப்பறம் படிக்க சொல்லு வீங்க



மனைவி: ஏன் கிட்ட உங்களுக்கு ரொம்ப பிடிச்சது என்ன.. அழகான முகமா..! பணிவான குணமா..! இல்ல பாசமான மனமா..!
கணவர்: உன்னோட இந்த காமெடி தான்..!



மனைவி: ஏங்க புண்ணியம் செஞ்சவங்கள இங்லீஷ்ல எப்படி சொல்லுவாங்க..?
கணவர்: அதுவா Unmarriedனு சொல்லுவாங்க.



மனைவி: உங்கள எப்போதும் பார்த்துகிட்டே இருக்கனும்னு போல இருக்குங்க.
கணவர்: அப்பவே ஜோசியர் சொன்னாரு மேரேஜுக்கு அப்புறம் சனியோட பார்வை உங்க மேல தான் இருக்கும்னு.



மனைவி: ஏங்க நம்ப செத்து போய்ட்டா ஒன்னா இருக்க முடியாதாங்க..?
கணவர்: ஆமா அதனால தான் அதுக்கு பேரு சொர்க்கம்.



மனைவி: ஏங்க சனிப்பெயர்ச்சிக்கும், குருப்பெயச்சிக்கும் என்ன வித்தியாசம்..?
கணவர்: அதுவா நீ ஊருக்கு போனா அது சனிப்பெயர்ச்சி, மறுபடியும் திரும்பி வரும் போது உன் கூட உன்னோட தங்கச்சியும் சேர்ந்து வந்தா அது குரு பெயர்ச்சி.



நீ குதிரை வண்டியில ஏறி இருக்கிறத பார்த்திருக்கிறீயா?
குதிரை எப்படிடா வண்டியில ஏறும்?



நீ அவளை மறந்துட்டு, நாங்க சொல்ற பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கனும்.
முடியாத என்னால என்னால அவளை ஒரு கணம் கூட மறக்க முடியாது. வேணும்னா நீங்க சொல்ற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறேன்.

மனைவி: தூக்கத்துல திடீர்னு ஏன் சிரிச்சீங்க..?
கணவர்: அதுவா கனவுல தமன்னாங்க வந்த அதனால தான்
மனைவி: அப்றம் ஏன் திடீர்னு கத்துனீங்க..?
கணவர்: டக்குனு நடுவுல நீ வந்துட்ட.





கணவர்: கொஞ்சம் இந்த பொடுகு மருந்தை தேய்ச்சு விடு டி.
மனைவி: ஏங்க எனக்கு நிறைய வேல இருக்கு. நீங்களே தேய்ச்சுக்க வேண்டி தானா..!
கணவர்: இல்ல அரக்கி தேய்க்கணும்னு டாக்டர் சொன்னாரு அதான்..



உன்ட கடிகாரத்தில என்ன டைம்? பத்து பத்து ஒரு தடவ சொன்ன போதும்?

மனைவி: இந்த காக்கா கத்துறதா பாத்தா உங்க அம்மா வரப் போறது மாறி தெரியுது..
கணவர்: எப்புடி சொல்ற நீ..?
மனைவி: எவ்வளவு துரத்துனாலும் போகாமல் கத்திக் கிட்டே இருக்குல அதா வச்சு தான் சொல்ற.



# நூல் வெளியீடும் மடிக்கணனி வழங்கலும்












கவிஞர் பெரியமடு நிஹ்ரி எழுதிய "வெய்துயிர்த்தல்" என்ற கவிதை நூல் அண்மையில் புத்தளம் I.B.M மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வுக்கு புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகித்ததுடன் நூலின் முதல் பிரதியையும் பெற்றுக் கொண்டார். நூல் வெளியீட்டு விழாவில் புத்தளம் தில்லையாடி எம்.எஸ். பாத்திமா சமாஹாவுக்கு மடிக்கணனி வழங்கி வைக்கப்பட்டது. ஹாசிம் உமர் பவுண்டேஷனினால் தற்போது நாடு பூராகவும் வழங்கப்பட்டு வரும் வசதி குறைந்த மாணவர்களுக்கான மடிக்கணனி வழங்கும் திட்டத்தில் புத்தளம் மாணவிக்கு இந்த மடிக்கணனி அவரினால் வழங்கப்பட்டது. படத்தில் நூலாசிரியர் நிஹிரி, தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் கலைஞர் இளங்கோ ஆகியோர் காணப்படுகின்றனர்.

# திவ்யா கல்விக்கூடத்தின் பட்டமளிப்பு விழா








திவ்யா கல்விக்கூடத்தின் 29 ஆவது ஆண்டுவிழாவும் பட்டமளிப்பு நிகழ்வும் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவியொருவருக்கு பட்டமளிக்கப்படுவதையும் திவ்யா கலைக்கூடத்தின் இயக்குனர் அருந்ததி துரைராஜா அதிதிகளால் கௌரவிக்கப்படுவதையும் கலந்துகொண்ட பார்வையாளர்களையும் இங்கு காணலாம்.

# வடமாகாண Junior Super Singerன் நடுவராக இசையரசி திருமதி ஜெயபாரதி கௌசிகன்

C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் தோறும் நடத்தி வரும் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சிக்கு நடுவராக கடமையாற்றி வருபவர் இசைக் கலைஞரும் இசை ஆசிரியருமான திருமதி ஜெயபாரதி கௌசிகன். யாழ்ப்பாணம், கரவெட்டியில் பிறந்த இவர், பருத்தித்துறையிலுள்ள, யா/ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியர் சேவை தரம் 1ல் கடமையாற்றி வருகிறார்.

இவரது தந்தை கலாபூஷணம் சின்னத்துரை நவரத்தினம். இவர், ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர். இவரது தாயார் திருமதி சுசீலா தேவி நவரத்தினம். இவரும் ஓய்



வுபெற்ற சங்கீத ஆசிரியை. இவரது கணவர் சின்னராஜா கௌசிகன். அவரும் முதுகல்விமாணி ஆசிரியர். இவருக்கு கௌ. நிரூஜா, கௌ.நீரஜா என இருமகள்கள். இவரது

உடன் பிறந்த சகோதரிகள் இருவர். அவர்கள் திருமதி ஜெயகௌரி செல்வமோகன், திருமதி ஜெயதர்சினி சிவசங்கர். இவர்களும் இசையாசிரியைகள்.

இசைத்துறையில், விசேட பயிற்சி பெற்ற சங்கீத ஆசிரியர் திருமதி ஜெயபாரதி கௌசிகன்.

இவரது இசைத்துறைப் பிரவேசம் இவரது தந்தை வழியாக ஏற்பட்டுள்ளது. இவர் அண்ணாவி புதியார் பரம்பரையைச் சேர்ந்தவர். அண்ணாவி புதியார் இசை நாடகங்களை நெறிப்படுத்துவதுடன் சிறந்த ஹார்மோனிய வாத்தியக்கலைஞராகவும்



திகழ்ந்தவர். இவரது தந்தை சிறந்த கர்நாடக இசைக்கலைஞர்.

இவர் இந்திய புகழ்பூத்த சங்கீத வித்துவான் அமரர் மகாராஜபுரம் சந்தான ஐயரின் சீடராவார். இசை நுணுக்கங்களுடன் பாடுவதில் வல்லவர். மேலும் பண்ணிசை பாடுவதிலும் நாடகம் நடிப்பதிலும் சிறந்தவர். வாய்ப்பாட்டு மட்டுமன்றி நாதஸ்வரமும் கற்றுக்கொண்டார். இவரின் மாமன் மார் இருவரும் சிறந்த நாதஸ்வர வித்துவானாளாகவும் தவில் வித்துவானகளாகவும் திகழ்ந்தார்கள்.

இவரது தாயார் ஓய்வு பெற்ற ஆசிரியை



திருமதி சுசீலாதேவி நவரட்ணம் பிரம்மஶ்ரீ வீரமணி ஐயரிடம் இசை கற்றுக்கொண்டவர். தந்தை மகாராஜபுரம் சந்தான ஐயரிடம் இசைகற்று சங்கீத"ரத்னம் "எனும் பட்டம் பெற்றவர். 2017ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால ஶ்ரீ சேனவினால் "சங்கீத கலாபூஷணம்"விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1974காலப்பகுதியில் இலங்கை வானொலியில் சிறந்த கர்நாடக இசைக் கலைஞராக திகழ்ந்தார்.

அந்தவகையில் இவரும் இவரது சகோதரிகள் திருமதி ஜெயகௌரி செல்வமோகன், திருமதி ஜெயதர்சினி சிவசங்கர் ஆகியோர் இவரது தந்தையிடம் சிறுவயது முதல் இசையை முறைப்படி கற்றுக் கொண்டவர்கள். இனி இசைக் கலைஞரான திருமதி ஜெயபாரதி கௌசிகன் அவரைப் பற்றி கூறியது,

எனது மூன்றாவது வயதிலேயே தந்தை மற்றும் சோதரிகளுடன் இணைந்து மேடைக்கச்சேரிகள் செய்யத் தொடங்கி விட்டேன். இவ்வாறு எனது இசைப்பிரவேசம் சிறுவயதிலிருந்து ஆரம்பித்து பின்



பாடசாலைக் காலம் பின்னர் பல்கலைக் கழக காலம் என தொடர்ந்து இன்று ஓர் இசை ஆசிரியராகவும் கர்நாடக மற்றும் மெல்லிசைக் கலைஞராகவும் பரிணாம வளர்ச்சி பெற்று தொடர்கிறது.

2) எனது தந்தையார் கடந்த 01.04.2022 அமரத்துவம் அடைந்தார். நான் நூற்றுக்கும் மேற்பட்ட இசைக்கச்சேரிகளை எனது தந்தையாருடனும், சகோதரிகளுடனும், தனித்தும், பாடசாலை மாணவர்களோடும், பல்கலைக்கழக மாணவர்களுடனும்,ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களோடும், இசை ஆசிரியர்களோடும், விரிவுரையாளர்களோடும், இசைக்குழுக்களுடனும் இசைக்கலைஞர்களுடனும் நடத்தியுள்ளேன். நான் கலாச்சார விழாக்ககளிலும், கோவில்களிலும், கலாசாசார மண்டபங்களிலும் சனசமூக நிலையங்களிலும், தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களிலும் கர்நாடக இசைக் கச்சேரிகள் மட்டுமின்றி மெல்லிசைக் கச்சேரிகளும் நடத்தியுள்ளேன். அத்தோடு அனேகமான ஈழத்திருத்தலங்கள், வெளி நாட்டு திருத்தலங்களின் பக்தி இசை இறுவெட்டுக்களில் அனேகமான பக்திப் பாடல்களை நம் நாட்டு கலைஞர்கள் மட்டுமின்றி இந்திய இசைக் கலைஞரோடும் இணைந்து பாடியுள்ளதோடு வெளிநாட்டு இசைப் படைப்



பகங்களுக்கும் காணொளியாக பாடல்கள் பாடியுள்ளேன்.

ஆரம்பகாலத்தில் பாடசாலைக்காலங்களில் அனேகமான மேடை நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளேன், நான் இல்லாத மேடை நிகழ்வுகள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அது மட்டுமன்றி பாடசாலை பான்ட் வாத்தியக் குழுவிலும் பங்கேற்றுள்ளேன். ஏனைய மாணவரின் நிகழ்வுக்கு பக்கவாத்தியங்களும் வாசிப்பேன். அடுத்து நடன நிகழ்வுகளுக்கு பாடுவேன். நாடகங்களுக்கும் இசை வழங்குவதுமட்டுமன்றி பாடல்களும் பாடுவேன்.

**11ஆம் பக்கம் பார்க்க..**






கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# இலக்கிய உலகில் வைர விழா காணும் சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி

தினகரன் பாலர் கழகத்திற்காக 1963 ஆம் ஆண்டு பேனாவைத் தூக்கியதிலிருந்து இன்றுவரை சளைக்காது எழுதிவரும் எழுத்தாளர், "சத்திய எழுத்தாளர்" என மகுடம் சூட்டப்பட்ட எஸ். ஐ. நாகூர் கனி. தான் வாழும் வாழைத்தோட்டத்தை எப்போதும் முதன்மைப்படுத்திப் பேசுபவர். தன் எழுத்திற்கு உரமூட்டிய தினபதி சிந்தாமணி பிரதம ஆசிரியர் எஸ்.டி. சிவநாயகம் அவர்களை என்றும் முன்னிலைப்படுத்துபவர். எழுத்துலகில் 60 ஆண்டுகளைக் கடந்தும் கோலோச்சிக் கொண்டிருக்கும் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி அவர்கள், எழுத்துலகின்



எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி



எல்லாப் பக்கங்களிலுமே தன் கைவரிசையைக் காட்டியவர். கவிதையோடு தனது எழுத்தை ஆரம்பித்த இவர் ஆழமாய் பேசும் கட்டுரைகள், ஆத்மாவைத் தொடும் சிறுகதைகள், நடுநிலைமை பேசும் விமர்சனங்கள், சமுதாய உணர்வை கிளறியெடுக்கும் நாடகங்கள் என்று தன்னை நிலைநிறுத்திய சாதனை எழுத்தாளர். இவரது பல சிறுகதைகள் நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் முதல் பரிசு பெற்றிருக்கின்றன.

அண்மையில் தனது 100 ஆவது கவியரங்கை நடாத்தி சாதனைப் படைத்த எமது வலம்புரி கவிதா வட்டத்தின் சிரேஷ்ட ஸ்தாபகர்களில் ஒருவர். ஒன்று முதல் நூறுவரை அதன் பின்னணியில் இயங்கியவர். அதன் வெற்றிக்கு முதுகெலும்பாய் இருந்தவர்.

எழுத்துலகில் அறுபது ஆண்டுகளை வெற்றிகரமாக கடந்து நிற்கும் கலாபூஷணம் சத்திய அவர்களின் அனுபவங்களை இன்றைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் அவாவில் எமது "செந்தூரம்" இதழுக்காக அவரைச் சந்தித்தோம்

**கேள்வி : 60 வருட கால எழுத்துப் பயணத்தில் இன்றும் காத்திரமான படைப்புகளை எழுதிவரும் உங்கள் ஆரம்பம் எப்படி ஆரம்பித்தது ?**

பதில்: இன்று அல் ஹிக்மா கல்லூரி என அழைக்கப்படும் அன்றைய கொழும்பு மிகிந்து மாவத்தை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் வெளியான "அறிவுமலர்" என்ற கல்லச்சு மாணவ இதழில் 'தந்தை தாய் பேண்' என்ற சிறிய கட்டுரையை எழுதிய உற்சாகத்தில் எனது தமிழாசான் தெல்லிப்பழை பால பண்டிதர் த. தர்மலிங்கம், சுகாதாரம் படிப்பித்த ஓய்வுபெற்ற நீதியரசர் யூ.எல்.ஏ மஜீத் (கல்முனை) இருவரும் எனது எழுத்தார்வத்தை மெருகூட்டி தேசிய பத்திரிகைகளுக்கு எழுதத் தூண்டினர். தமிழ் இலக்கிய ஆளுமை க. கைலாசபதி பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய அன்றைய தினகரன் ஞாயிறு இதழ் 'பாலர் கழகம்' பகுதிக்கு 'கல்வி கற்றல்' எனும் தலைப்பில் மரபுக் கவிதையை எழுதி அனுப்பினேன். அது 04/07/1963 அன்று பாலர் கழகம் பகுதியில் பிரசுரமானது. இதுவே எனது முதற் பிரசவம். அது முதல் தொடர்ந்து இன்று வரை எழுதி வருகிறேன்.





**கேள்வி : தங்களின் முதல் பிரசவமே மரபுக் கவிதை என்றாலும் தங்களது எழுத்தும் போக்கும் கவிதையுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. எப்படி ?**



பதில் : ஆம். கவிதை, கட்டுரை, சிறுகதை, உருவக்கதை தொடர்கதை, விமர்சனம் என்று எல்லா வடிவங்களிலும் எழுதவும் சோபிக்கவும் பரிசு பெறவும் வல்லமையை இறையருளால் பெற்றிருந்தேன். நான் வாசித்த நூல்கள் இவற்றின் வித்தியாசங்களை எனக்குக் கற்றுத் தந்திருந்தன. அதன் வழியாக பயணம் செய்தேன். அது பன்முக எழுத்தாளர் என்ற பெயராலும் என்னை வாசகர்கள் அழைக்க காரணமானது.

**கேள்வி : நம் நாட்டின் தேசிய பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி எல்லாவற்றிலும் உங்கள் ஆக்கங்கங்கள் இடம் பெற்றுள்ளன. கடல் கடந்தும் தங்கள் ஆக்கங்கள் களம் கண்டுள்ளன. அதுபற்றி கூறுங்கள்.**

பதில்: 60 ஆண்டுகளில் பல பத்திரிகைகளுக்கும் எழுத்தாக்கம் செய்துள்ளேன். தினகரனில் ஆரம்பித்த பயணம் வீரகேசரி, தினக்குரல், ராதா, தினபதி, சிந்தாமணி, சூடாமணி, நவமணி, காங்கிரஸ் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொள்கை பரப்பேடு) செய்தி, சுதந்திரன், முஸ்லிம் குரல், சுடரொளி, தொழிலாளி (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சீனச் சார்பு ஏடு) போன்றவை. அவை மட்டுமல்ல சஞ்சிகைகளான திருமுகம், மாணிக்கம், மதீனா, இளம்பிறை, மல்லிகை (22 ஆம் ஆண்டிதழ்), ஞானம், தாரகை (எச். எம் .பி. மொஹிதீன் ஆசிரியராக இருந்த காலம்) பூபாளம் போன்றன. வெளிநாட்டு ஏடுகளான ஆனந்த விகடன், தினமணி, மதிநா, மணிச்சுடர் (தமிழ்நாடு) தமிழ் நேசன் (சிங்கப்பூர்) போன்றவற்றிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

வானொலியிலும் எனது பங்களிப்பு அதிகம் இருந்திருக்கிறது. முஸ்லிம் சேவையில் நான் எழுதிய "ஊடுருவல்" சமூக சித்திரம் சுமார் இரண்டரை வருடங்கள் ஒலிபரப்பாகின.

ரூபவாஹினி தொலைக்காட்சியில் கவியரங்கங்கள் பலவற்றில் கலந்து கொண்டுள்ளேன். நான் எழுதிய "கதவோரம் " சமூக நாடகம் சுமார் எட்டு மாதங்கள் ஒளிபரப்பாகியது.

பதில் : என் எழுத்துக்கு எத்தனை வயது அத்தனை வயது பொதுச் சேவைக்கும். பொதுப் பணி புரிந்ததில் நான் பெற்ற அனுபவங்களே என் எழுத்தாயின. எழுதும் படைப்பாளி எப்போதும் சமுதாயத்தை ஒட்டி வாழ வேண்டுமே தவிர வெட்டி வாழக்கூடாது. யாருக்கு என்ன உதவி எப்போது தேவைப்பட்டாலும் சலிக்காமலும் சளைக்காமலும் இப்போதும் செய்வது எனது குணம்.

எங்கள் வாழைத்தோட்டத்தில் எத்தனை வீட்டில் அடுப்பு எரிகிறது; எத்தனை வீட்டில் அடுப்பு எரியவில்லை, ஏன் எரியவில்லை என்ற விபரங்களை எனக்கு எப்போதும் அத்துப்படி.

இந்த உணர்வுதான் என் எழுத்துக்களை வெற்றி பெறச் செய்கின்றது. படைப்பாளி சமூகத்தை வெட்டி வாழ்ந்தால் சமூகத்தை விட்டும் தூரமாகிவிடுவான்.

அப்போது எழுத்துகள் வெறும் கற்பனையாகி விடும்.

நடைமுறை வாழ்வோடு அவை நடைபயிலாது. வெற்றியும் கிட்டாது.

**கேள்வி: முஸ்லிம்கள் யாழ் மண்ணை விட்டும் விரட்டப்பட்ட சம்பவத்தையொட்டிய கதை எழுதி சர்வதேச மட்டத்தில் பரிசு பல பெற்றுள்ளீர்கள். மலையகத்தை பற்றியும், அங்கு வாழும் மக்களைப் பற்றியும் எழுதி பாராட்டுப் பெற்றுள்ளீர்கள். தலைநகர் கொழும்பில் இருந்து கொண்டு இவை எல்லாம் எப்படி சாத்தியமாகின ?**

பதில் : எல்லா இன மக்களுடனும் நேசத்துடன் பழகுவதும், அவர்களின் உணர்வுகளை சரிவரப் புரிந்து கொண்டமையுமே இவ்வாறான கதைகளை உருவாக்குவதற்கு காரணமாகின. அத்துடன் எனக்குள்ள சமூகப் பணி அனுபவமும் சமுதாய உணர்வுமே இந்த வெற்றிக்கு காரணம் என்பேன்.

**தொடர் 6 ஆம் பக்கத்தில்...**





நேர்காணல்
என். நஜ்முல் ஹுசைன்

# அஷ்ரப் சிஹாய்தீன் நூல் வெளியீட்டு விழா
















பன்னூலாசிரியரும் ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீனின் 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு 07.07.2024 ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு 09 தெமடகொட வீதி, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் வகவம் தலைவர் என். நஜ்முல் ஹுஸைன் தலைமையில் நடைப்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எ.எச்.எம். பௌசி அவர்களும் விசேட அதிதியாக மீன்பிடித்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. அனுஷா கோகுல பெர்ணாண்டோ அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள் : நஷார்

# சிட்னியில் பரமேசுவரன் இரங்கநாதனின் நூல் வெளியீடு






சிட்னியில் பரமேசுவரன் இரங்கநாதனின் இரு நூல்கள் வெளியீடு சிட்னியின் மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் அனுசரணையில் இரு நூல்கள் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

பரமேசுவரன் இரங்கநாதன் ஆக்கத்தில் "இலக்கணச் சாரல்" மற்றும் "எங்கள் பொங்கல்" இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு, கல்வி நிலையத்தின் தலைவர் தேவராஜா சதீஸ்கரனின் தலைமையில் நிகழ்ந்த இந்த விழாவில் உப தலைவர் கந்தசாமி கௌரீஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

தலைவர் ஆறுமுகசாமி பேரின்பமூர்த்தி மற்றும் ஆசிரியை திருமதி நிருபா ஜனார்த்தனன் வாழ்த்துரை வழங்கவும், தொடர்ந்துவெளியீட்டு உரையை இந்தப் புத்தகங்களைஅழகுற வடிவமைத்த நிசா ஆட்ஸ் உரிமையாளர் நிசாகுலன் செல்வராசா வழங்கினார்.. "இலக்கணச் சாரல்" நூல் மதிப்பீட்டுரையை சரவணமுத்து தேவராசா வழங்கினார். "எங்கள் பொங்கல்" நூல் குறித்த மதிப்பீட்டுரையை கானா பிரபா வழங்கினார். நிகழ்வில் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் பரமேசுவரன் இரங்கநாதன் வழங்கினார்.

*06 ஆம் பக்க தொடர்...*

**கேள்வி : வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் என்று கேட்டதும் உடனே ஞாபகம் வருவது ?**

பதில் : குறிப்பிட்டுச் சொல்ல பல உள்ளன. எனினும் குறிப்பாகச் சொல்வதாயின் எனது இளைய மகள் ருஸைக்கா பிலிப்பைன்ஸ் நாட்டில் டாக்டராக பட்டம் பெற்ற வேளை பெற்றோராக அந்த மண்டப மேடையில் ஏறி நின்று மகள் பட்டம் பெறுவதை மிக அருகிலிருந்து கண்டதினை, ஆனந்தக் கண்ணீரோடு பதிவு செய்கிறேன். நான் வாழ்ந்த வாழைத்தோட்டத்திலிருந்து, நான் வாழ்ந்த மிகச் சாதாரணமான சூழலிலிருந்து வெளிநாட்டுக்கனுப்பி எனது மகளை டாக்டராக்குவது என்பது வெறும் பகல் கனவு என்று நினைத்துக் கொண்டும், சொல்லிக் கொண்டும் இருந்த வேளை வல்ல அல்லாஹ் அதனை நிதர்சனமாக்கித் தந்துள்ளான். நமது வாழைத்தோட்டத்தில் வறிய குடும்பத்தில் வாழ்ந்த பல வறிய மாணாக்கர்கள் கல்வி பெற, உயர் பதவிகள் வகிக்க நான் செய்த உதவிகள் எனது மகளை டாக்டராக்கி எனக்குக் கைம்மாறு செய்துள்ளன. தற்போது எனது மகள் மாவனல்லை அரசாங்க வைத்தியசாலையில் டாக்டராக பணிபுரிகிறார்.

**கேள்வி : அது உங்கள் சமூகச் சேவைக்குக் கிடைத்த பிரதிபலன்.நீங்கள் வெளியிட்ட நூல்கள், நீங்கள் மிக விரைவில் வெளியிடப்போகும் நூல்கள் பற்றியும் குறிப்பிடுங்கள்.**

பதில் : 1993 ல் "தூரத்து பூபாளம்" எனும் சிறுகதைத் தொகுதியையும், 1986 ல் "அவள் நெஞ்சுக்குத் தெரியும்" நாவலையும், 1993 ல் "காலத்தின் சுவடுகள்" விமர்சனத் தொகுப்பு நூலையும், இன்னும் சில தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளேன்.

இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் நான் வெளியிடவிருக்கும் நூல் "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்". வித்தியாசமான பார்வையுடன் அமைந்த இந்நூல் இலக்கிய உலகின் வரவேற்பை நிச்சயம் பெறும் என நம்புகிறேன்"

என விடைபெற்றார்

சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி அவர்கள் எழுத்துத் துறையிலும், சமூக சேவையிலும் வெற்றிப் பயணம் மேற்கொண்டு அதன் கனியைச் சுவைத்தவர். அவரது எதிர்கால எழுத்துலகம் மென்மேலும் சிறப்புறவும், சுகதேகியாக நீண்ட காலம் வாழவும் பிரார்த்திக்கிறோம்.



# நடிகர் விஜய்யின் மனைவி சங்கீதாவிற்கு இத்தனை கோடியா

தளபதி விஜய் தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோவாக இருக்கிறார். இவர் நடிப்பில் தற்போது GOAT திரைப்படம் உருவாகி வருகிறது. இப்படத்தை தொடர்ந்து தளபதி 69 திரைப்படத்தில் நடிக்கவுள்ளார்.

இப்படம் தான் விஜய்யின் கடைசி படம் என சொல்லப்படுகிறது. இதற்குப்பின் அவர் முழுமையாக அரசியலில் ஈடுபடவுள்ளாராம். நடிகர் விஜய்க்கு 1999ஆம் ஆண்டு சங்கீதா என்பவருடன் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ஜேசன் சஞ்சய் என்கிற மகனும், திவ்யா சாஷா என்கிற மகளும் உள்ளனர்.

இந்தநிலையில், விஜய்யின் மனைவி சங்கீதாவின் சொத்து மதிப்பு குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, அவருடைய மொத்த மதிப்பு ரூ. 400 கோடி இருக்கும் என கூறுகின்றனர். ஆனால், இது எந்த அளவிற்கு உண்மையான தகவல் என்று தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பூர்ணிமா ரவி

வெள்ளித்திரையில் 'பிளான் பண்ணி பண்ணனும்' என்ற படத்தின் மூலம் அறிமுகமாகி பலரின் கவனத்தை ஈர்த்தவர் தான் பூர்ணிமா ரவி.

இவர் சமூக வலைதள பக்கங்களில் கலகலப்பான வீடியோக்களை வெளியிட்டு யூட்யூப் பிரபலமாகவும் திகழ்ந்து வருகின்றார். இவருக்கு என்று தனித்தனி பேன்ஸ் பேஜும் காணப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து விஜய் டிவியில் ஒளிபரப்பான பிக் பாஸ் நிகழ்ச்சியின் 5வது சீசனில் பங்குபற்றி அதன் இறுதியில் 16 லட்சம் பண பெட்டியுடன் வெற்றிகரமாக வீடு சேர்ந்தார் பூர்ணிமா.

இதை தொடர்ந்து சமீபத்தில் இவரது நடிப்பில் வெளியான 'செவப்பி' மற்றும் 'நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே' என்ற படமும் நயன்தாரா நடிப்பில் வெளியான 'அன்னப்பூரணி' படமும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றிருந்தன.

இந்த நிலையில், சமூக வலைதள பக்கங்களில் அக்டிவாக இருக்கும் பூர்ணிமா, அடிக்கடி போட்டோ ஷூட் செய்து வெளியிடுவதை வழமையாகக் கொண்டிருந்தார். அதன்படி தற்போது தனது இடுப்பழகை காட்டி கிளாமர் போட்டோ ஷூட் செய்துள்ளார்.





# 'என்னை சுற்றி நல்ல ஆண்கள் யாரும் இல்லை' நடிகை அனுயா

நடிகர் ஜீவா நடித்த சிவா மனசுல சக்தி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை அனுயா. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமான இவர் அடுத்தடுத்து மதுரை சம்பவம், நகரம் போன்ற படங்களில் நடித்து வந்தார்.

நடிகர் விஜய்மற்றும் இயக்குனர் ஷங்கர் கூட்டணியில் உருவான நண்பன் படத்திலும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இதுமட்டுமின்றி பிக் பாஸ் முதல் சீசனில் போட்டியாளராகவும் களமிறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நடிகை அனுயா சமீபத்தில் பேசிய ஒரு விஷயம் இணையத்தில் வைரலாகி வருகிறது. அதாவது நான் துபாயில் பிறந்தவள். தமிழ் எனக்கு கொஞ்சம் தான் தெரியும். பொறியியல் படிப்பை முடித்தவுடன் சினிமா துறைக்கு வந்துவிட்டேன். விஜய் ஆண்டனி, சுந்தர்.சி மற்றும் ஜீவா ஆகியோருடன் என்னை இணைத்து தவறாக பேசி வதந்திகளை பரப்புகிறார்கள். அவை அனைத்தும் தவறான தகவல். நான் இப்போது தனியாக தான் இருக்கிறேன் என கூறியுள்ளார்.இதை பார்த்த ரசிகர் ஒருவர் 'ஏன் தனியாக இருக்கிறீர்கள், திருமணம் செய்யலாமே' என கூறினார். இதற்கு 'என்னை சுற்றி நல்ல ஆண்கள் யாரும் இல்லை' என கூறினார் நடிகை அனுயா. இந்த விஷயம் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

# நான் சும்மா இருந்தாலும் நம் வாய் சும்மா இருக்காது



நான் சும்மா இருந்தாலும் நம் வாய் சும்மா இருக்காது என்று சொல்வதற்கு ஏற்ப வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்ட சமந்தா. அதாவது சமந்தா ஏற்கனவே சில ஆண்டுகளாக மயோசைட்டிஸ் நோயால் பாதிக்கப்பட்டு அதை சரிப்படுத்தும் விதமாக ட்ரீட்மென்ட் எடுத்துக்கொண்டு வந்தார். இடையில் ஒரு சில படங்களில் நடித்தாலும் அந்த படம் பெருசாக ரீச் ஆகாமல் தோல்வியை கொடுத்தது.

இதனால் மனவேதனையில் இருந்த சமந்தா மறுபடியும் உடல்நலத்தில் கவனம் செலுத்தலாம் என்று முழுமையாக குணமாவதற்கு தொடர்ந்து சிகிச்சை எடுத்து வந்தார். இந்த நிலையில் சமந்தா ஒரு youtube சேனலை உருவாக்கி அதன் மூலம் பாட்காஸ்ட் மூலம் மருத்துவத்தை பற்றி ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக சில மருத்துவ ரீதியான ஆலோசனைகளையும் தொடர்ந்து வழங்கி வந்தார்.

ஆனால் இதுவே தற்போது சமந்தாவுக்கு ஒரு சிக்கலில் சிக்க வைத்து விட்டது. அதாவது சமந்தா ஹைட்ரஜன் பெராக்ஸைட் பயன்படுத்துவது குறித்து பேசிய நிலையில் இது மிகப்பெரிய சர்ச்சையை கிளப்பி இருக்கிறது.

எந்த ஒரு மருத்துவ படிப்பும் இல்லாமல் வெறும் அனுபவத்தின் மூலம் மக்களுக்கு மருத்துவரீதியாக ஆலோசனை கூறும் சமந்தா செய்வது மிகப்பெரிய தவறு என்று தி லிவர் டாக் (The Liver DoC) எனும் சோஷியல் மீடியா இன்ஃப்ளூயன்ஸர் கூறியிருக்கிறார்.

அதாவது சமந்தா கூறியது என்னவென்றால் மருந்து எடுத்துக் கொள்ளும் முன் ஒரு மாற்று வழியை முயற்சி செய்து பாருங்கள். ஒரு வேலை அது உங்களுக்கு கை கொடுக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் ஹைட்ரஜன் பெராக்ஸைடு மற்றும் காய்ச்சி வடிகட்டிய நீர் ஆகியவற்றின் கலவையுடன் நெபுலைஸ் செய்து பாருங்கள் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஆனால் சமந்தா கூறிய இந்த ஆலோசனைக்கு மறுப்பு தெரிவித்து பதிவிட்ட தி லிவர் டாக் என்னும் சோசியல் மீடியா இன்ஃப்ளூயன்ஸர் ஹைட்ரஜன் பெராக்சைடு பயன்படுத்துவது முற்றிலும் உடலுக்கு தீங்கானது. இப்படி ஒரு செலிப்ரிட்டியாக இருக்கும் சமந்தா கூறியதை மக்கள் எடுத்துக் கொண்டால் அது மிகப்பெரிய பிரச்சினையை உண்டாக்கும். அந்த வகையில் சமந்தா சொல்லிய ஆலோசனை மிகவும் தவறானது என்றும் அதற்காக நிச்சயம் சமந்தாவை சிறையில் அடைக்க வேண்டும் என கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி இணையத்தில் விமர்சித்திருக்கிறார்.

# பொலிஸ் அதிகாரியாக பிரியங்கா மோகன்..



பான் இந்திய படைப்பாக உருவாகும் நேச்சுரல் ஸ்டார் நானியின் "சூர்யா'ஸ் சாட்டர்டே" படத்தில், நானிக்கு ஜோடியாக பிரியங்கா மோகன் கதாநாயகியாக நடித்துள்ளார். கேங் லீடருக்குப் பிறகு நானியுடன் அவர் நடித்த இரண்டாவது படம் இது. அதிரடி ஆக்சன் படமாக உருவாகும் இப்படத்திலிருந்து பிரியங்கா மோகனின் கதாப்பாத்திரமான சாருலதா, ஃபர்ஸ்ட் லுக்கை தயாரிப்பாளர்கள் வெளியிட்டனர்.

ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில் பிரியங்கா மோகனின் சாருலதா கதாப்பாத்திரம், அப்பாவி பொலிஸ் அதிகாரியாக காட்சியளிக்கிறது. அந்த கதாப்பாத்திரத்திற்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறார். அவரது முகத்தில் ஒரு அழகான புன்னகை மிளிர்கிறது. காக்கி உடையில், தோளில் பையுடன் சாலையில் நடந்து செல்கிறார் பிரியங்கா. இப்படத்தில் பிரியங்காவின் கதாபாத்திரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

# அடுத்தடுத்து விவாகரத்து செய்திகள்

கடந்த சில மாதங்களாகவே அடுத்தடுத்து விவாகரத்து செய்திகள் தான் பரபரப்பை கிளப்பிக் கொண்டிருக்கிறது. அதிலும் கோலிவுட்டில் இப்போது இந்த கலாச்சாரம் அதிகமாகி கொண்டே வருகிறது.

ஒன்று சேர்ந்த ஜிவி பிரகாஷ், சைந்தவிஅமலாபால், சமந்தா, தனுஷ் என ஆரம்பித்து தற்போது ஜிவி பிரகாஷ் வரை விவாகரத்து அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். அதன்படி ஜிவி பிரகாஷ் தன் மனைவி சைந்தவியை விட்டு பிரிவதாக சில மாதங்களுக்கு முன்பு அறிவித்தார்.



இது அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இதற்கு காரணம் என்ன என பலரும் கேட்டு வந்தனர். மேலும் சினிமா விமர்சகர்களும் பல கட்டுக்கதைகளை பரப்பி வந்தார்கள். இதனால் சோர்வடைந்த ஜிவி பிரகாஷ் தங்களுடைய தனிப்பட்ட விஷயத்தில் தலையிட வேண்டாம் என குறிப்பிட்டு இருந்தார்.

இருப்பினும் இந்த ஜோடி பிரிந்தது ரசிகர்களுக்கு இப்போது வரை வருத்தமாகத் தான் இருக்கிறது. ஆனால் அவர்களை குஷிப்படுத்தும் வகையில் தற்போது இவர்களை சேர்த்து வைத்திருக்கிறார் இயக்குனர் வெற்றிமாறன்.

ஏற்கனவே இந்த ஜோடியின் பாடல்கள் அனைத்தும் வேற லெவலில் ஹிட் அடித்துள்ளது. அதைத் தொடர்ந்து தற்போது வெளிவர உள்ள பாடலும் ரசிகர்களை கவரும் என்பதில் சந்தேகம் இல்லை.மேலும் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி விட்டு தொழில் விஷயமாக இவர்கள் இருவரும் இணைந்துள்ளனர். இது அவர்களுடைய மனதையும் மாற்ற வேண்டும் என ரசிகர்கள் கூறி வருகின்றனர். ஆனால் இப்பாடல் இவர்களுடைய பிரிவுக்கு முன் கூட பதிவு செய்யப்பட்டு இருக்கலாம் என்ற யூகமும் ஒரு பக்கம் எழுந்துள்ளது.




# வரலட்சுமிக்காக கணவர் நிக்கோல் கொடுத்த விலையுயர்ந்த பரிசு

தமிழ் சினிமாவில் எந்த விதமான கதாபாத்திரம் கொடுத்தாலும் அதில் செம ஸ்கோர் செய்து நடிப்பவர் நடிகை வரலட்சுமி சரத்குமார்.

ஆரம்பத்தில் பிரபல இயக்குனர்களின் படங்களின் வாய்ப்புகள் எல்லாம் வந்தாலும் சரத்குமார் அனுமதிக்காததால் அதனை மிஸ் செய்திருக்கிறார்.

பின் விக்னேஷ் சிவன் இயக்கிய போடா போடி படம் மூலம் சினிமாவில் நடிக்க தொடங்கியவர் அடுத்தடுத்து வில்லி மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து அசத்தியிருந்தார்.

இந்த நிலையில் நடிகை வரலட்சுமிநிக்கோல் திருமண கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடந்து வருகிறது.

வரலட்சுமியின் திருமணம் கடந்த ஜூலை 3ம் தேதி படு கொண்டாட்டமாக நடந்துள்ளது. இந்த நிலையில் நடிகை வரலட்சுமிக்கு, நிக்கோல் ரூ. 200 கோடிக்கு சொத்து வாங்கி வைத்துள்ளாராம்.

தங்க செருப்பு, வைரக்கல் பதிக்கப்பட்ட புடவை, தங்கம் மற்றும் வைர நகைகள் போன்றவற்றை கொடுத்து அசத்தியுள்ளாராம். ஆனால் இந்த பரிசு தகவல் எந்த அளவிற்கு உண்மை என தெரியவில்லை.



# துரித உணவும் துரிதமான வாழ்வும்



குறள் 945:.
மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

பொருள் :

உடலுக்கு ஒத்துவரக்கூடிய உணவைக்கூட அதிகமாகும்போது மறுத்து அளவுடன் உண்டால், உயிர் வாழ்வதற்குத் தொல்லை எதுவுமில்லை.

சமையல் என்பது அழகிய கலை மட்டுமல்ல எம் ஆரோக்கியத்திற்கு நெருங்கிய தொடர்பு கொண்டது. வீட்டுக்கு வீடு வாசல் படி என்பதுப்போலவே துரித உணவின் வளர்ச்சியும் ஒவ்வொரு வீட்டின் தேவையாக அமைந்துள்ளது. ஆரம்ப நாட்களில் நகர்புறங்களில் துரித உணவின் மோகம் இருந்தது. காலத்தின் வளர்ச்சி இன்று கிராமப் புறங்களிலும் தன் வளர்ச்சியால் பரந்து மக்களின் தெரிவு துரித உணவென மாறிவிட்டது. சமையலறைக்குச் செல்லாமல் பல மாதங்களுக்கு முன்பே சமைக்கப்பட்டதும் கெடாமல் இருக்க ரசாயனங்களும் சேர்க்கப்பட்ட பாக்கெட் உணவுதான் துரித உணவு. உண்மையில் துரித உணவில் சில நன்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

இன்றைய நாட்களில் மனிதர்களுக்கு நேரம் போதாமை என்கிற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வீட்டிலுள்ள அனைவரும் ஏதோ வேலை, வேலை...

அப்படியே வீட்டில் இருந்தாலும் தொலைக்காட்சி நாடகம், கைபேசியில் மூழ்கும் நேரம் அதிகம். அதனால் துரித உணவுகளை தயாரிக்க இலகுவாகவும் சிறிது நேரம் போதுமானதாகவும் உள்ளது. அடுத்ததாகசமையலுக்கு அதிக நேரம் தேவைப்படுவதில்லை!

எளிதில் கிடைக்க கூடியதாக இருக்கிறது.

அதிக காலத்திற்கும் சேமித்து வைக்க முடிகிறது. பயணங்களில் இலகுவாக கொண்டு செல்ல முடிவதுடன் வேண்டிய நேரங்களில் வேண்டிய இடங்களில் வாங்கும் வசதியும் இன்றுள்ளது. சிறு குடும்பங்கள் இன்று அதிகமாகிவிட்டது. அதனால் சிறு குடும்பங்களுக்கு தேவையான அளவுக்கு போதுமானதாக இருக்கிறது. துரித உணவை பாவிப்பதே நாகரீகத்தின் வளர்ச்சி என்கிற மோகமென மக்கள் மனதில் ஆழமாக பதிந்து விட்டது. பெரும்பாலானோர் வீட்டில் ஆண், பெண் இருவரும் பணிக்குச் செல்லுவதால் நேரத்தை சரி செய்ய துரித உணவை தெரிவு செய்கின்றனர்.

பொதி செய்யப்பட்ட உணவு உடனடி சமையலுக்கு இலகுவாக இருக்கிறது. என பல காரணங்களால் துரித உணவு மக்களை தன் வசப்படுத்தியுள்ளது. அதனால் மக்களின் விருப்பம் துரித உணவின் பக்கம் செல்வது நியாயமாக தெரியலாம்.உண்மையில் நாம் உணவுண்பது ஆரோக்கியமாக இயங்கவும் உயிர் வாழவுமே.

துரித உணவுகள் மூலமாக பல பாதிப்புகள் இன்றைய சமூகத்தில் மக்களுக்கு ஏற்படுகிறது. இதைப் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் வெகும் குறைவாகவே உள்ளது எனலாம். அதனால் ஆரோக்கியமாக வாழவேண்டிய மனிதர்கள் நாளொரு நோயும் பொழுதெல்லாம் மருந்துமாக திரிகின்றனர்.

துரித உணவின் பாதிப்புகளை ஆராய்வோமானால் துரித உணவுகளை நாம் அடிக்கடி உண்பதாலும். அதிகமாக உண்பதாலும் பல நோய்கள் உண்டாகின்றன.

துரித உணவுகள் நீண்ட நாட்களுக்கு கெட்டுப்போகாமல் இருப்பதற்காக பல இரசாயனப் பொருட்கள் சேர்க்கப் படுவதால் அவை உள்உறுப்புக்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் ஏராளம், தாராளம் எனலாம்.

மேலும் துரித உணவில் மக்களை கவர்வதற்காக பல நிறக் கலவைகளும் சேர்க்கப்படுகின்றன. இதனால் வயிற்று வலி, குடல் புற்று நோய், உடல் பருமன், வயிற்றுப்புண், நீரிழிவு உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய் பாதிப்புகள் எம்மை பாதிக்கிறது

உறைந்த நிலையில் அல்லது, குளிர்விக்கப்பட்ட நிலையில் துரித உணவினை சேமிப்பதால் அவற்றின் இயற்கையானச் சுவை குறைந்து விடுகிறது.இதைத் தவிர்ப்பதற்காக சர்க்கரை, உப்பு, கொழுப்பு, நறுமணம், வண்ணங்கள் போன்றன சேர்க்கப்படுகின்றன. இது மனித உடலை பெரிதும் பாதிப்படையச் செய்கின்றது. இவை உடலில் நச்சுத்தன்மையை உண்டாக்கி கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றை பாதிக்க வைத்து நோயாளிகளாக மாற்றுகிறது.

துரித உணவுகள் ஊட்டச்சத்து குறைந்த உணவுகளாகும். இதனைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வந்தால் உடலுக்கு தேவையான அளவு ஊட்டச்சத்து கிடைக்காமல் போகும். உடல் வளர்ச்சி குறைந்து நோய் எதிர்ப்பு சக்தி குறையும். நோய் எதிர்ப்பு சக்தி குறைய பல நோய்களின் பாதிப்பு உங்களை இலகுவாக தாக்கும். இப்படியாக முழு மனிதனாக வாழும் நாம் நோயின் தாக்கம் காரணமாக அரை மனிதனாக மாறி விடுகின்றோம்.

துரித உணவில் அதிகமான கலோரி உண்டு. ஊட்டம் இல்லாததால் நோய் இலகுவில் ஏற்படும். உடற்பருமன் அதிகரிக்கும் உடலில் தேவைக்குமேல் பருமன் ஏற்படுவதால் சர்க்கரை நோய், உயர்ந்த ரத்த அழுத்தம் ஏற்பட்டு மனித ஆயுள் குறைகிறது.

மேலைநாடுகளில் துரித உணவு விளம்பரங்களுக்குத் தடை உண்டு. சில நாடுகளில் துரித உணவுக்குக் கொழுப்பு வரி போடுகிறார்கள். விளம்பரங்களால் தூண்டப்படும் நாம் அளவுக்கு மீறி உருளைக் கிழங்கு வறுவல்கள் ஏனைய பொரியல்கள் என்பவற்றை வாங்கி உண்டு பருமன் நோய் வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம், உணர்கிறோம்.

குறிப்பாக குழந்தைகள் வறுவல்களுக்கு அடிமையாகி வயதுக்கு மீறிய எடையுடன் காணப்படுகிறார்கள்.குறைந்த எடை பிரச்சினையை விட கூடுதல் எடை ஆரோக்கியமற்ற செயலாகும். இவை இதயத்தைப் பாதித்து ஆபத்தில் முடிய வைக்கும்.

நாம் உண்ணும் பல உணவுகளில் மாவுச் சத்துடன் புரதச்சத்தும் உண்டு. ஆனால், துரித உணவுகளில் புரதம், நார்ச்சத்து, வைட்டமின் எதுவுமே இல்லை என்பதுடன், அனுமதிக்கப்படும் அளவுக்குமேல் உப்பும், கரையாத கொழுப்பும் உள்ளதால் மனித ஆயுள் குறைகிறது. ஆயுள் குறைவது மட்டுமல்ல, தினமும் மாத்திரைகள், ஊசிகள் என்று மனித உடல் மருந்துக்கு அடிமையாகின்றோம்.

எனவே நாம் உண்ணும் உணவின் மீது கவனம் செலுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை வாழ தயாராவோம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# சருமச் சுருக்கத்திற்கு கற்றாழை!



வயது அதிகரித்தால், சருமத்தில் சுருக்கமும் அதிகரிப்பது இயற்கையான ஒன்று தான். ஆனால் இன்றைய காலத்தில் இளம் தலைமுறையினர் பலருக்கு விரைவிலேயே சருமத்தில் சுருக்கங்களானது ஏற்படுகிறது. இதனால் இளமையிலேயே முதுமையான தோற்றத்தில் காட்சியளிக்கிறார்கள். மேலும் இதற்காக பல்வேறு க்ரீம்களை பயன்படுத்தி வருகிறார்கள்.

இருப்பினும் அவற்றினால் எந்த ஒரு பலனும் கிடைப்பதில்லை, மாறாக சருமத்தின் இயற்கை அழகு தான் பாதிக்கப்படுகிறது. எனவே சருமத்தில் சுருக்கம் ஏற்பட்டால், அதனைப் போக்க இயற்கை நமக்கு தந்த ஒரு அற்புதமான ஒரு பொருள் தான் கற்றாழை. கற்றாழையினால் சருமத்தில் உள்ள சுருக்கங்கள் மட்டுமின்றி, பல்வேறு பிரச்சினைகளும் நீங்கும். இங்கு கற்றாழையை சருமத்திற்கு பயன்படுத்தினால் கிடைக்கும் நன்மைகளைப் பார்ப்போம்.

கற்றாழையின் ஜெல்லை சருமத்திற்கு தினமும் தடவி ஊற வைத்து கழுவி வந்தால், சருமத்திற்கு தேவையான வைட்டமின்கள் மற்றும் கனிமச் சத்துக்கள் கிடைத்து, சருமத்தின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட்டு, சருமம் மென்மையாக இருக்கும்.

கற்றாழை ஜெல்லை சருமத்திற்கு பயன்படுத்தி வந்தால், அவை சருமத் துளைகளில் தங்கியுள்ள நச்சுக்கள் மற்றும் இறந்த செல்களை முற்றிலும் வெளியேற்றி, சருமத்தை பொலிவோடு வைத்துக் கொள்ளும்.

கற்றாழை ஜெல்லை சிறந்த மாய்ஸ்சுரைசர் என்றும் சொல்லலாம். ஏனெனில் இதனை சருமத்திற்கு அன்றாடம் பயன்படுத்தி வந்தால், சருமம் வறட்சி அடைவதைத் தடுக்கலாம். இதனால் சருமம் அழகாக மின்னும்.



தினமும் இரவில் படுக்கும் போது, கற்றாழை ஜெல்லை முகம் மற்றும் கண்களைச் சுற்றி தடவி வந்தால், சருமத்திற்கு தேவையான வைட்டமின்களான ஏ, ஈ மற்றும் சி போன்றவை கிடைத்து, சருமம் சுருக்கமடைவதைத் தடுக்கலாம். முக்கியமாக கண்களைச் சுற்றி தடவும் போது, கற்றாழையின் ஜெல் கண்களில் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இவை கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும்.



1:1 என்ற விகிதத்தில் கற்றாழை ஜெல் மற்றும் நீரில் கலந்த போராக்ஸ் நீரை எடுத்துக் கொண்டு, நன்கு கொதிக்க விட்டு, பின் குளிர வைத்து, அத்துடன் 1 கப் தேங்காய் எண்ணெய் சேர்த்து நன்கு கலந்து, பின் அந்த கலவையை சருமத்திற்கு பயன்படுத்தி வந்தால், அவை சுருக்கத்தையும், விரைவில் முதுமை தோற்றம் வருவதையும் தடுக்கும்.

# வடமாகாண Junior Super Singer இறுதிப் போட்டியில் இசை பேரரசி நித்ய ஸ்ரீ மகாதேவன்



நித்யஸ்ரீ மகாதேவன் ஒரு புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தி என்பது குறிப்பிடத்தக்கது

டி.கே.பட்டம்மாளின் மகன்கள் சிவகுமார் மற்றும் லட்சுமணன் ஆவர். சிவகுமாரின் மகள் நித்யஸ்ரீ மகாதேவன் ஆவார். நித்யஸ்ரீயின் சகோதரியின் மகளாகிய லாவண்யா சுந்தரராமன், வளர்ந்துவரும் இளம் இசைக் கலைஞர் ஆவார்.

நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ்நாட்டில், திருவையாற்றில் லலிதா மற்றும் சிவகுமார் தம்பதியருக்கு மகளாக 1973 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி பிறந்தார். இவர், பிரபல கர்நாடக இசைப் பாடகியான டி. கே. பட்டம்மாளின் மகன்வழி பேத்தி மற்றும் மிருதங்க வித்வானான பாலக்காடு மணி ஐயரின் பேத்தியும் ஆவார்.

முதலில், தனது தாயாரிடம் சங்கீதப் பயிற்சி மேற்கொண்டார். மேலும், டி. கே. பட்டம்மாளிடம் சங்கீதம் கற்ற அவர், சிறு வயதிலிருந்தே அவரது கச்சேரிகளில் பங்கேற்றார். அவரது தந்தை பாலக்காடு மணி ஐயரின் சிஷ்யன் என்பதாலும், அவரை சங்கீதக் கலையில் மேலும் ஊக்குவித்தார். சங்கீதக் கச்சேரிகளுக்கிடையே தனது பள்ளிப் படிப்பை முடித்த அவர், வணிகவியலில் தனது இளங்கலைப் பட்டதை எஸ்.ஐ.ஈ.டி கல்லூரியில் பெற்றார்.

தனது பதினாறாவது வயதில், ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி, 1987ஆம் ஆண்டில் செம்மொழி இசை இளைஞர்



சங்கத்திற்காகப் பாடியதே, அவரது முதல் மேடை கச்சேரியாகும். ஒரு மணி நேரம் நடைபெற்ற இக்கச்சேரி பிரபலமான கர்நாடக சங்கீத இசை வல்லுனர்களான டி. கே. பட்டம்மாள், டி. கே. ஜெயராமன், விஜய் சிவா, ஆர். கே. சிவகுமார், கே. வி. நாராயணஸ்வாமி போன்றோர் முன்னிலையில் நடந்தது. அவரது பாட்டியைப் போலவே, அவரும் பாபநாசம் சிவன் மற்றும் கோபாலகிருஷ்ண பாரதி அவர்களின் பாடல் தொகுப்புகளை மேடையில் பாடினார்.

பாபநாசம் சிவனின் இசைத் தொகுப்புகளைத் தொகுத்து இரண்டு ஆல்பங்களாக வெளியிட்ட அவர், ‘பாபநாசம் சிவன் – எலெஜென்ட்’ என்ற தலைப்பில் ஒரு விரிவுரையும் கோவையில் கொடுத்துள்ளார். கோபாலகிருஷ்ண பாரதி அவர்களின் இசைத் தொகுப்புகளைத் தொகுத்து இரண்டு அல்பங்களாக வெளியிட்ட அவர், கோவையில் உள்ள பி.எஸ்.ஜி அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியில் அவரது வாழ்க்கை மற்றும் கலைக்காக அவரது அர்ப்பணிப்பு பற்றி பேசியுள்ளார்.

வடமாகாண ஜூனியர் சுப்பர் சிங்கரின் இறுதிப்போட்டி எதிர்வரும் 2024.09.07ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நடுவராக கடமையாற்றுவதற்காக அவர் எதிர்வரும் 2024.08.07ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். இவரை இவரது சென்னையிலுள்ள இல்லத்திற்குச் சென்று சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஸ் கடந்த 2024.07.08ஆம் திகதி சந்தித்து தொலைபேசி மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார். அப்போது அவர் கூறிய கருத்துக்கள் சில,

நான் யாழ்ப்பாணத்திற்கு 15 தடவைகளுக்கு மேல் வந்திருக்கிறேன். கொழும்புக்கு 8 தடவைகளுக்கு மேல் வந்திருக்கிறேன். மீண்டும் மீண்டும் இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புகள் கிடைத்து வருகின்றமையொட்டி பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த முறை இசைத்துறையில் பாண்டியத்தியமிக்க மழலைச் செல்வங்களை தெரிவு செய்ய வருவதால் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இலைமறை காயாக இருக்கும் இந்த மழலைச் செல்வங்களை தெரிவு செய்வதில் எனது பங்களிப்பும் இடம்பெறவிருப்பதால், இசைத்துறையில் அவர்கள் வளமான வெற்றிகளை குவிக்கும்போது அதில் அளவில்லா ஆனந்தம் ஏற்படும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. இது மறக்க முடியாத ஒரு இசைப் பயணமாக அமையும்.

இவ்வாறான ஒரு நிகழ்வை நடத்துகின்ற அமைப்புகளுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

## வடமாகாண Junior Super Singer

5ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவ்வாறாக எல்லாவகையான நிகழ்வுகளிலும் நான் பங்கேற்பதால் எமது பிரதேசம் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் என்னை அறியாதவர்கள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அடுத்து எனது பாடசாலை ஆசிரியர் திருமதி மங்களா சிறீதரனும் எனது தந்தையாரின் வழிகாட்டலோடு வந்தவர். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றவுடன் பத்திரிகைகளில் எனது படத்தோடு எனது பெரும் சாதனையும் பிரசுரிக்கப்பட்டன.

இதன் பின் படிப்படியே இசை இறுவெட்டுக்களில் பாடும் வாய்ப்புகள் அதிகரித்தன. கலை பண்பாட்டுக் கழகத்தினால் இசையமைப்பாளர் சரவணபவனின் இசையிலும் கோணேஸ்பிள்ளையின் வரிகளிலும் காலத்திற்கேற்ற மெல்லிசைப் பாடல்களை முதன் முதல் ஒலி நாடாக்களில் பாடும் வாய்ப்பு கிடைத்தது.

பின்னர் இசை வாணர் கண்ணன் மாஸ்டர் (மு.கோபாலகிருஷ்ணன்), மற்றும் அவரின் புதல்வர்கள் கோ.சத்தியன் (முரளி), கோ.தர்ஷன் ஆகியோரின் இசையிலும், இசையமைப்பாளர் இசைப்பிரியன் செயல்வீரன் ஆகியோரின் இசையிலும் காலத்திற்கேற்ற பாடல்களை இசை இறுவெட்டுக்களுக்காக பாடினேன்.

மேலும் அநேகமான கவிஞர்களின் இனிய வரிகளில் அநேக இசையமைப்பாளர்களின் இசையில் கர்நாடக இசைப் பாடல்கள், பக்திப் பாடல்கள், கிறிஸ்தவ கீதங்கள், மெல்லிசைப் பாடல்கள், தத்துவப்பாடல்கள்,சிறுவர் பாடல்கள், நிலைய கீதங்கள், பிரதேச கீதங்கள், பாடசாலைக் கீதங்கள் பாடினேன், பாடி வருகின்றேன்.

இன்னும் கவிஞர் குலசேகரன், சோ..பத்மநாதன், ஸ்ரீஸ்கந்தராஜா, கவிஞர் மிதிலை ஆகியோரின் வரிகளிலும் பாடல்கள் பாடியுள்ளேன்.

இத்தகைய கவிஞர்களின் இனிய வரிகளில் நான் பாடுவதற்கு சிறப்புற இசையமைத்த இசையமைப்பாளர்கள் வரிசையில் இசை வாணர் கண்ணன் மாஸ்ரர், மற்றும் அவர் புதல்வர்களான சத்தியன்(முரளி), சாய்தர்ஷன் ஆகியோரும் தேனிசையாளன் ஸ்ரீ குகன் மற்றும் அவர் சகோதரர் மயூரன் (இசைப்பிரியன்), இசையமைப்பாளர் அருணாவின் புதல்வர்களான அருணா கேதீஸ் சரவணபவன், யாழ் ரமணன், ரகுநாதன், செயல்வீரன், பிரியன் தம்பிராஜா, அன்ரன் ஜேம்ஸ், சுதர்சன் கிறிஸ்ரியன், ஜேசுதாசன், செல்வச்சந்திரன், அருட்தந்தை றெனோல்ட் அடிகளார், நாகேந்திரன், குமணன், மு.வரதன், தூயகுமாரன், டென்மார்க் ஷண், நாகேந்திரன் பாலச்சந்திரன், கு.அற்புதன், ஸ்ரீ ராஜ், தவமைந்தன் றொபேட், வெற்றி சிந்துஜன், மனுசங்கர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு நான் இன்று ஓர் மூத்த பாடகியாகத் திகழ காரண கர்த்தாக்களாக இருப்பவர்கள் எனக்கு இசை போதித்த அர்ப்பணிப்புள்ள இசை ஆசான்களாவர். அந்தவகையில் எனக்கு இசை போதித்தோர் எனது தந்தை சி.நவரத்தினம், திருமதி கு.ஜனககுமாரி, திருமதி மங்களா. சிறீதரன், S.குமாரசாமி (வரதன்), திருமதி க.தங்கராணி, திருமதி தட்ஜணாதேவி, செல்வி சரோஜா தம்பு, எல்.திலகநாயகம்போல், எஸ் பத்மலிங்கம் , A. K கருணாகரன், இராமநாதன் ஐயர், ந.வி.மு நவரத்தினம், திருமதி சக்திதேவி, பொன்சிறீ வாமதேவன், செல்வி பரமேஸ்வரி. கணேசன், திருமதி சாரதா தேவி, திருமதி பங்கயற்செல்வி ஆகியோரைக் குறிப்பிடுவதுடன் அவர்களின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நின்று நன்றி கூறுகின்றேன்.

அத்தோடு எனது நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்டிய அனைத்து அணி செய்கலைஞர்களையும் தலைவணங்கி நன்றிகூறுகின்றேன். நான் பாடிய பக்தி இசைத் தொகுப்புக்கள் இறுவெட்டுக்கள் வரிசையில்

★கணவாய் மூத்த விநாயகர் பக்தி இசை இறுவெட்டு, ★வண்ணை காமாட்சி அம்மன்(நாச்சிமார்கோயில்) சரணம்காமாட்சி ஒலிப்பேழை, வடமராட்சி கடற்கரைப் பிரதேச ஆலயங்கள் மீது பாடப்பட்ட "கடலோர அருளோசை" இறுவெட்டு, திருமலைநாயகி பக்திப் பாமாலை, ★உசன் கந்தசாமி "ஸ்கந்த கானங்கள்" இறுவெட்டு,

★மானிப்பாய் ஆனந்த வைரவர் "ஆனந்தம் பக்திப் பாமாலை"

★மானிப்பாய் மருதடித விநாயகர் "மருதடியான் நாதம்"

★பொலிகண்டி கந்தவனசாமி "ஆசைகொண்டேன் கந்தவனக் குமரா",

★நெல்லியடி புதுத் தோட்ட விநாயகர் "புதுத் தோட்ட நாயகனே",

★மந்திகை "கண்ணகை அம்மன் அருளமுதம்"

★ஈழத்து ஆலயங்களின் "பக்தித்திருஉலா" காணொளிப் பேழை, ★நெல்லியடி சுந்தர ஐயப்பனின் "ஐயப்பநாதா சரணம்" இசை இறுவெட்டு, இவ்வாறாக ஈழத்து ஆலயங்கள் மற்றும் வெளிநாட்டு ஆலயங்கள் மீது ஆக்கப்பட்ட பக்தி இசை இறுவெட்டுக்கள், பாடசாலைக் கீதங்கள், தேசிய கீதம், வடக்கு மாகாணசபைக் கீதங்கள், பிரதேச செயலக கீதங்கள், கலாச்சார பேரவைக்கீதங்கள், சனசமூக நிலைய கீதங்கள், வெளிநாட்டு படைப்பகங்கள் வெளியிடும் மெல்லிசைப் பாடல்கள், குறுந்திரைப்படப்பாடல்கள், பிறந்தநாள் கொண்டாட்ட பாடல்கள், சிறுவர் பாடல்கள் போன்றன இன்றுவரை இசை இறுவெட்டுகளாகவும் காணொளியாகவும், அல்பங்களாகவும், உள்ளன. "பாசலன் கரலியட்ட"எனும் தலைப்பில் நடாத்தப்பட்ட இசைப்போட்டியில் எனது மாணவர்கள் தேசியநிலையில் சிங்கள மாணவர்களோடு பங்கேற்று ஆற்றுகை செய்த தருணம், 2019 தமிழ்த்தினப்போட்டியில் குழு இசையில் தேசிய நிலையில் வெற்றி பெற்ற தருணம், மாகாணக் கல்வித்திணைக்களத்தால் முல்லைத்தீவில் நடாத்தப்பட்ட கலைவிழாவில் பாடல் பாடி பாராட்டப்பட்ட தருணம் மேலும் தென்மராட்சிக் கலைவிழாவில் பல்லிய இசை வழங்கி பாராட்டுப் பெற்ற தருணங்கள் போன்றவை மறக்க முடியாதவை. அநேக இசை இறுவெட்டு வெளியீடுகளில் எனக்கு கற்பித்த பல்கலைக் கழக விரிவுரையாளர்களான பேராசிரியர்கள் சண்முகதாஸ் சேர் மற்றும் அவர்தம் பாரியார் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அம்மா மற்றும் பேராசிரியர் சிவலிங்கராஜா சேர் போன்றோரின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பெற்றதோடு அவர்களின் கரத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டேன். நான் தரம் 11வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தவேளைபண்ணிசைப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானாளால் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்ட தருணம் மறக்கமுடியாத மகிழ்ச்சியான தருணம் ஆகும்.

# யாழில் நடைபெற்ற முதல் கட்ட Junior Super Singer தேர்வு

வடமாகாணத்தில் மாபெரும் ஜூனியர் சுப்பர் சிங்கர் C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு வடமாகாணத்தில் நடத்தும் ஜூனியர் சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமுறைக்கலாமன்றத்தில் நேற்று நடைபெற்றது. நேற்றைய போட்டியில் 40 பிள்ளைகள் கலந்து கொண்டார்கள்.

இந்தப் போட்டி வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் முதலில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்திலும் சாவகச்சேரி நகராட்சி மண்டபத்திலும் எதிர்வரும் 2024 ஜுலை 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டியின் மூன்றாவது குரல் தேர்வு மன்னார், நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஜுலை 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் அடுத்த குரல் தேர்வு பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் எதிர்வரும் 2024 ஜுலை 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று கிளிநொச்சி, பரந்தன் ஆர்ஜே மஹாலில் எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 03 ஆம், 04ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று முல்லைத்தீவு, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 10 ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று வவுனியா, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறும்.

பிரிட்டிஷ் கவுன்சில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஆர்ஜே மஹால், யாழ் பீச் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்ட்டின் அனுசரணையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் அச்சு ஊடக அனுசரணை வழங்குவதுடன் "சமூகம்", சமூக ஊடக வலைத்தளம் அனுசரணை வழங்கவுள்ளது.




போதகர் குமார் ராஜநாயகம், பிரபல மூத்த பாடகி திருமதி ஜெயபாரதி கௌசிகன், மூத்த பிரபல வாத்திய இசை கலைஞர் டானியல் அமல்ராஜ், சங்கவி ஃபிலிம்ஸ் Pvt (ltd), சங்கவி தியேட்டர் Pvt (ltd) நிறுவனங்களின் உரிமையாளர் கலாநிதி துரைராசா சுரேஷ், சமூகம் மீடியா ப்ரோமோஷன் கோஆர்டினேட்டர், சி ஜே புரமோட்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும் வடக்கின் செல்லக் குரலுக்கான தேடல் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவருமான பிரசன்னா, எஸ் கே டி எஸ் ஓவிய கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஸ்தாபகரும் இயக்குனரும் தேஜஸ் எம் இவண்ட் சொலுஷன் நிறுவனத்தின் இயக்குனருமான சிவ துஷ்யந்தன், எஸ் கே டி எஸ் ஓவியா கம்பெனி பிரைவேட் லிமிடெட் இன் இயக்குனர்களில் ஒருவரான நிஷாந்தன், வடக்கின் செல்லக் குரலுக்கான தேடல் நிகழ்ச்சியின் கலைஞர்கள் ஒருங்கிணைப்பாளர் வெற்றி துஷ்யந்தன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.


## 2 ஆம் கட்ட தேர்வு இன்று யாழ். மருதனார் மடம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில்

















# பிரக்ருதி த்வனி 2024 சப்தமி



எல்லைகளைத் தாண்டிய கடல் திரைகளை கடந்து ஒரு வசீகரிக்கும் பாரம்பரிய நடன கலைகளுக்குள் கலந்து செல்ல தயாராகுங்கள்!

அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஆஃப் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் எல்எல்சி, துபாய் வழங்கும் "பிரக்ருதி த்வனி 2024 சமுத்ரா மௌக்திகா தி கல்ச்சுரல் ஓட்" என்ற இலவச நிகழ்வை வழங்குகிறது. இந்த நடன பாலேவின் மயக்கும் கலவையையும், இந்திய பாரம்பரிய நடனத்தின் நேர்த்தியையும், கிளாசிக்கல் இசையும், ஆன்மாவைத் தூண்டும் அழகை உறுதியளிக்கிறது.

இந்திய பாரம்பரிய வடிவங்களின் துடிப்பான ஆற்றலைச் சிந்திக்கும் நடனக் கலைஞர்களின் கலைநுட்பம், மேற்கத்திய இசையின் நுட்பமான குறிப்புகள், இந்திய மெல்லிசைகளின் செழுமையான நாடாக்களுடன் பின்னிப் பிணைந்திருப்பதைக் காண வாரீர்.

**இது பிரக்ருதி த்வனி 2024!**

துபாயில் இருந்து சிறப்புக் கலைஞர்கள், புகழ்பெற்ற இந்தியக் கலைஞர் மற்றும் ஆசிரியரான நடனம் மற்றும் இசை ஆசான்திருமதி விம்மி பகவதிஷ்வர் தலைமையில் இணைந்து ஒரு மனதுடன் செயல்படும் மாயாஜாலக் கலவை.



உங்கள் கண்களுக்கு முன்பாக ஒரு கலாச்சார நாடா பின்னப்பட்டிருப்பதற்கு சாட்சியாக, கலையின் ஒருங்கிணைக்கும் தாய்சக்தியின் கொண்டாட்டம்.

மற்ற மாலைப் பொழுதை விட அழகான மாலைப் பொழுதை அனுபவிக்கும் இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

பிரக்ருதி த்வனி 2024 இல் எங்களுடன் சேர்ந்து உற்சாகப்படுத்தத் தயாராகுங்கள்.








# ஆனந்தா கல்லூரி நடை பவனி '2024'

ஆனந்தா கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த 'ஆனந்த நடை பவனி 2024' அணிவகுப்பு 'இலங்கை தாய்க்கு சேவை செய்ய கல்வி மற்றும் அதிகாரம் கொடுங்கள்' என்ற தொனிப்பொருளில் கல்லூரியின் அதிபர் டி.எம்.எல்.பி. திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

ஆனந்தா நடை பவனி 2024 என்பது பழைய மாணவர்கள் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் நிதி திரட்டும் நிகழ்வாகும்.

ஆனந்த நடைபயணம் ஆனந்த கல்லூரி வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி விஹாரமஹாதேவி பூங்காவின் திறந்தவெளி அரங்கை சென்றடைந்தது. வண்ணமயமான மிதவைகள் மற்றும் கவர்ச்சியான கார்களுடன் மேலே பறந்து செல்லும் இலங்கை விமானப் படை ஹெலிகொப்டர்கள் அணிவகுத்து மரியாதை செலுத்தியது.

பாதுகாப்பு செயலாளர் ஜி.டி.எச். ஜெனரல் கமல் குணரத்ன, முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய, பழைய மாணவர் சங்க தலைவர் பேராசிரியர் அதுல களுஆராச்சி, இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உட்பட பெருமளவிலான பழைய மாணவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.



**ருஸைக் பாரூக்**








# இலையும் எறும்பும்



நீயும் நானும் வாசித்தது
இலையில் ஆற்றை
கடக்க முயலும்
எறும்பின் கதை
எறும்பு கரையைச்
சேர்ந்ததா?
இலையின் கதியென்ன?
ஏதும் தகவலில்லை
இலையும் எறும்பும்
பயணத்தில் என்ன
பேசி இருக்கும்
தெரியவில்லை
நீயெழுது
குடும்ப கிளையை துறந்த
இலையின் தியாகத்தில்
எறும்பின் வாழ்க்கை
எறும்பின்றி
போயிருந்தால்
வீணாய் ஆற்றில்
மிதந்தே போயிருக்கும்
இலை
என்ன புரிந்தது
உன் சொல்லைக்
கிழித்தெறி
மேலும் சொல் பின் கிழி
இலைகள் வழியின்றி
விழுகின்றன
எறும்புகள் வழி தவறி
விழுகின்றன
இலைகள் ஆபத்தில்
காக்குமென்று
எறும்புகள் அறியாது
எறும்புகளுக்கு நாம்
படகாவோமென்று
இலைகளுக்கும் தெரியாது
பின் ஏன் நேர்ந்தது
இந்த காதல்
அன்பென்றால்
நீயும் நானும் அப்படித்தான்
யாரோ ஒருவர் ஓர் இலை
யாரோ ஒருவர்
ஓர் எறும்பு.

# குமரன்விஜி விஜயகுமார் வாசிப்பு விருத்தியாக்கம்: தேவைகளின் தேவை

இன்றைய கல்விப்புலத்தில் வாசிப்பு பெறுமானம் குறித்தும் அதன் தேவையும் தேடலும் தேக்கத்திலிருந்து விரிந்தெழும்பும் அவசியம் குறித்தும் கல்விப்புலத்தின் அக்கறை விரிவடைகிறதா என்கிற கேள்வி உள்ளது.

பாடசாலைப்புலத்தில் மாணவரிடையே வாசிப்பின் இன்றியமையாமை பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடு மரபு ரீதியிலிருந்து காலாகாலமாக இயக்கம் கொண்டே வந்தது.

முன்னைய நூற்றாண்டில் வாசிப்பு பழக்கம் வழக்கமானதாகவகுப்பறையின் பெரும்பகுதியை உள்ளடக்கியிருந்தது.

உபாத்தி யாயமாணாக்கர் உறவு வாசிப்பின் அடியாக இருந்தது. மனப்பாஞம் ஒப்புவித்தலின் முக்கியகூறாக வாசிப்பு இருந்தது.

உரத்து வாசித்தலும் மௌனித்து வாசித்தலும் கிரகித்தலின் முக்கிய கூறாகியிருந்தது.

'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்' கூற்று உயிர்ப்போடு இயங்கியது. அறிவினது முக்கிய பாகமாக வாசிப்புத் துறை காணப்பட்டது.

காலவோட்டத்தின் படிமுறைகளில் வாசிப்பு அறிவுத்தேடலின் இடத்தை பல கூறுகள் பங்கிட்ட சூழலில் இந்த நூற்றாண்டில் தகவல் மையப்புலம் அறிவையும்,அறிவுத் தேடலையும்,வெவ்வேறு படிமுறைகளில் மாற்றிவிட்டதுமல்லாது ஆசிரிய மாணவர்,கற்றல்கற்பித்தல் முறையிலும் மாற்றங்களைக் கண்டது.



நூல் வாசிப்பு மின்னூல் வாசிப்பாக மாறி விட்டது. நூலக வசதி மின்னூலக வசதியாக பரிணமித்தது.

இந்நிலைமாறு சூழல் உயிர்ப்பான வாசிப்பு பொறிமுறையில் செல்வாக்குச்செலுத்தத் தொடங்கியது.

மறுபுறம் ஆசிரியர் சதியளிப்பவராக மாறினார்.

வாசிப்பு பயிற்சி ஒரு வகையில் மந்தமடைந்து விட்டது.அல்லது அழிந்து விட்டது.

இந்த துர்ச்சூழல் மாணவரின் கிரகித்தல்,ஞாபகசக்தி,மொழிக்கூறுகளின் பயிற்சி அல்லது ஆளுமையில் தாக்கம் செய்துள்ளது.

வாசிப்பற்ற மாணவக் கல்விப்புலம் உயிர்ப்பற்றறதாகவே உள்ளது.

வாசிப்பு.முறை மாற்றம் புதிய தலைமுறைக்கான உத்தியாக அல்லது உபயோகமாக அமைதல் வேண்டும். அதனூடு பாரம்பரிய வாசிப்பின் இடம் நிவர்த்தக்க பட வேண்டும்.இதற்கான பொறிமுறையொழுங்கொன்றும் மேற்கிளம்புவதாகவும் தெரியவில்லை. பெறுபேற்று மைய அல்லது பரீட்சை மையக் கல்விமுறையில் வாசிப்பை முன்னெழுப்புவது தேய்வடைவதாக திணைக்கள பாடசாலை நூலக மற்றும் மனப்பாங்குகளை அவதானிக்கும் போது புரிகிறது.

கல்விச்சூழலின் செயற்பாடுகளில் வாசிப்பு விருத்தியாக்கம் தேவைகளின் தேவையென்பதைப் புரிவதும் தேடுவதும் மேம்படுத்துவதும் அவசியமல்லவா.




# அஞ்சலிக் குறிப்புகள்

இலக்கிய உலகிலிருந்து விடை பெற்றுச் சென்ற ஆளுமைகளுக்கான அஞ்சலிக் குறிப்புகள் இவை:

கவிஞர் எஸ் முத்துமீரான் அவர்கள் ஈழத்து எழுத்தின் கிழக்கின் கிராமிய மண் வாசனையை விதைத்தவர். மனிதர்களையும்,அவர்தம் வாழ்வியலையும் கலாசாரத்தையும்,மொழியின் அழகியலையும் உயிர்ப்புடன் தனது படைப்புகளில் யதார்த்த ஈரம்சொட்டச் சொட்டத் தந்தவர் எஸ்.முத்துமீரான் அவர்கள்.

கவிதை, கிராமிய, நாட்டாரியல், நாடகம், ஆய்வியல், கட்டுரையாக்கமென பரந்து இயங்கிய ஆளுமை எஸ்.முத்துமீரான் அவர்கள் விட்டுச்சென்ற ஒரு தொகைப்பனுவல்களும்,அவரது நகைச்சுவை ததும்பும் அர்த்தச் செறிவான பேச்சுக்களும் இன்னும் இலக்கியப் புலத்தை நிரப்பம் செய்து நிற்கின்றன.

சமூகத்தை தனது எழுத்துக்களால் வார்த்தை பெருமகன் எஸ்.முத்துமீரான் அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. ஈழத்தின் மூத்த கவிஞர் மு.சடாட்சரன் இழப்பின் துயர் கனதியானது.

நீலாவணணின் இலக்கியப் பண்ணைக்காரன் மு.சடாட்சரன்.கவிதை,கதை, நாடகம், நடிப்பு, பேச்சென இலக்கியத்தில் ஆழ் வேரூன்றி நின்றவர் அவர். பாடும் மீன் இலக்கிய சஞ்சிகையின் வெளிப்பாட்டாளர்களிலொருவர் அவர். மேட்டுநிலம்,பாதை புதிது என்பன இவரது இலக்கியப் பனுவல்கள்.







கலாபூஷணம் மு.சடாட்சரன் அவர்கள் உயர் விருதுகள் பல காண்பதற்கு அவரது எழுத்துக்களின் வலிமை காரணமாயிற்று.

சாதாரண மனிதரின் வாழ்வியலை,சமூக மறுமலர்ச்சியை,மானுட நேயத்தை, சமூக ஒருமைப்பாட்டையெல்லாம் எழுத்தில் விதைத்தவர். எழுத்துக்களால் வாழ்ந்து மறைந்த கவிப்பெருமகன் மு.சடாட்சரம் ஆத்மா சாந்திகொள்ளட்டும்.

ஈழத்து முஸ்லிம் பெண் ஆளுமைகளில் குறிப்பிடும்படியானவர் கலாபூஷணம் சுலைமா சமி இக்பால் அண்மையில் இறையழைப்பை ஏற்றுக்கொண்டார்.

தன் எழுத்துக்களின் வசீகரத்தால் தனக்கென வாசகரை உருவாக்கிக் கொண்டியங்கிய சுலைமாசமி தென்னிலங்கை தர்காநகரைச் சேர்ந்தவர்.நாற்பத்தைந் தாண்டுகளாக இலக்கிய இயக்கம் கொண்டவர். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என இயங்கியவர். தனது கணவர் மர்ஹூம் ஏ.சீ.எம்.இக்பால் (பாஸி) மௌலவி யின் அரவணைப்பில் எழுத்தில் காலூன்றியவர்.

மகளார் இன்ஷிரா.இக்பாலையும் எழுத்தில் வளர்த்தவர். இலக்கிய குடும்பத்தின் ஆளுமையாக சுலைமா சமி இக்பால் எழுத்துலகில் அனுபவம் மிக்கவர். விருதுகள் பல வென்றவர். அன்னாரது சேவையை, அன்னாரது வாழ்வை இறைவன் ஏற்றுக்கொள்வானாக

# நாமா இலக்கியப் பயிலகம்



'வடிவமற்ற ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தை தேடிக் கொண்டேயிருக்கும்' என்ற தொனிப் பொருளை முன்னிறுத்தி இயங்கும் வெளியீட்டுக்கு மண் சொல்லாடலுக்குமான களம் வெள்ளாப்பு வெளி சமூக கலை இலக்கிய பண்பாட்டு வெளியில் 2009ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வருகிறது.

இந்த செயற்பாட்டுத் தொடரின் இன்னொரு பரிமாணமாக நாமா இலக்கியப் பயிலகம் என்கிற மாணவர்களுக்கான இஸ்லாமிய இலக்கியச் செயலூக்கக் களத்தை உருவாக்கவுள்ளது.

முஸ்லிம் சமூக கலை இலக்கியப் போக்குகள் குறித்த கற்கையறிவை வளப்படுத்தும் வகையில் புதிய தலைமுறையின் ஆர்வத்தை மேம்படுத்தும் நோக்கில் நாமா இலக்கியப் பயிலகம் உருவாகிறது.

தேசிய ரீதியில் பாடசாலை,பல்கலை,உயர்கல்வி மாணவர்களை உள்ளடக்கியதாக தேர்ந்தெடுக்கப்படும் ஆர்வமுள்ள மாணவர் தொகுதியைக் கண்டடைவதற்கென அதிபர்கள் மற்றும் ஆர்வமுடைய பொறுப்பாசிரியர்களுக்கு நிகழ்நிலை விண்ணப்பத்தொடர்பு வழங்கப்படுகிறது.

நாமாவின் அங்குரார்ப்பணம் மற்றும் முதலாவது பயிலமர்வு விரைவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு ஏற்பாட்டாளரும் வெள்ளாப்புவெளி இலக்கியச் செயற்பாட்டாளருமான முல்லை முஸ்ரிபாவைத் தொடர்பு கொள்ளலாம்.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

அடுத்த நாள் பொழுது புலர்ந்தது. ஜஸ்டிஸ் அருமைத் தந்தையை பார்க்கும் ஆவல் ததும்ப மண்டேலாவின் இருப்பிடம் தேடி ஓடோடி வந்தான். ஜோங்கிந்தாபா அவனை கண்டதும் ஆரத்தழுவி கட்டியணைத்து கண்ணீர் சிந்தினார். ஜஸ்டிஸ் தந்தையின் தளர்ந்து தள்ளாடிய நடையையும் வாடி வதங்கிய வதனத்தையும் கண்டு பதறி "அப்பா உங்கள் உடம்புக்கென்ன? இப்படி மெலிந்து போய்விட்டீர்களே?" என்று கண்ணீரினூடாகவே தட்டுத் தடுமாறி கேட்க "மகனே கலங்காதே. காலத்தின் கோலமிது. முதுமை எனக்குத் தந்த பரிசு இது. உங்கள் இருவரையும் பிரிந்து நான் நோயாளியாகிவிட்டேன்" என்றதும் ஜஸ்டிஸின் கண்கள் குளமாகின.

"அப்பா நான் செய்த துரோகத்தை மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றதும் மண்டேலா அவர்களது பேச்சில் குறுக்கிட்டான். "ஜஸ்டிஸ் போனது போகட்டும். இனியாவது அப்பாவின் பேச்சை கேட்டு நடப்போம். அப்பா உன்னை அவருடன் ஊருக்கு அழைத்து செல்ல ஆசைப்படுகிறார். அவரின் ஆசையை நீ நிறைவேற்ற வேண்டும்" என்றதும் ஜஸ்டிஸ் அப்படியே பேயறைந்தது போல் ஆகிவிட்டான். ஜோங்கிந்தாபாவோ "ரோஹிலாலா சொல்வது உண்மைதான். (மண்டேலாவை ஜோங்கிந்தாபா , ரோஹிலாலா என்று அழைப்பதுதான் வழக்கம்.) நான் இன்றைக்கோ நாளைக்கோ என்று உயிரை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு பிறகு என் ஆஸ்தி அந்தஸ்தையும் அலுவலக நிர்வாகத்தையும் நீயேதான் கவனித்துக் கொள்ள வேண்டும். இதுவே என் இறுதி ஆசை. மண்டேலாவை நான் ஊருக்கு வா என்று கட்டாயப்படுத்த மாட்டேன். ஏனென்றால் அவனது உயர்ந்த இலட்சியமும் குறிக்கோளும் எனக்கு நன்றாகவே புரியும்.

அவன் அவனது வழியில் சென்று முன்னேறட்டும். அதற்கு என் முழு ஆசியும் வாழ்த்துக்களும் என்றும் உரித்தாகட்டும்" என்று கூற மண்டேலா பூரித்துப் போய் "என்னை முழுமையாக புரிந்து கொண்டது நீங்கள் மட்டும்தான். நான்தான் உங்களை புரிந்துகொள்ளாமல் உங்கள் மனதை நோகடித்துவிட்டேன். இருந்தும் நீங்கள் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. நன்றி அப்பா" என்று குற்ற உணர்வும் நன்றியுணர்வும் ததும்ப கூறி முடித்தான்.



ஜஸ்டிஸோ ஜோங்கிந்தாபாவுடன் ஊருக்குச் செல்வதை முடியாதென்று ஒரே பிடியாக மறுத்துவிட்டான் மண்டேலாவோ தந்தையின் ஆசையை நிறைவேற்றி வைப்பதற்காக ஜஸ்டிஸிடம் மன்றாடிக் கேட்டும் பயனில்லை. அவன் தனது முடிவில் உறுதியாக இருந்தான். ஊருக்கு வரமாட்டேன் என்று அடித்துக் கூறிவிட்டான். "வேறு ஏது வேண்டுமானாலும் கூறுங்கள். என்னை ஊருக்கு மட்டும் அழைக்காதீர்கள் அப்பா" என்று கெஞ்சிக் கேட்டான். ஜஸ்டிஸ் இவ்வளவு பிடிவாதமாக மறுப்பதற்கு முக்கிய காரணம் அவன் தனது அருமைக் காதலியை விட்டு பிரிய முடியாது தவிப்பதே ஆகும் என்று மண்டேலா புரிந்து கொண்டான்.

மண்டேலா சினத்துடன் ஜஸ்டிஸிடம் "பெற்று வளர்த்து ஆளாக்கிய தந்தையின் இறுதி ஆசை என்று கூடப் பார்க்காமல் உதறித்தள்ள உனக்கு எப்படி மனம் வந்தது? தந்தையை விட உனக்கு பாழாய்ப் போனகாதல்தான்பெரிதாகிவிட்டதா? தந்தையின் கடைசி ஆசையை கூட நிறைவேற்ற முடியாத நீ எல்லாம் ஒரு மகனா? நம் தந்தை இவ்வளவு இறங்கி வந்து உன்னை அழைக்கிறார். அதற்கு செவிசாய்க்க வேண்டியது உன் கடமை அல்லவா? எங்கே போய்விட்டது உன் அறிவு?" என்று அனல் பறக்க கூறி முடித்தான். இருப்பினும் ஜஸ்டிஸிடம் எந்த மாற்றத்தையும் காணவில்லை.

ஜோங்கிந்தாபா எவ்வளவோ கெஞ்சி மன்றாடிப் பார்த்தார். பலன் பூஜ்ஜியம்தான். இறுதியில் கவலை தோய்ந்த முகத்துடன் சோகச் சுமைகளை மூட்டை மூட்டையாக இதயம் எனும் வாகனத்தில் சுமந்துகொண்டு நடைப்பிணமாக பிள்ளைகளைப் பிரிந்து தன்னந்தனியாக ஊருக்கு திரும்பினார். இந்த சம்பவத்திற்கு பிறகு ஜஸ்டிஸின் செயலால் கோபமுற்ற மண்டேலா அவனுடன் பேசுவதையே முற்றாக நிறுத்திக் கொண்டான்.

நாட்கள் ஒன்றையொன்று விரட்ட மாதங்கள் சில விரைந்தோடின. 1943 இல் அலெக்சாண்ட்ராவில் பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேருந்துக் கட்டணத்தை குறைக்கும்படி கோரி மாபெரும் போராட்டத்தை நடத்தியது. அப்போராட்டத்தில் மக்களை வழிநடாத்தும் தலைவர்களில் ஒருவனாக கோர் களமிறங்கினான். அலெக்சாண்ட்ராவிலுள்ள அத்தனை பேரையும் பாதிக்கும் பிரச்சினை என்றபடியால் பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கோர் மண்டேலாவையும் இப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டான். மண்டேலாவும்கோரும் உட்பட அனைத்து தலைவர்களும் அனல் பறக்கும் பிரசாரங்களுடன் ஒன்பது தினங்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர். மண்டேலாவோ சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான்.

கோர் மண்டேலாவிடம் "நெல்சன் நீ களமிறங்கிய முதல் போராட்டமே பெரும் வெற்றியடைந்துவிட்டது. எனது வாழ்த்துக்கள்." என்று கூறி மேலும் மேலும் அவனை உற்சாக மூட்டினான்.

கோருடன் சேர்ந்து மண்டேலா போராட்டத்தில் ஈடுபட்ட செய்தி எப்படியோ அவனது உயர் அதிகாரியான சிடெல்ஸ்கியின் காதுக்கு எட்டியது. அவர் மண்டேலாவை உடனேயே தன் இடத்திற்கு வரவழைத்தார். மண்டேலாவோ சிடெல்ஸ்கி என்ன கூற போகிறாரோ ஏது கூற போகிறாரோ என்று மனதில் குறுகுறுப்புடன் தடுமாற்றமும் நிறைந்தவனாக அவரை சந்திக்க சென்றான்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# இனிக்கும் இசைக்குயில் சித்ரா

சித்ரா அல்லது கே. எஸ். சித்ரா எனப் பொதுவாக அழைக்கப்படும் கிருஷ்ணன் நாயர் சாந்தகுமாரி சித்ரா , இந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகி ஆவார். இவர் மலையாளம் , கன்னடம், தமிழ் ,

தெலுங்கு , ஒரியா , இந்தி , அசாமி, வங்காளம் போன்ற பல இந்திய மொழிகளில் பாடி வருகிறார். இவர் ஆறு தடவைகள் இந்தியத் தேசிய திரைப்பட விருதுகளையும், ஆறு தடவைகள் தென்னிந்திய பிலிம்பேர் விருதுகளையும், மற்றும் பல்வேறு மாநில விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் தென்னிந்தியர்களிடையே சின்னக்குயில் சித்ரா எனப் பிரபலமாக அழைக்கப்படுகிறார்.

திருவனந்தபுரத்தில் 1963 ஆம் ஆண்டில் ஜூலை 27ல் சித்ரா பிறந்தார். வானொலியில் பாடகராகப் பெயர் பெற்ற கிருஷ்ணன் நாயருக்கும், வீணை வித்தகி சாந்தகுமாரிக்கும் இளையமகள் ஆவார். இவரின் சகோதரியான பீனா, இனிமையான குரலைக் கொண்டிருந்தார். கிருஷ்ணன் நாயருடைய மனைவி ஒரு பள்ளியில் இசையும் கற்பித்து வந்தார். அபூர்வ குரலினிமையைப் பெற்றிருந்த பீனாவிற்கு சிறு வயது முதல் கவனத்துடன் தேவையான பயிற்சிகளெல்லாம் முறைப்படி அளிக்கப்பட்டது. சித்ராவின் இளவயதிலேயே பாடல்களை நினைவில் கொண்டு பாடினார். அவர் தம் ஐந்தாம் பிராயத்திலேயே அகில இந்திய வானொலி ஒளிபரப்பிய சங்கீத ரூபகத்தில் சில வரிகள் பாடினார்.

பள்ளியில் பயின்ற நாட்களிலே அவர் தந்தையார் தம் மகள் சார்பாக தேசிய அளவில் திறமை வாய்ந்தோருக்கான உதவித்தொகைக்கு பதிவு செய்தார். நேர்முகத் தேர்வுக்கு சென்றபொழுது இரண்டு வருடம் சங்கீதம் கற்றிருக்க வேண்டும் என்று குழுவினர் வலியுறுத்தியபோதும், பதிமூன்று வயது சித்ரா தோடி ராகத்தின் சிக்கலான ஸ்வரங்களை நிரவல் செய்து தம் தகுதியை நிரூபித்து ஏழு வருட உதவித்தொகையைப் பெற்றார். பின்னர், இசை பட்டப்படிப்பில் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார்.

இவர் பேராசிரியர் ஓமண்ணக் குட்டியிடம் இசை பயின்று வந்தார். அவருடைய சகோதரர் எம். ஜி. ராதா கிருஷ்ணன் திரைத்துறையில் புது குரல்வளம் கொண்டவர்களை அறிமுகம் செய்யும் முயற்சியில் இருந்தார். ஓமண்ணக்குட்டி, சுட்டிப்பெண் சித்ராவின் பெயரை முன்மொழிய திரைப்பட பின்னணிப் பாடகியாகப் பிரவேசித்தார்.





தனக்கு முழு நேரப் பின்னணி பாடகியாகும் எண்ணம் முன்பே இருக்கவில்லை என்று நினைத்திருந்தார். பள்ளியிறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது, கே. ஜே. யேசுதாஸ் அவர்களுடன் இணைந்து பாடும் வாய்ப்பைப் பெற்றார். அவருடைய முதல் திரைப் படப்பாடல் வெளிவரும் முன்னரே அந்தப் பாடல் வெளியிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து யேசுதாசுடன் பல மேடை நிகழ்ச்சிகளிலும், 'தரங்கிணி' பதிப்புகளிலும் சித்ராவிற்கு பாடும் வாய்ப்புகள் வந்தன. தரங்கிணிக்கு வந்த இசையமைப்பாளர்கள் அப்புதுக் குரலால் ஈர்க்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து அவரை நாடி வாய்ப்புகள் தொடந்து வந்தன. திருவனந்தபுரத்தை விட்டு சென்னைக்கு வந்து குடிபெயர்ந்தால் கணக்கற்ற வாய்ப்புகள் பெற இயலும் என்று இசையமைப்பாளர் ரவீந்திரன் தொடர்ந்து சித்ராவிடம் வலியுறுத்தி வந்தார்.

முகமறியாத இடத்திற்கு வர முதலில் சித்ராவிற்கு விருப்பமில்லை. ஒரு முறை 'குஷி ஔர் குஷி' என்ற ஹிந்தி திரைப்படத்திற்கு எஸ். பி. வெங்கடேஷ் எழுதிய ஒரு பாடலை பி.பி.சீனிவாசுடன் இணைந்து பாடுவதற்காக சென்னைக்கு வந்திருந்தார். அந்தத் திரைப்படம் வெளியிடப்படவில்லை.

இளையராஜாவுடனான அறிமுகம்

ஒரு முறை இயக்குனர் பாசில் தம்முடைய நோக்காத தூரத்து கண்ணும் நட்டு என்ற வெற்றிப்படத்தை தமிழில் மொழி மாற்றம் செய்ய விரும்பினார். அந்தப் படத்தைப் பார்க்க நேர்ந்த இளையராஜா சித்ராவிற்கு அழைப்பு விடுத்தார். இளையராஜாவின் இசையமைப்பில் ' நீ தானா அந்தக் குயில் ' என்ற திரைப்படத்தில் அவர் பாடிய 'பூஜைக்கேத்த பூவிது', 'கண்ணான கண்ணா உன்னை என்ன சொல்லி தாலாட்ட ' என்ற இரு பாடல்களும் அவருக்கு புதிய இசையுலகிற்கு திறவுகோலாக அமைந்தன. 1985 ஆம் ஆண்டில் இளையராஜாவின் இசையமைப்பில் சித்ரா பாடிய பல பாடல்கள் ('கீதாஞ்சலி ' திரைப்படத்தில் 'துள்ளி எழுந்தது பாட்டு, சின்னக்குயிலிசை கேட்டு', வைரமுத்துவின் 'ஒரு ஜீவன் அழைத்தது ' ஆகிய பாடல்கள் சித்ராவின் இனிய குரலில் உயிர் பெற்றெழுந்தன. தமிழ் சேவையால் சூட்டப்பட்ட ' சின்னக்குயில் சித்ரா' என்ற பெயர் நிலைத்தது.

அறிமுகப்படுத்தப்பட்ட அதே ஆண்டு ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட 'நானொரு சிந்து காவடிச்சிந்து', 'பாடறியேன் படிப்பறியேன்' போன்ற பாடல்களை சிந்து பைரவியில் மிகச் சிறப்பாகப் பாடி தேசிய விருதைப் பெற்றார். சித்ராவின் திறமையை வெளிக் கொண்டு வந்ததில் இளையராஜாவின் பங்கும் அடங்கியிருக்கிறது.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை







கொழும்பு லயன்ஸ் கழகம், அதன் 35ஆவது கழக ஒன்றுகூடலை கொழும்பு 7, லயன்ஸ் செயல்பாட்டு மையத்தில் அண்மையில் நடாத்தியது. முதல் துணை மாவட்ட ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட லயன் சசிகுமார் (SCA PMJF PMAF) மற்றும் அவரது துணைவியார் அபிராமி சஷிகுமார் (PMJF PMAF) ஆகியோர் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர். 2024/2025க்கான கழகத் தலைவராக லயன் ஜே என் புண்ணியலிங்கம் நியமிக்கப்பட்டார்.

## Selfie Faces

**Selfie Faces** அனுப்ப வேண்டிய இமெயில் முகவரி : *easwarantkn@gmail.com*



புன்னகை மன்னன்




எஸ். என் நடராஜன்



Sivakumaran Rajah (Raagam Musical Band)



Vijikumary



Director Thurairasa Suresh (Shankavi)



Singer Murali



தில்லைராஜன்

# முபீதா அமீனின் கவிதை நூல் வெளியீடு

ஜே.எம்.பாஸித்







இலைமறைகாயாய் ஒளிந்திருப்பவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களது எழுத்தாக்கத்திற்கு உயிரூட்டும் வகையில் செயற்பட்டுவரும் ஏட்டுலா கனவாக்கத்தால் வெளியிடப்பட்ட அக்கரைப்பற்று முபீதா அமீன் எழுதிய அவரது கன்னிப்படைப்பான "நிதர்சனத்தின் நிழல்" கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (06) அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் தலைவர் கலாபூசனம் மீரா எஸ். இஸ்ஸடீன் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் கலந்து சிறப்பித்ததுடன், ஓய்வுநிலை நில அளவையாளர் ஏ.எல். முஹிதீன் பாவா, அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி என்.நவப்பிரியா ஆகியோரும் மற்றும் பல இலக்கிய ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுலை மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.